…ள்ளுவர் தமி…

785

ஒன்பதாம் வகுப்பு

…ன் பதிப்…

TB
031(9)
N65
131453

MADRAS RECORD OFFICE
MADRAS

தேசீய கீதம்

[பெருங்கவிஞர் இரவீந்திரநாத தாகூர்]
வங்க மொழி மூலம்:

ஜன கன மன அதிநாயக ஜயஹே
பாரத - பாக்ய விதாதா
பஞ்சாப - ஸிந்து - குஜராத - மராட்டா
த்ராவிட - உத்கல - வங்கா
விந்த்ய ஹிமாசல யமுனா கங்கா
உத்சவ ஜலதி தரங்கா
தவ சுப நாமே ஜாகே, தவசுப ஆஸிஸ மாஹே,
தாஹே தவஜெய காதா
ஜன - கன - மங்கள நாயக, ஜயஹே
பாரத பாக்ய விதாதா
ஜயஹே! ஜயஹே!! ஜயஹே!!!
ஜய ஜய ஜய ஜயஹே!

தமிழாக்கம்

இந்தியாவின் சுகதுக்கங்களை நிர்ணயிக்கிற நீதான்
மக்கள் எல்லோருடைய மனத்திலும் ஆட்சி செலுத்துகிறாய்
நின் திருநாமம் பஞ்சாபையும் சிந்துவையும்
குஜராத்தையும் மகாராஷ்டிரத்தையும்
திராவிடத்தையும் ஒரிஸாவையும் வங்காளத்தையும்
உள்ளக் கிளர்ச்சியடையச் செய்கிறது
அது விந்திய ஹிமாலய மலைகளில் எதிரொலிக்கிறது;
யமுனை கங்கை, நதிகளின் இன்பநாதத்தில் கலக்கிறது;
இந்தியக் கடல் அலைகளால் ஜபிக்கப்படுகிறது,
அவை நின் ஆசியைவேண்டுகின்றன; நின்புகழைப்பாடுகின்
இந்தியாவின் சுகதுக்கங்களை நிர்ணயிக்கிற உனக்கு [றன;

வெற்றி ! வெற்றி ! வெற்றி!

தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம்
சென்னை-600 008.

வள்ளுவர் தமிழ்க் கோவை

ஒன்பதாம் வகுப்பு

[7—7—65-ல் அரசியலார் வெளியிட்ட பாடத் திட்டப்படி
தொகுக்கப்பெற்றது]

தொகுப்பாசிரியர்கள் :

வை. தட்சிணாமூர்த்தி, எம். ஏ.,
தமிழ்த்துறை,
புனித சூசையப்பர் கல்லூரி, திருச்சிராப்பள்ளி.

குமாரி. புளோரம்மாள் மொராய்ஸ், எம். ஏ., பி. டி.,
தமிழ்த்துறை,
ஸ்டெல்லா மதுதீனு பயிற்சிக் கல்லூரி, சென்னை.

முருகன் பதிப்பகம்

திருச்சிராப்பள்ளி-3.

முதற்பதிப்பு: 1965.

TB.
03|(9)
N65

பதிப்புரிமை:

விலை: ரூ. 2—50

131453.

[10·9 கிலோ கிராம் வெள்ளைத்தாளில் அச்சிடப்பட்டது.]

சதர்ன் பிரிண்டர்ஸ், திருச்சிராப்பள்ளி-3.

முன்னுரை

இத் தமிழ்க் கோவை காலத்துக்கு ஏற்ற கருத்துக்களைக் கொண்ட கவிதைகளையும், பேராசிரியப் பெருந்தகைகளின் கருத்தோவியங்களையும் கொண்டு தொகுக்கப் பட்டுள்ளது. சங்ககாலம் தொட்டு இன்று வரை உள்ள காலங்களின் தமிழ், செய்யுட்களின் வழி விருந்தாகின்றது. வகைப்படும் சிறந்த தமிழ்நடை, வேற்றுப்படும் செய்திகளைச் சுவைபடத் தரும் கருத்தோட்டம் முதலியன நூல் தரும் முதிர் கனிகள். இவ் விருபதாம் நூற்ருண்டின் எடுத்துக்காட்டான எல்லாவகை உரைநடைகளும் இதில் மிளிர்கின்றன எனின் மிகையாகாது. செயல்முறை உணவு சமைத்தல் முதல் செவ்வாய்ப் பயணம் வரை இவண் உள்ளன. மாணவர் கைக்கு ஏற்ற கையடக்கப் பதிப்பாகவும் இது வருகிறது.

பயிர் நட்டோம்; கதிர் அறுப்போம்.

—ஆசிரியர்கள்.

உள்ளுறை

செய்யுட் பகுதி

பக்கம்

1. வாழ்த்து :
   - அ. தேவாரம் — சுந்தரர் 1
   - ஆ. தமிழ்மொழி வாழ்த்து — பாரதிதாசன் 2
   - இ. நாட்டு வாழ்த்து — பாரதியார் 3

2. அறவுரை :
   - அ. திருக்குறள் 5
   - ஆ. திரிகடுகம் 21
   - இ. நான்மணிக்கடிகை 24
   - ஈ. சிறுபஞ்சமூலம் 26

3. தொடர்நிலைச் செய்யுட்கள் :
   - அ. மணிமேகலை 28
   - ஆ. பெருங்கதை 40
   - இ. வில்லிபாரதம் 47
   - ஈ. திருத்தொண்டர் புராணம் 62
   - உ. சிவாஜி 75

4. பல்சுவைப் பாடல்கள் :
   1. வருணனைப் பாடல்கள் :
      - அ. ஏமாங்கத நாட்டு வளம் 80
      - ஆ. மருதநில வருணனை 81
      - இ. கார் காலம் 81
   2. சீட்டுக்கவி 82
   3. இரட்டுற மொழிதல் 84

		பக்கம்
5.	சிற்றிலக்கியம் :	
	அ. கலிங்கத்துப் பரணி	86
	ஆ. நந்திக் கலம்பகம்	87
	இ. முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழ்	89
	ஈ. குற்றாலக் குறவஞ்சி	90
6.	வழிபாட்டுப் பாடல்கள் :	
	அ. சைவம் — திருவாசகம்	91
	ஆ. வைணவம் — பிரபந்தம்	93
	இ. பௌத்தம் — மணிமேகலை	94
	ஈ. சமணம் — சிலப்பதிகாரம்	95
	உ. கிறித்தவம் — தேம்பாவணி	96
	ஊ. இஸ்லாமியம் — சீறுப்புராணம்	97
	எ. சமரசம் - நீதிநூல் — வேதநாயகம் பிள்ளை	99
	ஏ. நாடு - நாட்டு வாழ்த்து — சுத்தானந்த பாரதியார்	100

உரைநடைப் பகுதி

பக்கம்

1. திருவள்ளுவர் அருங் கருத்துக்கள் 101
பேராசிரியர், டாக்டர் அ. சிதம்பரநாதனார்,
எம்.ஏ., பிஎச்.டி., எம். எல். சி.

2. கூலியாக இருப்பதன் துன்பம் 108
அண்ணல் காந்தியடிகள்.

3. உயிர்நிலைப் பாட்டு 115
பேராசிரியர், பல்கலைச்செல்வர்,
தெ. பொ. மீனாட்சிசுந்தரனார்.

4. தமிழர் பண்பாடு 126
பேராசிரியர், லெப. கரு. இராமநாதஞ்
செட்டியார்.

5. கலையா? அறிவியலா? 138
வித்வான், திரு. பொன். திருஞான
சம்பந்தன்.

6. பாரதியும், இந்திய ஒருமைப்பாடும் 149
கவிஞர் இளம்பூரணன்.

7. செத்துங்கொடுத்தான் சீதக்காதி 157
வித்வான் திரு. க. நயினார் முகம்மது.

8. தம்பிக்கு 166
பேராசிரியர் டாக்டர் மு. வரதராசனார்.

9. விருந்தும் மருந்தும் (சிறு சேமிப்பு) 176
குமாரி புளோரம்மாள் மொராய்ஸ்,
எம்.ஏ., பி.டி.

10. போப் ஐயர் 182
பேராசிரியர், ரம்போலா மாஸ்கரேனஸ்.

11. ஓவியக் கலை — 192
பேராசிரியர் டாக்டர், இராசமாணிக்கனார், எம்.ஏ., பிஎச்.டி.

12. கலிங்கத்துப்பரணி — 201
பேராசிரியர் முத்து. இராசாக்கண்ணனார்.

13. பேரறிஞர் பெர்னார்ட்சா — 209
புலவர் தணிகை உலகநாதன்.

14. அணைகடந்த வெள்ளம் — 217
கு. இராசவேலு, எம். ஏ.

15. நமது ஐந்தாண்டுத் திட்டங்கள் — 224
பேராசிரியர் ஆரோக்கியசாமி ரெட்டியார்.

16. கற்றவண்ணம் ஒழுகுதல் — 231
புலவர், மயிலை. சிவமுத்து.

17. சீருணவு — 238
பேராசிரியை, இராஜம்மாள்-தேவதாஸ்

18. செவ்வாய்க்குச் சென்றுவந்தேன் — 251
வை. தட்சிணாமூர்த்தி, எம். ஏ.

19. ஓவியர் இரவிவர்மா — 260
புலவர், த. மா. திருநாவுக்கரசு.

20. சுவிட்சர்லந்து — 265
சோம. இலக்குமணஞ் செட்டியார்.

மனப்பாடப் பகுதி

1. வாழ்த்துப்பகுதி :

கடவுள் வாழ்த்து	4	வரிகள்
மொழி வாழ்த்து	4	,,
நாட்டு வாழ்த்து	4	,,

2, அறவுரை :

திருக்குறள்		
2, 3, 4, 6, 8, 11, 17, 19, 20, 28, 33,		
36, 38, 39, 41, 42, 45, 47, 48, 50,	40	வரிகள்
திரிகடுகம்		
எண் 4	4	,,

3. தொடர் நிலைச் செய்யுட்கள்

வில்லிபாரதம்		
பாட்டு எண் 2, 7, 16	12	,,
பெரியபுராணம்		
20, 24, 26	12	,,

4. பல்சுவைப் பாடல்கள் :

மருதம்	4	,,
கார்காலம்	4	,,
கலிங்கத்துபரணி	4	,,
திருவெம்பாவை	4	,,
சீருப்புராணம்	4	,,
	100	வரிகள்

வள்ளுவர் தமிழ்க் கோவை

ஒன்பதாம் வகுப்பு

செய்யுட் பகுதி

1. வாழ்த்து

அ கடவுள் வாழ்த்து

தேவாரம்

சைவ சமய குரவர் எனப் போற்றப்படும் அப்பர் சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் என்ற நால்வரும் பாடியருளியுள்ள தெய்வப் பாடல்களுள் அப்பர், சம்பந்தர், சுந்தரர் என்ற மூவரும் திருவாய் மலர்ந்தருளிய அருட்பாடல்களைத் தமிழர் தேவாரம் என்றழைப்பர். தேவாரம் என்ற சொல்லைத் தே + ஆரம் எனப் பிரித்துப் பொருள் கொள்ளுகையில் 'இறைவனுக்கு மாலைபோல்வது' எனப் பொருள் படும். இறைவனுக்குச் சைவ குரவர் சூட்டிய பாமாலையாய் தேவாரம் சைவ சமயத்திற்கு மட்டுமின்றித் தமிழிசையின் சிறப்புக்கும் அணிசெய்து நிற்கின்றது.

இவண் கடவுள் வாழ்த்தாக வரும் பாடல் சுந்தரர் திருக்குருகாவூர் வெள்ளடை என்ற சோழ நாட்டுத் திருப்பதியில் பாடியது. சுந்தரமூர்த்தி நாயனர் அவர்கள் கி. பி. ஒன்பதாம் நூற்ருண்டில் வாழ்ந்தவர்கள். இல்லறத்தே நின்று நல்லறங்காக்கும் பக்திச் செல்வர் வேண்டுவன அனைத்தையும் இறைவன் தக்கவழி அருள்வான் என்பதற்குச் சுந்தரரின் வாழ்க்கையை எடுத்துக் காட்டாகக் காட்டுவர்.

பண்ணிடைத் தமிழ் ஒப்பாய் பழத்தினிற் சுவை யொப்பாய்
கண்ணிடை மணியொப்பாய் கடுஇருட் சுடரொப்பாய்
மண்ணிடை அடியார்கள் மனத்திடர் வாராமே
விண்ணிடைக் குருகாவூர் வெள்ளடை நீயன்றே.

அருஞ்சொற்பொருள் :

பண்-இசை, கடு இருள்-கடுமையான இருள், மிகுந்த இருள், நள்ளிருள், சுடர்-ஒளி, இடர்-துன்பம், விண்-வானம், குருகாவூர் வெள்ளடை-காவிரிக்கு வடகரையில் உள்ள ஒருதலம்.

இலக்கணக் குறிப்பு:

ஒப்பாய்=முன்னிலை ஒருமை வினைமுற்று, கடு இருள்=உரிச் சொற்றொடர், கடி என்னும் உரிச்சொல் கடு எனத் திரிந்தது.

வினாக்கள் :

1. தேவாரம் பாடியவர் யாவர் ?

2. தேவாரம்—தொடரைப் பிரித்துப் பொருள் கூறுக.

3. தேவாரம் பற்றிக் குறிப்பெழுதுக.

4. சுந்தரரைப் பற்றிக் குறிப்பெழுதுக.

5, சுந்தரர் வெள்ளடைப் பெருமானை எவ்வாறு போற்றியுள்ளார் ?

ஆ. தமிழ் மொழி வாழ்த்து

கீழ்வரும் செய்யுள் அண்மைக் காலத்து வாழ்ந்த புரட்சிக் கவிஞர் பாரதிதாசனர் பாடியது. பெருங்கவிஞர் பாரதியார், பாரதிதாசனரின் முதற் கவிதையைக் கண்டு "கனக சுப்புரத்தினம் ஒரு கவிஞர்" எனப் பாராட்டியுள்ளார். கனக சுப்புரத்தினம் என்பது பாரதிதாசனரின் இயற் பெயர். மறைமலையடிகளாரின் தனித் தமிழ் நெறியை உளத்தே

கொண்டு பாரதியாரின் கவிதைப் பாட்டையில் சிறந்த சீர்திருத்தக் கருத்துக்களைப் பாரதிதாசன் கவிதைகளாகப் பாடியுள்ளார். பாரதிதாசனுர் சிறந்த கவிதை நாடகங்கள், காப்பியங்கள், தனிப்பாடல், இசைப்பாடல்கள் முதலியவற்றை இயற்றியுள்ளார்கள் இருபதாம் நூற்ருண்டுக் கவிஞருலகத்தின் மேற்சட்டம் என அவரைப் போற்றுவர்.

தமிழ் வாழ்த்து

" தமிழே ஆதித் தாயே வாழ்க !
தமிழர்க் கெல்லாம் உயிரே வாழ்க !
தமிழ் நாட்டுக்கும் பிற நாட்டுக்கும்
அமிழ்தாய் அமைந்த அம்மா வாழ்க ! "

" தமிழே வாழ்க தாயே வாழ்க !
அமிழ்தே வாழ்க அன்பே வாழ்க !
கமழக் கமழக் கனிந்த கனியே
அமைந்த வாழ்வின் அழகே வாழ்க ! "

அருஞ்சொற் பொருள்

ஆதி=முதற்காலம், அமிழ்தம்=உயிர் தரும் மருந்தெனும் தேவருணவு, அமைந்த-செம்மையாயமைந்த

இலக்கணக் குறிப்பு :

வாழ்க-வியங்கோள் வினைமுற்று, கமழக் கமழ-அடுக்குத் தொடர், கனிந்த, அமைந்த-பெயரெச்சங்கள்.

வினுக்கள்:

1. பாரதிதாசனுரைப்பற்றி நீ அறிவது யாது?
2. பாரதிதாசனுர் தமிழை எவ்வாறு வாழ்த்தியுள்ளார்?

இ. நாட்டு வாழ்த்து

பெருங்கவிஞர் பாரதியார் தமிழ் இலக்கிய உலகுக்கு மறுமலர்ச்சியூட்டிய சான்ருேர்களுள் ஒருவர். விடுதலைப் போராட்டக் காலத்தில் நாட்டுப்பற்று மிகுந்தவராய் அரசு, செல்வம்,

அதிகாரம் முதலியவற்றுள் எதற்கும்அடிமைப்படாது வாழ்ந்த பெரும் புலவர். சிறுகதை, கட்டுரை, கவிதை, நாடகம் முதலிய எல்லாத் துறைகளிலும் அவர் திசை காட்டும் விண் மீனாகத் திகழ்கிறார். இந்தியாவை ஒரே நாடாகக் கொண்டு, எல்லாச் சமயக் கடவுளரையும் ஒரே தெய்வமாகக் கொண்டு, செல்வர், வறியர் எல்லோரையும் சமமாக எண்ணி நாடு செழிக்கப் பாடிய நாட்டுப் புலவர் இவர். நெல்லை மாவட்டத்து எட்டயபுரத்தில் 1882-ல் பிறந்த இவர் 1921-ல் சென்னையில் இறந்தார்.

நாட்டு வணக்கம்.

வந்தேமாதரம்

எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி
இருந்ததும் இந்நாடே — அதன்
முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து
முடிந்ததும் இந்நாடே — அவர்
சிந்தையில் ஆயிரம் எண்ணம் வளர்ந்து
சிறந்ததும் இந்நாடே — இதை
வந்தனை கூறி மனதில் இருத்தி, என்
வாயுற வாழ்த்தேனோ! — இதை
'வந்தேமாதரம், வந்தேமாதரம்
என்று வணங்கேனோ!'

அருஞ்சொற் பொருள் :

என்+தந்தை=எந்தை, குலாவி=அன்போடு உரையாடி, முந்தையர்=முன்னோர், வந்தே மாதரம்=தாயே வணக்கம்

இலக்கணக் குறிப்பு :

எந்தை=என் தந்தை என்பதன் மரூஉச் சொல், எந்தையும் தாயும்-உம்மை எண்ணும்மை, மகிழ்ந்து, குலாவி, வாழ்ந்து, வளர்ந்து-வினையெச்சங்கள்

வினாக்கள் :

1. பாரதியார் எத்தகையவர்?
2. பாரதியார் தம்தாய்நாட்டினை எவ்வாறுவாழ்த்தியுள்ளார்?

2. அறவுரை

1. திருக்குறள்

இந்திய அற நூல்களுள் தலை சிறந்ததும், மிகுதியான பிற நாட்டு மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டதுமாக விளங்கு வது திருக்குறள். ஒன்றே முக்காலடி வறையறையுள்ள குறள் வெண்பாவினால் இயற்றப்பட்டுச் சிறப்புற்று விளங்குகின்றமை யான் திரு என்னும் அடைமொழியோடு திருக்குறள் என்று போற்றப்படுகிறது. இந்நூல் அறத்துப்பால், பொருட்பால, காமத்துப்பால் என்னும் மூன்று பால்களையும், நூற்று முப்பத்து மூன்று அதிகாரங்களையும், ஆயிரத்து முந்நூற்று முப்பது குறட்பாக்களையும் உடையது. கடைச் சங்ககால நூலாய திருக்குறள் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றாக வைக்கப்பட்டுள்ளது. சாதி, சமயம், இனம், மொழி, நாடு முதலிய எல்லாவற்றையும் கடந்த அளவில் எல்லோரையும் இன்புற்றிருக்க வைக்கும் உயர்ந்த சமுதாயக் கொள்கை திருக்குறளில் விளக்கம் பெறுகிறது. திருக்குறளை, அறம் என்றும், தமிழ்மறை என்றும், பொதுமறை என்றும் சிறப்புறக் கூறுவர். திருக்குறட்குப் பரிமேலழகர், மணக் குடவர், பரிதி யார், காளிங்கர் உள்ளிட்ட பத்துப் பேர்கள் எழுதிய பழைய உரைகள் வழக்கில் உள்ளன. அப்பழையவுரைகளில் பரி மேலழகர்உரை மேம்பட்டது என்பர். தற்காலப் புலவர்களுள் கூட பலர் திருக்குறட்கு உரை எழுதி வெளியிட்டுள்ளனர்.

கடவுள் வாழ்த்து

வேண்டுதல் வேண்டாமை இலான்அடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல. 1

அறன் வலியுறுத்தல்

சிறப்பீனும் செல்வமுமீனும் அறத்தினூஉங்கு
ஆக்கம் எவனோ உயிர்க்கு. 2

இல்வாழ்க்கை

அறத்தாற்றின் இல்வாழ்க்கை யாற்றின் புறத்தாற்றிற்
போஒய்ப் பெறுவது எவன். 3

வாழ்க்கைத் துணைநலம்

பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மையுண் டாகப் பெறின். 4

மக்கட்பேறு

தம்மின்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லாம் இனிது. 5

அன்புடைமை

அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை. 6

விருந்தோம்பல்

இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு. 7

இனியவை கூறல்

இன்சொலால் ஈரம் அளைஇப் படிறிலவாஞ்
செம்பொருள் கண்டார்வாய்ச் சொல். 8

செய்ந்நன்றி அறிதல்

செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்ற லரிது. 9

நடுவு நிலைமை

கெடுவல்யான் என்பது அறிகதன் நெஞ்சம்
நடுஒரீஇ அல்ல செயின். 10

அடக்கமுடைமை

காக்க பொருளா அடக்கத்தை ஆக்கம்
அதனினூஉங் கில்லை உயிர்க்கு. 11

பொறையுடைமை

ஒறுத்தாரை ஒன்றாக வையாரே வைப்பர்
பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து. 12

அழுக்காறாமை

அழுக்காற்றின் அல்லவை செய்யார் இழுக்காற்றின்
ஏதம் படுபாக்கு அறிந்து. 13

வெஃகாமை

அஃகாமை செல்வத்திற்கு யாதெனின் வெஃகாமை
வேண்டும் பிறன்கைப் பொருள். 14

ஒப்புரவறிதல்

ஒப்புரவி னல்வரும் கேடெனின் அஃதொருவன்
விற்றுக்கோள் தக்க துடைத்து 15

ஈகை

வறியார்க்கொன்று ஈவதே ஈகைமற் றெல்லாம்
குறியெதிர்ப்பை நீர துடைத்து. 16

புகழ்

வசையென்ப வையத்தார்க் கெல்லாம் இசையென்னும்
எச்சம் பெறாஅ விடின். 17

வாய்மை

வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
தீமை இலாத சொலல். 18

வெகுளாமை

தன்னைத்தான் காக்கின் சினங்காக்க காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம். 19

இன்னா செய்யாமை

நோய்எல்லாம் நோய்செய்தார் மேலவாம் நோய்செய்யார்
நோயின்மை வேண்டு பவர். 20

மெய்யுணர்தல்

காமம் வெகுளி மயக்கம் இவைமூன்றன்
நாமம் கெடக்கெடும் நோய். 21

ஊழ்

நன்றாங்கால் நல்லவாக் காண்பவர் அன்றாங்கால்
அல்லற் படுவ தெவன். 22

கல்வி

எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு. 23

கல்லாமை

விலங்கொடு மக்கள் அனையர் இலங்கு நூல்
கற்றாரோடு ஏனை யவர். 24

கேள்வி

நுணங்கிய கேள்விய ரல்லார் வணங்கிய
வாயின ராதல் அரிது. 25

அறிவுடைமை

எவ்வ துறைவது உலகம் உலகத்தோடு
அவ்வ துறைவது அறிவு. 26

பெரியாரைத் துணைக்கோடல்

இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன் 27
கெடுப்பா ரிலானுங் கெடும்.

தெரிந்து செயல் வகை

நன்றாற்ற லுள்ளுந் தவறுண்டு அவரவர் 28
பண்பறிந் தாற்றாக் கடை.

வலியறிதல்

ஆகாறு அளவிட்டி தாயினுங் கேடில்லை 29
போகாறு அகலாக் கடை.

காலம் அறிதல்

அருவினை என்ப உளவோ கருவியான் 30
காலம் அறிந்து செயின்.

இடன் அறிதல்

அஞ்சாமை அல்லால் துணைவேண்டா எஞ்சாமை 31
எண்ணி இடத்தால் செயின்.

தெரிந்து வினையாடல்

அன்பறிவு தேற்றம் அவாவின்மை இந்நான்கும் 32
நன்குடையான் கட்டே தெளிவு.

சுற்றந் தழால்

பற்றற்ற கண்ணும் பழமையா ராட்டுதல் 33
சுற்றத்தார் கண்ணே யுள

பொச்சாவாமை

அச்ச முடையார்க்கு அரணில்லை ஆங்கில்லை 34
பொச்சாப் புடையார்க்கு நன்கு.

வெருவந்த செய்யாமை

அருஞ்செவ்வி இன்னா முகத்தான் பெருஞ்செல்வம்
பேஎய்கண் டன்னது உடைத்து. 35

ஊக்கம் உடைமை

உரமொருவற்கு உள்ள வெறுக்கைஅஃ தில்லார்
மரம்மக்க ளாதலே வேறு. 36

ஆள்வினை உடைமை

தாளாண்மை என்னுந் தகைமைக்கண் தங்கிற்றே
வேளாண்மை என்னுஞ் செருக்கு. 37

அமைச்சு

அறிகொன்று அறியான் எனினும் உறுதி
உழையிருந்தான் கூறல் கடன் 38

வினைத்தூய்மை

ஈன்றாள் பசிகாண்பான் ஆயினுஞ் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை. 39

வினைத்திட்பம்

வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம்
மற்றைய எல்லாம் பிற. 40

குறிப்பறிதல்

அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம். 41

நட்பு

நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு. 42

நட்பாராய்தல்

ஊதியம் என்பது ஒருவற்குப் பேதையார்
கேண்மை ஒரீஇ விடல் 43

மானம்

புகழ்இன்றால் புத்தேள்நாட்டு உய்யாதால் என்மற்று
இகழ்வார்பின் சென்று நிலை. 44

சான்றாண்மை

இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு. 45

நாணுடைமை

அணிஅன்றோ நாணுடைமை சான்றோர்க்கு அஃதின்றேல்
பிணிஅன்றோ பீடு நடை. 46

குடி செயல் வகை

குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்
சுற்றமாச் சுற்றும் உலகு. 47

உழவு

இலமென்று அசைஇ இருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகும். 48

நல்குரவு

நற்பொருள் நன்குணர்ந்து சொல்லினும் நல்கூர்ந்தார்
சொற்பொருள் சோர்வு படும். 49

இரவச்சம்

இரவுள்ள உள்ளம் உருகும் கரவுள்ள
உள்ளதூஉம் இன்றிக் கெடும். 50

அருஞ்சொற் பொருள்

1. கடவுள் வாழ்த்து - கடவுளை வழிபடுதல், வேண்டுதல் வேண்டாமை இலான்-விருப்பு வெறுப்பு இல்லாதவனாகிய இறைவன், சேர்ந்தார்க்கு-இடைவிடாது நினைப்பவருக்கு, இடும்பை-பிறவித்துன்பங்கள்,

2. அறன் வலியுறுத்தல் = அறம் வலியுடைத்து என்பதனை அறிவித்தல், சிறப்பு = வீடு பேறு, ஈனும் = தரும், செல்வம் = துறக்கம் (சுவர்க்கம்) முதலிய செல்வம், ஊங்கு-மேம்பட்டது.

3. அறத்தாற்றின்-அறத்தின் வழியே, புறத்தாற்றின்-துறவு, தவம் முதலிய புறநெறிகளில், போ ஓய்-அளபெடை.

4. வாழ்க்கைத்துணை நலம்-இல்லாளதுநன்மை, பெருந்தக்க-மேம்பட்ட, திண்மை-கலங்கா நிலைமை- உறுதிப்பாடு.

5 மாநிலத்து-பெரிய நிலத்து, மன் உயிர்-நிலைபெற்ற உயிர்

6. மறம்-வீரம், போர்.

7. ஓம்பி-போற்றி, வேளாண்மை-உதவி [உபகாரம்]

8. ஈரம்-அன்பு, அளை இ-கலந்து, படிறு-குற்றம், வஞ்சனை, பொய், செம்பொருள்-உண்மைப் பொருள்.

9. வையகம்-மண்ணுலகம்.

10. கெடுவல்-கெட்டுவிடுவோம், நடுவொரீஇ-நடுவு நிற்றலை ஒழிந்து, அல்ல-நடுவல்லவற்றை.

11. பொருளா-உறுதிப் பொருளாக, ஆக்கம்-செல்வம், அதனின் ஊங்கு-அதனைவிட மிக்க.

12. பொறையுடைமை-பொறுத்தலை உடையராதல், ஒறுத்தாரை-பிறர் தீங்கு செய்தபோது பொருது தண்டித்தாரை, துன்புறுத்தியாரை, ஒன்றாக-ஒரு பொருட்டாக, வையார்-மனத்துக் கொள்ளார், பொதிந்து-காத்து, பேணி,

13. அழுக்காறுமை-பொறாமையை விலக்குதல், அழுக்காற்றின்-அழுக்காறு காரணமாக, அல்லவை-அறனல்லாதவற்றை, இழுக்காற்றின்-அத் தீ நெறியான், ஏதம்-துன்பம், படுபாக்கு-வருதலை.

14. வெஃகாமை-பிறர் பொருளை விரும்பாமை, அஃகாமை-சுருங்காமை, குறையாமை, வற்ருமை.

15. ஒப்புரவறிதல்-உலக நடையினை அறிந்து செய்தல் விற்று-தன்னை விற்ருயினும், கோள்-கொள்ளுதல், தக்கதுடைத்து-தகுதியை உடைத்து.

16. குறி எதிர்ப்பு-அளவைக் குறித்து, ஊதியம் குறித்து, நீரது-நீர்மையது.

17. வசை-வசைமொழி, பழி, குற்றம், இசை-புகழ், எச்சம்-தொக்கு நிற்பது, மிச்சம்.

18. வாய்மை-பொய் சொல்லாமை, உண்மையே சொல்லுதல், மெய்ம்மை.

19. வெகுளாமை-கோபம் கொள்ளாமை, சினத்தைச் செய்யாமை

20. இன்ரு செய்யாமை-இன்னுதவற்றைச் செய்யாமை, நோய்-இன்னுதன, துன்பம்.

21 மெய்யுணர்தல்-அழியாத் தன்மையாகிய உண்மைத்தத்துவ அறிவை உணர்தல், காமம்-ஆசை, விழைவு, வெகுளி-வெறுப்பு, சினம். கோபம், நாமம்-பெயர்.

22. ஊழ் - விதி. நன்ருங்கால் - நல்லது விளையுங்கால், அன்ருங்கால் - தீவினை விளையுங்கால், அல்லல் - துன்பம்

23 எண்-கணிதம்.

24. இலங்கு-விளங்கிய.

25. நுணங்கிய - நுண்ணிதாகிய, வணங்கிய வாயினர்-பணிந்த மொழியினை உடையராதல்.

26. எவ்வது-யாதொருவாற்ருன், உறைவது-ஒழுகுவது, அவ்வது-அவ்வாற்ருன்.

27. இடிப்பார்-இடித்துக் கூறுவார், ஏமரா-காவல (ஏமம்+அரா)

28. ஆற்ருக்கடை-செய்யாவிடின்

29. ஆகு ஆறு-பொருள் ஆகி வருகின்ற நெறி, இட்டிது-சிறியது, போகு ஆறு-பொருள் போகின்ற நெறி, அகலாக்கடை-பெருகாதாயின்.

30. அருவினை-செய்தற்கரிய செயல்.

31. எஞ்சாமை-குறைவற.

32. அன்பறிவு-அன்பு + அறிவு, நன்கு உடையான்-நன்கு + உடையான்.

33. பற்றற்ற கண்ணும்-வறியவனான காலத்திலும் பழைமை-பழைய உறவு, சுற்றத்தார்கண்ணே-சுற்றத்தாரிடம்

34. பொச்சாவாமை-சோர்வடையாமை, மறவாமை, பொச்சாப்பு-மறதி, சோர்வு.

35. வெருவந்த செய்யாமை-அஞ்சத் தகுந்த செயல்களைச் செய்யாமை, செவ்வி-ஏற்ற சமயம், காட்சி.

36, உரம்-திண்மை, வெறுக்கை-ஊக்கம்,

37. தாளாண்மை-முயற்சி, தகைமை-உயர் பண்பு, வேளாண்மை-எல்லோர்க்கும் உதவுதல், செருக்கு-பெருமிதம்.

38. அறிகொன்று-அறிவுறுத்துவாரின் அறிவை அழித்து, அறியான்-தானும் அறியாதவனாக, உழையிருந்தான் — பக்கத்திலிருப்பவனான அமைச்சன், கடன்-கடமை.

39. வினைத் தூய்மை-செய்யும் செயலைக் குற்றமின்றிச் செய்தல், ஈன்ருள்-அன்னை, வினை-செயல்.

40. வினைத் திட்பம்-செயலில் திண்ணியராய் நிற்றல், திட்பம்-திடம்.

41. குறிப்பறிதல்-உள்ளக் கருத்தைக் கூருமல் அறிதல், கடுத்தது-மிகுந்தது.

42. நவில்தொறும்-கற்குந்தொறும், பயில்தொறும்-பழகுந்தொறும்.

43. ஊதியம்-பயன், இலாபம், கேண்மை-நட்பு, ஓரீஇ-நீக்குதல், விலக்குதல்.

44. புத்தேள் நாடு-துறக்க உலகம், சுவர்க்கம், உய்யாது-செலுத்தாது.

45. செய்யாக்கால்-செய்யாவிட்டால்.

46. நாணுடைமை-ஒவ்வாச் செயல்களில் நாணுதல், அணி-அணிகலன், பிணி-நோய், பீடு நடை-பெருமித நடை.

47. குடி செயல்வகை-பிறந்த குடியை உயரச் செய்தல், சுற்றமா-சுற்றமாகக் கொள்ள வேண்டி.

48. இலம்-இல்லாதவன், வறியேம், அசை இ-சொல்லி, நல்லாள்-தூயவள், நகும்-சிரிக்கும்.

49. நல்குரவு-பொருள் இல்லாமை, வறுமை, நல்கூர்ந்தார்-இல்லாதவர், வறியவர்.

50. இரவச்சம்-இரத்தற்கு அஞ்சுதல், இரவுள்ள-இரவு+உள்ள, கரவுள்ள-கரவு+உள்ள, கரவு-இருப்பவர்மறைத்து இல்லையெனல், உள்ள-நினைக்க.

இலக்கணக் குறிப்பு:

1. வேண்டாமை-எதிர்மறைத் தொழிற் பெயர், சேர்ந்தார்க்கு-வினையாலணையும் பெயர், இலான்-குறிப்பு வினையாலணையும் பெயர்.

2. செல்வமும்-உம்மை எச்சம்.

3. வாழ்க்கை-தொழிற் பெயர், ஆற்றின்-வினையெச்சம், போஒய்-உயிரளபெடை.

4. பெறின்-வினையெச்சம், திண்மை-பண்புப் பெயர்.

5. மாநிலத்து - உரிச்சொற்றொடர், மன்னுயிர் - வினைத்தொகை.

6. என்ப-பலர்பால் வினைமுற்று, அஃதே-ஏகாரம் தேற்றம்.

7. இருந்து, ஓம்பி-வினையெச்சங்கள், விருந்து-பண்பாகு பெயர்.

8 இன்சொல். செம்பொருள் - பண்புத்தொகைகள், ஆஅ இ- உயிரளபெடை, கண்டார்-வினையாலணையும் பெயர், செம்மை + பொருள்-செம்பொருள், காண் + ட் + ஆர்-கண்டார்.

9. செய்த-பெயரெச்சம், ஆற்றல்-தொழிற்பெயர்.

10. அறிக-வியங்கோள் வினைமுற்று, ஒரீஇ-சொல்லிசையளபெடை.

11. காக்க-வியங்கோள் வினைமுற்று, அதனின் + ஊங்கு + இல்லை-அதனினூங்கில்லை.

12. ஒறுத்தாரை, பொறுத்தாரை - வினையாலணையும் பெயர்கள், வை + ப் + ப் + அர்-வைப்பர். பொதி + த் + ந்+த் + உ- பொதிந்து-வினையெச்சம்.

13. அழுக்காறு-அழுக்கறு பகுதி, படுபாக்கு-தொழிற் பெயர்

14. அஃகாமை, வெஃகாமை - எதிர்மறைத் தொழிற் பெயர்கள்.

15. கேடு, கோள்-முன்னிலை திரிந்த தொழிற் பெயர்கள்.

16. வறியார்க்கு+ஒன்று=வறியார்க்கொன்றுமற்று+எல்லாம் -மற்றெல்லாம்.

17. எச்சம் = எஞ்சு பகுதி. அம் விகுதி, பெருஅ-செய்யுளிசையளபெடை, என்ப-பலர்பால் வினைமுற்று.

18 எனப்படுவது - வினையாலணையும் பெயர், சொலல்- தொழிற் பெயர். இல்லாத-எதிர்மறைப் பெயரெச்சம்.

19. காக்க - வியங்கோள் வினைமுற்று, காவாக்கால் - எதிர் மறை வினையெச்சம், காக்கின் -வினையெச்சம்.

20. சொற்பொருட் பின்வரு நிலை என்னும் அணி. செய்தார், வேண்டுபவர் - வினையாலணையும் பெயர்கள், நோய் செய்தார்-இரண்டாம் வேற்றுமைத் தொகை.

21, மூன்றன் நாமம்-ஆரும் வேற்றுமைத் தொகை.

22. நன்று + ஆகும் = நன்றும், அன்று + ஆகும் = அன்றும்.

23. எண்ணென்பஎழுத்தென்ப என்றவற்றுள்வரும் "என்ப" என்னும் சொல் பலவின்பால் உணர்த்தும் வினையாலணையும் பெயர். கண்ணென்ப என்பதிலுள்ள "என்ப" என்றது பலர் பால்வினைமுற்று.

24. இலங்கு நூல்-வினைத்தொகை.

25. நுணங்கிய, வணங்கிய-பெயரெச்சங்கள், நுணங்கு + இ(ன்) + அ. நுணங்கியர், அல்லார்-வினையாலணையும் பெயர்.

26. உலகம்-இடவாகுபெயர். உறைவது-வினையாலணையும் பெயர்.

27. இடிப்பாரை, கெடுப்பார் - வினையாலணையும் பெயர், ஏமரா - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம், ஏமரா-ஏமா பகுதி.

28. நன்று + ஆற்றல் = நன்றாற்றல், தவறு + உண்டு - தவறுண்டு, அவரவர்-அடுக்குத் தொடர், ஆற்ரு-ஈறுகெட்ட எதிர் மறைப் பெயரெச்சம்.

29. அளவு + இட்டிது - ஆயினும் - அளவிட்டிதாயினும், ஆகு + ஆறு-ஆகாறு, போகு + ஆறு - போகாறு, ஆகாறு, போகாறு-வினைத் தொகைகள், கேடு + இல்லை-கேடில்லை-கேடு முதனிலை திரிந்த தொழிற்பெயர், அகலா-ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.

30. அருமை + வினை = அருவினை-பண்புத்தொகை, உளவோ என்பதில் இறுதி ஓகாரவினு எதிர்மறை.

31. அல்லால்-எதிர்மறை வினையெச்சம், இடத்தால் செயின் - உருபு மயக்கம்.

32. அன்பு + அறிவு - அன்பறிவு, நன்கு + உடையான் - நன்குடையான், நான்கும் - உம்மை முற்று.

33. உள = பலவின் பால் வினை முற்று.

34, ஆங்கு-சுட்டு முதல் நீண்டது, உடையார்க்கு-வினையாலணையும் பெயர்.

35. அருஞ்செவ்வி, பெருஞ்செல்வம் - பண்புத்தொகைகள், பேஎய்-செய்யுளிசையளபெடை.

36, இல்லார்-எதிர்மறைக் குறிப்பு வினையாலணையும் பெயர்.

37. தங்கு + இன் + று + தங்கிற்று.

38. அறியான் - வினையாலணையும் பெயர்.

39. ஈன் + ற் + ஆள்-ஈன்றாள். செய்யற்க-எதிர்மறை வியங்கோள் வினைமுற்று, பழிக்கும் வினை-பெயரெச்சத் தொடர்.

40. மனத்திட்பம்-ஆறும் வேற்றுமைத் தொகை.

41. அடுத்தது, கடுத்தது - வினையாலணையும் பெயர்கள் காட்டும்-முன்னது எச்சம், பின்னது முற்று, இப்பாடல் உவமையணி. (முகத்திற்குப் பளிங்கு உவமை).

42. இப்பாடல் உவமையணி. (பண்புடையார்க்கு நூல் உவமை) நவில்தொறும், பயில்தொறும்-வினைத்தொகைகள்.

43, ஒரீஇ - சொல்லிசையளபெடை. கேண்மை - பண்புப் பெயர்.

44. இகழ்வார் - வினையாலணையும் பெயர். இன்று + ஆல் - இன்றால், ஆல் - அசை.

45. செய்தார்க்கும்-வினையாலணையும் பெயர். செய்யாக்கால் - எதிர்மறை வினையெச்சம்.

46. அஃது + இன்றேல் - அஃதின்றேல், இன்றேல் - வினையெச்சம்.

47. வாழ்வானை - வினையாலணையும் பெயர். சுற்றம்-தொழிலாகுபெயர், உலகு- இடவாகுபெயர்.

48. அசைஇ - உயிரளபெடை, இருப்பாரை - வினையாலணையும் பெயர், நகும்-செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்று.

49. நற்பொருள் - பண்புத்தொகை, நல்கூர்ந்தார் - வினையாலணையும் பெயர்,

50. இரவு + உள்ள - இரவுள்ள, கரவு + உள்ள - கரவுள்ள, உள்ளதூஉம்-இன்னிசையளபெடை.

வினாக்கள்

1. திருக்குறளின் சிறப்பினைக் கூறுக.
2. திருக்குறளின் பகுப்புமுறையைக் கூறுக.
3. திருக்குறளின் வேறு பெயர்கள் யாவை?
4. எவர்க்கு எந்நாளும் துன்பமில்லை?
5. அறத்தின் சிறப்பினைக் கூறுக.
6. துறவறத்தினும் இல்லறம் சிறந்தது என்பதை எடுத்துக் காட்டுக.
7. வாழ்க்கைத்துணை நலம்பற்றி வள்ளுவர் யாது கூறியுள்ளார்?
8. மன்னுயிர்க்கெல்லாம் இனிது எது?
9. அன்புடைமைபற்றி யாது கூறப்பட்டுள்ளது?
10. இல்லற வாழ்க்கையின் நோக்கம் யாது?
11. இன்சொல்லாவது யாது?
12. எதற்கு மண்ணுலகும், விண்ணுலகும் ஈடாகா?
13. நடுவுநிலைமைபற்றி நாம் அறிய வேண்டுவது யாது?
14. அடக்கத்தை எவ்வாறு காக்கவேண்டும்? ஏன்?
15. ஒறுத்தாரும் பொறுத்தாரும் எவ்வாறு மதிக்கப்படுவர்?
16. அழுக்காறுகாரணமாக ஒருவர் எதனைச் செய்யார்? ஏன்? செல்வம் சுருங்காமைக்குரிய வழி யாது?
17. ஒப்புரவாவது யாது? அதுபற்றி வள்ளுவர் யாது கூறியுள்ளார்?
18. விற்றுக்கோள் தக்க துடைத்து எது?
19. ஈகைபற்றித் திருக்குறள் கூறுவதென்ன?
20. வையத்தார்க்கு வசையென்பது யாது?
21. வாய்மையாவது யாது?

22. வெகுளாமைபற்றி வள்ளுவர் கூறியது யாது?
23. இன்னுசெய்யாமைபற்றித் திருக்குறள் கூறுவது என்ன
24. 'இவை மூன்றன் நாமம் கெடக்கெடும் நோய்'—மூன்று யாது?
25. தீமையுறுங் காலத்து அல்லற்படுதல் கூடாது. ஏன்?
26. கல்வியின் சிறப்பைக் கூறுக.
27. கல்லாமைபற்றித் திருக்குறளில் யாது கூறப்பட்டுள்ளது?
28. எவர் வணங்கிய வாயினராதல் அரிது?
29. ஏது அறிவு?
30. மன்னன் பெரியாரைத் துணைக் கொள்ள வேண்டும் என்பது ஏன்?
31. தெரிந்து செயல்வகைபற்றித்திருக்குறள் கூறுவதென்ன?
32. 'நன்ருற்றலுள்ளும் தவறுண்டு'—எப்போது?
33. வலியறிதல்பற்றி வள்ளுவர் யாது கூறியுள்ளார்?
34. காலம் அறிதலின் சிறப்பைக் கூறுக.
35. இடனறிதலின் சிறப்பு திருக்குறளில் எவ்வாறு கூறப்பட்டுள்ளது?
36. தெரிந்து வினையாடலைப்பற்றி வள்ளுவர் கூறுவதென்ன?
37. சுற்றத்தாரிடம் இருக்கவேண்டிய குணம் என்ன ?
38. எவர்க்கு அரணில்லை?
39. பேய்கண்டன்னதுடைத்து எது?
40. ஊக்கமுடைமைபற்றித் திருக்குறள் கூறுவதென்ன?
41. ஆள்வினையுடைமையின் சிறப்பினைக் கூறுக.
42. அமைச்சைப் பற்றி வள்ளுவர் விளக்குவதென்ன?
43. வினைத்தூய்மைபற்றித் திருக்குறளில் கூறப்பட்டுள்ளது யாது?
44. வினைத்திட்பமாவது யாது?
45. பளிங்குக்கும் முகத்துக்கும் உள்ள ஒப்புமையாது?

46. பண்புடையாளர் தொடர்பு எத்தகையது? விளக்குக.
47. பண்புடையாளருக்கு நூல் எவ்வாறு ஒப்பாகும்?
48. ஒருவருக்கு ஊதியம் என்பது யாது?
49. மானமாவதுயாது? அதுபற்றித்திருக்குறள் கூறுவதென்ன?
50. எது சால்பு? எது சால்பன்று?
51. சான்றோர்க்கு எது அணி? எது பிணி?
52. உலகம் எவனைச் சுற்றமாச் சுற்றும்?
53. நிலமென்னும் நல்லாள் எவரைக்கண்டு நகும்?
54. நல்குரவினைப்பற்றித் திருக்குறள் கூறுவதென்ன?
55. இரவச்சம்பற்றித் திருக்குறளில் யாது கூறப்பட்டுளது?
56. திருக்குறட் பகுதியிலிருந்து உவமையணி, சொற்பொருட் பின்வருநிலையணி இவற்றிற்கு உதாரணங் காட்டி அணியையும் விளக்குக.

ஆ. திரிகடுகம்

சுக்கு, மிளகு, திப்பிலி ஆகிய மூன்றும் சேர்ந்த மருந்தாகிய திரிகடுகம் உடல் நோயைப் போக்கி இன்பம் தருதல் போன்று, திரிகடுகம் என்னும் நூலில் கண் உள்ள ஒவ்வொரு பாட்டிலும் கூறப்படுகின்ற மூன்று நீதிகள் உள்ள நோயைப் போக்கி உயர்வின்பம் பயக்கும் தன்மையன என்ற கருத்துப்பட இந்நூலின் பெயர் திரிகடுகம் எனக் குறிக்கப்பட்டுள்ளது. கடைச் சங்ககாலப் புலவராகிய நல்லாதனார் இயற்றிய இந்நூல் பதினெண் கீழ்க் கணக்கு நூல்களில் ஒன்றாகத் திகழ்கிறது.

இனிது

தாளாள னென்பான் கடன்படா வாழ்பவன்
வேளாள னென்பான் விருந்திருக்க உண்ணாதான்
கோளாள னென்பான் மறவாதா னிம்மூவர்
கேளாக வாழ்த லினிது. 1

இன்னாதன

ஆசை பிறன்கட் படுதலும் பாசம்
பசிப்ப மடியைக் கொளலுங் – கதித்தொருவன்
கல்லானென் றெள்ளப் படுதலும் இம்மூன்றும்
எல்லார்க்கு மின்னா தன. 2

உமிக்குத்திக் கை வருந்துவார்

வெல்வது வேண்டி வெகுண்டுரைக்கு நோன்பிலியும்
இல்லது காமுற் றிருப்பானும் – கல்வி
செவிக்குற்றம் பார்த்திருப் பானு மிம்மூவர்
உமிக்குத்திக் கைவருந்து வார். 3

செல்வம் உடைக்கும் படை

தன்னை வியந்து தருக்கலும் தாழ்வின்றிக்
கொன்னே வெகுளி பெருக்கலும் – முன்னிய
பல்பொருள் வெஃகுஞ் சிறுமையும் இம்மூன்றும்
செல்வ முடைக்கும் படை. 4

இருளுலகம் சேராத ஆறு

ஈதற்குச் செய்க பொருளை அறநெறி
சேர்தற்குச் செய்க பெருநூலை – யாதும்
அருள்புரிந்து சொல்லுக சொல்லைஇம் மூன்றும்
இருளுலகம் சேராத ஆறு. 5

அருஞ்சொற் பொருள்

1. தாளாளன் - முயற்சியுடையான், வேளாளன் - உதவியாளன், கோளாளன்-கொள்ளுதலையுடையான், கேள்-நட்பு.

2. பிறன்கண் - பிறனொருவனிடத்திலுள்ள பொருளின் கண், மடி - சோம்பல், கதித்து-வெறுத்து, எள்ளப்படுதல் - இகழப்படுதல், இன்னாதன - இன்பந்தராதன.

3. நோன்பு-தவம், கடைப்பிடி, இல்லாதது-கிடைத்தற்கரிய பொருள்.

4. தருக்கலும் - அகங்கரித்தலும், கொன்னே - வீணாக, முன்னிய - கருதிய, வெஃகும் - விரும்புகின்ற.

5. ஈதற்கு - பிறருக்குக் கொடுக்க, இருளுலகம் - நரகம்.

இலக்கணக் குறிப்பு:

1. என்பான்-வினையாலணையும் பெயர், விருந்து - பண்பாகு பெயர், வாழ்தல்-தொழிற்பெயர்.

2. படுதல், கொளல் - தொழிற்பெயர்கள், கதித்து - வினையெச்சம்.

3. இருப்பான் - வினையாலணையும் பெயர், உமிக்குத்தி - இரண்டாம் வேற்றுமைத் தொகை, வெகுண்டு + உரைக்கும்- வெகுண்டுரைக்கும், வருந்து + வ் + ஆர் - வருந்துவார்.

4. வியந்து-வினையெச்சம், முன்னிய, வெஃகும்-பெயரெச்சங்கள், பல + பொருள்-பல்பொருள், தருக்கல்-தொழிற்பெயர், இன்றி-எதிர்மறைக்குறிப்பு வினையெச்சம்.

5. சேராத-எதிர்மறைப் பெயரெச்சம், பெருநூல்-பண்புத்தொகை, செய்க, சொல்லுக-வியங்கோள் வினைமுற்றுக்கள்.

வினாக்கள்:

1. திரிகடுகம்-பெயர்க்காரணம் கூறுக?
2. எம்மூவர் கேளாக வாழ்தல் இனிது?
3. தாளாளன், வேளாளன், கோளாளன் என்பார் யார்?
4. எல்லார்க்கும் இன்னாதன யாவை?
5. உமிக்குத்திக் கைவருந்துவார் யாவர்?
6. செல்வம் உடைக்கும் படைகள் யாவை?
7. இருளுலகம் சேராத ஆறு எது?

இ. நான்மணிக் கடிகை

நான்மணிக கடிகை என்னும் இந்நூற் பெயர் நான்கு வகையான நீதி மணிகளாற் கோக்கப்பட்ட ஒருவகை அணிகலன் என்று விரியும். விளம்பி நாகனுர் என்பார் இயற்றிய இந்நூலும் பதினெண் கீழ்க் கணக்கு நூல்களுள் ஒன்று. இதன்கண் வரும் ஒவ்வொரு பாட்டிலும் நான்கு நீதிகள் உணர்த்தப்படும்.

நல்லாள் பிறக்கும் குடி

கள்ளி வயிற்றின் அகில்பிறக்கும் மான்வயிற்றின்
ஒள்ளரி தாரம் பிறக்கும் பெருங்கடலுள்
பல்விலைய முத்தம் பிறக்கும் அறிவார்யார்
நல்லாள் பிறக்குங் குடி. 1

நட்டார்கண் விட்ட வினை

அஞ்சாமை அஞ்சுக ஒன்றில் தனக்கொத்த
எஞ்சாமை யெஞ்சல் அளவெல்லா - நெஞ்சறியக்
கோடாமை கோடி பொருள்பெறினும் நாடாதி
நட்டார்கண் விட்ட வினை. 2

வன்பாட்டது இல்

திருவின் திறலுடைய தில்லை ஒருவற்குக்
கற்றலின் வாய்த்த பிறவில்லை—எற்றுள்ளும்
இன்மையின் இன்னுத தில்லையில் லென்னுத
வன்மையின் வன்பாட்ட தில். 3

தேர்தற் பொருள பொருள்

எள்ளற் பொருள திகழ்தல் ஒருவனை
உள்ளற் பொருள துறுதிச்சொல் – உள்ளறிந்து
சேர்தற் பொருள தறநெறி பன்னூலுந்
தேர்தற் பொருள பொருள். 4

அருஞ்சொற் பொருள் :

1. கள்ளி - கள்ளிமரம், அகில் - அகிற்கட்டை, ஒள் - ஒளியுள்ள, பல்விலைய - மிக்க விலையையுடைய.

2. எஞ்சாமை - குறையவிடாதிருத்தல், கோடாமை - கோணுமையாகிய ஒழுக்கம், கோடி - கொள்க.

3. திரு - செல்வம், எற்றுள்ளும் - எதனுள்ளும், இன்மை - வறுமை, வன்மை-மனவுறுதி, வன்பாட்டது - திட்பமானது.

4. உள்ளறிந்து - உள்ளத்தில் தெளிந்து, பன்னூல் - பல நூல்களையும்.

இலக்கணக் குறிப்பு:

1. பெருங்கடல்-பண்புத்தொகை, அறிவார்-தெரிநிலைவினையாலணையும் பெயர், பிறக்கும் குடி-பெயரெச்சத்தொடர்.

2. அஞ்சாமை-எதிர்மறைத் தொழிற்பெயர், நட்டார்-தெரிநிலை வினையாலணையும் பெயர், நடு + ஆர்-நட்டார், 'நடு' என்னும் பகுதி ஒற்று இரட்டித்து இறந்த காலம் காட்டிற்று.

3. இல்லை - எதிர்மறைக் குறிப்பு வினைமுற்று, எற்று + உள்ளும்-எற்றுள்ளும்.

4. பல + நூலும்-பன்னூலும், அறிந்து-வினையெச்சம்.

வினுக்கள் :

1. அறிவார் யார்? 'நல்லாள் பிறக்கும் குடி' என்றது ஏன் ? விளக்குக.

2. நட்டார்கண் விட்டவினை என்னும் தலைப்பில் நான்மணிக் கடிகை கூறுவதென்ன ?

3. வன்மையின் வன்பாட்டதில் - விளக்குக.

4. தேர்தற்பொருள பொருள் - விளக்குக.

5. நான்மணிக்கடிகை – பொருள் கூறுக.

ஈ. சிறுபஞ்சமூலம்

காரியாசான் இயற்றிய சிறுபஞ்ச மூலம் என்னும் நூலின் ஒவ்வொரு பாட்டும் ஐந்து பொருள்களைக் கூறும். மருத்துவ நூலிற் கூறப்பட்ட கண்டங்கத்தரி வேர், சிறுவழுதுணைவேர், நெருஞ்சி வேர், பெருமல்லி வேர், சிறுமல்லி வேர் ஆகிய ஐந்து வேர்களும் (பஞ்ச மூலங்கள்) மக்கள் பிணியைத் தீர்ப்பது போல, இந்நூல் தன்னுள் ஒவ்வொரு பாட்டிலும் அமைந்த ஐந்தைந்து பொருட்களாலும் தன்னைப் படித்துணர்வாரின் பிறவி நோயைத் தீர்க்கும் என்பது நூலின் பெயரின் பொருள். இந்நூலும் பதினெண் கீழ்க் கணக்கில் ஒன்று.

நன்றல்ல

சிலம்பிக்குத் தன்சினை கூற்றம்நீள் கோடு
விலங்கிற்குக் கூற்ற மயிர்தான் – வலம்படா
மாவிற்குக் கூற்றமாம் ஞெண்டிற்குத் தன்பார்ப்பு
நாவிற்கு நன்றல் வசை. 1

நன்று

பிழைத்தல் பொறுத்தல் பெருமை சிறுமை
இழைத்ததீங் கெண்ணி யிருத்தல் – இழைத்த
பகைகெட வாழ்வதும் பல்பொருளார் நல்லார்
நகைகெட வாழ்வதும் நன்று. 2

மேதை

பூவாது காய்க்கும் மரமுமுள நன்றறிவார்
மூவாது மூத்தவர் நூல்வல்லார் – தாவா
விதையாமை நாறுவ வித்துள மேதைக்கு
உரையாமை செல்லும் உணர்வு. 3

இல்லை

ஒருவ னறிவானு மெல்லாம் யாதொன்றும்
ஒருவ னறியா தவனும்—ஒருவன்
குணனடங்கக் குற்றமில் லானு மொருவன்
கணனடங்கிக் கற்றுனு மில். 4

அருஞ்சொற் பொருள்

1 சிலம்பி - சிலந்தி. தன்சினை - தன்கருவாகிய முட்டை, கூற்றம்-எமன், விலங்கு-எருது, கோடு-கொம்பு, வலம்படா-வெற்றியுண்டாகாத, மா-கவரிமான், பார்ப்பு-குஞ்சு.

2. பகை-பிழைகள்.

3. தாவா-கெடாதிருக்க, நாறுவ-முளைப்பவையாகிய.

4. கணன்-தொகுதி

இலக்கணக் குறிப்பு:

1. தன்சினை - ஆறும்வேற்றுமைத் தொகை, நன்று + அல் + வகை-நன்றல்வகை.

2. நன்று-குறிப்பு வினைமுற்று. பொறுத்தல்-தொழிற்பெயர்.

3. பூவாது-எதிர்மறை வினையெச்சம்.

4. அறிவானும், கற்றுனும் - வினையாலணையும் பெயர்கள், அடங்கி-வினையெச்சம்.

வினுக்கள்:

1. சிறுபஞ்ச மூலம்-பெயர்க் காரணங் கூறுக?

2. எது எது எதெதற்குக் கூற்றம்?

3. பூவாது காய்க்கும் மரம் எது? இதனல் விளக்கப்படுவது என்ன?

6. மேதையின் இயல்பு யாது?

5. உலகில் எத்தகையவர் இல்லை?

3. தொடர்நிலைச் செய்யுட்கள்

அ. மணிமேகலை

[சீத்தலைச் சாத்தனார்]

சிறைக் கோட்டம் அறக் கோட்டமாக்கிய காதை

தமிழில் ஐம்பெருங்காப்பியங்கள் என்று சிறப்பிக்கப்படும் சிலப்பதிகாரம், மணிமேகலை, சிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி என்ற ஐந்தனுள் சிலப்பதிகாரம், மணிமேகலை இவ்விரண்டனையும் சேர்த்து இரட்டைக்காப்பியங்கள் என்பர். சிலப்பதிகாரக் கதைத் தலைவியருள் ஒருத்தியான மாதவியின் மகள் மணிமேகலையின் வரலாற்றினைக் கூறுவதால் இக்காப்பியம் மணிமேகலை எனப்பட்டது. மணிமேகலைத் துறவு என்றழைப்பாரும் உண்டு. இதனை இயற்றியவர் இளங்கோவடிகட்குச் சிலப்பதிகார வரலாற்றினை இயம்பிய சீத்தலைச் சாத்தனாராவார். மணிமேகலை பௌத்த சமயக் கருத்துக்களை இடையிடையே விளக்கிச் செல்லும். இளங்கோவடிகள் யாத்த சிலப்பதிகாரத்தினை எளிதாக ஒரு சமயக் காப்பியம் எனக் கூற இயலவில்லை யாகையால் மணிமேகலையே தமிழில் நமக்குக் கிடைக்கும் முதல் சமயக் காப்பியம் என்பர். மணிமேகலைக் காப்பியத்தில் முப்பது காதைகள் அமைந்துள்ளன. இவண் பத்தொன்பதாவது காதையாகிய "சிறைக் கோட்டம் அறக் கோட்டமாக்கிய காதை"யின் சில பகுதிகள் நமக்குப் பாடமாக வந்துள்ளன. மணிமேகலை அமுத சுரபியோடு சென்று சோழ நாட்டில் பசிப்பிணி போக்கி மன்னனிடம் சென்று சிறைக் கோட்டத்தை அழித்து அறக்கோட்டமாக ஆக்குமாறு வேண்டும் செய்தி இக்காதையில் நவிலப்படுகிறது. இடையே வருணனைகள், பண்டைக் கலைவளம் போன்ற செய்திகளும் கூறப்படுகின்றன.

மணிமேகலை சிறைச்சாலையில் உணவளித்தல்

உறையுட் குடிகை உள்வரிக் கொண்ட
மறுவில் செய்கை மணிமே கலைதான்
மாதவி மகளாய் மன்றம் திரிதரின்
காவலன் மகனோ கைவிட லீயான்
காய்பசி யாட்டி காயசண் டிகையென
ஊர்முழு தறியும் உருவம் கொண்டே,
ஆற்றா மாக்கட் காற்றும் துணையாகி
ஏற்றலும் இடுதலும் இரப்போர் கடனவர்
மேற்சென் றளித்தல் விழுத்தகைத் தென்றே
நூற்பொருள் உணர்ந்தோர் நுனித்தன ராமென,
முதியாள் கோட்டத் தகவையின் இருந்த
அமுத சுரபியை அங்கையின் வாங்கிப்
பதியகம் திரிதரும் பைந்தொடி நங்கை
அதிர்கழல் வேந்தன் அடிபிழைத் தாரை
ஒறுக்குந் தண்டத் துறுசிறைக் கோட்டம்
விருப்பொடும் புகுந்து வெய்துயிர்த்துப் புலம்பி
ஆங்குப் பசியுறும் ஆருயிர் மாக்களை
வாங்கு கையகம் வருந்த நின் றூட்டலும்

சிறைக்காவலர்கள் வியப்பு

ஊட்டிய பாத்திரம் ஒன்றென வியந்து
கோட்டங் காவலர் கோமகன் தனக்கிப்
பாத்திர தானமும் பைந்தொடி செய்தியும்
யாப்புடைத் தாக இசைத்து மென்றேகி

சோழவரசன் தேவியோடு இருத்தல்

நெடியோன் குறளுரு வாகி நிமிர்ந்துதன்
அடியிற் படியை யடக்கிய அந்நாள்
நீரிற் பெய்த மூரி வார்சிலை

மாவலி மருமான் சீர்கெழு திருமகள்
சீர்த்தி யென்னுந் திருத்தகு தேவியொடு
போதவிழ் பூம்பொழில் புகுந்தனன் புக்கு
……………………………………………

பொழில் விளையாட்டு

குருந்தும் தளவும் திருந்துமலர்ச் செருந்தியும்
முருகுவிரி முல்லையும் கருவிளம் பொங்கரும்
பொருந்துபு நின்று திருந்துநகை செய்து
குறுங்கால் நகுலமும் நெடுஞ்செவி முயலும்
பிறழ்ந்துபாய் மானும் இறும்பகலா வெறியும்
வம்மெனக் கூஉய் மகிழ்துணை யொடுதன்
செம்மலர்ச் செங்கை காட்டுபு நின்று
மன்னவன் தானும் மலர்க்கணை மைந்தனும்
இன்னிள வேனிலும் இளங்காற் செல்வனும்
எந்திரக் கிணறும் இடுங்கற் குன்றமும்
வந்துவீ ழருவியும் மலர்ப்பூம் பந்தரும்
பரப்புநீர்ப் பொய்கையுங் கரப்புநீர்க் கேணியும்
ஒளித்துறை யிடங்களும் பளிக்கறைப் பள்ளியும்
யாங்கணும் திரிந்து தாழ்ந்துவிளை யாடி

வேந்தன் அரசு வீற்றிருக்கை

மகத வினைஞரும் மராட்டக் கம்மரும்
அவந்திக் கொல்லரும் யவனத் தச்சரும்
தண்டமிழ் வினைஞர் தம்மொடு கூடிக்
கொண்டினி தியற்றிய கண்கவர் செய்வினைப்
பவளத் திரள்காற் பன்மணிப் போதிகைத்
தவள நித்திலத் தாமம் தாழ்ந்த
கோணச் சந்தி மாண்வினை விதானத்துத்
தமனியம் வேய்ந்த வகைபெறு வனப்பிற்
பைஞ்சேறு மெழுகாப் பசும்பொன் மண்டபத்து
இந்திரத் திருவன் சென்றினி தேறலும்

வேந்து வாழ்த்து

வாயிலுக் கிசைத்து மன்னவன் அருளால்
சேய்நிலத் தன்றியும் செவ்விதின் வணங்கி,
எஞ்சா மண்ணசை இகலுளந் துரப்ப
வஞ்சியின் இருந்து வஞ்சி சூடி
முறஞ்செவி யானையும் தேரும் மாவும்
மறங்கெழு நெடுவாள் வயவரும் மிடைந்த
தலைத்தார்ச் சேனையொடு மலைத்துத்தலை வந்தோர்
சிலைக்கயல் நெடுங்கொடி செருவேற் றடக்கை
ஆர்புனை தெரியல் இளங்கோன் தன்னால்
காரியாற்றுக் கொண்ட காவல் வெண்குடை
வலிகெழு தடக்கை மாவண் கிள்ளி
ஒளியொடு வாழி ஊழிதோ றூழி
வாழி எங்கோ மன்னவர் பெருந்தகை
கேளிது மன்னே கெடுகநின் பகைஞர்.

காவலாளர் செய்தி சொல்லல்

யானைத் தீநோய்க் கயர்ந்து மெய்வாடியிம்
மாநகர்த் திரியுமோர் வம்ப மாதர்
அருஞ்சிறைக் கோட்டத் தகவயிற் புகுந்து
பெரும்பெயர் மன்ன நின்பெயர் வாழ்த்தி
ஐயப் பாத்திரம் ஒன்று கொண் டாங்கு
மொய் கொள் மாக்கள் மொசிக்கவூண் சுரந்தனள்
ஊழிதோ றூழி உலகங் காத்து
வாழி எங்கோ மன்னவ என்றலும்

வேந்தன்முன் மணிமேகலை

வருக வருக மடக்கொடி தானென்று
அருள்புரி நெஞ்சமொ டரசன் கூறலின்
வாயி லாளரின் மடக்கொடி தான் சென்று
ஆய்கழல் வேந்தன் அருள்வா ழியவெனத்

தாங்கருந் தன்மைத் தவத்தோய் நீயார்
யாங்கா கியதிவ் வேந்திய கடிஞையென்று
அரசன் கூறலும் ஆயிழை உரைக்கும்

பாத்திரப் பெருமை

விரைத்தார் வேந்தே நீநீடு வாழி
விஞ்சை மகள்யான் விழவணி மூதூர்
வஞ்சந் திரிந்தேன் வாழிய பெருந்தகை
வானம் வாய்க்க மண்வளம் பெருகுக
தீதின் றுக கோமகற் கீங்கிது
ஐயக் கடிஞை அம்பல மருங்கோர்
தெய்வந் தந்தது திப்பிய மாயது
யானைத் தீநோய் அரும்பசி கெடுத்தது
ஊனுடை மாக்கட் குயிர்மருந் திதுவென

மணிமேகலையின் சீர்திருத்தம்

யான்செயற் பாலதென் இளங்கொடிக் கென்று
வேந்தன் கூற மெல்லியல் உரைக்கும்
சிறையோர் கோட்டஞ் சீத்தருள் நெஞ்சத்து
அறவோர்க் காக்கும் அதுவா ழியரென
அருஞ்சிறை விட்டாங் காயிழை உரைத்த
பெருந்தவர் தம்மாற் பெரும்பொரு ளெய்தக்
கறையோர் இல்லாச் சிறையோர் கோட்டம்
அறவோர்க் காக்கினன் அரசாள் வேந்தன்.

அருஞ்சொற்பொருள்

1. குடிகை - கோவில், உறையுட் குடிகை - உறைவிடமாகிய கோவில், உள்வரி-வேற்றுருவம்.

2. மறுவில்-குற்றமற்ற.

4. கைவிடலீயான்-கைவிடான்.

8. இரப்போர்-பிச்சை கேட்போர், அளித்தல்-கொடுத்தல், காப்பாற்றுதல்.

9. விழுத்தகை-விழுமிய தன்மை, சிறந்த பண்பு.

10. நுனித்தனர்-கூர்ந்து ஆராய்ந்தனர்.

11. அகவயின்-உள்ளே.

12. அங்கை-அகம்+கை.

13. பதியகம்- ஊரின் அகம்.

14. அதிர் கழல்-அதிர்ந்து ஒலிக்கின்ற கழல், பிழைத்தாரை -பிழை செய்தாரை.

15. ஒறுக்கும் - துன்புறுத்தும், தண்டத்து - தண்டத்தினை யுடைய, உறு-மிக்க.

17. பசியுறும்-பசியுற்றிருக்கும்.

18. கையகம்-அகம்கை.

20. கோட்டம்-சிறைக்கோட்டம், கோமகன்-அரசன்.

22. யாப்புடைத்தாக - உறுதியுடைத்தாக, இசைத்தும்-சொல்லுவேம், ஏகி-சென்று.

23. நெடியோன்-திருமால்

24. படியை-நிலத்தை, பூமியை.

25. நீரிற் பெய்த-நீருடன் நிலத்தைக் கொடுத்த, மூரி-வலிய, வார் சிலை-நெடிய சிலை.

26. மாவலி மருமான் மகள்-மகாபலியின் வழித் தோன்றலாகிய அரசனுடைய மகள், சீர்கெழு-சிறப்பு மிகுந்த.

28. போதவிழ்-அரும்பவிழ், புக்கு-புகுந்து.

29 குருந்து-குருந்த மலர், தளவு-செம்முல்லை, செருந்தி--செருந்த மரத்தின் மலர்,

30. முருகு-மணம், அழகு, கருவிளம்-கருவிளம் என்னும் ஒருவகை மரத்தின் மலர், பொங்கர்-சோலை.

32. நகுலம்-கீரி.

33. இறும்பு-குறுங்காடு, வெறி-ஆடு

34. வம் எனக் கூஉய்—வாரும் என்று கூவி (வாரும் என்பது வம் என நின்றது). மகிழ்துணை-மகிழும் துணையாகிய அரசமா தேவி.

35. காட்டுபு - காட்டி.

36. மலர்க்கணை மைந்தன்-காமன்.

37. இன்னிள வேனில் – இனிய இளவேனிற் பருவம் (சித்திரை, வைகாசித் திங்கள்கள்), இளங்காற் செல்வன் - தென்றற் காற்றாகிய செல்வன்.

33. எந்திரக் கிணறு - நீரை இறைத்தற்கும். போக்குதற்கும் எந்திரமாகிய பொறி அமைக்கப்பட்ட கிணறு, இடும் கற்குன்றம் - செய் குன்று செய்யப்பட்ட கற்குன்றம்),

40. கரப்பு நீர்க் கேணி-மறைவாக நீரையுடைய கிணறு (அந்தக் கேணி என்பதும் உண்டு).

4 , ஒளித்து உறை-ஒளிந்து வாழ ஏற்ற, பளிக்கறை-பளிங்காலான அறை, பள்ளி-இடம்.

43. மகத வினைஞர் - மகத நாட்டுப் பிறந்த இரத்தின வேலைக்காரர், மராட்டக் கம்மரும் - மகாராட்டிர நாட்டுக் கம்மாளரும்.

45. வினைஞர்-தொழில் செய்வோர்.

47. போதிகை—போதிகைக் கட்டை, தாழ்வாரத் தூண்.

48. தவள - வெண்மையான, நித்திலம்-முத்து, தாமம் – மாலை.

49. கோணச் சந்தி - கோணமாகிய சந்தி, விதானம் - மேற்கட்டி, மாண்வினை-சிறப்பு வேலைப்பாடு அமைந்த.

50. தமனியம் - பொன்.

52. இந்திரத் திருவன்-இந்திரச் செல்வமுடைய மன்னன்,

53. வாயிலுக்கு - இவண் ஆகுபெயராய்வாயிற்காவலருக்கு, இசைத்து - தெரிவித்து.

54. சேய் - தொலைவு. செவ்வியின் - சமயத்தில்.

55. எஞ்சா - குறையாத, மண் நசை இ - மண்ணை விரும்பி, இகல் - மாறுபாடுடைய, துரப்ப - செலுத்த

56. வஞ்சியிலிருந்து - கருவூரிலிருந்து, வஞ்சி சூடி - வஞ்சிப் பூமாலையைச் சூடி.

57. முறஞ் செவி-முறம் போலும் காது, மா - குதிரை.

58. மறம்கெழு - ஆண்மை மிகுந்த, வயவர் - வீரர்.

59. தலை - தலைமையுடைய, முதன்மையுடைய, தார்ச் சேனை - தூசிப்படை, தார் - தூசி - கேடயம், மலைத்து - மாறுபட்டு, தலை வந்தோர் - முதலில் வந்தோர்.

60. சிலை - சேரனுடைய வில், கயல் - பாண்டியனுடைய கயல் (மீன்), செரு வேல் - போர் வேல், தடக்கை - வளைந்த கை

61. ஆர் - ஆத்தி (சோழரின் அடையாள மாலை மலர்) தெரியல் - மாலை,

62. காரியாற்றுக் கொண்ட - காரியாற்றினை வெற்றி கொண்ட.

63. வலிகெழு - வலிமை பொருந்திய, மாவண் கிள்ளி - மிகுந்த வண்மையுடைய கிள்ளிவளவன்.

64. ஒளி - புகழ், விளக்கம், சிறப்பு.

67. அயர்ந்து - கவலையுற்று.

68. வம்ப மாதர் - புதியவளான பெண் (காயசண்டிகை)

70. பெரும் பெயர் - மிக்க புகழ்.

72. மொய் - நெருக்கம், மாக்கள் - மக்கள், மொசிக்க - உண்ண.

75. மடக்கொடி - அழகிய பெண், மடப்பம் மிகுந்த கொடி போல்வாள்.

80. கடிஞை - பாத்திரம், விரை - மணம்.

83. விஞ்சை மகள் - வித்தியாதரப் பெண்.

85. வானம் - மழை.

87 ஐயக் கடிஞை - பிச்சைப் பாத்திரம்.

88. திப்பியம் - தெய்வ உலகிலிருந்து உண்டாகியது, தெய்வத் தன்மையுடையது.

93. சீத்து - அழித்து.

97. கறையோர் - கடமை கொடுப்போர்.

இலக்கணக் குறிப்பு:

5. காய்பசி - வினைத்தொகை.

7. ஆற்று - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.

8. இரப்போர் - வினையாலணையும் பெயர்.

10. உணர்+த்+ந்+த்+ஓர் - உணர்ந்தோர்.

12. அகம் + கை - அங்கை.

13. பைந்தொடி - பண்புத்தொகை, பசுமை+தொடி.

14, அதிர்கழல் - வினைத்தொகை.

17. அருமை + உயிர் - ஆருயிர்—பண்புத்தொகை.

18. வாங்கு கை - வினைத்தொகை, கையகம் - இரு பெயரொட்டுப் பண்புத் தொகை.

21. பைந்தொடி - பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை, பசுமை + தொடி.

25. வார்சிலை - வினைத்தொகை.

28. அவிழ் பூம்பொழில் - வினைத்தொகை. பூ+பொழில் – பூம்பொழில். புகு+உ=புக்கு. புகு என்னும் பகுதி ஒற்று இரட்டித்து இறந்த காலம் காட்டிற்று, புகு+த்+ந்+த்+அன்+அன்= புகுந்தனன்.

29. திருந்துமலர்-வினைத்தொகை.

30. விரிமுல்லை-வினைத்தொகை.

31. பொருந்துபு-செய்பு என்னும் வாய்பாட்டு வினையெச்சம், திருந்து நகை-வினைத்தொகை.

32. குறுங்கால், நெடுஞ்செவி - பண்புத்தொகைகள், குறுமை × நெடுமை-முரண்தொடை.

34. கூஉய் உயிரளபெடை, மகிழ்துணை-வினைத்தொகை.

35. செம்மை + மலர்-செம்மலர், செம்மை + கை-செங்கை, நில் + ற் + உ - நின்று.

36 மலர்க்கணை - இருபெயரொட்டுப் பண்புத்தொகை.

37. இன்னிளவேனில், இளங்கால்-பண்புத்தொகைகள்.

39 வீழருவி-வினைத்தொகை.

40 நீர்க்கேணி - இரண்டன் உருபும் பயனும் உடன் தொக்க தொகை.

41. பளிங்கு + அறை-பளிக்கறை

45. தண்மை + தமிழ் - தண்டமிழ் - பண்புத்தொகை, வினை + ஞ் + அர்-வினைஞர்-ஞ் பெயரிடைநிலை.

48. நித்திலத்தாமம்-மூன்றன் உருபும் பயனும் உடன்தொக்க தொகை.

51. பசுமை + சேறு - பைஞ்சேறு, பசுமை + பொன் - பசும்பொன், பைஞ்சேறு, பசும்பொன்-பண்புத்தொகைகள்.

52. செல் + ற் + உ-சென்று.

53. வாயில்-இலக்கணப்போலி.

55. எஞ்சா-ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம், நசைஇ-சொல்லிசையளபெடை.

57. முறஞ்செவி-உவமைத்தொகை, தேனும்மாவும்-உம்மை எண்ணும்மை.

58. நெடுவாள்-பண்புத்தொகை.

59. வா + த் + ந் + த் + ஓர் - வந்தோர்.

60. தடக்கை-உரிச்சொற்றொடர்.

62. வெண்குடை பண்புத்தொகை

66. கெடுக, வாழி-வியங்கோள் வினைமுற்றுக்கள்.

67. யானைத்தீநோய் - இருபெயரொட்டுப்பண்புத்தொகை.

69. அருஞ்சிறை – பண்புத்தொகை.

71. ஆங்கு - சுட்டு முதல் நீண்டது.

72. சுர + த் + ந் + த் + அன் + அள் - சுரந்தனள்.

75. வருக வருக - அடுக்குத்தொடர், வருக - வியங்கோள் வினைமுற்று.

77. மடக்கொடி – பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை, மடக்கொடி உரிச்சொற்றொடரென்றும், கொடி-உவமை ஆகுபெயரென்றும் கூறலுமாம்.

78. ஆய்கழல் - வினைத்தொகை,

79 தாங்க + அருமை + தன்மை-தாங்கருந்தன்மை.

81. ஆயிழை - வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை, உரைக்கும் – செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்று.

83. முதுமை + ஊர் - மூதூர் - பண்புத்தொகை.

84. பெருந்தகை - பண்புத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை.

85. வாய்க்க, பெருகுக. ஆக - வியங்கோள் வினைமுற்று.

90. உயிர்மருந்து - நான்காம் வேற்றுமைத்தொகை.

91. இளங்கொடிக்கு - பண்புத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை.

92. மெல்லியல் - பண்புத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை, உரைக்கும் -செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்று.

97. இல்லா - ஈறுகெட்ட எதிர் மறைப் பெயரெச்சம்.

98. ஆக்கு + இன் + அன் - ஆக்கினன், ஆள்வேந்தன் - வினைத்தொகை.

வினாக்கள்.

1. ஐம்பெருங் காப்பியங்களாவன யாவை?

2. இரட்டைக் காப்பியங்களாவன யாவை? அவை அப்பெயர் பெறக்காரணமென்ன?

3. மணிமேகலையின் ஆசிரியரைப் பற்றிக் குறிப்புத் தருக.

4. மணிமேகலை என்னும் நூலைப்பற்றி நீ அறிவது யாது?

5. மணிமேகலை காயசண்டிகையின் வடிவத்தைப் பெறக்காரண மென்ன?

6. காயசண்டிகை என்பவள் யார்?

7. நூற்பொருள் உணர்ந்தோர் நுனித்தறிந்தது யாது?

8. மணிமேகலை சிறைச்சாலையில் உணவளித்ததைக் கூறுக.

9. சோழன் தன் துணைவியோடு பூம்பொழில் புகுந்த நிலையைப் புலப்படுத்துக.

10. புகார் நகரத்துப் பூம்பொழிற் காட்சிகளைக் கூறுக.

11. வேந்தனும் அவன் துணைவியும் விளையாட்டயர்ந்த நிலையைக் கூறுக.

12. சோழவேந்தன் வீற்றிருந்த அரசு வீற்றிருக்கையின் சிறப் பினைக் கூறுக.

13. சோழமன்னன் எவ்வாறு வாழ்த்தப்பட்டுள்ளான்?

14. காவலாளர் மன்னனைக் கண்டு யாது கூறினர்?

15. அமுத சுரபியின் பெருமையை மணிமேகலை மன்னனுக்கு எவ்வாறு எடுத்துரைத்தாள்?

16. மணிமேகலை மன்னனிடம் வேண்டியது யாது?

17. இடஞ்சுட்டி விளக்குக:

அ. வாழி எங்கோ மன்னவர் பெருந்தகை!

ஆ. பெருங்கதை

இலாவாண காண்டம்

பெருங்கதை என்னும் காப்பியம் கொங்கு வேளிர் என்பவரால் இயற்றப் பெற்றது. கௌசாம்பி நகரத்தரசனுன சதானிகன் என்பவனின் மகனுகிய உதயணன் வரலாற்றை விரித்துக் கூறுகின்ற காரணத்தால் உதயணன் கதை என்றும், கொங்குவேளிர் இயற்றியதனுல் கொங்குவேளிர் மாக்கதை என்றும் வழங்குவது உண்டு. பெருங்கதை வடமொழியின் கண் இலங்கும் பிருகத்கதா என்ற நூலின் தமிழாக்கம் என்பர். பெருங்கதை உஞ்சைக் காண்டம், இலாவண காண்டம், மகத காண்டம், வத்தவ காண்டம், நரவாண காண்டம், துறவுக் காண்டம் என்பனவாய ஆறு காண்டங்களை உடைத்து. இவண் நமக்குப் பாடமாக வந்துள்ள பகுதி இலாவாணகாண்டத்தில் கண்ணுள்ள குறிக் கேட்டது என்னும் காதையாகும்.

குறிக்கோள் கேட்டது

மைந்தரு மகளிரு மலைவயி னுடி
வெந்திறல் வேந்தன் வீழ்பவை காட்டி
ஐம்பெருங் குழுவு மெண்பே ராயமும்
கண்ணுறக் கவவிக் கலந்து விடாஅ
அருமைக் கொத்த வஞ்சுவரு காப்பின்
உரிமைச் சுற்றம் பின்பட வுய்த்துத்
தீதற வெறியுந் தெரிபொருட் கேள்வி
மூதறி முனிவன் பள்ளி முன்னர்

(சோலைவளம்)

அரணம் வேண்டா தச்ச நீக்கி
வருண மொன்ருய் மயங்கிய வூழிச்
சிறுமையும் வறுமையுந் தின்மையும் புன்மையும்

இறுபும் புலம்பு மின்மையு மிரக்கமும்,
அறியு மாந்தரி னுறுவளங் கவினி
ஐந்திணை மரனும் பைந்தளிர்க் கொடியும்
தந்துணைச் செல்வந் தலைத்தலை பெருகி
அருமதி முனிவர் நிருமிதம் போல
அழல்கண் ணகற்றி நிழன்மீக் கூரி
நீர்புக் கன்ன நீர்மைத் தாகி
ஊர்புக் கன்ன வுள்ளுறப் புரீஇ
மலர்த்தவி சடுத்துத் தளிர்க்குடை யோங்கிப்
பூங்கொடிக் கவரி புடைபுடை வீசித்
தேங்கொடிப் பறவையுந் திருந்துசிறை மிஞிறும்
விரும்புறு சுரும்பும் பெரும்பொறி வண்டும்
குழல்வாய்த் தும்பியுங் குயிலுங் கூடி
மழலையம் பாடலின் மனம்பிணி யுறீஇ
முதிர்கனி யமிர்த மெதிர்கொண் டேந்தி
மேவன பலபயின் றீவன போன்ற
பயமர மல்லது கயமர மில்லாக்
காவினு ளிரீஇக் காவல் போற்றி

உதயணன் முனிவரைக் காணுதல்

மாதவ முனிவற்கு மன்னவன் காணும்
கரும முண்மை மரபிற் கிளப்பப்
பெருங்குலப் பிறப்பினு மரும்பொருள் வகையினும்
இருங்கண் ஞாலத் தின்னுயி ரோம்பும்
காவல் பூண்ட கடத்தினும் விரும்பி
இமையோ ரிறைவனை யெதிர்கொண் டோம்பும்
அமையா தீட்டிய வருந்தவ முனிவரின்
வியலக வேந்தனை யியல்புளி யெதிர்கொண்
டணித்தகு பள்ளி யசோகத் தணிநிழல்
மணித்தார் மார்பனை மணன்மிசை யடுத்த
பத்திப் பன்மலர்ச் சித்திரங் குயின்ற

இயற்றாத் தவிசின்மிசை யிருக்கை காட்டக்
கவற்சி மனத்தொடு காண்டக விருந்ததன்
தாண்முதல் சார்ந்து தோண்முதற் றேழணை
உள்ளி யுள்ளழிந் தொழுகுவரைத் தடக்கையின்
வெள்ளிகழ் நறுமலர் வீழப் பையாந்து
நினைப்புள் ளுறுத்தவந் நிலைமை நோக்கி
இனத்தி னிரித்தாங் கெவ்வகை நிமித்தமும்
மனத்தி னாற்றவை மறையின் றுணர்தலிற்
றுனிவுகொண் மன்னற்கு முனிவன் கூறும்

முனிவன் கூறல்

பசுமரஞ் சார்ந்தனை யாதலின் மற்றுநின்
உயிர்ப்பெருந் தோழ னுண்மையுங் கூட்டமும்
கண்ணகன் றுறைந்த கடிநா ளமையத்துத்
திண்ணி தாகுந் தெளிந்தனை யாகுமதி
விரும்பிநீ பிடித்த வெண்மலர் வீழ்ச்சி
பொருந்திநீ யளக்கும் பொருவில் போகத்
திடையூ றுண்மை முடியத் தோன்றும்
வீழ்ந்த வெண்மலர் வெறுநிலம் படாது
தாழ்ந்த கச்சைநின் றாண்முதற் றங்கலிற்
பிரிந்த போகம் பெயர்த்தும் பெறுகுவை
நிலத்துமிசை யிருந்தனை யாதலின் மற்றுநின்
தலைப்பெரு நகரமொடு நன்னாடு தழீஇக்
கொற்றங் கோடலு முற்றிய தாகி
முன்னிய நின்றவை முடியத் தோன்றுமென்
றெண்ணிய விப்பொரு டிண்ணிதி னெய்தும்
பெறும்பய மிதுவெனப் பிழைத்த லின்றி
உறும்பெருஞ் சாரண ருரைவே றுண்மையும்
இறுவா யெழுச்சியு மித்துணை யளவென
உறுதவ முனிவ னுள்விரித் தொழியாது
வத்தவர் பெருமகன் றத்துற வகலக்

கழிபொரு ளெதிர்பொருட் கேது வாக
அழிபொரு ளன்றி யாதுபயங் கூறத்

உதயணன் உவத்தல்

தக்கது மன்ற மிக்கோன் கூற்றென
நட்புடைத் தோழனை நண்ணி யன்னதோர்
உட்புகன் றெழுதரு முவகைய னாகிப்
பள்ளி மருங்கிற் பாவங் கழீஇ
வள்ளி மருங்குல் வாசவ தத்தையைக்
கூடுத லானுக் குறிப்பு முந்துறீஇ
ஆடுத லூற்றமொ டமர்ந்தன னுவந்தென்.

அருஞ்சொற் பொருள்:

1. மைந்தர் - வலிமையுடைய ஆண்மக்கள், மலைவயின் மலைச்சாரலிடத்தே.

2. வெந்திறல் - வலிய ஆற்றலையுடைய,

4. கண்ணுற-கவவி, சூழ்ந்து.

6, உய்த்து செலுத்தி.

9. அரணம் - பாதுகாவல்.

11. திண்மை - தீமை, புன்மை - கீழ்மை.

12. இறுபு - இறத்தல்.

13. உறுவளம் - மிக்க வளம், கவினி - அழகுற்று.

14. மரன் - மரம்.

16. நிருமிதம் - படைப்பு.

17. அழல் - நெருப்பு,

19. புரீஇ - புரிந்து

20 தவிசு - இருக்கை.

21. கவரி - சாமரை.

25. பிணியுறீஇ - பிணித்து.

28. பய மரம் - பயனைத் தரும் மரங்கள், கய மரம் - இழிவான மரங்கள்.

29. இரீஇ - இருக்கச் செய்து.

31. கிளப்ப - சொல்ல.

32. அரும்பொருள் - இவண் அரசச் செல்வம்.

33. இருங்கண் - பெரிய இடத்தையுடைய.

35. இமையோர் இறைவன் - தேவேந்திரன்.

37. வியலகம் - உலகம், இயல்புளி - இயல்பால்.

41. இயற்றாத் தவிசு - செய்யப்படாது இயற்கையாயமைந்த இருக்கை.

42. கவற்சி - கவலை, காண் - காட்சியின்பம்.

43. தாள் முதல் - கால் மேல.

45. பையாந்து - துன்புற்று,

47. இரித்து - பிரித்து வைத்து, நிமித்தம் - எதிர்கால நிகழ்ச்சியை முன்னறிவிக்கும் ஒரு கலை.

48. மறை - மறைப்பு.

49. துனிவு - துன்பம்.

51. உசிர் - உயிர் என்பதன் திரிபு.

52. கடி - கடியும்

62. கொற்றம் - வெற்றி.

63. முன்னிய நின்றவை - எஞ்சி நின்ற கருத்துக்கள்,

67. இறுவாய் எழுச்சி - வீடு பேறு

69. தத்துறவு - மனத்தடுமாற்றம்.

72. மன்ற - உறுதியாக.

76. வள்ளி மருங்குல் - கொடி போன்ற இடை.

77. ஆனு - அமையாத, முந்துறீஇ - முந்துற்று.

78. ஊற்றம் - முயற்சி.

இலக்கணக் குறிப்பு:

1. வெந்திறல் - பண்புத்தொகை, வீழ்பவை - வினையாலணையும் பெயர்.

3. ஐந்து + பெருமை + குழு - ஐம்பெருங்குழு. எட்டு + பெருமை + ஆயம் - எண்பேராயம்.

4. விடாஅ - செய்யுளிசையளபெடை,

6. சுற்றம் - தொழிலாகு பெயர்.

7. தெரிபொருள் - வினைத்தொகை.

11. சிறுமையும் வறுமையும் - எண்ணும்மை.

12. உறுவளம் - உரிச்சொற்றொடர்.

14. பசுமை + தளிர் - பைந்தளிர் - பண்புத்தொகை.

16. அருமதி - பண்புத்தொகை.

19 உறீஇ - சொல்லிசையளபெடை.

20. மலர்த்தவிசு - மூன்றன் உருபும் பயனும் உடன் தொக்க தொகை.

21. புடைபுடை - அடுக்குத்தொடர்.

22. திருந்துசிறை - வினைத்தொகை.

23. பொறிவண்டு - இரண்டன் உருபும் பயனும் உடன் தொக்க தொகை.

28. இல்லா - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.

29. இரீஇ - சொல்லிசையளபெடை

30. மாதவம் - உரிச்சொற்றொடர்

32 பெருங்குலம், அரும்பொருள் - பண்புத்தொகைகள்.

33. இனிமை + உயிர் - இன்னுயிர் - பண்புத்தொகை.

40. பல + மலர் - பன்மலர், குயில் + ற் + அ - குயின்ற.

41. இயற்று - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.

44 வரைத்தடக்கை - உவமத்தொகை, தடக்கை - உரிச்சொற்றொடர்.

45. நறுமலர் - உரிச்சொற்றொடர்.

50. பசுமரம்-பண்புத்தொகை, சார் + த் + ந் + த் + அன + ஐ + சார்ந்தனை

52. கடிநாள் - உரிச்சொற்றொடர்,

54. வெண்மை + மலர் - வெண்மலர் : பண்புத்தொகை.

59. பெறு + கு + வ் + ஐ - பெறுகுவை.

61. தழீஇ - சொல்லிசையளபெடை.

68. உறுதவமுனிவன் - உரிச்சொற்றொடர்.

70. கழிபொருள் - வினைத்தொகை.

71. ஆகுபயம் - வினைத்தொகை

77. ஆனு - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம், முந்துறீஇ - சொல்லிசையளபெடை.

வினாக்கள்:

1. உதயணன் முதறிமுனிவன் பள்ளிக்குப் புறப்பட்டுச் சென்ற தன்மையைக் கூறுக.

2. உதயணன் சென்ற சோலை வளத்தைக் கூறுக.

3. முனிவர் உதயணனை வரவேற்ற முறையைக் கூறுக

4. முனிவர் உதயணனுக்குக் கூறிய நிமித்தம் யாது ?

5. ஐம்பெருங்குழு, எண்பேராயம் என்பனபற்றிக் குறிப்பிடுக.

6. 'அருமதி முனிவர் நிருமிதம் போல'—இவ்வுவமை எதை விளக்க வந்தது ? பொருத்திக் காட்டுக.

இ. வில்லி பாரதம்

கிருட்டினன் தூதுச் சருக்கம்

இந்தியப் பெருநாட்டின் இருபெரும் கதைகளாகப் பாரதமும், இராமாயணமும் போற்றப்படுவன. வியாசர் வழங்கிய பாரதத்தை வில்லிபுத்தூரார் தமிழில் ஆக்கினர். வில்லிபுத்தூராருக்கு முன்னும் பின்னும் சில பாரத நூல்கள் தமிழில் எழுந்தன வெனினும் வில்லிபுத்தூராரின் பாரதத்தின் சிறப்பு நோக்கி எல்லோராலும் வில்லிபாரதமே பயிலப்பட்டு வருகின்றது. முந்து நூல்களின் சிறப்புக்களைக் கொண்டு விருத்தப் பாவால் ஒளிர்கிறது வில்லி பாரதம். வக்கபாகை வரபதியாட் கொண்டான் என்ற வள்ளல் வில்லிபுத்தூராரை ஆதரித்து வந்ததனால் அவருடைய காலம் பதினைந்தாம் நூற்றாண்டு எனத்துணிவர். வில்லி பாரதத்தில் ஆதிபருவம் முதல் சௌப்திக பருவம் வரை பத்துப் பருவங்களில் நாற்பத்தாறு சருக்கங்கள் அமைந்துள்ளன

இவண் பாடமாக வந்துள்ள பகுதி உத்தியோக பருவத்தில் வரும் கிருட்டினன் தூதுச் சருக்கத்தில் கன்னன்-குந்தி உறவினை வெளிப்படுத்தும் பகுதிக்குரிய பாடல்களாகும். பாண்டவர் கரந்துறைகாலம் முடிந்துநாடுவேண்டிச்சஞ்சயன் என்ற அந்தண முனிவனைத் தூதனுப்பிப் பயன் ஏற்படவில்லை. தருமன் கண்ணனைத் தூது விட எண்ணி உரைக்கையில் தம்பியர் பல்வாறு பேச முடிவாகக் கண்ணன் தூது, போருக்கு வழி வகுக்கிறது. இறுதியாகக்கண்ணன், கன்னனின் ஆற்றலைக் குறைக்கப் பல வழிகளைச் செய்துவிட்டுக் குந்தி தேவியிடம் கன்னனிடம் சென்று சில வரங்களைப் பெற்றுவர விடுகிறான். குந்தி தேவியின் வாயிலில் கண்ணன் நிற்கிறான்,

கிருட்டினன் தூதுச் சருக்கம்

குந்தி கண்ணனை எதிர்கொண்டு, அவன் அத்தினபுரி வந்தகாரணம் வினவுதல்

1. மண்டல மதியம் அன்ன மாசறு முகத்தினாளும்,
திண்திறல் மருகன் தன்னைச் சென்றெதிர்கொண்டு, [கண்டு,
வெண்திரை மகர வேலை விரிபுனல் முகந்து தோன்றும்
கொண்டலை மகிழ்ந்து காணும் குளிர் பசுந் தோகை [போன்றாள்.

2. 'யான் உறை இல்லின் வந்ததென்ன மா தவம்!' [என்றெண்ணிக்
கான் உறை மைந்தர் தம்மைக் கண்டனள் போன்றாள் [ஆகித்
தேன் உறை துளவினான்தன் செய்யமா முகத்தை [நோக்கி,
'வான் உறை புரிசை மூதூர் வந்ததென் கருதி?' [என்றாள்.

கண்ணன் தான் தூது வந்ததும், போர் நேர்ந்துள்ளமையும் குந்திக்குக்கூறி, கன்னன் பிறப்பு வரலாற்றையும் அவளுக்கு உரைத்தல்.

3. 'நின்பெரும் புதல்வர் சொல்ல, நெடும் புனல் நாடு [வேண்டி,
வன்பணி உயர்த்த கோமான் மனக் கருத்து அறிய [வந்தேன்
"தென்புல வேந்தன் வெஃகச் செருத் தொழில் [புரிவன்" என்றான்;
என், பல சொல்லி? நானை எதிர்க்க வே இசைந்த" [தென்றான்.

4. தன்மை நான் உரைப்பக் கேள்: நின் தந்தைதன் [மனையில் நீயும்,
கன்னியாய் இருந்து வாழுங் காலை, ஓர் முனிவன் வந்து
சொன்ன மந்திரம் ஓர் ஐந்தின் ஒன்றினால், சூரன் [தன்னை
முன்னினை; அவனும் அன்று வந்து நின் முன்பு [நின்றான்.

5. 'கதிரவன் அருளினால் ஓர் கணத்திடைக் காதல் கூர,
மதலை அங்கொருவன் தன்னைப் பயந்தபின், "வடு" [வென்றஞ்சி,
மிதவையம் பேழைதன்னில் பொதிந்து நீவிடவப் [போதந்
நதியும் அம் மகவைக் கங்கை நதியிடைப் [படுத்ததன்றே.

6. காதல் நின் புதல்வன் தன்னைக் கண்ணிலா அரசன் [பொற்றேர்ச்
சூதன் வந்தெடுத்துக் கொண்டு, சுதன் என [வளர்த்த காலை
ஆதபன், 'இவனை யாரும் கன்னன் என்றழைக்க" [என்றான்;
தாதையும், 'விசும்பில் சொன்ன நாமமே தக்க [தென்றான்.

7. பண்புடைக் குமரன் கற்ற படைத் தொழில் பலவும் [கண்டு,
நண்புடை உரிமை எல்லாம் நல்கி மாமுடியும் சூட்டி,
வண்பணி உயர்த்த கோமான் வாழ்வ [வற்களித்தான்; மற்றைத்
திண் பரித் தேர் வல்லோரில் அவனை யார் செயிக்க [வல்லார்?

8. ‘ அந்த நின் மைந்தன் தானே அருஞ் சிலை விசயனோடு
வந்தெதிர் மலைய நின்றான்; உறவு மற்றறியமாட்டான்;
சிந்தையின் ஐயம்தீர, இதனை நீ தெளியச் சொல்லிக்
கொந்தவிழ் அலங்கலானைக் கூட்டுக, விரைவின்
[அம்மா!

9. “ தம்பியர் ஐந்து பேரும் தனித்தனி ஏவல் செய்ய,
வம்பவிழ் அலங்கலோடும் மா மணி மகுடம் சூடி,
அம்புவி முழுதும் நீயே ஆளலாம்; வருக!” என்றால்
உம்பர்கானைய கையான் உன் உரை மறுத்தான்
[ஆகில்;

10 ‘எரியமுதநந்தக் கானம் எரித்த நாள் அகன்றுபோன,
அரவினை அங்கர் கோமான் ஆசுகமாகக் கொண்டான்,
வரிசிலை விசயன் தன்மேல் மறுகணை தொடுக்கா
[வண்ணம்,
ஒருவரம் வேண்டுகென்றான்—உற்றார்க்குறுதி
[சூழ்வான்.

அது கேட்டுக் குந்தி வருந்தக் கண்ணன் தேற்றுதல்

11. ‘மன்றலம் தெரியல் வெய்யோன் மதலை என்
[மைந்தன் என்ப(து)
அன்றெனக்குரைத்தாய் ஆகில், அவனுடன்
[அணுக ஒட்டேன்;
சென்றுயிர் ஒழிக்குமாறு செருவினை விளைத்துப்பின்னை
இன்றெனக்குரைத்தாய்; ஐயா! என் நினைந்து,
[என் செய்தாயே?

கன்னன் குந்தியை எதிர் கொண்டு உபசரிக்க, அவள் அவனுக்குத் தான் தாய் என்பதை மெய்ப்பித்தல்

12. 'வந்து குந்தி நின் கோயில் எய்தின'ளென
வாயிலோர் உரைத்திட, மைந்தன்
முந்தும் அன்புடன் தொழுதெதிர்கொண்டு, நன்
முறைமையால் ஆசனத்திருத்தி,
இந்துவின் கதிர் கண்டு மேன்மேலும் உற்று
இரங்கி வான் கரை கடந்தேறும்
சிந்து வெண்திரைச் சிந்து ஒத்துருகும்
தெரிவையோடு உரைசில செப்பும்'.

13. 'அன்னை வந்ததென் அருந் தவப்பயன்!' என,
அன்பிறுல் இன்புற வணங்கி,
'என்னை வந்தவாறு?' என்ன மற்றவளுமே,
'ஈன்ற தாய் யான் உனக்' கென்று,
முன்னை வந்தொரு மந்திரம் தவ முனி
மொழிந்ததும், கதிரவன் அருளால்
பின்னை வந்ததும், பேழையில் விடுத்ததும்,
பிழை இலாதுரைத்திடக் கேட்டே,

14. 'மாயனார் விரகிது' என மனத்தினில்
மதித்து வந்தளிததிடும் வள்ளல்,
'நீ யநாள் எனைப் பயந்தவள் என்னினும்,
நின் மொழி நெஞ்சுறத் தேறேன்;
பேயனார் சிலர் பேரறிவின்மையால்,
பெற்றதாய் எனக்கென வந்து,
தூய நாகரின் அமைந்ததோர் துகிலால்
துன்பமுற்றென்புரு ஆனார்.

15. 'அடாது செய்தவர் படாது பட்டன'ரெனும்
அங்கர்கோன் அருள் மொழி கேட்டுத்
தடாத அன்புடைக் கெடாத தூமொழி பகர்
தையலும் மையலின் தவிர்ந்து,
'படாமதென் கையில் தரு'கென, வருதலும்,
'பயந்திலேன் எனில் எனை முனி' என்று
எடா,விரித் தலைத்து, உடல்படப் போர்த்து
எதிரீன்ற தாயாம் என இருந்தாள்.

'இளைஞர் ஐவருடனும் வந்து நீயே அரசாள வேண்டும்'
என்று குந்திவேண்டக் கன்னன் அதற்கு ஏது காட்டி,
மறுத்து மொழிதல்

16. 'வருக என் மதலாய்! இளைஞரை வரும் நின்
மலரடி அன்பினுல் வணங்கி,
உரிமையால் மனமொத் தேவலே புரிய,
ஒரு தனிச் செய்ய கோல் ஓச்சி,
அரசெலாம் வந்து உன் கடைத்தலை வணங்கக்
ஆண்மையும் செல்வமும் விளங்க,
குருகுலாதிபர்க்கும் குரிசிலாய் வாழ்வு
கூர்வதே கட'னெனக் குறித்தாள்.

17. 'பெற்ற நீர் மகவு அன்பிலாமையோ? அன்றிப்
பெரும்பழி நாணியோ? விடுத்தீர்;
அற்றைநாள் தொடங்கி, என்னையின்றளவும்
ஆருயிர்த் துணை யெனக் கருதித்
கொற்ற மா மகுடம் புனைந்தர சளித்துக்,
கூட உண்டுரிய தம்பியரும்,
சுற்றமானவரும், என்னடி வணங்கத்
தோற்றமும் ஏற்றமும் அளித்தான.

18. மடந்தை பொற்றிரு மேகலை மணி உகவே
மாசறத் திகழும் ஏகாந்த
இடம்தனில் புரிந்தே நான் அயர்ந் திருப்ப,
"எடுக்கவோ? கோக்கவோ?" என்றான்;
திடம் படுத்திடு வேல் இராசராசனுக்குச்
செருமுனைச் சென்று செஞ்சோற்றுக்
கடன் கழிப்பதுவே, எனக் கினிப் புகழும்,
கருமமும், தருமமும்!' என்றான்

19. ஆண்டு மா மகனும் இரு கணீர் துடைத்தவ்
வன்னையைப் பன்முறை தேற்றி,
'மூண்ட வல் வினையின் பயனலாதி யார்க்கும்
முயற்சியால் வருவதொன் றுண்டோ?
வேண்டும் யாவையுமே தருகுவேன்; நீரும்
வேண்டிய வேண்டுக!' என்னப்
பாண்டுவின் திரு மா மனைவியும் அதற்குப்
பண்பினுல் இன்னன பகர்வாள்:

குந்தி இருவரம் வேண்டக் கன்னனும் மருது கொடுத்தல்

20. 'பார்த்தன் வெஞ் சமரில் நின்னுடன் மலைந்தால்,
பகைப் பெரும் பாந்த ளம் பகழி
கோத்தலும், பிழைத்தால், மறித்தும், நீ விடுத்துக்
கோறல்!' என்றொரு வரம் குறித்தாள்;
'வாய்த்த மற்றவர்கள் இளைஞர் என்ற வரை
மலையல்!' என்றொரு வரம் குறித்தாள்;
மூத்தவன், காதல் இளைஞர் தம் பொருட்டால்
மொழிந்தமை கேட்டிவை மொழிவான்:

21. ‘தெறு கணை ஒன்று தொடுக்கவும், முனைந்து
செருச் செய்வோன் சென்னியோ டிருந்தால்,
மறுகணை தொடுப்ப தாண்மையோ? வலியோ?
மானமோ? மன்னவர்க் கறமோ?
உறுகணை ஒன்றே பார்த்தன் மேல் தொடுப்பன்:
ஒழிந்துளோர் உய்வர்’ என்று ரைத்தான்
தறுகணர் அலர்க்கும், தறுகண் ஆனவர்க்கும்,
தண்ணளி நிறைந்த செங்கண்ணன்.

கன்னன் குந்தியிடம் இரண்டு வரம் வேண்டிப் பெறுதல்

22. பெரு வரம் இரண்டும் பெற்றபின், தன்னைப்
பெற்ற தாயினைக் கரம் குவித்துத்
‘தருவரம் எனக்கும் இரண்டுள: உலகில்
சராசரங்களுக் கெலாம் தாயீர்!
வெருவரும் அமரில் பார்த்தனால் அடியேன்
வீழ்ந்தபோ தவனிபர் அறிய,
மருவரும் முலைப்பால் எனக் களித் தும்தம்
மகன் எனும் வாய்மையும் உரைப்பீர்.

23. உய் வருந் திறல் வெம் போர் முடிப் பளவும்,
உமக்கு நான் மகன் எனும் தன்மை
ஐவரும் அறியா வண்ணம் நீர் காப்பீர்;
அல்ல தங்கவர் சிறித றியின்
மைவரும் கடற் பார் அனைத்தையும் எனக்கே
வழங்குவர்; வழங்கினால், யான் என்
கைவரும் துணைவன் தனக் கலால், வழங்கேன்;
கடைப்பிடி, கருமமீ’ தென்றான்.

24. என்றலும், அது கேட் டீன்ற தாய், 'ஒக்கும்'!
என்று கொண் டிவ்வரம் நேர்ந்து,
'வன்துயர் மேன்மேல் வளர, யான் தளரா
வகை, உயிர் உனக்கு முன் பெயர்வ(து)
என்றினி!' எனத் தன் கண்கள் நீர் சொரிய,
இனைந்து, நைந்தழுதழு திரங்கி
என் றருள் மதலைதனைத் தழீஇ, நிறுத்தி,
யாதவன் இருந்துழிச் சென்ருள்.

குந்தி கண்ணனிடம் மீண்டு வந்து செய்தி உரைக்கக்
கண்ணன் மகிழ்ந்து, பாண்டவரிடம் மீண்டு
வந்து, நிகழ்ந்தன கூறல்

25. கண்ணனும் குந்தி கன்னனேடு ரைத்த
கருத் தெலாம் திருத்தமாக் கேட்டாங்(கு)
'எண்ணமும் முடிந்த' தென மகிழ்ந் தந்த
அணங்கையும் இல்லிடை இருத்தித்
தண்ணளியுடன் தன், பின்வரு நிருபர்
தம்மையும் முறை முறை நிறுத்திப்
பண்ணமை தடந் தேர் மீது கொண் டன்றே,
பாண்டவர் உறைநகர் அடைந்தான்.

26. தூதுபோய் அரவத் துவசனேடு றுதி
சொன்னதும், மறுத் தவன் சினந்து
மோது போர் புரியத் துணிந்ததும், விதுரன்
மூரி வில் இறுத்ததும், கங்குல்
போது போய் வஞ்சம் விளைத்ததும், கன்னன்
புரந்தரற்கு ஈந்ததும், பயந்த
மாது போய் வரங்கள் பெற்றவை ஒழிய,
மற்றெலாம் மைத்துனர்க்கு ரைத்தான்.

அருஞ்சொற் பொருள் :

1. மண்டல மதியம்-சந்திரமண்டலம், மாசறு-களங்கமில்லாத, திண் திறல்-மிக்க வலிமையுடைய, மருகன்-மருகனை கண்ணன், மகரம்-சுருமீன், வேலை-கடல், விரிபுனல்-மிகுந்த நீர், கொண்டல்-மேகம், பசுந்தோகை-பசிய நிறமுடைய தோகையையுடைய மயில்.

2. ஏத்தி-வணங்கி, கான்-காடு, தேன் உறை-தேன் பொருந்திய, துளவினன்-திருத் துழாய் (துளசி) மாலையுடைய கண்ணன், வான் உறை-வானளாவிய மேகங்கள் வந்து தங்குகிற, புரிசை-மதில், அருடி-அருளுதி (அருளுதி என்பதன் திரிபே அருடி)

3 நெடும்புனல்-மிக்க நீர் வளம், வன்புடை-வலிமையுடைய, அரசர் கோமான்-(இவண்) துரியோதனன். தென்புல வேந்தன்-தென் திசைக்குத் தலைவனை யமன், வெஃக-விரும்பும்படி, செரு தொழில்-போர்த் தொழில், பல பல சொற்கள்

4. தன்மை-முன்பு நடந்த உண்மைச் செய்தியை, நின் தந்தை-குந்தியின் தந்தையான பேரஜராஜன், ஓர் முனிவன்-ஒப்பற்ற முனிவனை துருவாசன், ஒன்றினல்-ஒரு மந்திரத்தினல், சூரன்-சூரியன், முன்னினை-நினைத்தாய்

5. மதலை-மகன், பயந்த-பெற்ற, வடு-பழி, குற்றம்

6 காதல்-அன்பு, கண் இலா அரசன்-திருதராட்டிரன், தேர் சூதன்-தேர்ப்பாகனை அதிரதன் என்பான், சுதன்-தன் மகன், ஆதபன்-சூரியன்

7. குமரன்-குமரனை கர்ணன், கற்ற-பரசுராமரிடத்துக் கற்ற, பணி உயர்த்த கோமான்-பாம்புக் கொடியை உயர்த்திய மன்னனை துரியோதனன், திண் = வலிய, பரித்தேர்-குதிரைகளுடைய தேர்

8. அருஞ்சிலை-அருமையான வில்வித்தை வல்ல, விசயன்-அருச்சுனன் (வெற்றிக்குரியவன்), கொந்து-பூங்கொத்து, அலங்கல்-மலர் மாலை

9. ஏவல்-பணி, வம்பு-மணம், அம்புலி - அழகிய மண்ணுலகம், உம்பர் கா - தேவர்களுடைய காவாகிய கற்பகப் பூஞ்சோலை

10. எரி - அங்கியங் கடவுள் (அக்கினித் தேவன்), அமுதருந்த- உணவாக உண்ணுர்படி, கானம் - காண்டவ வனத்தை, அரவினை-பாம்பினை (தட்சகன் மகனை அசுவசேனன் என்னும் பாம்பு), அங்கர் கோமான்-அங்க நாட்டு அரசனை கர்ணன், ஆசுகம்-அம்பு (அத்திரம்), சூழ்வான் - சிந்திப்பவன்

11. மன்றல் அம் தெரியல்-மணமுள்ள அழகிய மலர் மாலை, வெய்யோன் மதலை - கதிரவன் மகனை கர்ணன், செருவினை- போரினை, என்னினைந்து - என்ன நினைந்து

12. முந்தும் அன்புடன்-மிகுந்து வரும் அன்புடன், இந்து-சந்திரன், உற்று - பொங்கி, இரங்கி-ஒலித்து, வான்கரை - பெரிய கரை, சிந்து-கடல், தெரிவை - பெண், குந்தி

13. இன்புற - மகிழ்ச்சி பொருந்த, வந்த ஆறு வந்த பணி (காரணம்), பேழை-பெட்டி

14. மாயனுர்-கண்ணபிரான், விரகு-வஞ்சனை, உத்தி, பயந்தவள்-பெற்றெடுத்தவள், ஈன்றவள், தேறேன்-நம்பமாட்டேன், பேய் அனுர்-பேயை-(பூதனை என்னும் பேய் மகளை), ஒத்த மகளிர் தூய நாகர்-தூய தேவர், துகில்-துணி, ஆடை

15. அடாது-தகாத செயல், படாது-படுதற்கரிய துன்பம் தடாது-தடுக்கப்படாத, கெடாத தூமொழி-குற்றமற்ற தூய, மொழியினையுடைய குந்தி, மையலின் தவிர்ந்து-மயக்கத்தினின்றும் நீங்கி, படாம்-ஆடை, துணி, முனி-வெகுள்வாயாக, எடா- எடுத்து, அலைத்து-உதறி

16. மதலாய்-மகனே, மலரடி-மலர் போலும் அடிகளை, உரிமையால்-உரிமைக் சேற்ப (அண்ணன், தம்பி உறவு முறை), கடைத்தலை-தலைக்கடை, தலைவாயிலில், செய்ய கோல்-செங்கோல, குரிசிலாய் - இவன் அரசனுய், கூர்வது - வேண்டுவது, கடன்-கடமை

17. பெற்ற நீர் - ஈன்ற நீர், அற்றை-அன்றைய, ஆருயிர் துணை-அருமையான உயிரொத்த நண்பன், கொற்றம்-வெற்றி, மடந்தை-இவண் துரியோதனின் மனைவியான பானுமதி, பொன் திரு மேகலை-பொன்னாலாகிய அழகிய மேகலை என்னும் அணிகலன், மணி உக - மணிகள் சிந்த, புரிந்து-செய்து, ஏகாந்த-தனி, திடம் படுத்திடல்-உறுதியையுண்டாக்குதல், வேல் இராசராசன்-வேலில் வல்ல மன்னர்மன்னன், செரு முனை-போர் முனை, கருமம்-செயல், செய் தொழில்

19. ஆண்டு-அப்பொழுது, மாமகன்-பெரிய மகன், முதல் மகனான கர்ணன், அ அன்னையை-அப்படி அழுகிற அன்னையை, மூண்ட-எழுந்த, வல்வினை-வலித்தாகிய இருவினை, இன்னன-இவ் விதச் சொற்களை

20. பார்த்தன்-அருச்சுனன், வெம் சமரில்-கொடிய போரில், மலைந்தால்-போர் செய்தால், பகை பெரு-பகையாயுள்ள பெரிய, பாந்தள் அம் பகழி-நாகாஸ்திரமாகிய சிறந்த அம்பினை, கோத்தலும்-தொடுத்த அளவில் (ஒரு தரம்), மறுத்தும் - மறுபடியும், கோறல்-கொல்லாதே, குறித்தாள்-குறித்து வேண்டினாள், வாய்த்த மற்றவர்கள்-பொருந்திய மற்றைப் பாண்டவர் நால்வர், மலையல்-எதிர்க்காதே, மூத்தவன்-(இவண்) தமையனான கர்ணன்

21. தெறு கணை-அழிக்க வல்ல அம்பு, முனைந்து-எதிர்த்து, சென்னியோடு-இருந்தால்-தலை துண்டிக்கப்படாமல் பிழைத்திருந்தால், உறு கணை-சிறந்த கணை (நாக அத்திரம்), தறுகணர் அலர்க்கும்-கொடுமை இல்லாதவர்கட்கும், தண்ணளி-தண்ணிய அருள்

22. வெருவரும்-அஞ்சத் தகுந்த, அமரில்-போர்க்களத்தில், பார்த்தன்-அருச்சுனன், அவனிபர்-அரசர்களெல்லாம்,

23, உய்வு அரு-தப்புதல் அரிதான, முடிப்பு அளவும்-முடியும் வரையில், மைவரும் கடற்பார்-கருநிறம் பொருந்திய கடல் சூழ்ந்த நிலம், கடைப்பிடி - உறுதியான

24. இவ்வரம் நேர்ந்து-இவ்வரங்களைத் தந்து, வல் துயர்-கொடிய துன்பம், யாதவன்-கண்ணன், இருந்த உழி-இருந்த இடத்துக்கு

25. தண் அறி-குளிர்ச்சியான அன்புடனே, நிருபர்-அரசர், பண்ணமை - அழகமை, தட தேர்-பெரிய தேர்

26. அரவத் துவசன்-பாம்பினைக் கொடியாய் உயர்த்திய துரியோதனன். முரிவில்-வலிமையுடையவில், கங்குல் போது-இராக் காலத்தில், புரந்தரற்கு ஈந்ததும்-இந்திரனுக்கு(க் கவச் குண்டலங்களை) ஈந்ததும், மைத்துனர்க்கு-(கண்ணன் தனது மைத்துனர்களான) பாண்டவர்க்கு

இலக்கணக் குறிப்பு :

1 விரிபுனல்-வினைத்தொகை, வெண்திரை, பசுந்தோகை-பண்புத் தொகை, தோகை-சினையாகு பெயருமாம்

2. மாதவம் மாமுகம்-உரிச் சொற்றொடர்கள், முதுமை+ஊர்=மூதூர்-பண்புத்தொகை

3. வன்பணி, நெடும்புனல்-பண்புத்தொகைகள்

4. சொன்னமந்திரம்-பெயரெச்சத் தொடர்

5. பொதி+த்+ந்+த்+உ=பொதிந்து-வினையெச்சம்

6. கண் இலா-ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

7. வண்பணி, திண்பரி-பண்புத் தொகைகள்

8. அவிழலங்கல்-வினைத்தொகை, அலங்கல்-தொழிலாகு பெயர்

9. அம்புவி-பண்புத்தொகை, உம்பர்கா - ஏழன் உருபும் பயனும் உடன் தொக்க தொகை

10. தொடுக்கா-ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம், வேண்டுக-வியங்கோள் வினைமுற்று

11. ஒட்டு+ஏன் ஆ என்னும் எதிர்மறை இடைநிலை புணர்ந்து கெட்டது

12. இரு+த்+த்+இ=இருத்தி, இந்துவின்.........தெரிவை-உவமையணி

13, ஈன்+ற்+அ=ஈன்ற, அருந்தவம்-பண்புத்தொகை

14. பேரறிவு-பண்புத்தொகை, ஆ+(இ)ன்+ஆர்=ஆனார் பெற்ற தாய்-பெயரெச்சத் தொடர்

15. செய்தவர்-வினையாலணையும் பெயர், படு+அன்+அர்=பட்டனர். படு என்னும் பகுதி ஒற்று இரட்டித்து இறந்த காலம் காட்டிற்று, பய+த்+ந்+த்+இல்+ஏன்=பயந்திலேன், தூமொழி-பண்புத்தொகை

16. மலரடி-உவமைத்தொகை, ஐவரும்-உம்மைமுற்று

17. அன்று+ஐ=அற்றை, ஆருயிர்-பண்புத்தொகை, சுற்றம்-தொழிலாகு பெயர்

18. செஞ்சோறு-பண்புத்தொகை

19. வல்வினை-பண்புத்தொகை, பல+முறை=பன்முறை, உண்டோ-ஓகாரம் எதிர்மறை, தா+கு+வ்+ஏன் கு, சாரியை. தா-தருவெனத்திரிந்தது

20. கோறல், மலையல்-அல் ஈற்று எதிர்மறை வியங்கோள் வினைமுற்று. வெஞ்சமர், அம்பகழி, பெரும்பாந்தள் - பண்புத் தொகைகள்

21. தெறுகணை, உறுகணை-வினைத்தொகைகள், தண்ணனி-பண்புத்தொகை

22. பெறு+அ=பெற்ற பகுதி ஒற்றிரட்டித்து இறந்த காலம் காட்டிற்று

23. அறியா-ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம், கடற் பார்-மூன்றன் உருபும் பயனும் உடன் தொக்க தொகை

24. மேன்மேல், அழுதழுது-அடுக்குத் தொடர்கள், தளரா-ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம், இணைந்து, நைந்து, அழுது-வினையெச்சங்கள், தழீஇ-சொல்லிசையளபெடை

25. முறை முறை-அடுக்குத் தொடர். தடந்தேர் - உரிச் சொற்றொடர், உறை நகர்-வினைத்தொகை

26. மோதுபோர் - வினைத் தொகை, அரவத்துவசன்- இரண்டன்உருபும்பயனும் உடன் தொக்க தொகை

வினாக்கள் :

1. வில்லி பாரதத்தைப்பற்றிக் குறிப்பெழுதுக.
கண்ணனைக் கண்ட குந்தியின் மகிழ்ச்சியை விளக்குக.

2. கன்னனின் பிறப்பு வரலாற்றைக் கண்ணன் குந்திக்கு எவ்வாறு எடுத்துக் கூறினான்?

3. கன்னன் என்று பெயர் பெறக் காரணம் என்ன?

4 கன்னனின் படைத்திறம் கண்டு துரியன் அவனுக்குச் செய்த நன்மைகள் யாவை?

5. கன்னனுக்குச் சொல்லுமாறு குந்தியிடம் கண்ணன் கூறிய செய்தி யாது?

6 கன்னன் தன்மகன் என்றது கேட்டுக் குந்தி கண்ணனிடம் வருந்திக் கூறியது யாது ?

இந்துவின் ....இந்து—உவமையை விளக்கிப் பொருத்துக.

7. வந்த காரணத்தை வினவிய கன்னனுக்குக் குந்தி கூறியது யாது ?

8. உன்னை ஈன்றதாய் யானே என்று குந்திகூறியது கேட்டுக் கன்னன் கூறியது யாது ?

9. குந்தி கன்னனைப் பெற்றவள் தான் என்பதை எவ்வாறு கன்னனுக்கு உணர்த்தினாள் ?

10. குந்தி கன்னனை எவ்வாறு அழைத்தாள் ? அல்லது கன்னனின் கடமையாகக் குந்தி கூறியது யாது ?

11. குந்தியின் வேண்டுகோளை மறுத்துக் கன்னன் கூறியது யாது ?

12. கன்னனின் நன்றியுணர்வைப் புலப்படுத்துக.

13. துரியோதனன் கன்னன்பால் கொண்டிருந்த பேரன்பை எடுத்துக் காட்டுக.

14. குந்தி கன்னனிடம் வேண்டிய வரங்கள் யாவை?

15. குந்தி கேட்ட வரத்தைத் தந்து கன்னன் கூறியது யாது?

16. கன்னன் குந்தியிடம் கேட்ட வரங்கள் யாவை?

17. தூது போய் மீண்ட கண்ணன் பாண்டவரைக் கண்டு கூறியவை யாவை?

18. இடஞ்சுட்டி விளக்குக:

அ. அடாது செய்தவர் படாது பட்டனர்.

ஆ. மூண்டவல்..........உண்டோ.

இ. எடுக்கவோ கோக்கவோ.

ஈ. மானமோ? மன்னவர்க்கு அறமோ?

ஈ. திருத்தொண்டர் புராணம்

[சேக்கிழார்]

கண்ணப்ப நாயனர் புராணம்

புராணம் என்ற சொல், பழமையான சில வரலாற்றுச் செய்திகளை நவிலும் நூலைக் குறிக்கும். பிற்காலத்தில் புராணம் என்றாலே ஒவ்வாக் கற்பனைகளை இறைவன் மேல் ஏற்றி இயம்பும் நூல் என்றெண்ணும் நிலை ஏற்பட்டுவிட்டது. இரண்டாம் குலோத்துங்க மன்னனின் முதலமைச்சராய் விளங்கிய சேக்கிழார் பெருமான் அருளிச் செய்த திருத் தொண்டர் புராணம் என்னும் பெரிய புராணம் தமிழகத்தில் பிறந்து தொண்டுகள் பலபுரிந்து இறை நெறி நின்ற அறுபத்து மூன்று சைவநாயன்மார்களைப் பற்றிக் கூறுகின்றது கி.பி.பன்னிரண்டாம் நூற்றாண்டில் எழுந்த இந்நூல் வருணனை நயம் சொற்சுவை, பொருட்சுவை முதலியன மிக்குச் சிறந்து, சாதி இனச் சழக்கு கட்கப்பாற்பட்டுச் செய்யும் தொண்டு நெறியே

இறை நெறி என்பதை மெய்ப்பிக்குமாற்ருன் சிறந்து விளங்குகிறது. இப்புராணத்தில் ஒல்லாக் கற்பனைகளும், ஏலா நெறிகளும் இல்லை என்பர். இவண் சிறப்பிக்கப்படும் மெய்யடியார்களுள் எல்லாச் சாதியினரும், எல்லாத் தொண்டினரும் இறைவன் திருவடிப் பேறு எய்திய சிறப்பு போற்றப் படுகிறது.

இக் காப்பியத்தில் ஐந்து சருக்கங்கள் உள்ளன. நமக்குப்பாடமாக வந்துள்ள பகுதி கண்ணப்ப நாயனர் புராணத்தின் பகுதிகளாகும்.

கண்ணப்ப நாயனர் புராணம்

1. மேவலர் புரங்கள் செற்ற விடையவர் வேத வாய்மைக்
காவலர் திருக்கா ளத்திக் கண்ணப்பர் திருநா டென்பர்
நாவலர் புகழ்ந்து போற்று நல்வளம் பெருகி நின்ற
பூவலர் வாவி சோலை சூழ்ந்தபொத் தப்பி நாடு.

மகப் பயந்தது

2. கானவர் குலம்வி ளங்கத் தத்தைபாற் கருப்ப நீட
ஊனமில் பலிகள் போக்கி யுறுகடன் வெறியாட்டோடு
மானவத் திங்கள் செல்ல வளவில்செய் தவத்தி னுலே
பான்மதி யுவரி யீன்ரு லெனமகப் பயந்த போது

கல்வியும் வளர்ச்சியும்

3. வண்ணவெஞ் சிலையு மற்றப் படைகளு மலரக் கற்றுக்
கண்ணகன் சாயல் பொங்கக் கலைவளர் திங்க ளேபோ
லெண்ணிரண் டாண்டின் செவ்வி யெய்தினு ரெல்லை [யில்லாப்
புண்ணியந் தோன்றி மேன்மேல் வளர்வதன் பொலிவு [போல்வார்

வேட்டுவர் முறையீடு

4. அங்கண்மலைத் தடஞ்சாரற் புனங்களெங்கு மடலேனம்
[புலி கரடி கடமை யாமா
வெங்கண்மரை கலையொடு மான் முதலா யுள்ள மிருகங்
[கண் மிகநெருங்கி மீதூர் காலைத்
திங்கண் முறை வேட்டை வினை தாழ்த்த தென்று சிலை
[வேடர் தாமெல்லாந் திரண்டு சென்று
தங்கள்குல முதற்றலைவ னாகி யுள்ள தண்டெரிய னாகன்
[பாற்சார்ந்து சொன்னார்.

தந்தை உரிமை வழங்கல்

5. முன்னிருந்த மைந்தன் முக நோக்கி நாகன் மூப்பெனை
[வந்தடைதலினான் முன்பு போல,
வென்னுடைய முயற்சியினால் வேட்டையாட வினி
[யெனக்குக் கருத்தில்லை யெனக்கு மேலாய்
மன்னுசிலை மலையர்குலக் காவல் பூண்டு மாறெறிந்து
[மாவேட்டையாடி யென்று,
முன்னுடைய மரபுரிமை தாங்கு வாயென்றுடை
[தோலுஞ் சுரிகையுங்கைக் கொடுத்தா னன்றே.

வேட்டையாடுதல்

6. கருவரை யொரு தனுவொடு விசை கடுகியதென முனை
[நேர்
குரிசின் முன்விடு மடுசரமெதிர் கொலைபயில்பொழு
[தவையே
பொருகரியொடு சினவரியிடை புரையறவுடல் புக
[லால்
வருமிரவொடு பகலணவன வென மிடையுமவ் வனமே.

ஒரு வேட்கை

7. நாணனே தோன்றுங் குன்றி னண்ணுவே மென்ன [நாணன்
காணநீ போதி நல்ல காட்சியே காணு மிந்தச்
சேணுயர் திருக்கா ளத்தி மலைமிசை யெழுந்து செவ்வே
கோணமில் குடுமித் தேவ ரிருப்பர்கும் பிடலா மென் [ருன்.

கண்டதும் கொண்டதும்

8. மாகமார் திருக்கா ளத்தி மலையெழு கொழுந்தா யுள்ள
வேகநா யகரைக் கண்டா ரெழுந்தபே ருவகை யன் பின்
வேகமா னதுமேற் செல்ல மிக்கதோர் விரைவி னேடு
மோகமா யோடிச் சென்ருர் தழுவினுர் மோந்துநின்ருர்.

9. இவர்தமைக் கண்டே னுக்குத் தனியரா யிருந்தா [ரென்னே
யிவர் தமக் கமுது செய்ய விறைச்சியு மிடுவா ரில்லை
யிவர்தமைப் பிரிய வொண்ணு தென் செய்கேனினி [யான் சால
விவர் தமக்கிறைச்சி கொண்டிங் கெய்தவும் வேண்டு [மென்று

10. கானவர் போன தோரார் கடிதினிற் கல்லை யின்க
ணூனமு தமைத்துக் கொண்டு மஞ்சன மாட்ட வுன்னி
மாநதி நன்னீர் தூய வாயினிற் கொண்டு கொய்த
தூநறும் பள்ளித் தாமங் குஞ்சிமேற் றுதையக் கொண் [டார்.

11. தனுவொரு கையில் வெய்ய சரத்துடன் ருங்கிக் கல்
[லைப்
புனிதமெல் லிறைச்சி நல்ல போனகை மொருகை
[யேந்தி
யினியவெம் பிரானுர் சாலப் பசிப்பரென் றிரங்கி
[யேங்கி
நனிவிறைந் திறைவர் வெற்பை நண்ணினர் திண்ண
[ஞர் தாம்

12. இளைத்தனர் நாய ஞரென் றீண்டச்சென் றெய்தி வெற்
[பின்
முளைத்தெழு முதலைக் கண்டு முடிமிசை மலரைக்
[காலில்
வளைத்தபொற் செருப்பான் மாற்றி வாயின்மஞ் சன
[நீர் — தன்னை
விளைத்தவன் புமிழ்வார் போல விமலனுர் முடிமேல்
[விட்டார்.

13. தலைமிசைச் சுமந்த பள்ளித் தாமத்தைத் தடங்கா ளத்தி
மலைமிசைத் தம்பி ரானுர் முடி மிசை வணங்கிச் சாத்திச்
சிலைமிசைப் பொலிந்த செங்கைத் திண்ணனுர்சேர்த்த
[கல்லை
யிலை மிசைப் படைத்த வூனின் றிருவமு தெதிரே
[வைத்து.

14. கொழுவிய தசைக ளெல்லாங் கோலினிற் றெரிந்து
[கோத்தங்
கழலுறு பதத்திற் காய்ச்சிப் பல்லினு லதுக்கி நாவிற்
பழகிய வினிமை பார்த்துப் படைத்தவிவ் விறைச்சி சால
வழகி துநாய னீரே யமுதுசெய் தருளு மென்ருர்.

15. அவ்வழி யந்தி மாலை யணைதலு மிரவு சேரும்
வெவ்விலங் குளவென் றஞ்சி மெய்ம்மையின் வேறு [கொள்ளாச்
செவ்விய வன்பு தாங்கித் திருக்கையிற் சிலையுந் தாங்கி
மைவரை யென்ன வையர் மருங்குநின் றகலா நின்றார்.

சிவகோசரியாரின் பூசனையும் மன அழிவும்

16. எய்தியசீ ராகமத்தி லியம்பியபூ சனைக்கேற்பக்
கொய்தமல ரும்புனலு முதலான கொண்டணைந்தார்
மைதழையுங் கண்டத்து மலைமருந்தை வழிபாடு
செய்துவருந் தவமுடைய முனிவர்சிவ கோசரியார்.

17. வந்துதிரு மலையின்கண் வானவர்நா யகர்மருங்கு
சிந்தைநிய மத்தோடுஞ் செல்கின்றார் திருமுன்பு
வெந்தவிறைச் சியுமெலும்புங் கண்டகல மிதித்தோடி
யிந்தவநு சிதங்கெட்டே! னியார்செய்தா ரென்றழிவார்.

18. மாமுனிவர் நாடோறும் வந்தணைந்து வனவேந்தர்
தாமுயலும் பூசனைக்குச் சாலமிகத் தளர்வெய்தித்
தீமையென வதுநீக்கிச் செப்பியவா கமவிதியா
லாமுறையி லருச்சனை செய் தந்நெறியி லொழுகுவரால்.

இறைவன் சிவகோசரியாரின் கனவில் அருளுதல்

19. அன்றிரவு கனவின்க ணருமுனிவர் தம்பாலே
மின்றிகழுஞ் சடைமவுலி வேதியர்தா மெழுந்தருளி
வன்றிறல்வே டுவனென்று மற்றவனை நீநினையே
னன்றவன்றன் செயறன்னை நாமுரைப்பக் கேளென்று.

20. அவனுடைய வடிவெல்லா நம்பக்க லன்பென்று
மவனுடைய வறிவெல்லா நமையறியு மறிவென்று
மவனுடைய செயலெல்லா நமக்கினிய வாமென்று
மவனுடைய நிலையிவ்வா றறிநீயென் றருள்செய்வார்.

21. உனக்கவன்றன்செயல்காட்ட நாளைநீ யொளித்திருந்தா
லெனக்கவன்றன் பரிவிருக்கும் பரிசெல்லாங் காண்
[கின்றாய்
மனக்கவலை யொழிகென்று மறைமுனிவர்க் கருள்செய்து
புனற்சடிலத் திருமுடியா ரெழுந் தருளிப் போயினார்.

22. முன்னை நாள் போல்வந்து திருமுகலிப் புனன்மூழ்கிப்
பன்முறையுந் தம்பிரா னருள்செய்த படிநினைந்து
மன்னுதிருக் காளத்தி மலையேறி முன்புபோற்
பின்னுகனைப் பூசித்துப் பின்பாக வொளித்திருந்தார்.

திண்ணப்பர் கண்ணப்பரானது

23. அண்ணலார் திருக்கா ளத்தி யடிகளார் முனிவ னார்க்
[குத்
திண்ணனார் பரிவு காட்டத் திருநய னத்தி லொன்று
துண்ணென வுதிரம் பாய விருந்தனர் தூரத் தேயவ்
வண்ணவெஞ் சிலையார் கண்டு வல்விரைந் தோடிவந்
[தார்.

24. வந்தவர் குருதி கண்டார் மயங்கினார் வாயி னன்னீர்
சிந்திடக் கையி லூனுஞ் சிலையுடன் சிதறி வீழக்
கொந்தலர் பள்ளித் தாமங் குஞ்சிநின் றலைந்து சோரப்
பைந்தழை யலங்கன் மார்பர் நிலத்திடைப் பதைத்து
[வீழ்ந்தார்.

25. என்செய்தாற் றீருமோதா னெம்பிரான் றிறத்துத் தீங்கு
முன்செய்தார் தம்மைக் காணேன் மொய்கழல் வேட
[ரென்று
மின்செய்வார் பகழிப் புண்க டீர்க்கு மெய்மருந்து
[தேடிப்
பொன்செய்தாழ் வரையிற் கொண்டு வருவனா னென்று
[போனார்

26. மற்றவர் பிழிந்து வார்த்த மருந்தினுற் றிருக்கா ளத்திக்
கொற்றவர் கண்ணிற் புண்ணீர் குறைபடா திழியக் [கண்டு
மிற்றையி னிலைமைக் கென்னே வினிச்செய லென்று [பார்ப்பா
ருற்றநோய் தீர்ப்பதூனுக் கூனெனுமுரைமுன் கண் [டார்.

27. இதற்கினி யென்க ணம்பா லிடந்தப்பி னெந்தை யார்க
ணதற்கிது மருந்தாய்ப் புண்ணீர் நிற்கவு மடுக்குமென்று
மதர்த்தெழு முள்ளத் தோடு மகிழ்ந்துமுன் னிருந்து [தங்கண்
முதற்சர மடுத்து வாங்கி முதல்வர்தங் கண்ணி லப்ப.

28. கண்டபின் கெட்டே னெங்கள் காளத்தி யார்கண் [ணென்று
புண்டரு குருதி நிற்க மற்றைக் கண் குருதி பொங்கி
மண்டுமற் றிதனுக் கஞ்சேன் மருந்துகைக் கண்டே [னின்னு
முண்டொரு கண்ணிக் கண்ணை யிடந்தப்பி யொழிப்பே [னென்று

29. கண்ணுதற் கண்ணிற் றங்க ணிடந்தப்பிற் காணு [நேர்பா
டெண்ணுவார் தம்பி ரான்றன் றிருக்கண்ணி லிடக்கா [லூன்றி
யுண்ணிறை விருப்பி னோடு மொருதனிப் பகழி [கொண்டு
திண்ணனுர் கண்ணி லூன்றத் தரித்திலர் தேவ தேவர்.

30. கா்னவர் பெருமா னூர்தங் கண்ணிடந் தப்பும் போது
மூனமு துகந்த வைய ருற்றுமுன் பிடிக்கும் போதும்
ஞானமா முனிவர் கண்டார் நான்முகன் முதலாயுள்ள
வானவர் வளர்பூ மாரி பொழிந்தனர் மறைக ளார்ப்ப.

31, பேறினி யிதன்மே லுண்டோ பிரான்றிருக் கண்ணில் [வந்த
ஆறுகண் டஞ்சித்தங்க ணிடந்தப்ப வுதவுங் கையை
யேறுயர்த் தவர்தங் கையாற் பிடித்துக்கொண் டென்வ [லத்தின்
மாறிலாய் நிற்க வென்று மன்னுபே ரருள் புரிந்தார்.

அருஞ்சொற்பொருள் :

1. மேலவர்-பகைவர், புரங்கள்-முப்புரம், செற்ற-அழித்த, விடையவர் - இடப வாகனத்தையுடையவர், பூவலர் - பூக்கள் மலரும், வாவி-குளம், பொத்தப்பி நாடு-கண்ணப்பர் தோன்றிய நாட்டின் பெயர்.

2. கானவர்-வேட்டுவர், தத்தை - கண்ணப்பநாயனாரின் அன்னையார், ஊனம்-குற்றம், உறுகடன்-உற்ற கடமை, வெறி யாட்டு-வெறியாடல், பான்மதி-நிறைமதி, உவரி-கடல், பயந்த- ஈன்ற, பெற்ற.

3. வண்ண வெம் சிலை-அழகும் விருப்பமும் உடைய வில், மலரக் கற்று - முழுவதையும் நிரம்பக் கற்று, கண்ணகன் சாயல் - இடம் விரிந்த அழகு, எண்ணிரண்டு-பதினாறு, செவ்வி-பருவம்.

4. அங்கண்-அழகிய இடங்களையுடைய, மலைத் தடஞ்சாரல் - மலைகளின் பெருஞ்சாரல், புனங்கள் - காடுகள், அடல் ஏனம் - வலிமைமிகுந்த காட்டுப்பன்றி, கடமை-ஒருவகை காட்டுப் பசு, ஆமா-காட்டுப் பசு, வெங்கண் மரை-வெவ்விய கண்களையுடைய மான், கலை-ஆண் மான், திங்கண் முறை-குறித்த திங்கள் வேட்டை, தண் தெரியல் நாகன்-குளிர்ச்சி பொருந்திய மாலையை யுடைய நாகன், கடமை ஆமா - கடமையாகிய ஆமா எனக் கொள்ளினும் அமையும்.

5. மன்னு சிலை - விளங்குகின்ற சிலை, மலையர் - மலைக்குல வேடர், மாறு எறிந்து - எதிர்ப்பினை எறிந்து, மா வேட்டை - விலங்கு வேட்டை, முன்னுடைய-மரபினுடைய, உடைதோலும்- உடையாய்க் கட்டும் தோல் (வேடர் அரசுரிமை அடையாளம்), சுரிகையும்-உடைவாளும்.

6. கரு வரை - கரிய மலை (திண்ணனூர்க்கு உவமானம்) தனுவொடு-வில்லோடு, விசை கடுகியது-மிக்க வேகமாய் விரைந்தது, முனை-போர்முகம், வேட்டை முனை, நேர் - எதிர்ப்படும், அடுசுரம்-மென்மேலும் விடும் அம்பு, வெல்லும் அம்பு, பொருகரி - ஒத்த யானை, போர் செய் யானை, சினம் வரி-சின மிகுந்த புலி, புரையற-குரல் வளையற்றுப் போக, இரு கூருய் அற்று வீழச் மிடையும்-நெருங்கும், இடை புரை யற - இடையீடு இன்றி.

7. நண்ணுவேம்-சேர்வோம், போதி-போவாயாகில், சேண் உயர்-தொலைவில் வைத்திருக்கும், செவ்வே-செம்மை பெற, கோணம் இல்-குறைபாடு இல்லையாக.

8. சால-மிகவும், எய்தவும்-வந்து சேரவும்

10. ஓரார்-உணராதவராய், கடிதினில் - விரைவினில், கல்லை- இலைக்கலம், மஞ்சனம்-தூநீராட்டுதல், உன்னி - நினைத்து, பள்ளித் தாமம் - இறைவனுக்குச் சாத்தும் மலர் மாலை, குஞ்சி மேல்- தலை மயிரின்மேல், துதைய- நிறைய.

11. தனு - வில், போனகம்-உணவு, நனி விரைந்து - மிக விரைந்து. வெற்பை - மலையை. நண்ணினர் - சேர்ந்தார், அணுகினர்.

12. ஈண்டச் சென்று-வேகமாய்ப் போய், முதல்-முதல்வராகிய இறைவன்.

13. தடம் காளத்தி - அகன்ற காளத்தி, தம்பிரான் - தம் தலைவன்.

14. கொழுவிய - கொழுப்பினையுடைய, அழலுறு பதத்தில் - நெருப்பில் தகுந்த பதத்தில், அதுக்கி-அறை குறையாக வாயில் இட்டு சுவைமட்டும் தெரிய மென்று, நாயனீர் - தலைவரீர்.

15. மை வரை யென்ன - கரிய மலை போல.

16. மை தழையும் கண்டத்து - நஞ்சு கருமையாக விளங்கும் கண்டத்தினையுடைய, மலை மருந்து - மலையில் எழும் பிறவி நோய் தீர்க்கும் மருந்தாகிய இறைவன்.

17. நியமம் - முறை. அனுசிதம் - தகாதது.

19. வன்திறன்-வலிய ஆற்றல்.

21. புனற்சடிலத் திருமுடியார்-புனலாகிய கங்கையைத் திருமுடியில் சூடிய இறைவன்.

22. பிஞ்ஞகனை-சிவபெருமானை.

23. திரு நயனம்-அழகிய கண், துண்ணென-திடுக்கிடுமாறு, உதிரம்-குருதி, இரத்தம்.

24. கொந்தலர் - கொத்தாக மலரும்.

25. மொய் கழல் - ஒலிக்கின்ற வீரக் கழலையணிந்த மின் செய்வார் பகழிப் புண்கள் - ஒளியையுடைய நெடிய அம்பினால் உளவாம் புண்கள், தாழ்வரை - மலையடிவாரம்.

26. ஊனுக்கு ஊன்-நிணத்துக்கு நிணத்தையிடல்.

27. இடந்து - தோண்டி, மதர்த்தெழு - களித்து எழுகின்ற, வாங்கி - தோண்டி எடுத்து.

29. உண்ணிறை-உள் நிறைந்தெழுகின்ற, தரித்திலர், பொறுத்திலர்.

30. உற்று முன் பிடிக்கும்போது - திண்ணனார் தம் இரண்டாவது கண்ணினைத் தோண்டும்பொழுது இறைவனார் தடுத்துக் கையைப் பிடிக்கும்போது, மறைகள் ஆர்ப்ப - மறைகள் ஒலிக்க.

31. பேறு-செல்வம், ஏறுயர்த்தவர் - இடபக் கொடியுயர்த்த சிவபெருமான், என் வலத்தின் - எனது வலது பக்கத்தில், மாறு இலாய் - மாறுபாடு இல்லாதவனே.

இலக்கணக் குறிப்பு:

2. அலர்வாவி - வினைத்தொகை, வாவி சோலை-உம்மைத் தொகை.

2. செய்தவம் - வினைத்தொகை, பான்மதி - உவமைத் தொகை, பால் + மதி.

3. வெஞ்சிலை - பண்புத்தொகை, வெம்மை + சிலை, எட்டு + இரண்டு = எண்ணிரண்டு, இல்லா - ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம், மேன்மேல் - அடுக்குத்தொடர்.

4. தடஞ்சாரல் – உரிச்சொற்றொடர், வேட்டை வினை - இரு பெயரொட்டுப்பண்புத் தொகை, வெங்கண் பண்புத்தொகை. வெம்மை + கண்.

5. கைக்கொடுத்தான் - ஏழாம் வேற்றுமைத் தொகை.

6. இல்பாடலில் இல்பொருளுவமையணிவந்துளது. கருவரை - பண்புத்தொகை, பொருகரி - வினைத்தொகை.

7. போதி - முன்னிலை ஒருமை வினைமுற்று, போ+த்+இ,

8. பெருமை + உவகை - பேருவகை-பண்புத்தொகை. சென்றுர் தழுவினுர் = முற்றெச்சம்.

9. செய் + க் + ஏன் = செய்கேன் - தன்மை ஒருமை வினைமுற்று.

10. ஊனமுது - இரு பெயரொட்டுப் பண்புத்தொகை. நன்னீர், தூநறும்பள்ளி - பண்புத்தொகைகள், நறும்பள்ளி - உரிச்சொற்றொடர்.

11. சாலப்பசிப்பர், நனிவிரைந்து - உரிச்சொற்றொடர், மெல்லிறைச்சி - பண்புத்தொகை, நண்ணு+இன்+ஆர் = நண்ணினுர்.

12. எழுமுதல் - வினைத்தொகை, மஞ்சனநீர் - நான்கன் உருபும் பயனும் உடன்தொக்க தொகை.

13. செம்மை+கை=செங்கை-பண்புத்தொகை.

14. உறுபதம் - வினைத்தொகை.

15. அந்திமாலை - இரு பெயரொட்டுப் பண்புத்தொகை. வெம்மை+விலங்கு=வெவ்விலங்கு-பண்புத்தொகை.

16. அணை+த்+ந்+த்+ஆர்=அணைந்தார்.

17. செல் + கின்று + ஆர். = செல்கின்றுர்-வினையாலணையும் பெயர், கெடு+ஏன் = கெட்டேன், பகுதிஒற்று இரட்டித்து இறந்த காலங் காட்டிற்று.

18. நாள் + தோறும் - நாடோறும். வந்து, அணைந்து - வினையெச்சங்கள்.

19. மின் + திகழும் = மின்றிகழும்வன்மை = திறல், அவன் + தன்.

20. நமக்கு + இனிய + ஆம் = நமக்கினியவாம.

21. காண்கின்றாய் - காலவழுவமைதி, காண்பாய் என எதிர்காலத்திற் கூறவேண்டியது நிகழ்காலத்தாற் கூறப்பட்டுள்ளது. எனக்கு - உருபு மயக்கம், ஏழாம்வேற்றுமை உருபு நிற்க வேண்டிய இடத்தில் நான்காம் வேற்றுமை உருபு நின்றது.

22. முகலிப்புனல் - ஏழன் உருபும் பயனும் உடன் தொக்க தொகை.

23. பரிவு காட்ட - இரண்டாம் வேற்றுமைத் தொகை.

24. கண்டார், வந்தவர் - முற்றெச்சங்கள், பசுமை + தழை - பைந்தழை - பண்புத்தொகை, அலங்கல் - தொழிலாகுபெயர், கொத்து - கொந்து என் மெலிந்தது,

25. மொய்கழல்-வினைத்தொகை, போ + (இ)ன் + ஆர், போனார் மெய் மருந்து-பண்புத் தொகை, தாழ்வரை-வினைத்தொகை.

26. கண் + ட் + ஆர் - கண்டார்.

27. எந்தை-என் தந்தை என்பதன் மரூஉச் சொல்.

28. கெடு + ஏன் - கெட்டேன். பகுதி ஒற்று இரட்டித்து இறந்த காலம் காட்டிற்று.

29. எண்ணுவார் - முற்றெச்சம், கண்ணுதல் - முன்பின்னாக மாறி நின்ற ஏழாம் வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை, தரி + த் + த் + இல் + அர். தரித்திலர். தேவதேவர் - நான்காம் வேற்றுமைத் தொகை.

30. ஊனமுது - இரு பெயரொட்டுப் பண்புத்தொகை, மாமுனிவர் - உரிச்சொற்றொடர், வளர் பூமாரி - வினைத்தொகை, பூமாரி - உருவகம், இரு பெயரொட்டுமாம்.

31. உயர்த்தவர்-வினையாலணையும் பெயர். மன்னுபேரருள்-வினைத்தொகை, பேரருள்-பண்புத் தொகை. பெருமை + அருள், நிற்க-வியங்கோள் வினைமுற்று.

விஞக்கள் :

1. பெரிய புராணத்தின் சிறப்பியல்புகளைக் கூறுக.

2. பொத்தப்பி நாடு எத்தகையது?

3. திண்ணனாரின் தோற்றத்தையும் வளர்ச்சியையும் குறிப்பிடுக.

4. வேடுவர் நாகனிடம் முறையிட்டது யாது?

5. நாகன் திண்ணனாரிடம் உரிமை வழங்கிய முறையைக் கூறுக.

6. வனத்திலியல்பைக் கூறுக.

7. நாணன் கூறியது யாது?

8. திண்ணனார் காளத்தி நாதரைக் கண்டு எண்ணியது யாது?

9. திண்ணனார் காளத்தி நாதனை வழிபட்டது எவ்வாறு?

10. சிவகோசரியார் என்பவர் யார்? அவர் மனம் வருந்தக் காரணம் என்ன?

11. இறைவன் சிவகோசரியார் கனவிற் கூறியது யாது?

12. இறைவனது ஒரு கண்ணிற் குருதி வரக் கண்டு திண்ணனார் உற்ற நிலையையும் செய்த செயலையும் கூறுக.

13. இறைவனது மற்றொரு கண்ணிலும் குருதி வரக்கண்டு திண்ணனார் யாது செய்தார்?

14. திண்ணனார் தம்முடைய மற்றொரு கண்ணையும் தோண்ட முற்பட்ட பொழுது நிகழ்ந்த நிகழ்ச்சிகள் யாவை?

15. இறைவன் திண்ணனார்க்கு அருள் புரிந்தது யாது?

16. திண்ணனார் கண்ணப்பரான வரலாற்றைத் தொகுத்து 15 வரி எழுதுக.

2. நாட்டுப் பற்றுப் பாடல்கள்

[பாரதியார்]

சிவாஜி தம் படையினருக்குக் கூறியது

இராமலிங்க அடிகளாரின் இலக்கியப் போக்கைப் பின்பற்றி எளிய நடையில் எல்லோருக்கும் புரியும் கவிதை, கட்டுரை முதலியன எழுதித் தமிழ் இலக்கிய உலகில் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்திய பெருமைதேசீய கவி சுப்பிரமணிய பாரதியாரையே சாரும். அண்மைக் காலத்தில் இருபதாம் நூற்றாண்டில் விடுதலை இயக்கத்தில் பங்கு கொண்டு, இன்னல் பல எய்தி வறுமைக்கும், இன்னலுக்கும் இடையில் இன்பக் கவிதை வெறிகொண்டு விறுவிறுப்பானபாடல்களின் மூலம் விடுதலை, கடவுள் பக்தி, சமுதாய சீர்திருத்தம், தத்துவ அறிவு போன்ற வற்றைத் தம் பாடல்களின் மூலம் பரப்பிய பாரதியாரை இருபதாம நூற்றாண்டுச் சித்தர் என்பாரும் உண்டு. தனிப் பாடல்கள், கட்டுரைகள், சிறுகதைகள், நாட

கங்கள் முதலியவற்றிற்கிடையில் பாஞ்சாலி சபதம், குயில் பாட்டு போன்ற சிறு காவியங்களையும் இயற்றியுள்ளார். இவண் பாடமாக வந்துள்ள பகுதி தேசீய இயக்கப் பாடல் களில் சிவாஜி தமது படையினருக்குக் கூறுவதாக வரும் பகுதி. சீனர் நம்மைத் தாக்க முயலும் இக்காலத்தில் நமக்கு வீர வுணர்வைத் தூண்ட வல்ல நன்மொழிகள் இப் பாடல் களில் வருகின்றன. இந்தியரின் பெருமையும் வீரமும் பிறங் கிடும் கவிதையைக் காண்போம்.

பாரத பூமி பழம்பெரும் பூமி;
நீரதன் புதல்வர்; இந் நினைவகற் றுதீர்!
பாரத நாடு பார்க்கெலாம் திலகம்
நீரதன் புதல்வர்; இந் நினைவகற் றுதீர்!
வானக முட்டும் இமயமால் வரையும்
ஏனைய திசைகளில் இருந்திரைக் கடலும்
காத்திடும் நாடு: கங்கையும் சிந்துவும்
தூத்திரை யமுனையும் சுனைகளும் புனல்களும்
இன்னரும் பொழில்களும் இணையிலா வளங்களும்
உன்னத மலைகளும் ஒளிர் தரு நாடு!

....

நீரதன் புதல்வர்! இந்நினைவகற் றுதீர்!
தாய்த்திரு நாட்டைத் தறுகண் மிலேச்சர்
பேய்த்தகை கொண்டோர் பெருமையும் வண்மையும்,
ஞானமும் அறியா நவைபுரி பகைவர்
வானகம் அடக்க வந்திடும் அரக்கர் போல்
இந்நாள் படைகொணர்ந்து இன்னல் செய்கின்றார்!
ஆலயம் அழித்தலும் அருமறை பழித்தலும்
பாலரை விருத்தரைப் பசுக்களை ஒழித்தலும்
மாதர்கற் பழித்தலும் மறையவர் வேள்விக்கு
ஏதமே சூழ்வதும் இயற்றி நிற் கின்றார்!

சாத்திரத் தொகுதியைத் தாழ்த்திவைக் கின்றார் !
கோத்திர மங்கையர் குலங் கெடுக்கின்றார்!
எண்ணில துணைவர்காள்! எமக்கிவர் செயுந்துயர்;
கண்ணியம் மறுத்தனர்; ஆண்மையும் கடிந்தனர்;
பொருளினைச் சிதைத்தனர்; மருளினை விதைத்தனர்;
திண்மையை யழித்துப் பெண்மையிங் களித்தனர்;
பாரதப் பெரும்பெயர் பழிப் பெய ராக்கினர்;
சூரர்தம் மக்களைத் தொழும்பராய்ப் புரிந்தனர்.
வீரியம் அழிந்து மேன்மையும் ஒழிந்துநம்
ஆரியர் புலையருக் கடிமைக ளாயினர்.
மற்றிதைப் பொறுத்து வாழ்வ தோ வாழ்க்கை ?
வெற்றிகொள் புலையர்தாள் வீழ்ந்துகொல் வாழ்வீர்?
மொக்குள்தான் தோன்றி முடிவது போல
மக்களாய்ப் பிறந்தோர் மடி வது திண்ணம்!
தாய்த் திரு நாட்டைத் தகர்த்திடு மிலேச்சரை
மாய்த்திட விரும்பான் வாழ்வு மோர் வாழ்வு கொல்?
மான மொன் றிலாது மாற்றலர் தொழும்பராய்
ஈனமுற்றிருக்க எவன் கொலோ விரும்புவன் ?
தாய்பிறன் கைப்படச் சகிப்பவனாகி
நாயென வாழ்வோன் நமரில் இங் குளனோ ?

……………………………………………………

படைமுகத்து இறந்து பதம்பெற விரும்பாக்
கடைபடு மாக்களென் கண்முன்னில் லாதீர்!
சோதரர் தம்மைத் துரோகிகள் அழிப்ப
மாதரார் நலத்தின் மகிழ்பவன் மகழ்க!
நாடெலாம் பிறர் வசம் நண்ணுதல் நினையான்
வீடு சென்றொளிக்க விரும்புவோன் விரும்புக!
தேசமே நலிவொடு தேய்ந்திட மக்களின்
பாசமே பெரிதெனப் பார்ப்பவன் செல்க!
நாட்டுளார் பசியினால் நலிந்திடத் தன் வயிறு
ஊட்டுதல் பெரிதென உன்னுவோன் செல்க,
ஆணுருக் கொண்ட பெண்களும் அலிகளும்
வீணில் இங் கிருந்தெனை வெறுத்திடல் வுரும்பேன்.

அருஞ்சொற் பொருள்:

3. திலகம்-பொட்டு, (முகத்துக்கு அழகு தருவது)

5. வரை - மலை

6. இருந்திரை - பெரும் அலை

8. தூத்திரை – தூய அலை

14. நவைபுரி - குற்றம் செய்கின்ற

18. விருத்தரை – முதியோரை

25. மருளினை - அருளுக்கு எதிரான அறியாமை மயக்கத்தை.

28. தொழும்பராய்-அடிமைகளாய், குற்றேவல் செய்பவராய்

33. மொக்குள் - மொட்டு

42. கடைபடு - இழிந்த, கடைத்தரமான.

இலக்கணக் குறிப்பு:

1. பழம்பெரும்பூமி-பண்புத்தொகை.

5. இமயமால்வரை - இருபெயரொட்டுப்பண்புத்தொகை.

8. தூய்மை + திரை = தூத்திரை - பண்புத்தொகை.

9. இணையிலா - ஈறுகெட்ட எதிர்மறைப்பெயரெச்சம்.

12. நாட்டை - உருபு மயக்கம்.

13. கொண்டோர்-வினையாலணையும் பெயர்.

14. அறியா - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.

17. அருமறை - பண்புத்தொகை

22. கெடு + க் + கின்று + ஆர் = கெடுக்கின்றார்.

24. கடி + த் + ந் + த் + அன் + அர் = கடிந்தனர்.

31. வாழ்க்கை - தொழிற்பெயர்.

40. வாழ்வோன் - வினையாலணையும் பெயர்.

41. விரும்பா - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.

வினாக்கள்:

1. சுப்பிரமணிய பாரதியார் எத்தகையவர்?

2. பாரதநாடு எத்தகையது ?

3. பாரத நாட்டுக்குப் பகைவர் செய்யும் இன்னல்கள் யாவை?

4. சிவாஜி தம் படையினருக்குக் கூறிய வீரவுரை யாது?

5. 'மொக்குள் தான் தோன்றி முடிவதுபோல'—இவ்வுவமை எதனை விளக்கவந்தது?

4. பல்சுவைப் பாடல்கள்

1. வருணனைப் பாடல்கள்

அ. ஏமாங்கத நாட்டு வளம்

ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றாகிய சீவகசிந்தாமணியைத் திருத்தக்க தேவர் இயற்றியருளினர். சமணசமயத்தின் கொள்கைகள் பரவிவரும் இனிய தமிழ்க் காப்பியம் சிந்தாமணி. காப்பியத் தலைவனான சீவகனின் தந்தையாகிய சச்சந்தன் என்பான் ஆட்சி புரிந்த ஏமாங்கத நாட்டின் வளம் கீழ்வரும் செய்யுளில் கூறப்படுகிறது.

"காய்மாண்ட தெங்கின் பழம்வீழக் கமுகின் நெற்றிப்
பூமாண்ட தீந்தேன் தொடைகீறி வருக்கை போழ்ந்து
தேம்மாங் கனிசிதறி வாழைப் பழங்கள் சிந்தும்
ஏமாங் கதமென் றிசையாற்றிசை போயதுண்டோ"

அருஞ்சொற் பொருள்:

மாண்ட - சிறந்த, கமுகு - பாக்கு மரம், தேன்தொடை - தேனடை, வருக்கை - பலா, போழ்ந்து - பிளந்து, இசையால் திசை போயது - எல்லாத் திசைகளிலும் புகழப்படுவது.

இலக்கணக் குறிப்பு:

மாண்ட - பெயரெச்சம், தீந்தேன் - உரிச்சொற்றொடர், கீறி, சிதறி, போழ்து - வினையெச்சங்கள்.

வினா:

ஏமாங்கத நாட்டின் வளம் சிந்தாமணியில் எவ்வாறு கூறப் பட்டுள்ளது ?

ஆ. மருதநிலை வருணனை

கவிதை இனிமை மிக்க கம்பர் இயற்றிய இராமாயணத்தில் மருத நிலத்தைக் கம்பர் வருணிக்கின்றார். இராமாயணத்தின் முதற்காண்டமாய பால காண்டத்தில் நாட்டுப் படலத்தில் கோசல நாட்டின் சிறப்பான நானிலங்களையும் வருணிக்கையில் வரும் மருதநில வருணனை கீழ்வரும் கவிதை ஓவியம்.

தண்டலை மயில்க ளாடத்
தாமரை விளக்கம் தாங்கக்
கொண்டல்கள் முழவின் ஏங்கத்
குவளைகண் விழித்து நோக்கத்
தெண்டிரை எழினி காட்டத்
தேம்பிழி மகர யாழின்
வண்டுகள் இனிது பாட
மருதம்வீற் றிருக்கு மாதோ!

அருஞ்சொற் பொருள் :

தண்டலை - சோலை, கொண்டல் - மேகம், முழவு-மத்தளம் ஏங்க - ஒலிக்க, திரை - அலை, எழினி - திரைச்சீலை, தேம்பிழி- இனிமை தருகின்ற, மாது, ஓ - அசைகள்.

இலக்கணக் குறிப்பு:

தெண் + திரை = தெண்டிரை, தாங்க, காட்ட - செயவென்னும் வாய்பாட்டு வினையெச்சங்கள்.

வினா :

மருதநில வருணனை கம்பரால் எவ்வாறு கூறப்பட்டுள்ளது ?

இ. கார்காலம்

[கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை]

நாஞ்சில் நாட்டுப் புத்தேரியில் பிறந்த தேசிக விநாயகம் பிள்ளையவர்கட்குச் சென்னைத் தமிழ்ச் சங்கம் கவிமணி என்ற சிறப்புப் பட்டத்தை ஈந்தது. மலரும் மாலையும், ஆசிய

ஜோதி முதலிய கவிதை நூல்கள் கவி மணியின் கவிதைகளைக் கொண்டவை. மருமக்கள் வழி மான்மியம் நகைச் சுவையோடு சீர்த்திருத்தம் பேசும் இனிய நூல். இவர் பல ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் ஆக்கியுள்ளார்.

பொன்னொளியும் மரகதத்தின் பொலிவும் செந்நெற்
புலங்காட்ட அதன்மீது நிழலை வீசும்
பன்னரிய சரத்கால மேகந் தன்னைப்
பரிதிவிரைந் தெழுந்தோடி வெருட்டிச் செல்லத்
தன்னைமறந் தொளிமயக்கில் மயங்கி வண்டு
சாருமலர்த் தேன்மலர்ந்து சுழன்று பாட
மன்னுகுளம் நதிக்கரையில் வாழுந் தாரா
மனங்களித்துக் குரலெழுப்பித் திரியும் மாதோ!

அருஞ்சொற்பொருள்:

மரகதம் - பச்சை மணி, புலம் - வயல், பன்னரிய சொல்லுதற்கரிய, சரத் காலம்-கார்காலம், மன்னு-நிலைபெற்ற, விளங்கும்.

இலக்கணக் குறிப்பு:

பன்ன + அரிய = பன்னரிய, பொன்னொளி - ஆரும் வேற்றுமைத்தொகை, செந்நெல் - பண்புத்தொகை, மலர்த்தேன் - ஏழன் உருபும் பயனும் உடன் தொக்கத் தொகை, மன்னுகுளம்- வினைத்தொகை.

வினா:

கார் காலச் சிறப்பு கவிமணி அவர்களால் எவ்வாறு வருணிக்கப்பட்டுள்ளது?

2. சீட்டுக்கவி

புலவர் பெருமக்கள் தம்மை அறிமுகம் செய்து கொள்ளுதற்கும், புலவர்களிடமிருந்து தேவையான பொருட்களைப் பெற்றுக் கொள்ளுதற்கும், பிறரைப் பாராட்டுதற்கும், செய்தியை அறிவிப்பதற்கும் செய்யுள் உருவிலேயே முடங்கல் வரைந்தனர். அவற்றைச் சீட்டுக்கவி என்றும், ஓலைத் தூக்கென்றும், ஓலைப் பாசுர மென்றும் வழங்குவர்.

கி. பி. பதினைன்காம் நூற்றுண்டில் வாழ்ந்த காளமேகப் புலவர் ' இம்மென்னு முன்னே எழுநூறும் எண்ணூறும், அம்மென்றுல் ஆயிரம் பாட்டாகாதோ? என்று பெருமித முழக்கம் செய்து வந்தவர். திருமலைராயன் பட்டினத்து அரசவைப் புலவரான அதிமதுர கவிக்குத் தம்மை அறிமுகம் செய்து கொள்வதற்காகக்காளமேகம் ஒரு சீட்டுக்கவி வரைந்து அனுப்புகிருர். அக்கவியில் ஐந்து நாழிகையிலே ஒரு தூதும், ஆறு நாழிகையிலே ஒரு சொற்சந்த மாலையும், ஏழு நாழிகையிலே ஒரு அந்தாதியும், பத்து நாழிகையிலே மடலும் கோவையும், ஒரு நாளிலே ஒரு பரணியும், இரண்டு நாட்களிலே பாரகாவியங்களும் பகர்ந்து கொடிகட்டியதாகத் தம் ' ஆற்றலை விளக்கிவிட்டுத் தம் எதிர்ப்புலவரை இகழ்ந்தும் எழுதுகிருர். கீழ்வரும் செய்யுளில் பிற்பகுதி வருகின்றது.

சீதஞ் செய்யுந் திங்கள் மரபினுன் நீடுபுகழ்
செய்யதிரு மலைராயன் முன்
சீறுமாருகவே தாறுமா றுகள் சொல்
திருட்டுக் கவிப்புலவரைக்
காதங் கறுத்துச் சவுக்கிட் டடித்துக்
கதுப்பிற் புடைத்துவெற்றிக்
கல்லணையி ஞெடுகொடிய கடிவாள மிட்டேறு
கவிகாள மேகநாதனே.

அருஞ்சொற் பொருள்:

சீதம்-குளிர்ச்சி; திங்கள் மரபு-சந்திரகுலம். கதுப்பு - கன்னம், கல்லணை - கல்லாற் கட்டிய நீரணை.

இலக்கணக் குறிப்பு:

நீடு புகழ் - பண்புத்தொகை, வினைத்தொகையுமாம், கவி காளமேகம் - இருபெயரொட்டுப்பண்புத்தொகை.

வினாக்கள்:

1. சீட்டுக் கவியாவது யாது? அதன் வேறு பெயர்கள் யாவை?
2. காளமேகப் புலவரின் பெருமித முழக்கம் யாது?
3. காளமேகப் புலவர் கவிபாடும் தமது ஆற்றலை எவ்வாறு எடுத்தியம்பியுள்ளார்?
4. கவி காளமேகப் புலவர் எதிர்ப் புலவரை எவ்வாறு இகழ்ந்து கூறியுள்ளார்?

3. இரட்டுற மொழிதல்

பவணந்தி முனிவர் நன்னூல் என்னும் இலக்கணத்தில் இயம்பும் முப்பத்திரண்டுவகை உத்திகளில், இரட்டுற மொழி தல் என்பது ஒரு உத்தி. உத்தி என்பதற்குத் தக்கபடிக் கூறு தல் என்று பொருள். ஒரு வாக்கியத்தை இரண்டு பொருள் படச் சொல்லுதலை இரட்டுற மொழிதல் எனபர். இரட்டுற மொழிதலைச் சிலேடை எனவும் வழங்குவர். காளமேகப் புலவர் பாடிய சிலேடை வெண்பாக்களுள் இரண்டைக் கீழே காண்போம்.

அ. சந்திரனுக்கும், மலைக்கும்

நிலவாய் விளங்குதலா னீள்வான் படிந்து
சிலபோ துலாவுதலாற் சென்று—தலைமேல்
உதித்து வரலா லுயர்மா மலையை
மதிக்கு நிகராக வழுத்து.

அருஞ்சொற் பொருள்:

நிலவாய் - நிலத்தின் மீது, நிலவொளியாய், போது - பூ, பொழுது, வழுத்து - வாழ்த்து.

சென்று தலைமேல் உதித்து வரலால் - நிலத்தின் மீது தொடர்ச் சியாகப் பரவி அழகாக விளங்குதலாலும், மதி - சந்திரன், நில வாய் விளங்குதலால்- நிலவொளி சிறக்கத் தருவதாலும், நீள்வான்

படிந்து- நீண்ட விண்ணிற் பொருந்தி, சில போது உலாவுதலால்- சில பொழுதுகளில் உலவுதலாலும், சென்று தலைமேல் உதித்து வருதலாலும் - நிலத்திற்கு மேலாகத் தோன்றி நமது தலைக்கு மேல் விண்ணில் வருதலாலும், உயர் மாமலையை மதிக்கு நிகராக வழுத்து - உயர்ந்த பெரிய மலையை சந்திரனுக்கு நிகராகவாழ்த்து.

இலக்கணக் குறிப்பு:

நீள்வான், உயர்மாமலை - பண்புத்தொகைகள், மாமலை - உரிச் சொற்றொடர்.

வினாக்கள்:

1. இரட்டுற மொழிதலாவது யாது? விளக்குக.
2. சந்திரனுக்கும், மலைக்குமுள்ள ஒப்புமைகளைக் கூறுக.

ஆ. பூசணிக்காய்க்கும், பரமசிவனுக்கும்

அடி நந்தி சேர்தலா லாகம் வெளுத்துக்
கொடியுமொரு பக்கத்திற் கொண்டு– [வடிவுடைய
மாசுணத்தைப் பூண்டு வளைத்தழும்பு பெற்றதனால்
பூசணிக்காய் யீசனெனப் போற்று.

அருஞ்சொற் பொருள்:

நந்தி - காம்பு, இடபவூர்தி. ஆகம் - மேற்பாகம். திருமேனி கொடி - பூசணிக் கொடி, கொடி போலும் உமையம்மை, மாசுணம் - பூசணிக்காய் மேலுள்ள சாம்பல் நிறம், பெரும் பாம்பு, வளைத் தழும்பு - பூசணிக்காய் கிடக்கும் பொந்தின் தழும்பு, உமையம்மையின் வளையல் தழும்பு, ஈசன் - இறைவன்.

இலக்கணக் குறிப்பு:

கொண்டு, பூண்டு - வினையெச்சங்கள்.

வினா:

1. பூசணிக்காயை யீசனெனப் போற்றுதல் யாங்ஙனம்?

4. சிற்றிலக்கியம்

அ. கலிங்கத்துப் பரணி

தமிழில் முதன் முதல் எழுந்த பரணி கலிங்கத்துப் பரணி, முதலாம் குலோத்துங்க சோழனின் அவைக்களப் புலவராய சயங்கொண்டார், முதலாம் குலோத்துங்கனின் படைத்தலைவனும், அமைச்சுத் தலைவனுமாய கருணாகரத் தொண்டைமான் கலிங்கத்தை வென்ற செய்தியை 596 தாழிசைகளில் கலிங்கத்துப் பரணியாகப் பாடினார்.

பரணி என்பது தமிழில் வழங்கும் தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்கள் என்னும் சிற்றிலக்கியங்களுள் ஒன்று. போர் முனையில் ஆயிரம் யானைகளைக் கொன்று வெற்றி கொண்ட வீரரைப் புகழ்ந்து பாடுவதைப் பரணி என்பர். கடவுள் வாழ்த்து, கடைதிறப்பு, காடு, காளிகோவில் முதலிய பலவகைச் சிறப்புக்களும் பொருந்த பரணி அமையும். பரணி என்ற நாள்மீன் காளியையும், யமனையும் தன் தெய்வமாகக் கொண்டது. எனவே அந்நாண்மீனால் வந்த பெயரே. பரணி என டாக்டர் உ. வே. சா. அவர்கள் மொழிவார்கள் பரணி பற்றிப் பல கருத்துக்கள் வழங்கி வருகின்றன இவண் கொடுக்கப்பட்டுள்ள இரு தாழிசைகளும் காளிக்குக் கூளி கூறியது என்ற பகுதியில் குலோத்துங்க சோழனின் படைகளின் அளவையும், நிலையையும் வியந்து கலிங்க நாட்டுக்கு வந்த பேய் காளிக்குக் கூறிய பாடல்களுள் வருவன.

படை வியப்பு

அகில வெற்பும் இன்(று) ஆனை ஆனவோ!
அடைய மாருதம் புரவி ஆனவோ!
முகில் அனைத்தும் அத் தேர்கள் ஆனவோ!
மூரி வேலை போர் வீரர் ஆனவோ!

படையின் பரப்பு

பார் சிறுத்தலின் படை பெருத்ததோ?
படை பெருத்தலின் பார் சிறுத்ததோ?
நேர் செறுத்தவர்க்(கு) அரிது நிற்பிடம்
நெடு விசும்பு அலால் இடமும் இல்லையே!

அருஞ்சொற் பொருள்:

அகில வெற்பு - எல்லாமலைகளும், மாருதம் - காற்று, அடைய-முழுவதும், புரவி - குதிரை, முகில் - மேகம், மூரி - வலிமை, பார்-உலகம், நேர் - எதிர், செறுத்தவர் - வெகுண்டு போர் புரிவோர் விசும்பு - வானம்.

இலக்கணக் குறிப்பு:

செறுத்தவர்க்கு - வினையாலணையும் பெயர், நெடு விசும்பு-பண்புத்தொகை.

வினக்கள்:

1. பரணியாவது யாது?
2 கலிங்கத்துப் பரணிபற்றி நீ அறிவது யாது?
3. கலிங்கத்துப் பரணியில் படைவியப்பும், படையின் பரப்பும் எவ்வாறு கூறப்பட்டுள்ளன?

ஆ. நந்திக் கலம்பகம்

தமிழில் வழங்கும் கலம்பகங்களுள் நந்திக் கலம்பகம் முதற் கலம்பகம். பல்லவமரபில்வந்த பெருமன்னனை மூன்றும்நந்தி வர்மனைப் பல்வகையானும் அழிக்க அவனுடைய தம்பியர் முயன்று, வெற்றிகிட்டாத நிலையில் நந்திக் கலம்பகம் என்னும் நூலை இயற்றி அதற்கிடையே வசைமொழிகள் வைத்து மன்னனை ஒழிக்கத் திட்டமிட்டனர். வசையால் அழிவோம் என்றறிந்தும் தமிழ் கேட்டு உயிர்விடுவோம் என்ற விருப்பால்

நூல் கேட்டான் நந்திவர்மன். கவிஞன் விதித்த வரையரைப் படி அரண்மனையிலிருந்து இடுகாடு வரை நூறு பந்தல்கள் அமைக்கப்பட்டன. ஒவ்வொரு பாடலைப் பாடும் பொழுதும் மன்னன் ஆடைஅணிகலன்களோடுஒருபந்தற்கீழமர்ந்துகேட்டான். பாடல் முடிந்ததும் பந்தல் எரிய, இப்படியே எல்லாப் பாடல்களையும் கேட்ட பின்னர் இறுதியாக இடுகாட்டில் விறகுகளை அடுக்கி அதன்மேல் பிணத்தைப்போல் படுத்தவாறே இறுதிப் பாட்டைக் கேட்டான். பாடல் முடிந்ததும் விறகோடு மன்னனும் எரிந்தான். தமிழுக்காக உயிர் தந்த நந்தியின் வீரத்தைப் புகழ்கிறது பின்வரும் கலம்பகப் பாடல்.

நந்தியும் வீரமும்

பதிதொரு புயல்மொழி தருமணி
　　பணைதரு பருமணி பகராநெல்
கதிர்தொரு வருபுனல் கரைபொரு
　　திழிதரு காவிரி வளநாடா!
நிதிதரு கவிகையும் நிலமகள்
　　உரிமையும் இவையிவை உடைநந்தி
மதியிலி அரசர்நின் மலரடி
　　பணிகிலர் வானகம் ஆள்வாரே.

அருஞ்சொற் பொருள்:

பணை - மூங்கில், பருமணி - பெரிய மணிகள் (முத்து). கவிகை- வண் கொற்றக் குடை, பணிகிலர் - தொழாதவர்.

இலக்கணக் குறிப்பு:

பருமணி - பண்புத்தொகை, கவிகை தொழிலாகுபெயர், மலரடி - உவமையாகு பெயர், வருபுனல், தருகவிகை - வினைத்தொகைகள்.

வினாக்கள்:

1 நந்திக் கலம்பகம் தோன்றிய வரலாற்றைக் கூறுக.
2. நந்திவர்மனின் தமிழ்ப்பற்றை விளக்குக.
3. நந்திவர்மனின் வீரம் எவ்வாறு விளக்கப்பட்டுள்ளது?
4. காவிரி வள நாட்டின் சிறப்பைக் கூறுக.

இ. முத்துக் குமாரசாமி பிள்ளைத் தமிழ்

[குமர குருபரர்]

வைத்தீஸ்வரன் கோவிலில் வீற்றிருக்கும் முருகப் பெருமானின் மீது குமாகுருபரரால்பாடப்பட்டது முத்துக் குமாரசாமிப் பிள்ளைத் தமிழ். நெல்லை மாவட்டத்து ஸ்ரீவைகுண்டத்துக்கு அண்மையில் உள்ள ஸ்ரீகைலாயம் என்னும் ஊரில் பிறந்துஇறைவனருளால் கவிமழை பொழிந்த அருளாளர் குமர குருபர அடிகள். கந்தர் கலிவெண்பா, மீனாட்சி அம்மை பிள்ளைத் தமிழ், மதுரைக் கலம்பகம், திருவாரூர் நான்மணி மாலை, சிதம்பர மும்மணிக்கோவை, சிதம்பரச் செய்யுட் கோவை முதலியனவாய பல நூல்களைக் குமர குருபரர் இயற்றியுள்ளார். பிள்ளைத் தமிழ் என்பது பிரபந்த வகைகளுள் ஒன்று. குமர குருபரரின் காலம் பதினேழாம் நூற்றாண்டு.

முத்தப் பருவம்

கலைப்பால் நிறைந்த முதுக்குறைவிற்
கல்விச் செல்வர் கேள்விநலங்
கனியக் கனிய அமுதூறும்
கடவுள் மறையும் முதற்சங்கத்
தலைப்பா வலர் தீஞ் சுவைக்கனியும்
தண்தேன் நறையும் வடித்தெடுத்த
சாரங் கனிந்தூற் றிருந்தபசுந்
தமிழும் நாறத் தடங்கரைகொல்

அலைப்பாய் புனல்தெண் கடல்வைப்பும்
அகிலாண் டமும்பன் முறையின்றும்
அழகு முதிர முதிராஎன்
அம்மை யமுது கூற்கொண்ட
முலைப்பால் நாறுஞ் செங்கனிவாய்
முத்தம் தருக முத்தமே
மும்மைத் தமிழ்தேர் கந்தபுரி
முருகா முத்தம் தருகவே.

இலக்கணக் குறிப்பு :

கல்விச் செல்வம் - இருபெயரொட்டுப்பண்புத் தொகை, கனி யக் கனிய - அடுக்குத் தொடர், தீஞ்சுவை - உரிச்சொற்றொடர், தண்தேன், பசுந்தமிழ், தெண்கடல், செங்கனி, மும்மைத்தமிழ், பண்புத்தொகைகள், செங்கனிவாய் - உவமைத்தொகை, முதிரா - ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம், தருக - வியங்கோள்வினை முற்று, அகில + அண்டம் - அகிலாண்டம்,

வினாக்கள்:

1. பிள்ளைத் தமிழின் இலக்கணத்தைக் கூறுக,
2. கந்தபுரி முருகன் எவ்வாறு பாராட்டப்பட்டுளான் ?

ஈ. குற்றாலக் குறவஞ்சி

தமிழ் நாடக நூல்களுள் ஒன்றாகத் திகழ்வது குற்றாலக் குறவஞ்சி. தென்காசியையடுத்த மேலகரத்தில் வாழ்ந்த திரிகூடராசப்பக் கவிராயர். இக்குறவஞ்சியைப்பாடி மதுரையை ஆண்ட முத்து விஜய சொக்கலிங்க நாயக்கரிடம் குறவஞ்சி மேடு என்ற ஊரைப் பரிசாகப் பெற்றார். சந்த அமைப்புக்களோடு அமைந்த இந்நூலே குறவஞ்சி நூல்க ளின் மேல் சட்டமாகும்.

வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும்
மந்திசிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்
கானவர்கள் விழியெறிந்து வானவரை அழைப்பார்
ககனசித்தர் வந்துவந்து காயசித்தி விளைப்பார்
தேனருவித் திரையெழும்பி வானின்வழி ஒழுகும்
செங்கதிரோன் பரிக்காலும் தேர்க்காலும் ஒழுகும்
கூனலிளம் பிறைமுடித்த வேணியலங் காரர்
குற்றாலத் திரிகூட மலையெங்கள் மலையே.

அருஞ்சொற் பொருள்:

மந்தி - பெண்குரங்கு, கவி - ஆண் குரங்கு, ககனம் - காடு, சித்தர் - சித்துக்களில் வல்லவர், பரி - குதிரை. வேணி - சடைமுடி

இலக்கணக் குறிப்பு:

கனி கொடுத்து - இரண்டாம் வேற்றுமைத்தொகை, வந்து வந்து - அடுக்குத் தொடர், இளம்பிறை - பண்புத்தொகை, சிந்து கனி - வினைத்தொகை.

வினா:

திரிகூடமலையின் சிறப்பைக் கூறுக

5. வழிபாட்டுப் பாடல்கள்

அ. திருவாசகம் — திருவெம்பாவை

[மாணிக்கவாசகர்]

திருவாசகம் என்ற சொல்லுக்கு அழகிய சொல் என்று கூறுவர். அருளாகிய திருவை வடிவமாகக் கொண்ட சொல் என்றும், அழகியதெய்வத்தன்மை வாய்ந்தசொற்களாலாகிய செய்யுள் நூல் என்றும் பொருள் கூறுவதும் உண்டு. சைவ சமயக் குரவர் நால்வருள் மாணிக்கவாசகர் அருளிச் செய்த பக்திப் பாடல்களைச் சைவ மரபு திருவாசகம் என்றழைக்கும் திருவெம்பாவை. அத்திருவாசகத்து ஒரு பகுதி. மணி வாசகப் பெருந்தகையார் வையையாற்றங்கரையிலிருக்கும்

திருவாதவூரிற் பிறந்தவர். அரிமர்த்தன பாண்டியனின் அமைச்சராக இருந்த காலத்து அரசுக்காகக் குதிரை வாங்கச் சென்றபோது திருப்பெருந்துறையில் சிவபெருமான் தம் அடியவர்க்கு அருளுரை வழங்குதல் கண்டு அவண் இறைவனின் திருக்குறிப்பின் வண்ணம் திருக்கோயில் எழுப்பியவராய் மன்னன் பணி மறந்தார். பாண்டியன் ஈந்த தண்டனை இறைவன் பால் அன்பை மிக்குறச் செய்தது. மாணிக்கவாசகர் காலம் நான்காம் நூற்றுண்டென்பர். திருவாசகத்தைப் படித்த மேனுட்டறிஞர் ஜி. யு. போப் அவர்கள் "திருவாசகம் உள்ளம் உருக்கும் ஒரு தனிச் செந்நூல்" என்று பாராட்டிப் படித்து ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார். திருவெம்பாவை மார்கழித் திங்கள் விடியற்காலையில் மகளிர் ஒருங்குகூடி நீராடச் செல்கையில் ஒருவரை நோக்கி ஒருவர் பாடுவது போன்று அமைந்திருக்குப் செய்யுட் பகுதி. ஒவ்வொரு பாட்டும் எம்பாவாய் என்று முடிதலால் திருஎம்பாவை என அழைக்கப்பெற்றது. வைணவத்துள் இது போன்றே ஆண்டாள் நாய்ச்சியார் அருளிய திருப்பாவை இருப்பதைக் காணலாம்

திருவெம்பாவை

முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானுகப் பெற்றவுன் சீரடியோம்
உன்னடியார் தாள் பணிவோ மாங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே யெங்கணவர் ஆவா ரவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே யெமக்கெங்கோ னல்குதியேல்
என்ன குறையு மிலோ மேலோ ரெம்பாவாய்.

அருஞ்சொற் பொருள்:

பிரானுக-தலைவனுக, பாங்கு-உரிமை, தொழும்பு - அடிமை, எம் பாவாய் - எம்முடைய பாவை போலும் பெண்ணே.

இலக்கணக் குறிப்பு :

பழம் பொருள் - பண்புத்தொகை, பணிவோம், செய்வோம் - தன்மைப் பன்மை வினைமுற்று.

வினாக்கள் :

1. திருவாசகம் என்ற தொடருக்குப் பொருள் கூறுக.
2. மாணிக்க வாசகரைப் பற்றி நீ அறிவது யாது ?
3. திருவாசகத்தின் சிறப்பைக் கூறுக.
4. திருவெம்பாவையாவது யாது ?
5. பாவைப் பெண் பரம்பொருளை விளித்துக் கூறியது யாது ?

ஆ. நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்

(முதல் திருமொழி — குலசேகராழ்வார்)

திருமாலின் திருவடி போற்றும் வைணவ அடியவர்களை ஆழ்வார்கள் என்பர். ஆழ்வார்கள் பன்னிருவரும் இயற்றிய நான்காயிரம் பாடல்களையும் சேர்த்த தொகுப்பை நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் என்பர். சைவ மரபில் நந்தனாரை யொத்து வைணவ மரபு குலசேகர ஆழ்வாரைத் திருநாளைப் போவார் என்றழைக்கும். குலசேகரர் எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்.

தூராத மனக்காதல் தொண்டர் தங்கள்
குழாம்குழுமித் திருப்புகழ்கள் பலவும் பாடி
ஆராத மனக்களிப்போ டழுத கண்ணீர்
மழைசோர நினைந்துருகி ஏத்தி நாளும்
சீரார்ந்த முழவோசை பரவை காட்டும்
திருவரங்கத் தரவணையில் பள்ளி கொள்ளும்
போராழி யம்மானைக் கண்டு துள்ளிப்
பூதலத்தில் என்றுகொலோ புரளும்நாளே.

அருஞ்சொற் பொருள் :

தூராத - தூர்க்கமுடியாத; குழுமி - கூடி; மழைசோர - மழைபோல் பெருகிவர; சீர்ஆர்ந்த-சிறந்த; முழவு-மத்தளம்.

இலக்கணக் குறிப்பு :

அரவு + அணை - அரவணை, இரு பெயரொட்டுப் பண்புத் தொகை, பெருமை+ஆழி - பேராழி - பண்புத்தொகை, பூதலம் - இரு பெயரொட்டுப் பண்புத்தொகை, தூராத, ஆராத - எதிர் மறைப் பெயரெச்சங்கள்,

வினா:

குலசேகர ஆழ்வார் திருவரங்கப் பெருமான் பள்ளி கொண் டிருப்பதை எவ்வாறு கூறியுள்ளார் ?

இ. புத்தரைப் போற்றல்

[மணிமேகலை—சீத்தலைச் சாத்தனார்]

சீத்தலைச் சாத்தனார் இயற்றிய மணிமேகலை காப்பியத் தில் 'பாத்திரம் பெற்ற காதை'யில் அமுதசுரபிபாத்திரத்தைப் பெற்ற மணிமேகலை புத்தர் பிரானைப் போற்றுவதாக வருவது இப்பகுதி. சாத்தனார் காலம் கி. பி. இரண்டாம் நூற்றாண் டாகும்.

மாரனை வெல்லும் வீர நின்னடி
தீநெறிக் கடும்பகை கடிந்தோய் நின்னடி
பிறர்க்கறம் முயலும் பெரியோய் நின்னடி
துறக்கம் வேண்டாத் தொல்லோய் நின்னடி
எண்பிறக் கொழிய இறந்தோய் நின்னடி
கண்பிறர்க் களிக்குங் கண்ணோய் நின்னடி
தீமொழிக் கடைத்த செவியோய் நின்னடி
வாய்மொழி சிறந்த நாவோய் நின்னடி
நரகர் துயர்கெட நடப்போய் நின்னடி
உரகர் துயரம் ஒழிப்போய் நின்னடி.

அருஞ்சொற் பொருள்:

மாரன் - அறத்திற்கு எதிரான இச்சைகளை உண்டாக்கும் காமன் என்னும் தேவன், கடிந்தோய் – நீக்கினோய், அடக்கினோய், அழித்தோய். துறக்கம் - சுவர்க்கம், தொல்லோய்-பழமையோய், எண் பிறக்கு ஒழிய - மாந்தர்களுடைய எண்ணங்கள் எட்டாமற் பின்னே கிடக்கும்படி, இறந்தோய் - உயர்ந்தோய், வரம்பு கடந்தோய், உரகர் – நாகர்.

இலக்கணக் குறிப்பு:

தீநெறி, கடும்பகை - பண்புத்தொகைகள், வேண்டா - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.

வினா:

சாத்தனுர் புத்தரை எவ்வாறு போற்றியுள்ளார்?

ஈ. இளங்கோவின் வேண்டுகோள்

[சிலப்பதிகாரம் — இளங்கோவடிகள்]

இளங்கோவடிகள் ஒரு சமணத் துறவி. சிலப்பதிகாரத்தில் பத்தினித் தெய்வமாகிய கண்ணகியை வஞ்சிநகர் கோவிலில் மன்னர் பலரும் வழிபடுகின்றனர்; பத்தினித் தெய்வம் வரமும் தந்தது. வரந்தரு காதையாகிய சிலம்பின் இறுதிக் காதையின் முடிவில் இளங்கோவடிகள் தம் வேண்டுகோளாக ஒன்று விடுகிருர். பதினேழு அடிகள் உள்ள அவ்வேண்டுகோளின் சில அடிகளை இவண் காண்போம். இளங்கோவடிகளின் காலம் இரண்டாம் நூற்ருண்டு.

"பரிவும் இடுக்கணும் பாங்குற நீங்குமின்
தெய்வந் தெளிமின் தெளிந்தோர்ப் பேணுமின்
பொய்யுரை அஞ்சுமின் புறஞ்சொற் போற்றுமின்
ஊனூண் துறமின் உயிர்க்கொலைநீங் குமின்
தானஞ் செய்மின் தவம்பல தாங்குமின்"

அருஞ்சொற் பொருள்:

பரிவு – அன்பு, இரக்கம், இடுக்கண் – துன்பம், இடையூறு, பாங்குற – நன்மையுற, புறஞ்சொல் – காணுவிடத்துப் பழி கூறும் சொல், ஊனூண் – புலால் உணவு, துறமின் – விடுக.

இலக்கணக் குறிப்பு:

தெளிந்தோர்–தெரிநிலை வினையாலணையும் பெயர். பொய்யுரை, ஊனூண் – இரு பெயரொட்டுப் பண்புத்தொகைகள்.

வினா:

இளங்கோவடிகள் விடுக்கும் வேண்டுகோள்கள் யாவை?

உ. தேம்பாவணி

கிறித்தவசமயப்பெரும்புலவரான வீரமாமுனிவர் இயற்றியது தேம்பாவணி என்னும் அருந்தமிழ்க் காப்பியம். கான்ஸ்டன்ட் டைன் ஜோசப் பெஸ்கி என்ற தமது பெயரையே வீரமாமுனிவர் எனத் தமிழாக்கிக் கொண்ட தன்மையிலிருந்தே புலவரின் தமிழ் நெஞ்சை உணரலாம். தேம்பாவணி என்ற சொல்லுக்குத் தேன் போன்ற பாடல்களாகிய மாலை என்பது பொருள். இது கிறித்து நாதரின் தந்தையாகிய சூசைமுனிவரின் வரலாற்றைப் புகலும். இத்தாலி நாட்டைச் சேர்ந்த வீரமாமுனிவர் தேம்பாவணியைத் தவிர சதுரகராதி, தொன்னூல் விளக்கம், வேதியர் விளக்கம், வேதியர் ஒழுக்கம், வேத விளக்கம், திருக்காவலூர்க் கலம்பகம் முதலிய பிற தமிழ் நூல்களையும் இயற்றியுள்ளார். இன்றைய தமிழ் எழுத்து முறையில் வழங்கும் எகர ஏகார வேறுபாடு போன்ற தமிழ் எழுத்துச் சீர்திருத்தங்களைக் கொணர்ந்தவர் இவரே.

தேறுந் தயையின் முனிவோய் நீ
சினத்திற் கருள்செய் கனிவோய் நீ
கூறுங் கலையற் றுணர்வோய் நீ
கூறுந் தொனியற் றுரைப்போய் நீ
மாறும் பொருள்யா விலும்நின்றே
மாரு நிலைகொள் மரபோய் நீ
ஈறும் தவிர்ந்துன் புகழ்க்கடலாழ்ந்
தெனக்கே கரைகாட் டருளாயோ!

அருஞ்சொற் பொருள்:

கனிவோய் - கனிந்த உள்ளம் உடையாய், தொனி - ஓசை, ஈறும் தவிர்ந்த - முடிவுமில்லாத.

இலக்கணக் குறிப்பு:

மாரு - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம், புகழ்க்கடல் - உருவகம்.

வினாக்கள்:

1 தேம்பாவணி என்ற சொல்லின் பொருள் யாது?

2. தேம்பாவணி ஆசிரியர் யார்? இவரது தமிழ்ப் பற்றை எவ்வாறு உணரலாம்?

3 வீரமாமுனிவர் எழுதிய நூல்கள் யாவை?

4. வீரமாமுனிவர் கருத்தரை எவ்வாறு போற்றியுள்ளார்?

ஊ. சீறாப் புராணம்

சீறாப் புராணம் இசுலாமியச் சமயத்தவரான உமறுப் புலவர் அவர்கள் இயற்றித் தந்த தீந்தமிழ்க் காப்பியம். முகம்மது நபியின் வரலாற்றை இந்நூல் சிறப்புறக் கூறுகிறது சீறு என்னும் அரபுச் சொல் வரலாறு என்ற பொருள்படும் சிறப்பான வரலாறாகிய நபிகள் நாயகத்தின் வரலாற்றை

நவில்வதால் சீருப் புராணம் என்றாயிற்று. எட்டயபுரத்துச் சேகு முதலியாரின் மகனாராகப் பிறந்த உமறுப் புலவர்கடிகை முத்துப் புலவர் என்பவரிடம் தமிழ் கற்றார். சீதக்காதி வள்ளலின் அமைச்சரான அப்துல் காசிம் இவரைப் புரந்து போற்றினர்.

" திருவினும் திருவாய்ப் பொருளினும் பொருளாய்த்
தெளிவினும் தெளிவதாய்ச் சிறந்த
மருவினும் மருவாய் அணுவினுக் கணுவாய்
மதித்திடாப் பேரொளி யனைத்தும்
பொருவினும் பொருவா வடிவினும் வடிவாய்ப்
பூதலத் துறைந்தபல் லுயிரின்
கருவினும் கருவாய்ப் பெருந்தலம் புரந்த
கருத்தனைப் பொருத்துதல் கருத்தே !

அருஞ்சொற் பொருள்:

திரு - மேலாம் பொருள், சிறப்பு, பொருள் - செல்வம், தெளிவு - தெளிந்த மெய்யறிவு, மரு - மணம், பொருவினும் - ஒன்று சேர்ந்தாலும், பொருவா - ஒப்பாகாத, கருத்தன் - முதல வனாகிய இறைவன், கருத்தாவாகிய இறைவன், பொருத்துதல் - எண்ணி வழிபடுதல்,

இலக்கணக் குறிப்பு:

பூதலம் - இரு பெயரொட்டுப் பண்புத் தொகை, பேரொளி, பெருந்தலம் - பண்புத் தொகைகள், பொருவா - ஈறுகெட்ட எதிர் மறைப் பெயரெச்சம்.

வினாக்கள்:

1. சீருப் புராணம் பற்றிக் குறிப்பெழுதுக.
2. உமறுப் புலவர் நபிகள் நாயகத்தை எவ்வாறு போற்றியுள்ளார் ?

எ. நீதி நூல்

(வேதநாயகம் பிள்ளை)

மாயூரத்து முன்சீப்பாக இருந்த வேதநாயகம் பிள்ளை சமயக் காழ்ப்பற்ற சமரச நோக்குடையவர் இருபதாம் நூற்றுண்டில் காலத்துக்கேற்ற சீர்திருத்தக் கருத்துக்களைப் பாடியும் எழுதியும் வந்தவர். பிரதாப முதலியார் சத்திரம், சுகுண சுந்தரி கதை, பெண்மதி மாலை, நீதி நூல் முதலியன அவருடைய நூல்கள். வேதநாயகம் பிள்ளையவர்களின் காலம் பத்தொன்பதாம் நூற்றுண்டு.

"கதிரவன் கிரணக் கையால்
கடவுளைத் தொழுவான் புட்கள்
சுதியொடும் ஆடிப்பாடித்
துதிசெய்யும் தருக்கள் எல்லாம்
பொதியலர் தூவிப் போற்றும்
பூதம்தம் தொழில் செய்தேத்தும்
அதிர்சடல் ஒலியால் வாழ்த்தும்
அகமேநீ வாழ்த்தா தென்னே!

அருஞ்சொற் பொருள்:

புட்கள் - பறவைகள், சுதி - சுருதி, துதி செய்யும்-வழிபாடு செய்யும், பொதியலர்-மலர்ந்த அரும்பு, அதிர் கடல் - ஒலிக்கும் கடல், அகம் - மனம்.

இலக்கணக் குறிப்பு:

கிரணக் கை - உருவகம், ஆடிப்பாடி - உம்மைத்தொகை, அலர்தூவி - இரண்டாம் வேற்றுமைத்தொகை, அதிர்கடல் - வினைத்தொகை.

வினா:

வேதநாயகர் தம் நெஞ்சை நோக்கிக் கூறியது யாது?

ஏ. நாட்டு வாழ்த்து

[கவியோகி சுத்தானந்த பாரதியார்]

சிவகங்கையிற் பிறந்த சுத்தானந்த பாரதியார் ஒரு துறவி. தமிழ், வடமொழி, ஆங்கிலம், இந்தி, பிரஞ்சு, தெலுங்கு ஆகிய மொழிகளில் வல்லுநர். தற்காலக் கவிஞர்களில் எண்ணிறந்த கவிதைகளை எழுதிக் குவித்த பெருமை இவருக்கு உண்டு. திருக்குறள் இன்பம், சிலம்புச் செல்வம், திருவருட்பா ஆய்வு உள்ளிட்ட பல நூல்கள், நாடகங்கள் முதலியவற்றையும் எழுதியுள்ளார்

ஓங்குநல் அறிவுச் செல்வம்
உறுதிசெய் வீரச் செல்வம்
தீங்கறு தொண்டுச் செல்வம்
செய்திருத் தொழிலின் செல்வம்
தூங்கறு முயற்சிச் செல்வம்
துகளறு புகழின் செல்வம்
பாங்குற நிலவி இந்தப்
பாரத தேசம் வாழ்க.

இலக்கணக் குறிப்பு:

தீங்கு + அறு = தீங்கறு, அறிவுச் செல்வம், தொண்டுச் செல்வம் முதலியன இரு பெயரொட்டுப் பண்புத் தொகைகள், வாழ்க = வியங்கோள் வினைமுற்று.

வினாக்கள்:

சுத்தானந்தர் பாரத தேசத்தை எவ்வாறு வாழ்த்துகிறார் ?

TB
031(9)
N65
தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம்
131453.
சென்னை-600 008

உரை நடைப் பகுதி

1. திருவள்ளுவர் அருங்கருத்துக்கள்

[பேராசிரியர் டாக்டர் அ. சிதம்பரநாதனுர், எம்.ஏ., பி.எச்டி.]

திருவள்ளுவராற் சிறப்பாகக் கருதப்பட்ட அணியும் நலனும் எவை? அணி என்ற உடனே பொன்னுலும் மணியாலுஞ் செய்யப்பட்ட பல வகைக் கலன்களையே நினைத்தல் இயல்பு. ஆனுல், வள்ளுவர் கருத்துப்படி நோக்குவோமாயின் அக்கலன்களையன்றி வேறுபல கலன்கள் சிறந்தனவுள என்பது புலப்படும்.

"பணிவுடையன் இன்சொல னுதல் ஒருவற்கு
அணியல்ல மற்றுப் பிற"

என்னுங் குறளிற் குறிக்கப்படுங் கலன்கள் பணிவுடைமையும் இன்சொல்லுடைமையும் ஆம். பணியத் தக்காரைக் கண்டுழிப் பணிதல் என்பது மாந்தர்க்கு ஏற்ற அணியாகும்; பணியாது செருக்கித் தருக்கித் திரிவோர் எத்துணைக் கலன்களைப் பூண்டிருப்பாராயினும் அணியுடையராகமாட்டார். பணியத்தக்கார் இன்னுரென்பது மாந்தர்தம்முள் ஆராய்ந்து முடிவு செய்துகொள்ள வேண்டியதொன்று. தாய், தந்தை, அரசன், ஆசிரியர், குரு எனப்படுவார் வணங்கற்குரியர் எனக் கூறப்படுதலுமுண்டு. ஆனுல், இன்சொல் கூறத் தக்காரைக் கண்டு கூறவேண்டும் என்பது நியதியன்று. இன்சொல் யாவர்மாட்டும் வழங்குவதற்குரியது. எனவே, பணியத் தக்கார்மாட்டுப் பணிவுடையரா யிருத்தலும், யாவர் மாட்டுங் கூறும் இன்சொலுடையராயிருத்தலும் மாந்தர்க்குச் சிறந்த அணிகள் என்ற வள்ளுவர் கருத்தைக் காண்க.

இனி, கண்ணிலா மாந்தர் நலனற்றவர் எனின், கண்ணோட்டம் இல்லாத கண்கள் அணிகலம் அற்றவையெனப் படும். இவ்வழியே நோக்கின், கண்ணோட்டம் இல்லாத மாந்தர் எத்துணைப் பூணாரம் பூட்டினும் அணியுடையராக மாட்டார்என்பது பெறப்படும். அதுபற்றியே, திருவள்ளுவர் "கண்ணிற்கு அணிகலம் கண்ணோட்டம்" எனக் கூறினார். தம்மொடு பழகினவர் கண்முன் நின்று கூறும் மொழிகளை மறுக்க மாட்டாமையே கண்ணோட்டம் எனப்படும். அக்கண்ணோட்டம் என்பதொன்று இருப்பதால்தான் உலகு நடைபெறுகின்றது. ஆயினும், அது அளவோடு இசைந்ததாக இருக்கவேண்டும். கருமங் கெட்டுப் போகாதவாறு அளவோடு செலுத்தப்படும் கண்ணோட்டமே மாந்தர்க்குரிய சிறந்த அணிகளுள் ஒன்றாகத் திருவள்ளுவராற் கருதப்பட்டது.

கண்ணோட்டம் இல்லாதவர் அணியுடையராகார் என்பதுபோலவே நாணுடையரல்லாரும் அணியுடையரல்லர் என்க. அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை என்ற ஐம்பெரும் பண்புகளை உடையவரே சான்றோர் எனப் படுவர். அச்சான்றோர்க்குச் சிறப்பாக அணிசெய்வன கண்ணோட்டமும் நாணுடைமையும் ஆம். "அணியன்றோ நாணுடைமை சான்றோர்க்கு" என்ற குறட் பகுதியை நோக்குக. இழிந்த கருமங் காரணமாக, பழிபாவங் காரணமாகப் பிறக்கும் நாணே சான்றோர்க்கு அழகு செய்தலின், அதனையும் அணி என்றார் திருவள்ளுவர். உயிர் உடம்போடு கூடியல்லாமற் பயன் அடையமாட்டாதவாறு போலச் சால்பு நாணோடு கூடியல்லாமற் பயனடையாது. ஆதலின், நாணுடைமையின் சிறப்புப் பெறப்படும். அந்நாணுடைமையே மாந்தர்க்குச் சிறந்த அணிகலனாகக் கருதப்பட்டது. டை,

காலர் முதலானவற்ருல் தம்மை அழகு படுத்திக் கொள் வாரிடம் நாணுடைமையின்றேல், அவையெல்லாம் பிணி களாமேயன்றி அணிகள் ஆகா என்பது இதனுன் அறியப் படும். இதுபற்றியே,

"குணநலஞ் சான்ருேர் நலனே ; பிற நலம்
எந்நலத் துள்ளதூஉ மன்று"

என்ருர் திருவள்ளுவர். நல்லனவாய இனங்களின் அழகே சான்ருேரது அழகு. அஃதில்வழி, அவர்தம் உடலழகும் உடையழகும் அழகெனற்பால அல்ல என்க. நல்ல குணங் கள் எனற்பால எல்லாம் சான்ருேரிடத்து ஒருதலையாக இருக்க வேண்டும் என்பது "கடனென்ப நல்லவையெல் லாம்" என்னுங் குறட் பகுதியான் அறியப்படும். அக் குணங்களெல்லாம் பொருந்தியிருந்தால்தான் சான்ருேர் அழகுடையர் எனப்படுவர். மாந்தரெல்லாம் சான்ருேர் ஆதற்கு உரியராகலானும், சான்ருேர் ஆக முயலுதல் அவர் தம் கடமையாகலானும், மாந்தரெல்லாம் குணநலன்களை நலனுகப்பெற முயலுதல் வேண்டும். குணநலம் இல்லாத விடத்து எழினலம் சிறக்காது என்க. "உருவின் மிக்க தோர் உடமபது பெறுதலு மரிதே" என்பது உண்மையே ஆயினும், அதனினும் அரிது குணநலன்கள் எல்லாம்வாய்த் தல் அரியதனுள் அரிதாய் இருக்கும் ஒன்றே மிகச் சிறந்த அணியெனப்படுமாகலின், குணநலன் மாந்தர்க்கு மிகச் சிறந்த அணியாதல் பெறப்படும். இக் கருத்தினை உட் கொண்டே பிறிதோரிடத்தும் வள்ளுவர்

"நுண்மா ணுழைபுல மில்லா னெழில்நலம்
மண்மான் புனைபாவை யற்று"

எனக் கூறியுள்ளார். பொருள்களை விரைவிற் கண்டு அவற்றை மறவாதிருக்கக்கூடிய நுண்ணிய நூலறிவு இல் லாத மாந்தர் எவ்வளவு வனப்பும் எழிலும் உடையரேயாயி னும், உண்மையில் நலனுடையர் ஆகார் என்பது ஈண் டுச் சொல்லப்பட்டமை யுணர்க. மாட்சிமைப்பட மண்ணுற்

செய்யப்பட்ட பதுமையினது வனப்பு உண்மையின்பத்தை அளிக்கமாட்டாதவாறுபோல உறுப்பு நலனே பெற்று நுழை புலம் அற்றிருக்கின்ருருடைய நலன் மெய்யாக இன்பம் அளிக்கமாட்டாது என்று வள்ளுவனுர் வைத்துரைத்தது காண்க.

எனவே, பணிவுடைமை, இன்சொல்லுடைமை, கண்ணேட்டமுடைமை, நாணுடைமை, குணநலமுடைமை, நுண்மாணுழைபுலமுடைமை ஆகிய இவையும் இவைபோல்வனவுமே அணிநலன் எனத் தக்கன என்பதும், பொன்னுலும் மணியாலும் ஆய அணிகள் அணிகளாகா என்பதும், உறுப்பு நலன் நலன் எனத் தக்கதன்று என்பதும் வள்ளுவர் வாய்மொழிகொண்டு அறியப்படும்.

உண்டுடுத்து உறங்குவதோடு வாழ்க்கை முற்றுவதில்லை யென்றும், விருப்பம் செயலறிவுகளால் வாழ்க்கை மதிக்கப்படும் என்றும் உலகிற்பெரியார் பலர் கூறிப் போயுள்ளனர். பெயிலி (Bailey) என்னும் புலவர் ஒருவர் உரைத்திருப்பதைக் கீழே காண்டல் கூடும். அவ்வுறுதி மொழி "செயலால் வாழ்வது; ஆண்டினுல் அன்று. உள்ளத்தால் வாழ்வது; உயிர்ப்பினுல் அன்று. உணர்ச்சியால் வாழ்வது, நாழிகையால் அன்று" என்பதாகும். இதனுல், அரும்பெருந் தகைமையை உடையவன், உள்ளத்தால் உயர்பொருளை உள்ளுபவன், சிறந்தவை செய்பவன் வாழ்கிருன் எனற்குரியான் என்பது தேற்றம். இவ்வுண்மையினை நம் அரும்பெருந் திருவள்ளுவர் தமது நூலில் அழகுடன் திகழுமாறு அமைத்துத் தந்துள்ளார். உணர்ச்சி, சிந்தை, செயலாகியவற்ருல் வாழ்க்கை நோக்கப்படும் என்னும் அவரது கருத்து பல இயற்களிற் பரவி வருவதைக் காணலாம்.

அன்பெனும் யாக்கையகத்துறுப்பு இல்லாதவர்க்குப் புறத்துறுப்பாகிய மெய் வாய் கண் மூக்குச் செவியும், பொன் வெள்ளி முதலானவையும் எப்பயனைத் தரும் என வினவுகின்றார் வள்ளுவனார். தாய் தந்தை மனைவி மக்கள் முதலான தொடர்புடையார் மாட்டு நிகழுங் காதலின்றேல் நட்பேது, நாட்டுப்பற்றேது, மொழிப்பற்றேது ? மன்பதைக் குத் தரவேண்டிய அருட்பொருள்தான் ஏது ? உயிர்க்கு உறுதிதான் ஏது ? அன்பு என்னும் நெகிழ்ச்சி உண்டா யின், ஒருவர் வாழ்கிறார், இல்லையேல் அல்லர் என்பதே வள்ளுவனார் கருத்தென்பதைப்

"புறத்துறுப் பெல்லாம் எவன்செய்யும் யாக்கை
அகத்துறுப்பு அன்பி லவர்க்கு"

என்ற அவர்தம் உரை துணையாக அறிக. அன்பெனும் உணர்ச்சியோடு கண்ணோட்டம் என்பதும் ஒருவர்பால் இருத்தல் வேண்டும். பழகினவர்கள் குற்றஞ் செய்தவழி யும், துன்புற்றவிடத்தும், இயல்பாக அவர்கள்பால் கண் ணோடிக் குற்றத்தைப் பொறுத்தலும் துன்பத்தைக் களைத லும் வாழ்கின்றார் இயல்பு. கண்ணிற்கு அணிகலமாகிய கண்ணோட்டமில்லாதார் கண்ணுடையார் எனப்படார். அவர்தங் கண்ணுக்கும் மரக்கணுவுக்கும் பெரியதோர் வேற்றுமையில்லை. மரம் துன்புறுவோரைக் கண்டு இளகு தலில்லாதவாறுபோல ஒருவர் வருந்துவோரது துயரைக் கண்டு இரங்காராயின், மரம் பெயருக்கே கண் (கணு) பெற்றிருப்பதுபோல அவர் பெயருக்கே கண் பெற்றிருக் கின்றார் என்றும், கண்ணின் தொழிலைக் கண் செய்யாத தால் அவர் கண்ணிருந்தும் குருடரே என்றும், பிறவிக் குரு டரல்லா இக்குருடர் மனிதராக வாழ்கின்றார் என்றல் வாய் மையாகாது என்றும், அன்னார் மரத்தையேயொத்தா ரென்றும் வள்ளுவர் கருதினாரென்பதை

"மண்ணோ டியைந்த மரத்தனையர் கண்ணோ
டியைந்து கண்ணோடா தவர்"

என்னும் வாய்மொழியான் உணர்க. அன்புங் கண்ணோட் டமும் உடைய ஒருவர் நாணுடையவராகவும் இருத்தல் வேண்டும். நாண் என்றவுடன் மகளிர்தம் நற்பண்புகளுள் ஒன்றை நினைத்தல் இயல்பு. ஆனால், ஈண்டுச் சுட்டப்படும் நாண் பழிபாவத்திற்கு அஞ்சுதலால்ஏற்படும் ஒருணர்ச்சியே யாம். அஃது இருபாலர்க்கும் வேண்டிய தொன்றே. பழி யொடு வருவதானால் உலகு கையகப் படுதலாயிருப்பினும் வேண்டா என்று விளம்பத்தக்க விழுமிய விறல் படைத்த வருக்கே வாழ்வதாகச் சொல்லிக்கொள்ள ஒருரிமை உண்டு. அஃதில்லாதவருக்கும் மரப்பாவைக்கும் பெரிதும்வேற்றுமை யில்லை. உயிரில்லா மரப்பாவை ஆட்டப்பட்டு ஆடி உயி ருடையதென நினைக்குமாறு மக்களை எவ்வாறு மருட்டு கின்றதோ, அவ்வாறே நாண் என்னும் அருங்குணமில்லாத வர் நடமாடுவதுபோல் நடமாடி உயிருள்ளவர்போலப் பிறரை மயக்குகின்றார். நாணுணர்ச்சியற்ற இவர்வாழ்கின்று ரல்லர், இக்கருத்தை

"நாணகத் தில்லார் இயக்கம். மரப்பாவை
நாணால் உயிர்மருட்டி யற்று"

என்ற அருங்குறளால் அறிக. எனவே, அன்பு, கண்ணோட் டம், நாண் என்றிவ் வுணர்ச்சிகளான் வள்ளுவரும் வாழ்க் கையை மதிப்பிடுதலைக் காண்க.

வினாக்கள்:

1. திருவள்ளுவரால் சிறப்பாகக் கருதப்பட்ட அணிகள் யாவை?

2. கண்ணோட்டமாவது யாது? அதன் சிறப்பைக் கூறுக.

3. நாணத்தின் சிறப்பினைக் கூறுக

4. எவர் சான்றோர்?

5. குணநலம் சிறந்த அணியாதல் எவ்வாறு பெறப்படும்?

6. 'பெயிலி' என்னும் புலவர் உரைத்திருப்பது யாது?

7. அன்பின் சிறப்பைக் கூறுக.

8. அன்பெனும் உணர்ச்சியோடு கண்ணோட்டம் என்பதும் இருத்தல் வேண்டும் என்பதை விளக்குக.

9. நாணமாவது யாது?

வாக்கியத்தில் அமைத் தெழுதுக.

கண்ணோட்டம், சான்றோர், உடலழகும் உடையழகும், நுழைபுலம், கண்ணுக்கு அணிகலம் கண்ணிருந்தும் குருடர், பழிபாவம்.

—::—

2. கூலியாக இருப்பதன் துன்பம்

டிரான்ஸ்வாலிலும் ஆரஞ்சு பிரீ ஸ்டேட்டிலும் இருந்த இந்தியரின் நிலைமையைக் குறித்து விரிவாகக் கூறுவதற்கு இது இடமன்று. அதைக் குறித்து விரிவாக அறிந்துகொள்ள விருப்பம் உடையவர்கள் நான் எழுதியிருக்கும் 'தென்னுப்பிரிக்க சத்தியாக்கிரகத்தின் வரலாறு' என்னும் நூலில் பார்க்குமாறு கூறுகிறேன். இருந்த போதிலும் அதைக்குறித்து இங்கே சுருக்கமாகக் கூற வேண்டியது இன்றியமையாதது.

ஆரஞ்சு பிரீ ஸ்டேட்டில் 1858-ல் செய்யப்பட்ட சிறப்புச் சட்டத்தின்படி, இந்தியருக்கு முன்பு இருந்த உரிமைகள் எல்லாம் பறிபோய் விட்டன. அங்கே இந்தியர் இருக்க விரும்பினுல் உணவு விடுதிகளில் வேலைக்காரர்களாக மாத்திரமே இருந்து வர முடியும். இல்லாவிடில் இது போன்ற கீழ்த்தரமான ஊழியம் செய்து கொண்டிருக்க வேண்டும். குறைந்த நட்ட ஈடு கொடுத்து வணிகர்கள் விரட்டப்பட்டு விட்டனர். விண்ணப்பங்களும், மகஜர்களும் அனுப்பினுர்கள்; ஒன்றும் பயனில்லை.

டிரான்ஸ்வாலில் 1885-ல் கடுமையான சட்டம் ஒன்றை இயற்றினர். 1886-ல் இச்சட்டத்தில் சிறுமாறுதல்களைச் செய்தார்கள். திருத்தப்பட்ட அச்சட்டத்தின்படி இந்தியர் எல்லோரும் டிரான்ஸ்வாலுக்குள் போவதற்குக் கட்டணமாக ஆளுக்கு மூன்று பவுன்கள் தலைவரி செலுத்தவேண்டும். அவர்களுக்கென்று ஒதுக்கப்படும் பகுதிகளில் அல்லாமல் அவர்கள் வேறு எங்குமே சொந்தமாக நிலம் வைத்துக் கொள்ளக் கூடாது. ஆனுல், அனுபவத்தில் அந்த ஒதுக்கப்பட்ட பகுதிகளிலும் நிலம் அவர்களுக்குச் சொந்தமாவதில்லை. இந்தியருக்குவாக்குரிமை இல்லை. இவையாவும் ஆசியாக்காரர்களுக்கு

என்று செய்யப்பட்டசிறப்புச் சட்டத்தினுல் நடந்தன. கறுப்பர்களுக்கு என்று இயற்றப்பட்ட சட்டங்களும் அவர்கள் விஷயத்தில் அமுல் செய்யப்பட்டன. பின்னுல் கூறிய இச் சட்டங்களின் படி, இந்தியர் பொது நடைபாதைகளில் நடக்கக் கூடாது; அனுமதிச் சீட்டு இல்லாமல் இரவு ஒன்பது மணிக்குப் பிறகு வீட்டைவிட்டு வெளியே வரவும் கூடாது. இந்தக் கடைசி விதி, இந்தியரைப் பொறுத்த வரையில், சூழ்நிலைக்கு ஏற்றுற்போல் பயன் படுத்தப் பட்டு வந்தது. தங்களை, 'அரபுக்கள்' என்று சொல்லிக் கொண்டவர்களுக்குச் சலுகை காட்டுவதற்காக இந்த விதியிலிருந்து அவர்களுக்கு விலக்களித்தார்கள். இவ்விதம் அளிக்கப்பட்ட விதிவிலக்கும் இயற்கையாகவே போலீசாரின்விருப்பத்தைப் பொறுத்ததாகத்தான் இருந்து வந்தது.

அவ்விரு சட்டங்களினுலும் ஏற்பட்ட இன்னல்களை நான் நுகர வேண்டியிருந்தது. நான் அடிக்கடி இரவில் திரு. கோட்சுடன் உலாவ வெளியே போவேன். பெரும்பான்மையும் இரவு பத்து மணிக்கு முன்னுல் நாங்கள் வீடு திரும்புவதில்லை. போலிசார் என்னைக் கைது செய்துவிட்டால் என்ன செய்வது? இவ்விஷயத்தில் என்னைவிட திரு. கோட்சுக்குத்தான் அதிகக்கவலை. தம்முடைய நீக்ரோ வேலைக்காரர்களுக்கு அவர் அனுமதிச்சீட்டுக் கொடுக்கவேண்டியிருந்தது. ஆனுல் எனக்கும அவர் எப்படிச் சீட்டுக் கொடுப்பது? வேலைக்காரனுக்குத்தான் முதலாளி இத்தகைய சீட்டுக் கொடுக்கலாம், எனக்கும் ஒரு சீட்டு வேண்டும் என்று கேட்டிருந்தால், அப்படிச் சீட்டுக் கொடுக்க திரு. கோட்சு தயாராக இருந்தாலும், அவரால் கொடுக்க முடியாது. ஏனெனில் அவ்விதம் கொடுப்பது மோசடியாகக் கருதப்பட்டிருக்கும்.

ஆகவே, திரு. கோட்சோ, அவருடைய நண்பர் ஒருவரோ, என்னை அரசாங்க அட்டார்னியான டாக்டர் கிராசே என்பவரிடம் அழைத்துச் சென்றனர். நாங்கள் இருவரும்

ஒரே இடத்தில் பாரிஸ்டரானவர்கள் என்பது தெரியவந்தது. இரவு 9-மணிக்குப் பிறகு வீட்டிற்கு வெளியே இருப்பதற்கு எனக்கு அனுமதிச் சீட்டு வேண்டியிருக்கிறது என்ற செய்தி அவருக்கு அதிக வருத்தத்தை அளித்தது. எனக்கு அவர் தமது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொண்டார். எனக்கு அனுமதிச் சீட்டுக் கொடுப்பதற்கு உத்தரவிடுவதற்குப் பதிலாக, எந்த நேரத்திலும் போலீசாரின் குறுக்கீடு இல்லாமல் நான் வெளியில் நடமாடுவதற்கு எனக்கு உரிமை அளித்து, ஒரு கடிதத்தை எழுதிக் கொடுத்தார். நான் வெளியில் செல்லும் போதெல்லாம் இக் கடிதத்தை எப்பொழுதும் என்னிடம் வைத்திருந்தேன். உண்மையில் அக்கடிதத்தைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டிய வாய்ப்பே எனக்கு ஏற்படவில்லை என்றால் அது தற்செயலேயன்றி வேறில்லை.

டாக்டர் கிரேசே என்னைத் தம் வீட்டிற்கு அழைத்தார். நாங்கள் நண்பர்கள் ஆகி விட்டோம் என்றும் சொல்லலாம். நான் எப்போழுதாவது அவர் வீட்டுற்குப் போவேன். ஜோகன்ஸ்பர்க்கில் பப்ளிக் பிராசிக்கூட்டராக இருந்த அவருடைய புகழ் வாய்ந்த சகோதரர், அவர்மூலம் எனக்கு அறிமுகம் ஆனார். போயர் சண்டையின்போது ஓர் ஆங்கில அதிகாரியைக் கொல்ல அவர் சதி செய்தார் என்று இராணுவ நீதி மன்றத்தில் அவர் மீது வழக்குத் தொடரப்பட்டு, அவர் ஏழாண்டுச் சிறைத் தண்டனையை அடைந்தார். அவர்வழக்கறிஞர் தொழில்செய்யக்கூடாது என்று நீதிபதிகளும் அவரைத் தடுத்து விட்டனர். ஆனால் சண்டை முடிந்ததும் அவரை விடுதலை செய்து விட்டனர். டிரான்ஸ்வாலில் வழக்கறிஞராக இருக்க அவரைக் கௌரவமாக அனுமதித்து விடவே, வழக்கறிஞர் தொழிலை நடத்தி வரலானார்.

இத்தொடர்புகள் பின்னால் என்னுடைய அரசியல் வாழ்க்கைக்கு உதவியாக இருந்ததோடு, என் பெரும்பகுதி வேலைகளையும் எளிதாக்கி விட்டன.

நடைபாதையில் நடப்பது சம்பந்தமாக இருந்த சட்ட விதிகள் எனக்கு இன்னும் அதிக துன்பத்தைக் கொடுத்தன. நான் எப்பொழுதுமே உலாவுவதற்குப் பிரிசிடெண்டு தெருவழியாக ஒரு மைதானத்திற்குப் போவேன். பிரசிடெண்டு [குடியரசுத் தலைவர்] குரூகரின் வீடு அந்தத் தெருவில்தான் இருந்தது. அது மிகவும் அடக்கமான ஆடம்பரமில்லாத கட்டிடம். அதன் முன்னால் தோட்டமும் இல்லை. பக்கத்தில் இருந்த மற்ற இல்லங்களுக்கும் அதற்கும் வேறுபாடேயில்லை. பிரிட்டோரியாவின் இலட்சாதிபதிகள் பலருடைய வீடுகள் அவர் வீட்டைப் போல் அல்லாமல் அதிக ஆடம்பரமாக இருந்தன. அவைகளைச் சுற்றித் தோட்டங்களும் இருந்தன. குடியரசுத்தலைவர்குரூகரின் எளியவாழ்வுமிகப்புகழ்பெற்றதாகும். அவர் இல்லத்தின் முன்னால் இருந்த போலீஸ் காவலைக் கொண்டே அது முக்கியமான அதிகாரியின் வீடு என்பது தெரியும். நான் எப்பொழுதும் அவ்வீட்டிற்கு எதிரிலுள்ள நடைபாதை வழியாக அங்கிருந்தபோலீஸ் பாராக்காரரைக் கடந்து செல்வது வழக்கம். எந்தவிதமான தடையோ, தகராறோ ஏற்பட்டதே இல்லை.

அங்கே காவலுக்கு இருந்த போலீஸ்காரரை இப்பொழுது அடிக்கடி மாற்றி வந்தார்கள். ஒரு நாள் காவலுக்கு இருந்த போலீஸ்காரர் எனக்குக் கொஞ்சமேனும் எச்சரிக்கை செய்யாமலும், நடைபாதையை விட்டுப் போய் விடும்படிச் சொல்லாமலும் என்னை உதைத்துத் தள்ளி விட்டார். நான் திகைத்துப் போனேன். அவர் இவ்விதம் நடந்து கொண்டதைக் குறித்து அவரிடம் நான் கேட்க முற்படுவதற்கு முன்னால் திரு. கோட்சு சப்தம் போட்டு என்னைக் கூப்பிட்டார். அவர் அச்சமயம் அந்த வழியாகக் குதிரை மீது வந்து, "திரு. காந்தி! நடந்ததையெல்லாம் நான் பார்த்தேன். அந்த ஆள் மீது நீங்கள் வழக்குத் தொடுத்தீர்களானால், அறங்கூறவையில் உங்களுக்காக நான் மகிழ்ச்சி

யுடன் சாட்சி சொல்லுவேன். இவ்வளவு முரட்டுத்தனமாகத் தாக்கப்பட்டதற்காக நான் மிகவும் வருந்துகிறேன் என்றார்.

அதற்கு நான் "நீங்கள் வருந்த வேண்டாம் பாவம், அவருக்கு என்ன தெரியும்? கறுப்பு மனிதர்கள் எல்லோரும் அவருக்கு ஒரே மாதிரிதான். என்னை இப்பொழுது நடத்தியதைப் போலவே அவர் நீக்ரோக்களையும் நடத்துகிறார் என்பதில் ஐயமில்லை. என்னுடைய சொந்தக் குறை எதற்காகவும் நீதி மன்றத்திற்குப் போவதில்லை என்பதை நான் ஒரு விதியாகக் கொண்டிருக்கிறேன். ஆகையால், அவர் மீது வழக்குத் தொடரும் எண்ணமில்லை" என்றேன்.

உடனே, திரு. கோட்சு, "உங்கள் உயரிய பண்புக்கு அது சரி. ஆனால் அது குறித்து மறுபடியும் சிந்தியுங்கள். இப்படிப்பட்டவனுக்கு நாம் பாடம் கற்பிக்க வேண்டும்" என்றார். பின்னர் அந்தப் போலீஸ்காரரிடம் பேசினார்; அவரைக் கண்டித்தார். போலீஸ்காரர் போயர் ஆனபடியால் இருவரும் டச்சு மொழியில் பேசினர். அவர்கள் என்ன பேசினார்கள் என்பது விளங்கவில்லை. ஆனால், அவர் என்னிடம் மன்னிப்பு கேட்டுக் கொண்டார். அப்படிக் கேட்பதற்கு அவசியமே இல்லை. ஏனெனில் அவரை முன்பே நான் மன்னித்து விட்டேன்.

ஆனால், திரும்பவும் அத்தெரு வழியாக நான் போகவே இல்லை. அந்த ஆள் இருந்த இடத்தில் வேறு ஆள் வந்திருக்கக் கூடும். இந்த நிகழ்ச்சியை அறியாமல் புதிதாக இருக்கும் ஆளும் இதேவிதமாய் நடந்துகொண்டு விடக்கூடும். அனாவசியமாக நான் ஏன் இன்னும் ஓர் உதையை வாங்க வேண்டும்? எனவே நான் வேறு வழியில் போகத் தொடங்கினேன்.

குடியேறியிருக்கும் இந்தியரிடம் எனக்குள்ள அனுதாபத்தை இந்நிகழ்ச்சி அதிகமாக்கி விட்டது. இத்தகைய சட்ட விதிகள் சம்பந்தமாக முதலில் ஆங்கிலத்தரகரைப் பார்ப்பது;

பிறகு அவசியம் என்று தெரிந்தால் பரீட்சார்த்தமாக ஒரு வழக்கைப்போட்டுப் பார்ப்பது என்பதைக்குறித்து இந்தியர்களுடன் விவாதித்தேன்.

இவ்விதம் அங்கே இந்தியருக்கு இருந்து வந்த மிகத் துன்பமான நிலையை, மிக நன்ருக அறிந்து கொண்டேன். அதைப்பற்றிப் படிப்பதனுல் மாத்திரம்இன்றி, என் சொந்த அனுபவங்களினுலும் அறிந்தேன். தென்னுப்பிரிக்கா, தன்மானமுள்ள இந்தியருக்கு உகந்த நாடன்று என்பதைக்கண்டேன். இத்தகைய நிலைமையில் மாறுதல் ஏற்படும்படிச் செய்வது எப்படி என்றகேள்வியே என் மனத்தில் மேலும் மேலும் எழுந்த வண்ணம் இருந்தது. ஆனுல், அப்பொழுது என்னுடைய முதன்மையான கடமை தாதா அப்துல்லாவின் வழக்கைக் கவனிப்பதே.

மொழிப் பயிற்சி:

தலைவரி, விதி விலக்கு, அறங் கூறவையில். - இத்தொடர்களை வாக்கியத்தில் அமைத்து எழுதுக,

பயிற்சி வினுக்கள:

1. ஆரஞ்சு பிரீஸ்டேட்டில் செய்யப்பட்ட சிறப்புச் சட்டத்தின் விளைவு யாது?

2 டிரான்ஸ்வாலில் ஆசியாக்காரர்களுக் கென்று செய்யப்பட்ட சிறப்புச் சட்டத்தினுல் நடந்தன யாவை?

3. கறுப்பர்களுக்கென்று இயற்றப்பட்ட சட்டங்கள் எவ்வாறு அமுல் செய்யப் பட்டன?

4. டாக்டர் கிராசே என்பவர் காந்தியாருக்குச்செய்த உதவி யாது?

5. ஜனாதிபதி குருகர் எளிய வாழ்வினர் என்பதை எடுத்துக் காட்டுக.

6. டிரான்ஸ்வாலில் குடியேறியிருக்கும் இந்தியரிடம் காந்தியாரின் உள்ளத்தில் அனுதாபத்தை அதிகமாக்கி விட்ட நிகழ்ச்சி யாது?

7. காந்தியடிகளாரின் பெருந் தகைமைக்குச் சான்று தருக.

கட்டுரை:

உன் உள்ளம் கனிந்த ஒப்பற்ற தலைவரைப் பற்றி ஒரு கட்டுரை வரை.

——::——

3. உயிர்நிலைப் பாட்டு

[பேராசிரியர் தெ. பொ. மீனுட்சிசுந்தரனுர்]

இராமாயணக் கதை உலகினர் மனத்தை இன்னும் நீர்ப் பிண்டமாய் உருக்கி வருகிறது. இந்திய நாட்டில் இந்த வகையில் இதற்கு இணையான கதையே இல்லை என லாம். இந் நாட்டில் வழங்கும் எல்லா மொழியிலும் இக் கதை இன்ப ஊற்ருகச் சுரந்து, அன்பு நீராகப் பரந்து, வான் ஆருக வெள்ளமிட்டோடி இந்திய வாழ்வை வளர்க் கிறது. இரண்டாயிரம் ஆண்டுகளாக இந் நாடு இவ்வாறு உருப் பெற்று வருகிறது. இராமனே இந்நாட்டு அரசரின் மேல்வரிச் சட்டம். சீதையே இந் நாட்டுப் பெண்களின் உயிர்நிலை. இந் நாட்டு அரசர் இராமனை எவ்வளவில் பின் பற்றினரோ யாம் அறியோம். இந் நாட்டுப் பெண்களிற் பலர் சீதையே ஆயினர்; ஆவர். இந் நாட்டு மக்களின் கனவிலும் நனவிலும், நடையிலும் உடையிலும், பேச்சி லும் மூச்சிலும், ஆடலிலும் பாடலிலும், உடலிலும் உயிரி லும் இந்தக் கதை தவழ்ந்து விளையாடி இன்பமூட்டி வரக் காணலாம்.

இந்த ஒரு கதையே பலப் பல காட்சிகளாக வழங்குகின் றது. வான்மீகி வடமொழியிற் கண்ட காட்சி இயற்கை மணம் கமழ்வது. எழுத்தச்சன் மலையாளத்தில் கண்ட காட்சி கடவுளின் திருப்புகழ் மாலையாகத் தித்திப்பது. துளசிதாசர் இந்தியில் கண்ட காட்சி அறிவை மறந்த உணர்ச்சி உல கின் அன்புருவாய்த் திகழ்வது. முல்லையம்மை தெலுங்கிற் கண்ட காட்சி சுருக்க வடிவில் ஒளிரும் பெண்மைக் காட்சி. பிறர் கண்ட காட்சிகள் புலமை ததும்பும் காட்சிகள்.

கம்பன் கண்ட காட்சியோ அன்புலகில், அறிவொளியில் மிளிரும் முத்தமிழ்ப் பெருங்காட்சி. பல்லாயிரம் பாடல்

களாய்ப் பாடுமாறு இதிலே மிக மிக ஈடுபட்டான் கம்பன். இவனன்பும் அறிவும் உடலும் உயிரும் இக்கதைப் போக்கில் பேரொளியாய் ஒருங்கியைந்து முறுகி வளர்ந்த நிலையாய் ஒளிர் தருகின்றன. இக்காட்சி இவன் வாழ்க்கையில் பெரும் புரட்சியாம். இதுவே இவன் வாழ்வில் எழுந்த பேரொலி; பாட்டாய்ப் பெருகிய இவன் உணர்வின் எல்லையில்லா வெள்ளம்; இவன் கண்ட குணப் பெருங்குன்றின் கொடுமுடி; இவன் துய்த்த இன்ப வான் மீன்கள் மின்னிப் பொலியும் வானகம்; இவனறிந்த கடவுள் மணம் வீசும் களிக்காற்று. இதன் நுட்பத்தை நாம் அறிதல் வேண்டும்.

இதில் மற்றொரு வியப்பும் உண்டு. பழங்கதை ஒன்றே இவ்வாறு புதுப் புதுக் கதையாக மாறுகிறது. பழம் பொன்னை உருக்கி வார்த்துப் புத்துருவம் பல படைத்துள்ளனர். புத்துருவின் சிறப்பியல்பையே நாம் நாடுதல் வேண்டும். பாவாணர், தம் உயிரையே பிழிந்தெடுத்து எதிர் வைத்துத் தம் கடவுட்டன்மையால் அழகு ஊட்டிய வடிவங்களே இக் கதைகள். கல்லிற் செதுக்கிய வடிவத்தை ஆயும்போது கல்லில் முட்டிக்கொள்வதோ அறிவின் ஏற்றம்? அக்கல், வன்கல் ஆகலாம்; மாக்கல் ஆகலாம்; உதிர்கல் ஆகலாம்; போலிக்கல்லும் ஆகலாம். கல்லாராய்ச்சி அன்று இங்கெழுவது; கல்லிடை எழுந்த உயிரோவிய ஆராய்ச்சியே ஆம். அங்குத் திகழும் அழகிய வடிவமன்றோ கல் தச்சனது உயிருணர்ச்சியிலே பிறந்து வளர்ந்துள்ளது? அங்ஙனமே, பழங்கதையிலே குற்றம் காட்டுவதிற் பயனில்லை. பாவலர் எதிர் கிடந்த கல் அது. கல்லை உயிராக்கிப் பெரும்புரட்சி செய்துள்ளனர் பாவாணர். அவர் தம் உடலுருக, உயிருருக, உள்ளமுருக, உணர்வுருக அமைத்த உயர்நிலையையே நாம் ஆராய்தல் வேண்டும். அங்குத்தான் பாட்டு உண்டு; அதிலேயே நாம் திளைத்தல் வேண்டும்.

போரிற் புழுங்கும் இன்றைய உலகம் புத்துலகைப் பற்றிக் கனுக் காண்கின்றது. கம்பன் புத்துலக வாழ்வைக் கண்டு பாட்டாகப் பாடுகின்ருன். கம்பனது நோக்கம் இறந்த கால நோக்கம் அன்று; எதிர்கால நோக்கமே ஆம். ஆனல், ஆயிரம் ஆண்டுகளாகியும் அவன் கண்ட புத்துலகம் இன்னும் பிறக்கவில்லை. பிளேடோவின் ரிபப்ளிக், மூரின் உடோபியோ முதலிய நூல்களிற் காணும் காட்சியினும் சிறந்த காட்சியே கம்பன் காண்கின்ருன்; காட்டுகின்ருன்; நிலைநாட்ட முயலுகின்ருன்! இந்த நோக்கத்துடனேயே ஒவ்வொரு தமிழ்ப் பாவலனும் நாட்டுப் படலமும் நகரப் படலமும் அரசியற் படலமும் பாடி வருகின்ருன் என உணராது மயங்கித் தன் பழம்பெரும் புதையலையே அறியாது, வறியனய் வாடும் தமிழனை என் என்பது

"கல்லாது நிற்பார் பிறரின்மையிற் கல்விமுற்ற
வல்லாரும் இல்லைஅவைவல்ல ரல்லாரும்இல்லை
எல்லாரும் எல்லாப் பெருஞ்செல்வமும் எய்தலாலே
இல்லாரும் இல்லை உடையார்களும் இல்லைமாதோ."

"ஏகம்முதற் கல்விமுளைத் தெழுந்து எண்ணில்கேள்வி
ஆகம்முதற் றிண்பணைபோக்கி அருந்தவத்தின்
சாகந்தழைத் தன்பரும்பித் தருமம்மலர்ந்து
போகங் கனிஒன்று பழுத்தது போலும்அன்றே."

"வயிரவான் பூண்அணி மடங்கல் மொய்ம்பினன்
உயிரெலாம் தன்னுயிர் ஒப்ப ஓம்பலால்
செயிரிலா உலகினிற் சென்று நின்றுவாழ்
உயிரெலாம் உறைவதோர் உடம்புமாயினன்"

என வரும் புத்துலகில் நாம் என்று புகுவோம்!

'அழியவேண்டும்' எனக் கம்பன் விரும்பிய அரக்கர் உலகமே இன்னமும் அழியாது விளங்குகிறது. ஹிட்லர் முதலியோர் நாடுகளைக் கம்பன் பாடல் நினைப்பூட்டு கின்றது. தன் நாடு வாழ, தன் நாட்டு மக்கள் பிறரை அடக்கி ஆளத் தன் இனத்தாருக்கு ஒப்பார் உலகில் இல்லை என்ற பேய்ச் செருக்கே தலைவிரித்து ஆடுமாறு 'ஓ' என வாழ்ந்தான் இராவணன்; வாழ்கின்றார் ஹிட்லர் போன் றவர். அங்கு என்ன குறை? இங்கு என்ன குறை? கலை யிலே குறைவா? செல்வத்திலே குறைவா? வீரத்திலே குறைவா? கல்வியிலே குறைவா? ஆனால், அங்கும் இங் கும் உரிமை இல்லை. பிறரை ஆளுதலே உண்டு. பரந்த அன்புமில்லை; பாழான அரசியற் சூழ்ச்சியே உண்டு. சூழ்ச்சியும், உரிமை குறையக் குறைய அரசனது மனம் போன போக்காய் முடிகிறது. இன்பம் இல்லை; களிப்பே உண்டு. உரிமைக் கலை அன்று, அங்கும் இங்கும் ஒளிர் வது. அடிமைக் கலையே, அங்கும் இங்கும் அலைவது.

"யாதும் ஊரே, யாவரும் கேளிர்!" என்பது தமிழ்ப் பாட்டு. இராமன் குகனைத் தம்பியாகக் கொண்டான் எனத் திருமங்கை மன்னர் பாராட்டுகின்றார். அங்கொரு காட்சி காண்கின்றான் கம்பன். இராமன் உலகனைத்தையும் உடன் பிறந்தாராகக் கொண்டு சேர்த்தணைக்கும் காட்சி கம்பன் மனத்தே ஓங்கி எழுகின்றது. கம்பன் விரல் விட்டு எண் ணிக்கொண்டே போகின்றான். தசரதன் பிள்ளைகள் நால்வர். குகன் ஐந்தாமவன். சுக்ரீவன் ஆறாமவன். விபீடணன் ஏழாமவன். இமய முதல் இலங்கைக் கோடி வரையிலுள்ள மக்கள் அனைவரும் இவ்வாறு ஓரினமாகின்றனர். சாதிப் பித்தேறிய இந்த நாடு, என்றோ, இந்த உண்மையை உணர்ந்து உலகிற்கு வழி காட்டுவது?

இந்தச் சீர்திருத்தக் கொள்கையைப் பெண்களும் பின் பற்றி வாழ்கின்றனர். "ஐவீரும் ஒருவீராய் அகலிடத்தை

நெடுங்காலம் அளித்தீர்'' என்கிருள் கம்பன் கண்ட கௌசலை. உலகனைத்தும் ஓரரசாய அன்பிலே வீறு பெற்றுத் தோன்றும் காட்சியன்றோ ஈது! பெண் இதனைக் காண்பதே பெருஞ்சிறப்பு. ஆம்! அங்கே பெண்மையே கம்பன் கண்ட கடவுள். பெண்களே கடவுளாகக் காண்கின்றோம். "தேவராச குதூகலத்தில்'' ஈடுபட்டிருந்தாளாய் வான்மீகி கண்ட அகலிகை, கம்பனுலகில், இந்திரன் சூழ்ச்சியால் மயங்கி, உண்மை உணர்ந்தும் உணர்வற்றெருழுகின்ருள்; நெஞ்சினுற் பிழைப்பிலாளும் வருத்தமின்றிக் கல்லாய்க் கிடக்கும் இழிநிலையே அடைகின்ருள். உடற் கற்பேயன்றி உள்ளக் கற்பு மாறுகின்றதில்லை. உள்ளம் வருந்தவேண்டா; உடலே மாறுதல் வேண்டும். அதுவே கல்லாய்ப் பின் மகளாகின்றது எனக் காண்கின்ருன் கம்பன். அம்மட்டுமா! சுக்ரீவனுடைய மனைவியின் கற்பை அழித்த கொடுமைக்கே, வாலி கம்பன் கையில் உயிரிழக்கின்ருன். வாலியின் மனைவியாம் தாரை வான்மீகியிலே கள்ளைக் குடித்துக் காமவெறி கொண்டு சுக்ரீவனை மயக்கி, இலக்குவனையும் மயக்க வருகின்ருள். கற்பில் உயர்ந்தாளாகப் பேசப்பெறும் தாரையை இவ்வாறு காணக் கம்பன் மனம் ஒருப்படுமா? கைம்மை நோன்பில் கனிந்த இந்தக் கற்பரசியின் வடிவமே கம்பன் கண்ணெதிர் இலக்குவன் சீற்றத்தை ஆற்ற வருகின்றது. இத்தகைய பெண் பெருமாட்டிகளிடையே பெருங்கடவுளாக வீற்றிருப்பாள் சீதையேயாம்.

நம் உலகில், கடவுள் வாழ்வை நிலைநாட்டக் கனுக்காண்கின்ருன் கம்பன். அவன் நிலை நாட்ட வருவது போலிக் கடவுளை அன்று; போரிடும் கடவுளை அன்று; ஆசறு காட்சி ஐயன்மாராம் அந்தண அறவோரின் பாட்டிலே பயின்று இன்பக் கூத்தாடும் அன்பிற் பெரிய கடவுளையே நிலை நாட்ட வருகின்ருன்; உலகின் உயிர்நிலையாம் உண்மைக் கடவுளையே நிலை நாட்டுகின்ருன். அதுவே தமிழர் கண்ட தனிக் காட்சி; பாவாணர் கண்ட பாவமுதம்!

பாவோ பலப்பல நிலையில் ஒளிர்கின்றது. சொல்லழகில் மனத்தைக் கவர்வது பாட்டின் முதல் நிலை. சொல்லழகோடு பொருளாழமும் பிரிவின்றி இயைந்து தோன்ற, பாவாகப் பரந்து உள்ளத்தை வலித்து ஈர்ப்பது பாட்டின் இரண்டாம் நிலை. கதைப் போக்கின் ஒற்றுமைப் பாட்டில் நம் மனத்தை ஈடுபடுத்துவது பாட்டின் மூன்றும் நிலை. கதைப் போக்கின் சிறப்பனைத்தையும் பெருமகனின் வாழ்க்கைப் புரட்சியாகப் புனைந்துரைத்துப் புத்துணர்ச்சி தந்து, அலைந்தழியும் மனத்தை அமைதியாக்குவதே பாட்டின் நான்காம் நிலை. பெருமகனின் வாழ்க்கைப் புரட்சியின் கதைப் போக்கிலே ஈடுபட்டுத் தன் உயிரும் உடலும் உள்ளமும் உணர்வும் இன்பமும் அன்பும் அப்புரட்சிப் பெருந்தீயில் குளித்தெழுந்து தூய்மையாக, அக்கதையினுள்ளே உலகத்தையும் உலகம் படைத்த ஒருவனையும் கண்டு, உலகத்தைச் சீர்ப்படுத்தித் திறம்பட உருப்படுத்தும் உட்கோளாக அந்தக் கதைப் போக்கின் உண்மையைத் தன் உயிரோடு ஒருங்கு இயைய வைத்து, உள்ளவாறு காணுந்தோறும் அப்பாவலனது உணர்வெல்லாம் உருகிப் பாக்கடலாய்ப் பரந்து வெள்ளமிட, அதில் எழுகின்ற இன்ப அன்பாம் திரையாட்டத்தில் உலகனைத்தும் ஆழ்ந்து மூழ்கித் திளைக்கும் களியாட்டமே பாட்டின் ஐந்தாம் நிலையாம். இந்த ஐந்தாம் நிலையே பாவின் உயிர் நிலையாம். அங்கு அரசாளும் பாவாணர் மிகச் சிலரே. அச் சிலரில் கம்பனும் ஒருவன்.

கடவுட் காட்சியே கம்பன் கண்ட காட்சி என்றோம். தன் நூலுக்கு, "இராமாயணம்" எனக் கம்பன் பெயரிட்டான் இல்லை. 'இராமாவதாரம்' என்பதே அவனிட்ட பெயர். கடவுள், உலகிடை வாழ வருகின்ற கதையே அஃது. என்று வருகிற கதை? என்றும் வருகின்ற கதை! அத்தகைய கடவுட் காட்சியே கம்பன் காண்கின்ற காட்சி.

இக் காட்சியில் பெண்மையும் கடவுளும் இயைந்து ஒன்றாய் விளங்கக் காண்கிறோம். சீதை நேற்றிருந்த பெண் அல்லள். அவள் இந்தியர் மனத்தில் என்றும் வாழும் உலகப் பெருந்தாய். கடவுளின் அருளையே அங்ஙனம் பேசி வருகின்றோம். அருளே சிறைப்பட்டிருக்கின்றது. இன்னும் இவ்வுலகில் சிறைக் கோட்டத்தை அறக்கோட்டமாக்கும் மணிமேகலை பிறந்த நாடே இந்த உண்மையை அறிதல் கூடும். பெரியோருக்கும் சிறியோருக்கும் இவ்வுலகம் சிறைச்சாலையை இடம் எனத் தந்து உதவுகின்றது. ஆனால், பெரியோர் அங்கும் பெருஞ்சிறப்புடன் வீற்றிருந்தனர். அருளே வெல்லும்! உண்மை வாழ்வு அருள் வாழ்வே! இன்ப வாழ்வு அருள் வாழ்வே! இந்தியர் கண்ட புதுப் பொருள் அன்றோ அன்பு என்பது! புத்தரும், அருகரும், ஆழ்வாரும், ஆளுடைய பெரியாரும் கண்ட விழுப்பொருள் அன்றோ அன்பு! சுண்ணாம்புக் காளவாய் சுடுகின்ற காலத்தும் அன்பன்றோ அப்பருக்கு உயிர்நிலையாய் இன்பூட்டியது! "அன்பலாற் பொருளும் இல்லை ஐயன் ஐயாறனார்க்கே."

இவை அனைத்தும் நம் புனைந்துரை அல்ல; கம்பன் காண்கின்ற கடவுட் காட்சியே ஆம். சீதை சிறையிலே கிடக்கின்றாள்; அவளைக் கண்ட சொல்லின் செல்வனாகும் அநுமன் அக்காட்சியைப் பலபடப் புனைந்துரைத்து, இராமன் மனங்கொள்ளக் கூறுகின்றான். பலர் நடுவே நிற்கின்றாள் சீதை. தன்னந்தனியாள்! என்னே அக் காட்சி! உண்மையிற் பெண் அன்று அங்குத் தோன்றும் உரு. இரக்கமே ஏந்திழை வடிவம் எய்தி வந்துள்ளது. தன் வீரச் செருக்கை எல்லாம் காட்டிட வந்துள்ளாள் அவ்வேந்திழை; இரக்கத்தை அழிக்க வருவாரை எள்ளி நகையாட, அவர்தம் சிறைக்குள் தானே புகுகின்றாள். இரக்கமே வெல்லப்போகின்றது என்ற காட்சியே அங்கொளிரும்காட்சி. கம்பனது கடவுட் காட்சியில் எழுந்த உறுதிப்பாடு அது.

பெண்மைக் கடவுளைப் போற்றுகின்ற கம்பன், உலகின் உயிர்நிலையாம் இரக்கத்தைப் பெண்ணாகக் கண்டதில் வியப் பொன்றும் இல்லை. அரக்கர் யார் என இப்பொழுது அறி வோம். இரக்கம் அற்றோரே அரக்கர்; போலி இரக்கங் காட்டுவோரே அரக்கர். அவரும் இரக்கமுடையார் போலக் காட்டிக்கொள்ள முயல்கின்றனர்; இரக்கத்தைத் தழுவ முயல்கின்றனர். இரக்கத்தின் எதிரே அரக்கியர் செருக்கே வீறிட்டெழுகின்றது. உண்மைப் பெண் எதிரே போலிப் பெண்கள் பலர் வருகின்றனர். இதிலொரு தகுதிப் பாடும் உண்டு. உலகை வாழ்விப்பது பெண்ணானால், ஆழ்விப் பதும் பெண்ணே ஆம் அன்றோ?

அரக்கரோ அளவற்றோர்கள். அவர்களின் ஆரவாரச் செருக்கிற்கோ அளவில்லை. பிறரை மருட்டி வெருட்டும் பேயெல்லாம் ஒருங்கே கூடிவரினும் இவர்களைக் கண்டால் அஞ்சும். அத்தகையது இவர்கள் கொடுமை. "அரக்கரது கொடுமையின் கொடுமுடியில் எல்லையைக் கண்ட அமரர் களும் சீதைபடும் கொடுமையை அறிந்தவர் அல்லர்; அவர் களும் இது கண்டு அஞ்சுவர்" என மற்றோர் ஏடு கூறுகின் றது. "அமரர்கள் குழுவும் அஞ்ச" வாட்டுகின்றனர் சீதையை எனினும், செருக்கிடை விளைந்த இன்னல்களைக் கண்டு, இரக்கமாம் ஏந்திழை, தம் மெய்யனைத்தும் தீக்கனல் கதுவப் புழுங்குகிறாள்; இஃது ஓர் ஏடு. எனவே, அரக்கியர்க்கும் இரங்குகிறாள்; அரக்கியரிடையே இன்னல் உறுவார்க்கும் இரங்குகின்றாள் சீதை என்பதாயிற்று. அஃது அன்றோ இரக்கத்தின் பெருமை? "செருக்கு இனல் கண்டு செய்ய மெய்க்கனல் தீக்கச் சீர்த்த" என்பது ஒரு பாடம். இந்தப் பாடத்திலும், "நெருங்கினர் காப்ப நின்போல் நேசமே அச்சம் நீக்க" என்ற பாடமே சாலச்சிறந்ததாம். இரக்கமாம் ஏந்திழை, அரக்கியர் அளவற்றோர்கள், அலகையின் குழுவும் அஞ்ச நெருக்கினர் காப்பவும் அஞ்சாதிருப்பது எங்ஙனம்?

அன்புள்ள இடத்தில் அச்சமேது? கன்றின் மேல் இருக்கும் அன்பால் அச்சத்தையே மறந்து, புனிற்றிளம் பசுவும் புலியின்மேற் பாயும் அன்றோ? அன்பிலே திளைக்கின்ற இரக்கமே, உலகை வாழ்விக்க வருகிறது. இராமனும் அன்பில் ஈடுபட ஈடுபட, அந்த அன்புருவமே சீதையின் மனக்கண் எதிர் தோன்றுகிறது. இரக்கத்தின் முன்னர் அதன் உயர் நிலையார் எதிர்கால உலக அன்பே, கண்ட கண்ட இடமெல்லாம் காட்சி அளிக்கின்றது. அரக்கியர் செருக்காட்டம் ஒன்றும் அங்குத் தோன்றவில்லை. சிலுவை மேல் ஏறிய ஏசுபெருமானார் தம்மைச் சிலுவையில் ஏற்றிய மாக்களின் செருக்காட்டத்தை அறியாராய், அவர்களுக்காகப் பெரிதும் இரங்கி, "அவர்கள் செய்வதறிகிலர்; அந்தோ! ஆண்டவனே!" என மன்றாடுவது இந்த இன்ப அன்பில் வாழும் இரக்கமே ஆம். புனிற்றிளம் புலிக்குட்டியின் மேல் வைத்த அன்பால், புனிற்றிளம் புலிப்பிணாவின் பசிக்கும் இரங்கி, அப்புலி வாயிற் புகுந்த புத்தர் பிரானாரின் இரக்கமும் ஈதே ஆம். "அஹிம்சா பரமோ தர்ம," "சத்யாக்ரஹம்" என்றெல்லாம் வருகின்ற சொற்றொடர்கள், பொருள் விளங்கிப் பொழியும் இடம் ஈதேயாம். புத்துலக வாழ்வின் கடவுள் நுட்பம் இங்கே இவ்வாறு ஒளிர்கின்றது.

"அரக்கியர் அளவு அற்றார்கள் அலகையின் குழுவும் அஞ்ச
நெருக்கினர் காப்பநின்பால் நேசமே அச்சம் நீக்க
இரக்கம் என்ற ஒன்று தானே ஏந்திழை வடிவம் எய்தித்
தருக்கிய சிறையுற் றன்ன தகையள் அத்தமியள் அம்மா!"

என்ற இப்பாட்டே கம்பனது இராமாவதாரக் கதையின் உயிர் நிலைப்பாட்டாம். 'இராமாயணம் சிறையிருந்தவள் ஏற்றம் சொல்லுகிறது" என்று இக்காட்சியிற் பழகிய பிள்ளை லோகாச்சாரியார் தம் ஸ்ரீவசன பூஷணத்தில் எழுதுகின்றார். அவரும் இதனையே உயிர்நிலையாகக் கொள்கிறார் என்பதும்

தெளிவாகிறது. இந்த நுட்பத்தை அறிவோமாயின், கம்பன் கண்ட காட்சியின் பெருமை விளங்கும்; கம்பனை ஓதும் முறையும் விளங்கும்.

தமிழையும் இராமாயணத்தையும் ஒருங்கு வைத்துக் கம்பன் கண்ட ஒற்றுமைக்காட்சியே இக்கடவுட் காட்சியாம். கம்பன் கங்கை என்பான்; சரயு என்பான்; அயோத்தி என்பான்; மிதிலை என்பான். ஆனால், உட்பொருளாய் வருவன எல்லாம் காவிரியும் கொள்ளிடமுமே; உறையூரும் மதுரையுமே. இராமனுக்கு. முடிசூட்டுகின்ற கம்பன், வேளாண் மக்களைக் கொண்டு எதிர்கால இன்பத்தமிழனுக்கே அன்பு முடி சூட்டுகின்றான்; கடவுட் காட்சியாகக் காணு மதுவும் தமிழ்த்திருமூலன் கண்ட பழந்தமிழ்க் காட்சியேஆம்

“ அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே.”

தமிழன் உடலிலும் உயிரிலும் உணர்வினும் ஊறிய காட்சியன்றோ ஈது? தலைமுறை தலைமுறையாக வரும் தம் பொருளைப் பிறர்பொருள் எனவும், தம்மை வாழ்விக்க வரும் அமுதினை நஞ்செனவும் எண்ணி நடுங்குவாரை என் னென்பது!

கம்பன் கண்ட இக்காட்சியைத் தமிழர் என்று உள்ள வாறு காண்பாரோ, அன்றே, தமிழர் வீறுபெற்றெழுந்து உலகினுக்கு வழிகாட்டும் நாளாம்; அன்றே கம்பன் உளங் குளிரும் நாளாம்.

வினாக்கள்:

1. இராமாயணக்கதை எத்தகையது?

2 இராமாயணக் கதை எவ்வெவ் மொழிகளில் உள்ளது? அவை வழங்கும் காட்சிகள் யாவை?

3 இராமாயணக் கதையில் கம்பன் காட்சியை விளக்குக.

4. இராமாயணக் கதையில் காணப்படும் வியப்பு யாது? அது குறித்துக் கட்டுரையாசிரியர் யாது கூறியுள்ளார்?

5. இராமாயணக் கதைகளை எவ்வாறு ஆராய்ந்து திளைத்தல் வேண்டும்?

6. கம்பன் புத்துலக வாழ்வைக் கண்டு பாட்டாகப் பாடுகின்றான் என்பதை விளக்குக.

7. அழியவேண்டும் எனக் கம்பன் விரும்பிய அரக்கர் உலகம் இன்னமும் அழியாது விளங்குகிறது,—விளக்குக.

8. யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற கருத்து கம்பனால் எவ்வாறு வலியுறுத்தப்படுகிறது?

9. பெண்மையே கம்பன் கண்ட கடவுள் - ஆதாரத்துடன் விளக்குக.

10. கம்பன் காட்டும் கடவுளைக் கூறுக.

11. பாட்டின் ஐவகை நிலைகள் யாவை?

12. பாட்டின் உயிர்நிலை யாது?

13. அருள், அன்பு இவற்றின் சிறப்பைக் கூறுக.

14. சிறையிடை சீதையிருந்த காட்சியை அனுமன் இராமனிடம் எவ்வாறு புனைந்துரைத்தான்?

15. இரக்கமாம் ஏந்திழை (சீதை) அரக்கியர் கொடுமைக்கு அஞ்சாதிருந்தது யாங்ஙனம்?—விளக்குக.

16. தமிழையும், இராமாயணத்தையும் ஒருங்கு வைத்துக் கம்பன் கண்ட காட்சியை விளக்குக.

மொழிப் பயிற்சி:

உடலிலும் உயிரிலும், அமுதினை நஞ்சென, உள்ளம் குளிரும் நாள், புத்துலக வாழ்வு.

கட்டுரை:

நீவிர் இன்புறற தமிழிலக்கியம் என்ற தலைப்பில் ஒரு கட்டுரை வரைக.

4. தமிழர் பண்பாடு

(பேராசிரியர், வித்துவான், லெப. கரு. இராமநாதஞ் செட்டியார்)

பண்பாடு என்பது பண்பட்ட நிலை. அதாவது எண்ணமும், சொல்லும், செயலும் திருந்திய நிலை. எல்லோருடைய இயல்புகளும் அறிந்து ஒத்து நன்னெறியில் ஒழுகுபவர், பண்பாடு உடையவர் ஆவர். இத்தகையோர் இருத்தலால் தான் உலகம் நிலைத்திருக்கிறது என்பது ஆன்றோர் கருத்து. இதனினும் ஒருபடி மேலாகத் தமக்கென முயலா நோன்றாள் பிறர்க்கென முயலுநர் உண்மையால், இவ்வுலகம் உண்டு என்று கடவுள் மாய்ந்த இளம்பெரு வழுதி கூறியிருப்பது தமிழர் பண்பாட்டுக்குத் தலைசிறந்ததொரு சான்றாகும்.

அறவுரை:

"நல்லது செய்தல் ஆற்றீ ராயினும்
அல்லது செய்தல் ஓம்புமின் அதுதான்
எல்லாரும் உவப்பது அன்றியும்
நல்லாற்றுப் படூஉம் நெறியுமா ரதுவே"[1]

இது மிகச் சிறந்த அறவுரை: "நல்வினையைச் செய்ய முடியவில்லையாயினும் தீவினையைச் செய்யாதீர்கள்." இப் பண்பாட்டை எல்லோரும் புகழ்வர். மேலும் "நன்னெறிக் கண் செலுத்தும் வழியும் அதுதான்." இஃது எவ்வளவு சிறந்த அறவுரை என்பதை எண்ணிப் பாருங்கள்.

'இப்பொழுது இவர்க்கு இவ்வுதவி செய்யின், இதனால் மறுமையில் நமக்கு இன்ன பயன் விளையும்' என்று கருதி அறம் செய்தல், பொருளை விலையாகக் கொடுத்து அதற்கு அறத்தைக் கொள்ளும் வாணிகமாகும் என்பது பண்டையோர் கருத்து. ஆதலால், பயன் கருதாது அறம் செய்தலையே சான்றோர் வற்புறுத்தினர்.

1. புறநானூறு, 195.

"எல்லா ஊர்களும் எம்முடைய ஊர்களே; உலக மக்கள் எல்லாரும் எம் சுற்றத்தாரே; எமக்குவரும் கேடும் ஆக்கமும் தாமே வருவன; அவை பிறரால் வருவன அல்ல; நோதலும், அது தீர்தலும் அவற்றைப் போலத் தாமே வருவனவே. சாதல் புதியது அன்று; கருவில் தோன்றிய நாளே தொடங்கியுள்ளது. ஆதலின், வாழ்தலை இனியது என்று யாம் உவத்தலும் இல்லை; வெறுப்பு வந்த விடத்து வாழ்தல் இன்னாது என்று யாம் நினைப்பதுமில்லை. பேராற்று நீர்வழிச் செல்லும் தெப்பம் போல உயிர் ஊழ்வழியே செல்லும். நன்மையால் மிக்கவரை நாம் மதிப்பதுமில்லை; சிறியோரைப் பழித்தலும் இல்லை"[2] இவ்வறவுரை ஒன்றே பண்டைத் தமிழர் தம்சீரிய பண்பாட்டிற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகுமன்றோ?

புலவர் நல்லியல்புகள்:

கல்வி, கேள்வி, ஒழுக்கம் இவற்றிற் சிறந்த புலவர் பெருமக்கள் வறுமையால் வாடினும், தம் மதிப்பை இழக்கவில்லை.

"முற்றிய திருவின் மூவ ராயினும்
பெட்பின் றீதல் யாம்வேண் டலமே"[3]

என்ற கொள்கை அவர் பால் இருந்தது அன்பின்றிக் கொடுத்தாலும், காலந்தாழ்த்துக் கொடுத்தாலும், நேரிற் காணாது பிறர் வாயிலாகக் கொடுத்தாலும், குறையக் கொடுத்தாலும் அப்பரிசிலைப்புலவர் பெறுவதில்லை. காவலர் தவறுசெய்த காலங்களில், அவர்கள் உளம் திருந்தப் புலவர்கள் அறநெறி கூறினர். தன் மனைவியை விட்டுப் பிரிந்து வாழ்ந்த பேகனுக்குக் கபிலர், பரணர் முதலிய புலவர் பெருமக்கள் நல்கிய அறவுரைகள்[4] படிக்குந்தோறும் படிக்குந்

2. புறநானூறு, 192.
3. புறநானூறு, 205.
4. புறநானூறு, 143—147.

தோறும் உள்ளத்தை உருக்குவன. சோழன் நலங்கிள்ளியும் நெடுங்கிள்ளியும் போர் புரிய முற்பட்டபோது, அப்போரை நிறுத்தக் கோவூர் கிழார் கூறிய அறிவுரைகள்,[5] படிக்கப் படிக்க இன்பம் பயப்பன. மலையமான் மக்களைச் சோழ வேந்தன் யானைக்கிட்டுக் கொல்ல நினைத்த பொழுதும்,[6] இளந்தத்தன் என்ற புலவனை ஒற்றன் என்று தவருகக் கருதி சோழமன்னன் கொல்லக் கருதிய போதும்[7] கோவூர் கிழார் குறுக்கிட்டுப் பேசிய நல்லுரைகள், புலவர் பெருந் தன் மைக்குச் சிறந்த எடுத்துக்காட்டுக்களாகும். அதியமான் தூதுவிடத் தொண்டைமானிடத்து ஔவையார் அரசியல் தூதுவராகச் சென்ற செய்தியைப் புறநானூற்ருல் அறிகின் ரேம்.[8] சோழன் குராப்பள்ளித்துஞ்சிய பெருந் திருமாவள வனும், வெள்ளி அம்பலத்துத்துஞ்சிய பெருவழுதியும் ஒருங் கிருந்த காட்சியைக் கண்ட புலவர் காரிக்கண்ணனர், அள வற்ற மகிழ்ச்சி அடைந்தார்; "நீங்கள் இருவரும் இன்று போலவே என்றும் உள்ளம் கலந்து வாழ்வீர்களாக"[9] என்று வாழ்த்தினர். இப்பாடலில், ஒற்றுமையைப் புலவர் வற் புறுத்திக் கூறியிருக்கும் முறை மிகவும் பயன் தருவதாகும். இதிலிருந்து, தமிழரசர் தம்முள் ஒற்றுமைப்பட்டு வாழ்வதில் புலவர் பெருமக்கள் பேரார்வம் கொண்டவர் என்பது உண ரப்படுகின்றதன்ருே?

மோசிகீரனர் என்ற புலவர், முரசு கட்டில் என்பதை அறியாது அதன் மீது படுத்து உறங்கினர். அக்கட்டில், வெற்றித் திருவின் இடமாகக் கருதப்படுவதால், அதில் படுப்பவர் கொல்லப்படுவர். ஆனல், பெருஞ்சேரலிரும்

5 புறநானூறு, 45.
6. புறநானூறு, 46.
7. புறநானூறு, 47.
8. புறநானூறு, 49.
9. புறநானூறு, 58.

பொறை, அப்புலவர் செய்த தவற்றை அறிந்தும் அவர்மீது கொண்ட பெருமதிப்பால், கவரிகொண்டு வீசி, அவரை மகிழ்வித்தான்[10] என்பதிலிருந்து, புலவர் பெருமக்கள் தம் உயரிய பண்பாட்டால், அரசர்பால் பெற்றிருந்த நன் மதிப்பை உணரலாம்.

தம்மை ஆதரித்த பாரிவேளின் பறம்பு மலையை மூவேந் தர் முற்றுகையிட்டிருந்தபோதும் கபிலர், பாரியை விட்டு அகலவில்லை; அவன் இறந்த பின்பு அவன் மகளிரை அழைத்துச் சென்று அவர்களை மணம்புரிந்து கொள்ளுமாறு அரசர் பலரை வேண்டினர்; இறுதியில் பாரியினது பிரி வாற்றாது உயிர் நீத்தார். இங்ஙனம் வள்ளல்களிடம் உள் ளத்தைப் பறிகொடுத்த சங்க காலப் புலவர் பெருமக்கள், அவ்வள்ளல்களைப் பற்றிப் பல பாக்களைப் பாடியுள்ளனர்.

"புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்
நட்பாம் கிழமை தரும்"

என்னும் திருக்குறளுக்கு ஏற்ற எடுத்துக் காட்டாகப் பரிமே லழகர், கோப்பெருஞ் சோழனுக்கும், பிசிராந்தையாருக்கும் இருந்த நட்பினைக் காட்டியுள்ளார் எனின், அக்காலப்புலவர் தம் பண்பாட்டை என்னென்பது! ஆய்வேள் இறந்தபோது உறையூர் ஏணிச்சேரி முடமோசியாரும், அதியமான் இறந்த பொழுது ஔவையாரும் வருந்திப் பாடிய பாக்கள், வள்ளல்களிடம் புலவர்கள் கொண்டிருந்த நட்பையும், மதிப் பையும், செய்ந்நன்றியறிதற் பண்பையும் நன்கு உணர்த்து வனவாகும்.

10. புறநானூறு, 50.
11. திருக்குறள், 785.

மகளிர் பண்பு:

சங்க காலத் தாய், "மகனைப் பெற்றளித்தல் எனது கடமை; அவனைச் சான்றோனாக்குதல் தந்தையின் கடமை; அவனுக்கு வேண்டும் போர்க் கருவிகளைச் செம்மையாகச் செய்து கொடுத்தல் கொல்லனது கடமை; நன்னடை நல்கல் வேந்தனது கடமை; போரில் களிறு எறிந்து பெயர்தல் அக் காளையது கடமை"[12] என்று பாடினாள் எனில், அவளின் உயரிய பண்பாட்டை என்னெனக் கூறி வியப்பது! கற்பரசியர், தம் கணவர் இறந்தவுடன் அவரை விட்டுப் பிரிந்து வாழ விரும்பாத நிலையில், உடன் உயிர் விடுதல் பண்டை மரபாகும். பூதப் பாண்டியன் இறந்த பொழுது அவன் மனைவியான பெருங்கோப்பெண்டு, எரியில் விழத் துணிந்தாள். அது கண்ட சான்றோர் அவளைத் தடுத்தனர். அவள் சினந்து, "பொல்லாச் சூழ்ச்சிப் பல்சான்றீரே! என் கணவன் மாய்ந்த பின் யான் மடிதலே நேரிது. பழைய சோற்றை உண்டு கைம்மை நோன்பு நோற்கும் பெண்டிருள் யான் ஒருத்தி அல்லேன். நன்னீர்ப் பொய்கையும் தீயும் எனக்கு ஒன்றே"[13] என்றுகூறித் தீப்பாய்ந்தனள். இவ்வாறு கணவரை உயிராகவும், தம்மை உடலாகவும் கருதி, அவர் வாழ வாழ்ந்து அவர் வீழ வீழ்ந்த மனைவியர் பலராவர். இஃது உத்தம மனைவியர் பண்பாட்டை உரிய முறையில் எடுத்துக் காட்டுவதாகும்.

விருந்தோம்பல்:

இத்துணைச் சிறப்புடைய சங்க கால மகளிர், தம் இல் வாழ்க்கைக் கடமைகளுள் விருந்தோம்புதலை இன்றியமையாத பண்பாகக் கொண்டிருந்தனர் என்பதற்குச் சங்க நூல்கள் சான்று பகர்கின்றன. திருவள்ளுவர், விருந்தோம்புதல்

12. புறநானூறு, 312.
13. புறநானூறு, 246.

இன்றியமையாதது என்பதை வற்புறுத்திக் காட்டுவான் வேண்டிப் பத்துக் குறட்பாக்களினுல், அதன் சிறப்பைத் தெளிவாக்கியுள்ளார்.

இல்வாழ்க்கை நடத்துவோர், பெருஞ் செல்வராயினும் அல்லராயினும் தாம் ஈட்டும் பொருளை ஆறு கூறுகளாகப் பகுத்துப் பயன் படுத்துதல் பொதுக் கொள்கையாக இருந்தது. அவற்றுள் ஒரு கூறு அரசனுக்குரிய இறைப்பொருளாகியது. மற்றவை, தென்புலத்தார், தெய்வம், விருந்து, சுற்றத்தார், தான் எனும் ஐந்து பகுதியினருக்கு உரியவாயின.

"தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்ருங்கு
ஐம்புலத்தார் ஓம்பல் தலை"[14]

என்று எடுத்துரைத்த திருவள்ளுவர், விருந்தினை ஐந்தினுக்கும் நடுவண் அமைத்திருப்பதிலிருந்து அதனை அக்கால மக்கள் எத்துணைச் சிறந்த பணபாகக் கருதினர் என்பது புலனுகும். மக்கள் வருவாயில் ஆறில் ஒருபங்கை மன்னன் இறையாகக் கொண்டான். எனவே, மற்றைய ஐந்து வகையில், எஞ்சிய தம் பொருளை மக்கள் பயன் படுத்தவேண்டும் என்று மன்னன் விரும்பினுன் என்பது தெளிவாகிறது. இதனை எண்ணிப்பார்க்கும்போது, நம்நாட்டில் எல்லோரும் தவருமல் விருந்தோம்புதல் வேண்டும் என்று அக்கால மன்னர் கருதினர் என்பது உய்த்துணரத்தக்கது.

"இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு"[15]

என்று திருவள்ளுவர் கூறியிருப்பது, இல்வாழ்க்கை வாழ்வது விருந்தினரைப் பேணுதற்கே என்னும் கருத்து, அக்கால மக்கள் மனத்தே பதிந்திருந்தது என்பதற்குத் தக்க சான்ருகும்.

14. திருக்குறள், 43.
15. திருக்குறள், 81.

இறப்பைத் தடுக்கும மருந்தே என்ருலும் விருந்தினரை வீட்டுக்கு வெளியில் நிறுத்தி விட்டுத் தாம் மட்டும் உண்ணுதல் தக்க பண்பன்று" என்பது, திருவள்ளுவர் கூறும் பண்டை மரபு. சாவா மருந்தெனினும் விருந்தினரை நீக்கித் தனித்துண்ணுதவர் தமிழகத்தில் இருந்தனர் என்பதை,

"இந்திரர், அமிழ்தம் இயைவ தாயினும் இனிதெனத்
தமியர் உண்டலும் இலரே"[17]

என்னும் புறநானூற்று அடிகள் தெரிவிக்கின்றன.

வருவர்ர்க்கு விருந்தளித்தல் என்பதோடு அன்றி, எவ்வண்ணம் அதனை இயற்றுதல் வேண்டும் என்பதையும் திருவள்ளுவர் தெளிவுபடுத்தியுள்ளார்; விருந்தினர் மெல்லிய மனமுடையவர். முன்னர் அறிந்தோரும் அறியாதோரும் விருந்தினராகலாம். விருந்தினரை இன்முகம் காட்டி வரவேற்று உபசரித்தலே உயர்ந்த பண்பாகும். இதனை எடுத்துரைக்க வந்த வள்ளுவர் பெருமான், "அனிச்ச மலர் மோந்தால்தான் வாடும்; விருந்தினரோ, தம்மை இனிமையாக வரவேற்காமல் முகம் வேறுபட்டுப் பார்த்தாலே வாடி விடுவர்"[18] என்று அழகாக விளக்கியுள்ளார்.

இவ்வண்ணம் விருந்தோம்பலை மேற்கொண்டு வாழ்ந்த மக்களிடம் நிகழும் ஊடலை நீக்கும் மருந்தாக இவ்விருந்து அமைதலும் உண்டு. விருந்தினரை இன்முகங்காட்டி, இன்சொல்லாடி, வரவேற்க வேண்டியிருத்தலின், விருந்து வந்த போது, தலைவி, தலைவன்மாட்டுக் கொண்டிருந்த ஊடலை மறைத்து வைத்து, விருந்தோம்புவதற்குரிய முறைகளைக் குறித்துத் தலைவனுடன் கலந்து உரையாடி இனிதே முடிப்பாள். ஆவ்வாறு ஊடலைத் தலைவி மறைத்திருப்பதை அறி

16. திருக்குறள், 82
17. புறநானூறு. 182.
18. திருக்குறள், 90.

யாத தலைவன் ஒருவன், ஊடல் நீங்கிவிட்டதெனக் கருதி மகிழ்வுற்று, விருந்தினர் சென்றவுடன் தலைவியை அணுகினுகை, உடனே தலைவி ஊடலை வெளிப்படுத்திச் சீறினுள் என்னும் சுவைமிக்க செய்தி, பழைய நூல்களிற் காணப்படுகின்றது.

இல்லாள், விருந்தினராக வந்த பாணர்களுக்கும் புலவர்களுக்கும் உணவிட்டு, அவர்கள் உண்பதனுல் உண்டாகும் ஆரவாரத்தில் மகிழ்ந்து, மேலும்மேலும் அத்தகையோருக்கு வேண்டியவற்றையிட்டு உண்பித்தல் தளராள் என்பதையும், அவள் கணவனும் அவள்போன்றே கை ஓயாமல் ஈயும் பண்பு படைத்தவன் என்பதையும் புறநானூற்றுப் பாடல் ஒன்று விளக்குகின்றது.[19]

உயர்ந்த பண்புகளுடன் விளங்கிய சங்க கால மகளிரின் தலையாய மாண்பு, விருந்தினரை ஏற்று உபசரித்தல் என்பதே,

"விருந்துபுறந் தருதலும் சுற்றம் ஓம்புதலும்
பிறவும் அன்ன கிழவோள் மாண்புகள்"[20]

என்னும் தொல்காப்பியப் பகுதியால் நன்கு அறிகிறோம்.

சங்க காலத்து மறக்குடி மகள் ஒருத்தி, தன்குடியின் முன்னோர், புகழ் நின்று நிலவுமாறு போரிட்டுக் களத்தில் மாய்ந்து, பின் நடுகல்லாகியதை அறிந்தாள். அறிந்து அவர் நடுகல்லை நாள்தோறும் தவருமல் வழிபட்டு வந்தாள். அவள் எதை வேண்டி வழிபட்டாள் என்பதுதான் சுவை தரும்பகுதியாகும். "நாள்தோறும் விருந்தினர் வரப்பெறுதல் வேண்டும். என் கொழுநன் சிறந்த பகையைப் பெறுதல் வேண்டும்" என்பவை அவள் வேண்டுகோள். இதனை,

19. புறநானூறு, 334.
20. தொல்காப்பியம், கற்பு, 11.

"ஒலிமென் கூந்தல் ஒண்ணுதல் அரிவை
நடுகல் கைதொழுது பரவும் ஒடியாது
விருந்தெதிர் பெறுகதில் யானே என்னையும்
...................................வேந்தனொடு
நாடுதரு விழுப்பகை எய்துக எனவே"[21]

என்னும் புறநானூற்று அடிகளால் அறியலாம். கணவன் இல்லத்தில் இல்லாத போதும் தம் இல்லம் நோக்கி வரும் விருந்தினரை அக்கால மகளிர் போற்றினர்.

"தன் மனைப் பொன்போல் மடந்தையைக் காட்டி இவனைஎன்போல் போற்று"[22] என்று விருந்தினனைக் குறித்துத் தன்மனைவியிடம் கூறிய பெருந்தகையாளனும் அக்காலத்தில் இருந்தனன்.

சங்க காலத்தில், முடிமன்னர், குறுநிலமன்னர், பெருஞ்செல்வர் போன்றோர் வண்மையுடையோராய் விளங்கித் தம்மை நாடிவந்த இரவலர்க்குப் பரிசில் கொடுக்கும் செயலைத் தங்கள் பண்பாய்க் கொண்டிருந்தனர் என்பது மட்டும் அன்று; அவர்களை விருந்தினராகக் கொண்டு பெரிதும் மதித்து, அரிய உண்டிவகைகள் அளித்து விருந்து ஓம்பி மகிழ்ந்தனர் என்பதும் அறியக் கிடக்கின்றது. இரவலர், இப்புரவலர்மாட்டு எத்துணை மதிப்புப் பெற்றனர் என்பதும், எத்தகு சிறப்புடைய அடிசில் உண்டனர் என்பதும் பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை முதலிய சங்க நூல்களால் புலனாகும் செய்தியை இந் நூலின் முற்பகுதியில் கூறியுள்ளேன்.

"ஒரு நாளன்று; இரு நாளன்று; பலநாட்கள் தனித்துச் செல்லாமல், பலரொடு கூடிப் பலமுறை சென்றாலும் எம்மைத் தலைநாளில் வரவேற்று எமக்கு வேண்டுவன அளித்து விருந்தோம்பியது போலவே, விருந்தோம்பும்

21. புறநானூறு, 306.
22. புறநானூறு, 395.

பண்புடையவன்''[23] எனக்குறுநிலமன்னன் ஒருவனைப்புலவரொருவர் சிறப்பித்திருத்தல் புறநானூற்றில்காணப்படுகிறது. விருந்து வரவில்லையென்றால், அதற்கென வருந்தி விருந்தினரைத்தேடித் தேரில் அழைத்து வந்து உண்பித்த அரசரும் அக்காலத்து இருந்தனர். சங்க காலத் தமிழகத்தில், முடிமன்னர், குறுநிலமன்னர், பெருஞ்செல்வர் ஆகியோரேயன்றி வறிய வாழ்க்கை உடைய குடிமக்களும், வேட்டுவரும், பிறரும் விருந்தோம்புதலைத் தம்கடமையாகக் கொண்டிருந்தனர் என்பதற்குரிய சான்றுகளும் உள்ளன.

சங்க காலத்துக்குப் பிற்பட்டதாகிய கம்பராமாயணத்திலும் விருந்தோம்புதல் அழகாகக் குறிப்பிடப் பெற்றுள்ளது. சீதை, இராமனைப் பிரிந்து அசோக வனத்தில் இராவணன் காப்பில் இருந்தபோது, விருந்து வந்தால், தான் இல்லாமையால் தன்கணவன் எத்தகையதுன்பம் அடைவானோ என்று எண்ணிக் கவன்றதாகக் கம்பர் கூறியிருப்பது இங்கு நினைவு கூரத்தக்கது.

சங்க காலத்தில், மக்களிடைப் பயின்றிருந்த விருந்தோம்பற் பண்பு, இன்றளவும் தமிழ் மக்களிடத்துக் காணப்படுகின்றது. உணவுக்குக் காத்திருப்போர் எவரேனும் வீட்டுக்கு வெளியில் இருக்கின்றனரோ என்று தாம் உண்ணச் செல்லுமுன் பார்த்து, இருந்தால் அவர்களுக்கு உணவிட்டுப் பின் தாம் உண்ணுதலை வழக்கமாகக் கொண்ட தமிழ்ப் பெருமக்கள் இன்றும் உள்ளனர். இத்தகைய தமிழ் உள்ளம் என்றும் நிலவுக.

இனிச் சங்கப் புலவர் ஒருவர் கூற்றிலிருந்து புலனாகும் சீரிய வாழ்க்கையைக் காண்போம்.

சீரிய வாழ்க்கை

பிசிராந்தையார் என்ற புலவர், பல ஆண்டுகள் வாழ்ந்து வந்தார். ஆயினும் அவரது தலைநரைக்கவில்லை. இதன் கார

23. புறநானூறு, 101

ணத்தை அறிய விரும்பிய புலவர்கள் அவரை அணுகிக் கேட்டனர் அப்புலவர் பெருமான் அவர்களைப் பார்த்து, "மாட்சிமைப் பட்ட குணங்களுடைய என் மனைவியுடன் மக்களும் அறிவு நிரம்பியவர்; என் ஏவலர் யான் கருதிய தனையே கருதுவர்; யான் இருக்கின்ற ஊரில், நற்குணங்க ளால் அமைந்து, பணியவேண்டும் உயர்ந்தோரிடத்துப் பணிந்து, ஐம்புலனும் அடங்கிய சான்றோர் பலர் வாழ்கின் றனர், எனது நாட்டை ஆளும்பாண்டியன் முறையல்லாதன செய்யான்"[24] என்று கூறினர்,

இக்கூற்றால் அறியப்படும் உண்மை யாது? ஒருவனது வாழ்க்கை இன்பம் பெற, அவன் வாழும் வீடு, அவன் வாழும் ஊர், அவன்வாழும் நாடு என்னும் மூன்றும் இன்பம் தருவனவாக இருத்தல் வேண்டும். வீட்டில் இன்பம் நிலவ, மனைவி மக்களும் ஏவலரும் தலைவன் கருத்தறிந்து நடத்தல் வேண்டும். ஊரில் நன்மக்கள் மிகுதியாக இருப்பின், அவ் வூரிலுள்ளார் நல்வழியிற் செல்வர். நாடாளும் வேந்தன் செங்கோலனாயின், அவனது ஆட்சியில் குடிகள் இன்பத் தையே பெறுவர். எனவே, வீடு, ஊர், நாடு என்னும் மூன் றும் செம்மையாக இருப்பின், மனிதன் கவலையற்ற வாழ்வு வாழமுடியும் என்பதே பிசிராந்தையார் பேச்சின் திரண்ட பொருளாம். இவ்வுயரிய வாழ்க்கையைப் பெறுவதே மக்கள் கடமையாகும். வாழ்க தமிழகம்.

வாக்கியத்தில் அமைத்தெழுது:

நீர்வழிச்செல்லும் தெப்பம் போல, நட்பையும் மதிப்பையும், நின்று நிலவுமாறு, கைம்மை நோன்பு.

வினாக்கள் :

1. பண்பாடு என்பது யாது? அதனை உடையவர் யார்? சான்று தருக.

2. எது சிறந்த அறிவுரை?

24. புறநானூறு, 191

3 பயன் கருதிச் செய்யும் அறம் எத்தகையது?

4. பண்டைத் தமிழர் தம் சீரிய பண்பாட்டிற்குச் சிறந்த எடுத்துக் காட்டாய அறிவுரை யாது?

5. புலவர்களின் நல்லியல்புகட்குச் சில சான்றுகள் தருக.

6. தமிழரசரின் ஒற்றுமையில்புலவர்கள் பேரார்வம்கொண்டிருந்தனர் என்பது எதனுல் உணரப்படுகிறது?

7. புலவர்கள் அரசர்பால் பெற்றிருந்த நன்மதிப்பை எதனுல் உணரலாம்?

8. வள்ளல்களிடம் புலவர்கள் கொண்டிருந்த நட்பையும், மதிப்பையும் உணர்த்துவன யாவை?

9. மகளிர் தம் பண்பாட்டை விளக்குக.

10. எல்லோரும் தவருமல் விருந்தோம்பல் வேண்டுமென்று அக்கால மன்னர் கருதினர் என்பது எதனுல் உணரப்படுகிறது?

11. விருந்தினரை உபசரிக்கும் முறை பற்றி வள்ளுவர் கூறியுள்ளது யாது?

12. பண்டைத் தமிழ் மகளிர் விருந்தோம்புதலிற் சிறந்து விளங்கினர் என்பதை விளக்குக.

13. சங்ககாலத்தில் முடிமன்னரும், குறுநிலமன்னரும், பிறரும் விருந்தினரைப் போற்றுதலிற் சிறந்து விளங்கினர் என்பதற்கு ஆதாரங் காட்டுக.

14. விருந்தோம்பல்பற்றிக் கம்பராமாயணத்திற் காணப்படுவது யாது?

15 பண்டையோரின் சீரிய வாழ்க்கைக்கு எடுத்துக்காட்டுத் தந்து அதனை விளக்குக.

கட்டுரை:

1. பண்டைத்தமிழ்ப் புலவர்களின் நல்லியல்புகள்,

2. பண்டை மகளிரின் பண்புகள், என்னும் தலைப்புகளில் தனித்தனியே கட்டுரை வரைக.

———::———

5. கலையா? அறிவியலா?

சொற்போர் மன்ற நிகழ்ச்சி
[வித்துவான் பொன். திருஞானசம்பந்தம்]

திருவள்ளுவர் கழக ஆண்டு விழா!

பட்டி மன்றம்

தலைவர் : பேராசிரியர் அறவாழி

தலைப்பு : சிறப்புக்குரியது கலையா? அறிவா?

சொற்பொழிவாளர்கள்:

கலை :	அறிவு :
புலவர் அமுதமொழி,	புலவர் அறிவழகர்,
புலவர் அன்பு மணி,	புலவர் தமிழரசர்,
திருமதி பொற்கொடி.	திருமதி கனிமொழி.

தலைவர் முன்னுரை:

தமிழ் போற்றும் சான்றோர்களே! சொற்பொழிவாற்ற வந்திருக்கும் புலவர் பெருமக்களே! செந்தமிழ்ச் செல்வங்களே!

உலகம் உய்தற்கு நாடு வாழ்தற்கு மக்கள் நலிவின்றி மகிழ்தற்குக் கலை தேவையா? அறிவு தேவையா? என்ற தலைப்பிலே பண்பாடும் புலமையும் மிக்க சான்றோர்கள் ஒட்டியும் வெட்டியும் பேச இசைந்துள்ளார்கள். கலை என்பது நுண்கலைகளை மட்டுமன்றி தத்துவம், பொருளாதாரம், வரலாறு, மொழி முதலிய கலைகளைக் குறிக்கும். அறிவு, விஞ்ஞானம், மருத்துவம் போன்ற துறைகளைக் குறிக்கும் என்ற குறிப்பை உளத்தை கொண்டு பேசுமாறு பேச்சாளர்களை வேண்டிக் கொள்கிறேன். இனி, பட்டி மன்றம் மலர்கிறது. வாழ்க தமிழ்.

புலவர் அமுதமொழி: கலை

பேராசிரியர் பெருந்தகை அவர்களே, பட்டி மன்ற நண்பர்களே, ஏனைப் பொது மக்களே ! வணக்கம்

கலை என்பது வாழ்வை இன்பமயமாக்கும் ஒரு கலை. வாழ்வுக்கு அடிப்படையாகவுள்ள பொருளாதாரம், வளர்ச்சியைக் குறிக்கின்ற வரலாறு, தூய்மையை வளர்த்துச் சமுதாயத்தை மறுவற வாழச் செய்யும் மெய்யுணர்வாகிய தத்துவம், கருத்துக்களை வெளிப்படுத்தும் மொழி முதலிய கலைகளைக் கல்வியாளர் மனித இயல் (humanitic) என்பர். இம்மனித இயல்பாற்பட்ட கலைகள் மனிதனை மையமாக வைத்து மனிதன் வாழவேண்டும் என்பதற்காகவே இயங்கி வருகின்றன. இதற்கு மாருக விஞ்ஞானம் என்னும் அறிவு மனிதனுல் உணரப்பட்டுச் செயல்படுவதாயினும் மனிதனை மறந்து எங்கோ வானத்திலே பறக்கிறது. விஞ்ஞானச் சாதனைகளின் விளைவாக மனிதன் இரக்கமும் உணர்வுமற்ற எந்திரங்கள் போன்று வாழ்கிருன். எந்த நேரத்தில் எந்தக்குண்டு உலகைஅழிக்குமோ எவ்வகையில் உலகுக்கு அழிவு வருமோ என்று அஞ்சி அஞ்சிச் சாகின்ற நிலை வந்து விட்டது. மனிதனின் வாழ்க்கை நம்பிக்கையைக் குலைத்து எந்திரங்கட்கு அடிமையாக்கி, எந்திரங்கட்கே அஞ்சி வாழும் எந்திர வாழ்க்கை முறையை ஏற்படுத்திய விஞ்ஞானம் உலகை அழிவுப் பாதைக்குக் கொண்டு செல்வதை நாம் அறிவோம். விஞ்ஞானச் சாதனைகளை ஏற்படுத்தி விட்டதாக எண்ணிக் கொண்டு ஒரு நாடு இன்னெரு நாட்டை மிரட்டுவதையும், அச்சுறுத்துவதையும் காண்கிரும். போர்வெறி தலைவிரித்தாடுவதற்கு இவ்விஞ்ஞான அறிவே காரணம். உணவுக்கும் உடைக்கும் திண்டாடும் நிலை ஒரு முறை நிற்க விஞ்ஞானம் தந்த போர்க் கருவிகட்காக எவ்வளவு பணம் வீணுகிறது. விஞ்ஞானம் தந்த ஆடம்பரப் பொருள்கட்காக எவ்வளவு முயற்சி வீணுகிறது.

விஞ்ஞானம் இன்றிருக்கும் அளவில் வளர்ந்திராத நாளில் மனிதன் வாழவில்லையா ? இப்பொழுதிருப்பதை விட மிகுதி யான அன்போடு மிகுதியான வளத்தோடு அன்றும் மக்கள் வாழ்ந்திருக்கிருர்கள். அறிவாகிய விஞ்ஞானம் தந்த பரிசு அச்சமும், வறுமையும் தான். மனித இயற் கலைகள் வளர்ந் தால் மனித வாழ்வு ஒழுக்கமுறைகளால் மேலும் மேம்படும். வறுமை ஒழியும்; வளம் சுரக்கும்; வாழ்வு மலரும் எனவே வளர்க மனித இயற்கலைகள் என்று கூறி முடிக்குதும்.

புலவர் அறிவழகர் : அறிவு

அவைத் தலைவர் அவர்களே, நண்பர்களே, மெய்யன்பர் களே !

இதுவரை பேசிய புலவர் அமுதமொழியார் அவர்கள் அறிவியற்கலைகள் அனைத்தும் அழிவையே ஏற்படுத்தின என்று மெய்ப்பிக்க முயன்ருர். ஆனுல் நீங்கள் நம்பவில்லை. புலவர் அமுத மொழியார் பேசுதற்கு உதவிய ஒலி பெருக்கி, அவர் இவண் வருதற்கு உதவிய கார், இம்மன்றத்தில் அழகுற ஒளிவீசும் மின் விளக்குகள், நாம் அணிந்திருக்கும் ஆடை, அழைப்பிதழை அச்சிட்ட அச்சு எந்திரம் இவை எல்லாம் விஞ்ஞானம் தந்த பரிசுகள் என்பதைப் புலவர் மறந்து விட் டார் பொருளாதாரத்தை மேம்படுத்தத் தொழில் எந்திரங் களைத் தந்துள்ளது அறிவியல். தத்துவ மெய்யுணர்வை வளர்க்க நூல்கள் பலவற்றை அச்சிட வாய்ப்புத் தந்தது அறிவியல். மனோதத்துவ மருத்துவ ஆராய்ச்சிகட்கான நுண் கருவிகள், மருந்துகள் முதலியவற்றைத் தந்துள்ளது அறிவியல். மொழிவளர செய்தித்தாள்கள், வானெலி, ஒலி பெருக்கி போன்றவற்றைத் தந்தது அறிவியல். நடக்க, படிக்க, பேச எல்லாவற்றிற்கும் விஞ்ஞானம் மிகுந்த வசதிகளைச் செய்து தரவில்லையா ? புலவரின் கண் ணிலே வெறும் போர்க் கருவிகள் மட்டும் தானு படவேண்

டும். உங்கள் மனித இயல் ஒழுக்க எண்ணம் குறைந்த காரணத்தால் தானே போர் மூள்கிறது. விஞ்ஞானத்தை மனிதன் தானே அழிவுக்குப் பயன்படுத்துகிறன். மனிதனைக் குறை குறை கூருது விஞ்ஞானத்தைக் குறை கூறுவதில் என்ன உண்மை இருக்கிறது. பொது மக்களே நீங்கள் சொல்லுங்கள். விஞ்ஞான வளர்ச்சி இல்லை என்றால், நாட்டில், உலகில் இவ்வளவு வளர்ச்சி, மேம்பாடு, நாகரிகம் முதலியன ஏற்பட்டிருக்க முடியுமா ? மின்சாரம், கார் வசதி, தொழிற்சாலைகள் முதலியன இல்லாத ஊரை யார் விரும்புகிருர்கள் ? விஞ்ஞானம் இன்றேல் வாழ்க்கை வசதிகள் இல்லை. விஞ்ஞானியாகிய டாக்டர் இல்லை யென்ருல் வாழ்க்கை இல்லை என்ற நிலை ஏற்பட்டிருக்கின்ற இக்காலத்தில் விஞ்ஞானக்தைக் குறை கூறுவது மீண்டும் கற்காலத்துக்குச் செல்வோம் என்று கூறுவது போலாகும். எனவே வறுமை போக்க எல்லோர்க்கும் எல்லாம் கிடைக்க விரும்பிஞல் விஞ்ஞானத்தால் தான் முடியும் என்றியம்பி அமைகிறேன். வணக்கம்.

புலவர் அன்புமணி : கலை

கட்சித் தலைவர்களே ! புலவர்களே ! பெரியோர்களே !

அறிஞர் அறிவழகர் அவர்கள் ஏதோ விஞ்ஞானச் சாதனைகள் பற்றிப் பலபடப் பேசினர்கள் என்றலும், விஞ்ஞானத்தின் பெயரால் பணம் சேர்க்கும் கூட்டம் மிகுந்து விட்டது. அது காரணமாகவே நாட்டில் பொருளாதார ஏற்றத் தாழ்வு மிகுதியாகிறது என்பதை மெய்ப்பிக்க விழைகிறேன். நம் நாட்டில் அரசாங்கம் ஐந்தாண்டுத் திட்டங்கள் வழியாகச் செய்த பல நற்பயன்களின் பொருளாதார வளத்தைப் பொறியியல் வல்லுநர்களும், மருத்துவர்களும் விழுங்கி விட்டார்கள். மருத்துவத் தொழில், பொறியியல் துறைப் பதவி இவை இரண்டும்தாம் மிகுதியான வருவாய் தருவன

என்று கருதி, பணக்காரர்கள், அதிகாரிகள், வசதியுள்ளவர்கள் எல்லோரும் தம் பிள்ளைகளைக் கல்லூரிகளில் எப்படியாகிலும் டாக்டர் பயிற்சிக்கும், பொறியியல் பயிற்சிக்கும் அடிப்படையான விஞ்ஞானப் படிப்பையே படிக்க வைக்க வேண்டும் என முயல்கின்றனர். இந்த விஞ்ஞானம் பண ஆசையைத் தூண்டி விட்டதன் விளைவே இது. உழைப்புக்கேற்ற ஊதியம், சமத்துவம், நேர்மை, இரக்க இதயம் முதலிய எல்லாவற்றையும் மறந்து டாக்டர் ஏழையாக இருந்தாலும் பணக்காரராக இருந்தாலும் ஊசி குத்தினால் இரண்டு ரூபாய், தொட்டுப் பார்த்தால் ஐந்து ரூபாய் என்று கேட்கும் நிலை உள்ளது. நல்லதோ கெட்டதோ தமக்குப் பணம் சேர வேண்டும் என்ற ஆசையில் பொறியியலார் அரசாங்கம் கட்டும் கட்டிடங்கள், அணைகள், பாதைகள் முதலியன எப்படித் தரக் குறைவாக இருந்தாலும் பரவாயில்லை என்று ஒப்பந்தக் காரர்களிடம் கைக் கூலி வாங்கிக் கொண்டு குறுகிய காலத்தில் பெரும்பணக்காரர்கள் ஆக முயல்வதைப் பார்க்கிறோம். திருமணக் காலத்தில் கூட மருத்துவம், பொறியியல் படித்த மாப்பிள்ளைகள் எச்சாதியினராயினும் பெருமளவில் வரதட்சிணை வேண்டுவதைப்பார்க்கிறோம். நான் விஞ்ஞான அறிவியலைக் குறை கூற விரும்பவில்லை. விஞ்ஞானம் படித்தவர்கள் இதயத்தை இழந்து மக்களைச் சுரண்டுகிறார்கள். விஞ்ஞானப் படிப்பு என்றால் எளிதில் பணம் சேர்க்க வசதியானது என்றாகிவிட்டது. எனவே மனித இயல் இவற்றிற்கப் பாற் பட்டு நாடு வாழ மக்கள் வாழ வறுமை போக்க சமத்துவம் ஏற்பட வழிவகுக்கும்என்றுகூறி விடைபெறுகிறேன்.

புலவர் தமிழரசர் : அறிவு

பட்டிமன்றப் பேச்சாளர்களே, தலைவர் அவர்களே, தமிழ்ப் பெருங்குடி மக்களே என் நன்றி கலந்த வணக்கம்.

எனக்கு முன் பேசிய பெரியார் விஞ்ஞானமாகிய மருத்துவம், பொறியியல் படித்தார் செய்யும் சில இழி செயல்களைக் காட்டி அவ்வறிவியலே கூடாது எனப் பொய்த்துரைத்தார். மனித இயற் கலைகளுள் தத்துவம் போன்ற சிலவற்றைப் படித்துப்படித்து இந்தியர் சோம்பேறிகளாய் ஆகிவிட்டனர் எனின் மிகையாகாது. விஞ்ஞானத்தைப் போருக்குப் பயன்படுத்தியதன் விளைவாகத் தீமை வந்தது உண்மை ஆனல் அணுசக்தி முதலிய பிற சக்திகளை ஆக்கப் பணிக்குப் பயன்படுத்தும் விஞ்ஞானக்கலையும், நோயின்றி மனிதரை வாழச் செய்யும் மருத்துவ விஞ்ஞானமும், மின்சாரத்தையும் வானெலியையும் தந்த கண்டுபிடிப்புகளையும் தீமை பயப்பன என்று மொழிவது அடாப் பழியாகும். கார்டிசோன் மருந்துகள் மனிதனை முன்னூறு ஆண்டுகள் வரை வாழ வைக்குமாறு கண்டு பிடிக்கப் பட்டுள்ளன. பயிர்த்தொழிலில் முன்னேற்றம், வீடு கட்டும் முறையில் முன்னேற்றம், முதலியன எல்லாம் விஞ்ஞானம் தந்த பரிசுகளன்றே ! சந்திரமண்டலத் தியல் கண்டு தெளிவதும், உணவு உடை பற்றுக் குறைகளைப் போக்கச் செயற்கை வழிகளை ஆய்வதும் விஞ்ஞானமா மனித இயற் கலைகளா என்பதை நீங்கள் ஆராய வேண்டும். போர் அச்சம் போன்ற சிறு குறைகள் ஆருப்பதைக் காட்டி விஞ்ஞான அறிவே நன்மை பயக்கவில்லை என்று மொழியும் பொய்மையை யாரே ஏற்க வல்லார். விஞ்ஞானிகளால் தீமை வந்ததென்ருல் உங்கள் மனித இயற்கலைகள் ஏன் ஆற்றல் இழந்தன, அவை மனிதனை மனிதனுக்க முயன்று வெற்றி கண்டிருக்கலாமே. உங்கள் தத்துவமும், பொருளாதாரக் கொள்கையும் இன்ன பிறவும் விஞ்ஞானத்துக்கு அடிமைகளாகி விட்டன என்பதை நாம் மறக்கவோ மறைக்கவோ இயலாது. இவ்வாய்ப்பினைத் தந்த மன்றத்திற்கு நன்றி.

திருமதி பொற்கொடி: கலை

இதழ் விரிந்த தாமரை போன்று முகமலர்ந்து அமர்ந்திருக்கும் தலைவர் ஐயா அவர்கட்கும் ஏனை உடன் பிறப்பாளர்க்கும்என் முதல் நன்றி.

எனக்கு முன் சிறப்புற பேசிய பேரறிஞர் மனித இயற்கலைகள் விஞ்ஞான அறிவு அடிமை கொண்டு விட்டது எனப் புகன்றூர்கள். மனித இயற்கலைகள் இருப்பதால்தான் உலகில் இந்த அளவாகிலும் அற நெஞ்சமும், ஒழுக்கமும் கட்டுப்பாடும் உள்ளன என்பதை நாம் அறிய வேண்டும். விஞ்ஞானம் அடிப்படையிலேயே தீமை உடையது என்று நாங்கள் சொல்லவில்லை ஆனால் விஞ்ஞானப் போர்க்கருவிகளின் கண்டுபிடிப்பால் ஆணவம், போட்டி நெஞ்சம், பகைமை, நம்பிக்கை இன்மை, சூது முதலியன அளவை மிஞ்சித் தலை தூக்கி விட்டதால் குறை கூறுகிறோம். கலையறிவுடைய பொதுமக்கள் விஞ்ஞானத்தை மதிப்பது போன்று தத்துவம், பொருளாதாரம் போன்ற மனித இயற்கலைகளை விஞ்ஞானக் கல்வியாளர் மதிக்காத காரணத்தால் தான் விஞ்ஞானக் குறைபாடுகள் எழுந்தன. மனித அறிவு சரிவர வளர ஒழுக்கமும் பண்பும் தேவை. அவற்றை உண்டாக்க மனித இயற்கலைகளே தேவை. அரசியல் அமைப்பில் பொருளாதாரத் திட்டம்என்ற ஒன்று செயல்படுகிற காரணத்தால் தான் பேராசைக் காரர்கள் ஆளை விழுங்கமுடியாத அமைப்பு ஏற்பட்டிருக்கிறது. எனவே மனித இயற்கலைகள் தாம் உலகை, நாட்டைக் காத்து வருகின்றன என்று கூறி முடிக்குதும். வணக்கம்.

திருமதி கனிமொழி: அறிவு

அறிவுசால் தலைவர் அவர்களே, புலமைசால் பேரறிஞர்களே, ஏனைப் பெரியோர்களே ! வணக்கம்.

விஞ்ஞானம் சிறப்புடையது என்பது சொல்லித் தெரிய வேண்டியதில்லை. நாள்தோறும் உயர்ந்துவரும், அறிவையே விஞ்ஞான அறிவு என்கிறோம். மனிதன் மனிதத்துவத் தோடு வாழ மனித இயற்கலைகள் தேவைதாம் எனினும், மனித வாழ்வை இன்பகரமாகவும், வசதி மிக்கதாகவும் ஆக்கிய சிறப்பு விஞ்ஞானத்துக்கே உண்டு. இந்தியா உலக நாடுகளோடு சமமாகத் தலை தூக்கி நிற்க வேண்டுமெனில் இந்தியரிடையே விஞ்ஞான அறிவு மிக வளர வேண்டும். விஞ்ஞான அறிவு அழிவுக்குப் பயன்படுத்தப்படக் கூடாது என்பதை நாம் ஏற்றுக் கொள்கிறோம். நன்மைக்குப் பயன் படும் விஞ்ஞானம், என்றும் நன்மையையே நல்கும் என் பதைக் கூறுவதில் எனக்கு ஐயமில்லை. விஞ்ஞான வளர்ச்சி வேண்டாம் என்பதோ அல்லது விஞ்ஞான அறிவு தீதென மொழிவதோ உண்மை மேம்பாட்டை வேண்டாம் என மொழிவதாகும். வசதியான வாழ்க்கை வேண்டும் என்று மட்டும் நினைத்து ஏங்கிக் கொண்டு, அதனைத் தரும்விஞ்ஞானம் சிறப்புக் குரியதன்று என்று கூறுவது வெற்றுவாதமே யன்றி உண்மையாகாது. குழந்தையொன்று உண்ணும் போது விக்கி உயிர் விட்டது. ஆகையால் குழந்தைகட்கு உணவே தரக்கூடாது என்பதைப் போன்றது விஞ்ஞானம் சிறப் புடைத் தன்று என்று கூறுவது எனக் கூறிமுடிக்கிறேன்.

வணக்கம்

புலவர் அமுத மொழியாரின் இறுதி உரை

தலைவரவர்களே, பட்டிமன்றப் பேச்சாளர் பெருமக்களே!

வணக்கம்.

இதுகாறும் இருதரப்பு நண்பர்களும் எதிர்வாதிட்டனர். பட்டி மன்ற வாதத்தை மனித இயற்கலையின் சார்பாகத் தொடக்கி வைத்த யான் இறுதியாக மறுப்புரைகட்கு மறு

மொழி கூறவேண்டி இவண் நிற்கிறேன். நான் மிகுதியாகப் பேச விரும்பவில்லை. மனிதன் விஞ்ஞான அறிவை வளர்த்து எந்திரங்களை, பிற வாழ்க்கை வசதிகளை, மருத்துவம், ஊர்தி இயல் போன்றவற்றைக் கண்டு வளர்த்தான். எல்லாவற்றையும் ஆக்கியவன் மனிதன். அறிவு மனிதஇயல்பு. அவ்வறிவு மனிதனுள்எழுந்தது. மனிதனை மனிதனாகவாழவைப்பன வெல்லாம் வரட்டும்; வளரட்டும். மனிதனை அழிக்க ஏதேனும் அறிவியல்உருவிலோவேறெந்தஉருவிலோவந்தாலும்நமக்கு வேண்டாம். மனித நெஞ்சத்தை வளர்க்கச் சமுதாய நோக்கத்தை மேம்படுத்த மனித இயற்கலைகளே தேவை. எனவே நாடு வாழவழிவகுக்கும் அல்லது சமுதாயம் வாழ வழிவகுக்கும் சிறப்புக்கு உரியன மனித இயற்கலைகளே எனக்கூறி அமைகிறேன்.

தலைவர் பேராசிரியர் அறவாழியின் முடிப்புரை

பட்டி மன்றத்தில் பங்கு கொண்டு சிறப்புறப் பேசிய புலவர் பெருமக்களே! தமிழன்பர்களே!

இனிய சொன்மாரி பெய்தது. கருத்துக் குவியல்கள் சொரியப்பட்டன. கலை சிறப்புக் குரியதா? விஞ்ஞானம் சிறப்புக்குரியதா? சொற்பொழிவுகளைவைத்துக்கொண்டு ஒரு முடிவுக்குவர இயலவில்லை. இரு கட்சியினரும் உண்மையைச் சொன்னார்கள். முடிவாகச் சொல்லுவதெனின், கலையாயினும் அறிவாயினும் எதுவாயினும் மனித வாழ்வின் மேம்பாட்டுக்கு வழி வகுப்பதாக அது இருக்க வேண்டும். மனித இயற்கலைகள் எனப்படும் பொருளாதாரம், தத்துவம், வரலாறு முதலியன, தம்மால் இயன்றவரைமனித சமுதாயத்தை அதிக அளவில் காக்க முயல்கின்றன. இப்பொழுது நடைமுறையில் இருக்கின்ற பொருளாதார அரசியல் முறைகள் கூடப்பணக்காரர்கட்குத் தருமளவுஏழைகட்குப் பாதுகாப்பினைத் தருவதில்லை' என்று சில குறைபாடுகளைக் கூறுவ

துண்டு. விஞ்ஞானம் எவ்வளவோ நன்மைகளைச் செய்துள்ளது எனினும் போரின்வழி அழிவை ஏற்படுத்துவதை எண்ணி, அச்சம் மேலோங்குகிறது. அதுவிஞ்ஞானக்கண்டு பிடிப்பாயினும் சரி, பொருளாதாரக் கொள்கையாயினும் சரி, அரசியல் சட்டமாயினும் சரி, மனித இனத்தின் ஒரு பகுதி அதனால் அழிவுறுமாயின் அதனைத் தவிர்க்க வேண்டும். நல்ல எதிர்காலச் சமுதாயம் அமைய எல்லோரும் மனித இயற்கலைகள், விஞ்ஞானம் ஆய இரு கலைகளையும்கற்கவேண்டும். எல்லாம் சமுதாயத்துக்காக என அமையுமாயின் ஒன்றற்கொன்று உயர்வு தாழ்வு இருக்காது.

பொதுவாக நம்மவருள் பலருக்குத் தொண்டுஎண்ணத்தைவிடச் செல்வம் சேர்க்கும் எண்ணம் மிகுந்து விட்டது. விஞ்ஞானம் படித்தால் வருவாய்நிறையவரும்என்றெண்ணுகின்றனர். கல்லூரிகளில் படிக்க விரும்பும் எல்லோரும் டாக்டராகவோ, அல்லது எஞ்சினீயராகவோ படிக்க வேண்டும் என்று நினைக்கின்றனர். இதற்குக் காரணம் இவ்விருதுறைத் தொழில்களிலும் மிகுதியான வருவாய் கிடைக்கிறது. இந்தப் பணஆசை படிப்பின் வழியாக வருவது நாட்டின் வளர்ச்சிக்குக் குறைபாடேயாகும். இப்பட்டிமன்றத்தின் பயனே இதுவாக வேண்டும். அறிவு வளர்ச்சிக்கும், தொண்டு வளர்ச்சிக்கும் படிப்பு வேண்டுமேயன்றிப் பணம் சேர்ப்பதற்குப் படிப்பு என்று ஆகிவிட்டால் சமுதாயம் அழிந்துவிடும். எனவே செல்வத்தை எதிர் நோக்கி விஞ்ஞானம் படிக்கும் மனப்பான்மை குறைய வேண்டும். தொண்டு நெஞ்சத்தை வளர்க்க வல்லவை மனித இயற்கலைகளேயாம். விஞ்ஞானம்படிப்பவரும் பக்திப் பாடல்கள், தத்துவங்கள் முதலியவற்றைப் படித்து, ஏழைகளையும் பொது மக்களையும் வாழவைக்க முயலும் பெற்றியராயின் விஞ்ஞானத்தின் முழுப்பயன் கிடைக்கும். முடிவாக, மனித இயற்கலைகள், விஞ்ஞானம் இருவகை அறிவையும்

எல்லோரும் பெற்றுத் திகழ்வாராயின் நன்மை விளையும். இவ்விரண்டில் தனிச் சிறப்பு இரண்டனுக்கும் உண்டு. அவற்றைச் சமுதாயம் வாழப் பயன்படுத்துவோம்.

வணக்கம்.

நன்றி நவிலல்.

நாட்டு வாழ்த்து.

வாக்கியத்தில் அமைத் தெழுதுக

நலிவின்றி, ஓட்டியும் வெட்டியும், நுண்கலை, மனித சமுதாயம், உயர்வு தாழ்வு, பேராசை.

வினாக்கள்:

1. கலை, அறிவு என்பன யாவை ?
2. எவற்றைக் கல்வியாளர் மனித இயல்என்பர் ?
3. விஞ்ஞானத்தால் விளையும் தீமை பற்றிப் புலவர் அமுதமொழியாது கூறியுள்ளார் ?
4. விஞ்ஞானம் தந்த பரிசுகள் யாவை ?
5. விஞ்ஞானமே சிறந்தது என்பதைப் புலவர் அறிவழகர் எவ்வாறு எடுத்தியம்பினர் ?
6. விஞ்ஞானத்தின் பெயரால் பணம் சேர்க்கும் பழக்கம் மிகுந்துவிட்ட தென்பதைப், புலவர் அன்பு மணி எவ்வாறு விளக்கினர் ?
7. தீமைபயவாத விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள் சில கூறுக ?
8. கலையைக் காட்டிலும் அறிவியலே சிறந்தது என்பதைப்புலவர் தமிழரசர் எவ்வாறு எடுத்துக் காட்டினர் ?
9. விஞ்ஞானப் போர்க் கருவிகளால் தலைதூக்கியவை யாவை ?
10. மனித இயற்கலைகள்தாம் உலகையும் நாட்டையும் காத்துவருகின்றன என்பதை, திருமதி-பொற்கொடி எவ்வாறு விளக்கினர் ?
11. விஞ்ஞானம் சிறப்புடைத்தன்று என்று கூறுவது பொருந்தாது என்பதை திருமதி கனிமொழியார் எவ்வாறு, எடுத்துக் காட்டினர் ?
12. புலவர் அமுதமொழியாரின் இறுதி உரையாது?
13. பேராசிரியர் அறவாழியின் முடிப்புரையைத் தொகுத்துக் கூறுக.

கட்டுரை :

1. விஞ்ஞானத்தால் விளையும் நன்மை தீமைகள்.
2. அறிவைப் பெறுதற்குரிய வழிகள்.

6. பாரதியும் இந்திய ஒருமைப்பாடும்

[கவிஞர் இளம்பூரணன்]

"இந்தியா ஒரு நாடுதானா? இன்றேல் பல்வேறு நாடுகளின் கூட்டமைப்பா? என்ற ஐயம் இன்றும் பலரிடத்தே தெளிவு பெறுது நிற்கின்றது. வரலாற்றறிவும் பூவியல் எண்ணமும் போதிய அளவு இன்மையே இவ்வையப் பாட்டிற்குக் காரணம். இந்தியா ஒரே நாடுதான் என்பதை வரலாற்றுப் பேரறிஞர் வின்சண்ட்ஸ்மித், பூவியல்ஆராய்ச்சியாளர் சீஷோம் போன்றவர்கள் பன்முறையும் தெளிவு படுத்தியுள்ளனர். அன்று அறிவியல் இத்தனை அளவு வளர்ந்திராத காலத்தில், வாழ்க்கை வசதிகள் பெருகியிராத நாளில், தாமென வாழ்ந்த இனத்தவர் பலரும் தனித் தனியே வாழ்ந்தனர். அவ்வவ்வினத்து வல்லவராயிருந்த தலைவர் ஒவ்வொருவரும் தத்தமக்கு ஆளும் வாய்ப்பு வேண்டும் என்ற ஆசை கொண்டு தனித்தனியே குறுநில அரசுகளை விடாது கொண்டனர். ஒரு குடைக்கீழ் இந்தியா முழுவதையும் கொண்டு வருவதற்குப் போதிய வசதிகள் இன்மையாலும், அன்னியர்தம் படையெடுப்புக்கள் காரணமாகவும், உள்நாடுகளின் ஒற்றுமையின்மையாலும் இந்தியா ஒரே அரசியல்நாடாகப் பண்டைக்காலத்தே அமையவில்லை. இந்தியாவில் வழி வழி வந்த பரவல் முறை வாழ்வும் இதற்குத் துணை நின்றது. ஆனல் இன்று இருபதாம் நூற்ருண்டில் ஆயிரக்கணக்கான மைல் தொலைவை மணிக்கணக்கில்கடக்கவும், நிமிடக் கணக்கில் தொலைபேசி முதலியவற்றுல் தொடர்பு கொள்ளவும் தக்க வாய்ப்பும் வசதியும் உள்ள இந் நாளில் இந்தியா சிறு சிறு நாடுகளாகச் சிதைந்து உயரிழக்கத் தேவையில்லை.

பண்டைத் தமிழர்கள் சங்ககாலம் தொட்டு இந்தியாவை ஒரே நாடாகக் கருதி வந்துள்ளனர் என்பதற்கான

சான்றுகள் மிகுதியும் உள. 'வட பெருங்கல்' என அழைத்து, இமயத்தை வட எல்லையாகக் கொண்டு வாழ்ந்த பண்டைத் தமிழர் இமயத்தின்மேல் உரிமை கொண்டாடியதும்; கங்கையின் தூய்மையினைப் பாராட்டியதையும், இமயத்தில் சேர சோழ பாண்டியர் சின்னம் பொறித்ததையும் சிலப்பதிகாரம், புறநானூறு போன்ற இலக்கியங்களிற் காண்கிறோம். ஆராய்ச்சியும், சங்ககால எண்ணமும் நிற்க நம்மோடு அண்மைச் காலம் வரை வாழ்ந்த பாரதியின் ஒருமைப்பாடு பற்றிய கருத்துக்களைக் காண்போம். நம் நாட்டில் சித்தர் பலர் வாழ்ந்தனர். அவர் பொய் கூறியதில்லை. அவர் தம் வாக்குகள் பொய்த்ததுமில்லை. பாரதியும் ஒரு சித்தர்.

"எனக்குமுன்னே சித்தர்பலர் இருந்தாரப்பா!
யானும் வந்தேன் ஒருத்தன் இந்நாட்டில்"

என்று பாரதியார் தாமே தன்மை அறிமுகப்படுத்திக் கொள்ளுகிறார்.

பாரதத்தின் விடுதலைக்காக விஞ்சு துரையிடம் வ. உ. சிதம்பரம் பிள்ளை வாதாடுவதாக பாரதி பாடும் பகுதியில், இந்தியாவின் விடுதலைக்கான ஒரே வழியை

"ஒற்றுமை வழியொன்றே வழியென்பது
ஓர்ந்திட்டோம் நன்கு தேர்ந்திட்டோம்"

என்ற அடியில் வ. உ. சியின் வாயாற் கூறுகிறார். ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் இந்தியாவின் செல்வமெல்லாம் கொள்ளை போயிற்று. வறுமை மிஞ்ச உப்புக்கும், புளிக்கும், பிறரை நாடி வாழவேண்டிய இக்கட்டு தொடங்கிவிட்டது.

இங்குச் சற்று பண்டை இந்தியாவின் சமுதாய அமைப்பை நினைவு கூற வேண்டியுள்ளது. சிந்து வெளி நாகரிக காலத்திலும் வேத காலத்திலும், இந்தியாவின் ஆட்சி

எல்லையின் அளவு ஊர் அல்லது கிராம அளவுக்குக் குறுகியிருந்தது. பல்லவர் காலத்தில் இன்றைய மாவட்டங் களின் அளவுக்கு அவ்வாட்சி எல்லை வளர்ந்திருந்தது. அன் றைய மக்களின் தேவையும் இக் கிராம, கோட்ட எல்லைகட் குள் அடங்கி நின்றது. இன்று கங்கை நதிப்புரத்துச் சணல் காவிரி நெல்லை அளக்கத் தேவை. கன்னடத்துத் தங்கம் மராட்டிய மகளிர் பேரழகிற்கு அணி செய்கின்றது. அம் மட்டுமின்றி இன்றைய நம்முடைய தேவைகள் வாழ்வியல் வழிகள் இந்திய எல்லையையும் கடந்து வேற்று நாடுகளை நாடுவனவாக உள்ளன. உலக அரங்கில் மலைகளென நிமிர்ந்து நிற்கும் நாடுகளெல்லாம் என்று போர் வருமோ என அஞ்சிச் சாகின்றன. பெரிய மீனின் வயிற்றில் சிறு மீன்கள் வீழும் நிலையே மற்றை நாடுகளின் நிலை. இந்திய நாடு எண்ணிறந்த சிறு நாடுகளாகி, அண்டை நாடுகளா கும் அவை ஒன்றோடொன்று பகைமை கொண்டு ஒவ் வொன்றும் வெவ்வேறு பெருநாடுகளின் வலைகளில் விழு மாறு கோட்டைக்கு உள்ளேயே பெருச்சாளியைக் காவல் வைத்தது போன்ற நிலை ஏற்பட்டு விட்டால் இந்தியாவின் நிலை என்னவாகும்.

மேற்கண்டவற்றிற் கப்பாற்பட்டு இந்தியாவின் பண் பாட்டிலும், நாகரிகத்திலும் உள்ள ஒருமைப்பாட்டினைப் சமயம், சமுதாயம், பூவியல், அரசியல், மொழியியல் கலை கள் ஆய பல துறைகளிலும் ஆய்ந்து படித்தோர் காணல் எளிது.

“பாரத தேசமென்று பெயர் சொல்லுவார்—மிடிப்
பயங் கொல்லுவார் துயர்ப் பகைவெல்லுவார்

என்ற பாட்டின் பல்லவியே ஒருமைப் பாட்டு எண்ணத் தின் காரணத்தை எளிதிற் காட்டுவது போன்றமைகிறது. தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகை செய்

தல் வேண்டும் எனப் பாடிய தமிழ் மறவன் பாரதி. செந் தமிழ் நாடென்னும் போதினிலேயே இன்பத் தேன் வந்து காதிற் பாயுமளவிற்குத் தமிழ் பாடும் பாவலன். சாதியின் பெயரால் எழும் சழக்குகளைப் பாடுகையில் பார்ப்பனரை இகழ்ந்த சீர்திருத்தவாதி பாரதி. சாதி, இன வேற்றுமை களைக் கடந்ததோடன்றி ஆசையை அறவே உதிர்த்த முனிவனாகவும் பாரதி திகழ்கிறான். தமிழ், தமிழ்நாடு என் றெல்லாம் பண் பாடும் அதேபாரதிதான் ஒருமைப்பாட்டை எண்ணுகின்றான். பாரதி தமிழினத்தவரின் எதிரியில்லை. பாரதிக்கு வடநாட்டில் செல்வாக்கிருந்ததுமில்லை. தமிழர் வாழ்வதில் பேரார்வம் கொண்டவன் பாரதி. பாரத தேசத் தைப் பார்க்கிறான். அதன் வளங்கள் கண் முன்னர் வந்து நிற்கின்றன.

"தென் கடலில் முத்துக் குளிக்கின்றனர்
மேற்குக் கரையிலே கடல் வாணிகம் நடைபெறுகிறது
கங்கைப் புறத்து கோதுமை விளைகிறது
காவிரிக் கரையில் வெற்றிலை படர்கிறது
மராட்டியப் புலவர் பாடல் இசைப்பர்
சேரத்து யானைகள் தந்தங்கள் நல்குவன
காசி நகர்ப் புலவர் உரைசெய்வர்
காஞ்சிப் புலவர் பலர்கேட்டு மகிழ்வர்
இராசபுதனத்து வீரர் மறத்திறம் காட்டுவர்
கன்னடத்துத் தங்கம் பரிசளிக்க ஏற்றது
இந்நாட்டில் சாதி இரண்டொழிய வேறில்லை என
[ஔவை சொன்னார்"

என்பனவாய கருத்துக்களை அப்பாட்டின் இடையே வைக் கிறார்.

"சிந்து நதியின் மிசை நிலவினிலே
சேர நன்னாட்டிளம் பெண்களுடனே
சுந்தரத் தெலுங்கினில் பாட்டிசைத்துத்
தோணி களோட்டி விளையாடி வருவோம்"

என்ற சரணத்தில் இந்தியாவில் வேற்றுமைப்பட்டு வாழும் பல்வேறு வாழ்வினர் ஒருவரோடொருவர் இணங்கித் தொடர்பு கொண்டு வாழவேண்டிய முறைகள் இசை மணக்கின்றன.

தாயின் மணிக்கொடிக்கு வணக்கம் செலுத்த அணி அணியாக வீரர் நிற்கின்றனர். அக்காட்சியைக் கவிஞர் ஆரியக் காட்சி என்று பாடுகிருர். செந்தமிழ் நாட்டு வீரர் முதலாக பஞ்சநதத்து வீரர் ஈருக அனைவரையும் அணி வகுக்கச் செய்து, அனைவரையும் சேர்த்து ஆரியக் காட்சி என்ருர். பாரதியார் "ஆரியர்" என்ற சொல்லை இனப் பாகுபாட்டுப் பொருளில் ஆளவில்லை. ஆரியர் என்பதற்கு வீரர் என்று பொருள். வீரம் செறிந்த இந்தியா முழுவதை யும் பாரதியார் ஆரியம் என்ருர்.

"முப்பது கோடி முகமுடையாள் உயிர்
மொய்ம்புற ஒன்றுடையாள்—இவள்
செப்புமொழி பதினெட்டுடையாள் எனின்
சிந்தனை ஒன்றுடையாள்"

என்பனவாய அடிகளில் பதினெட்டு வெவ்வேறு மொழிக ளைப் பேசுகின்ற முப்பது கோடி மக்கட்கும் சிந்தனை ஒன்று என்ருர். அதே பாட்டில் அவ்விந்தியாவைப் பகைத்து வருவோரைத் துகள் செய்யும் ஆற்றல் அவ்வனைவர்க்கும் பொதுமை என்பதையும் கூறிவிட்டு, இந்தியாவின் நாட் டுப் பண்பு என அறிஞர் போற்றும் ஒன்றையும் குறிப் பிடுகிருர்.

'பொறை' என்பது இந்திய மக்களின் இயற்கைப் பண்பென மொழிவர். இதை நம் சமயக் கொள்கைகளிலும், நாட்டு வாழ்விலும் காணலாம். பாரதி இக்கருத்தை

"பூமியினும் பொறை மிக்குடையாள் பெரும்
புண்ணிய நெஞ்சினள் தாய்"

என்ற அடியில் மொழிந்துவிட்டுச் சைவ, வைணவச் சமயங்கள் கூட வேற்றுமையில்லாதன என்று கூறுகின்றார். மற்றும் 'அன்பே சிவம்' என்ற தமிழர் மொழிதான் முன்னர் புத்தர் மொழிந்தது எனவும் புகன்று சமயங்களின் ஒருமைப் பாட்டைக் காட்டினார்.

தீயினைக் கும்பிடும் பார்ப்பார், நித்தம் திக்கை வணங்கிடும் துருக்கர், கோயிற் சிலுவையின் முன்னே நின்று கும்பிடும் ஏசு மதத்தார் இவர் அனைவரும் போற்றிடும் தெய்வம் ஒன்றே பாரினில் சண்டைகள் வேண்டாம் என்று முரசுப் பர்ட்டில் வெளிநாட்டினின்று இந்தியாவுக்குள் வந்து வழங்கும் சமயங்களைக்கூட ஒருமைப்படுத்தி முழங்குகிறார்.

"வண்ணங்கள் வேற்றுமைப் பட்டால்—அதில்
மானிடர் வேற்றுமை இல்லை"

என்ற அடிகளில் சூது வளர்க்கும் இனப்பிரிவுகள் அனைத்திற்கும் ஒரு முடிவு கூறினார்.

காந்தியடிகள் தமது நிர்மாணத்திட்டத்தில் இந்தியாவின் பொதுமை, ஒருமைப்பாடு நிலைக்க நாட்டு மொழியாக ஒன்று தேவை எனக் கூறியது போன்று, அவ்வொருமைப்பாடு காக்கப்பட மாநில மொழிகள் கட்டாயம் வளம் பெறவேண்டும் எனத் திட்டம் தந்தார். பாரதியும்

"சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம்
தமிழ்முழக்கம் செழிக்கச் செய்வீர்"

என்றார். பாரதத்தில் உள்ள தீமைகள் அகலவேண்டும் எனக்கருதிப் போ போ போ என்று பாடும்போது

"வேறு வேறு பாஷைகள் கற்பாய்நீ
வீட்டுவார்த்தை கற்கிலாய் போ போ போ"

என்று தாய்மொழியைப் பயிலாதவர்களைக் கிண்டல் செய்கிறார்.

பாரதியின் ஒருமைப்பாட்டு நெஞ்சம் நாடு, இனம் மொழிகட் கப்பாற்பட்டு விரிக்க இயலாவண்ணம் உலகத்து உயிர்கள்மாட்டெல்லாம் செல்கின்றது. பேரிகை முழங்குகிறது.

"காக்கை குருவி எங்கள் ஜாதி—நீள்
கடலும் மலையும் எங்கள் கூட்டம்
நோக்கும் திசையெல்லாம் நாமன்றி வேறில்லை
நோக்க நோக்கக் களியாட்டம்"

என்ற ஜயபேரிகைப் பாட்டின் அடிகள் களங்கமற்ற விடுதலை உணர்வு பெற்ற சிட்டுக்குருவியாகிய பாரதியின் அமுதவாயினின்று புறப்படுகையில் வேதச் சொல்லொளி ஒருமைப்பாட்டினைக்கூறி அழைப்பது போன்றொளிர் கின்றது.

மாஜினியின் சபதத்தில்

"உயரு மிந்நோக்கம் நிறைவுற இணக்கம்
ஒன்றுதான் மார்க்கமென் பதுவும்"

எங்கள் நாட்டொருமை எந்நாடும் குறிக்கும் என்றெல்லாம் பாரதி கூறுகிறார்.

எனவே பாரதியின் பாடல்களின் நினைவு வரும்போதெல்லாம்.

"பாரதநாடு பார்க்கெலாம் திலகம்
நீரதன் புதல்வர் இந்நினைவ கற்றீர்"
"வாழிய செந்தமிழ் வாழ்க நற்றமிழர்
வாழிய பாரத மணித் திருநாடு"

வாக்கியத்தில் அமைத்தெழுதுக:

ஒரு குடைக்கீழ், வழிவந்த, கோட்டைக்குள்ளே பெருச்சாளியைக் காவல் வைத்தது போல, அணி அணியாக

வினாக்கள்:

1. இந்தியா ஒரே நாடுதான் என்று தெளிவுபடுத்தியவர் யாவர்?

2. பண்டு, இந்தியா ஒரே அரசியல் நாடாக அமையவில்லை ஏன்?

3. இருபதாம் நூற்றாண்டில் வாய்த்துள்ள வசதிகள் யாவை?

4. பண்டைத் தமிழர்கள் சங்ககாலம் தொட்டு இந்தியாவை ஒரே நாடாகக் கருதி வந்துள்ளனர் என்பதற்குச் சான்று தருக.

5. பாரதி தம்மை எவ்வாறு அறிமுகப்படுத்திக் கொள்ளுகிறார்?

6. பண்டை இந்தியாவின் சமுதாய அமைப்பு எத்தகையது?

7. இன்றைய இந்தியாவின் நிலையைக் கூறுக.

8. பாரத தேசத்தின் வளங்களை பாரதி எவ்வாறு காட்டுகிறார்?

9. பாரதத் தாய் எத்தகையவள்?

10. சமய ஒருமைப்பாட்டை பாரதி எவ்வாறு விளக்குகிறார்?

11. ஒருமைப்பாடு காக்கப்பட மாநில மொழிகள் வளம் பெற வேண்டும் என்பது பாரதியால் எவ்வாறு பகரப் பட்டுள்ளது?

கட்டுரை:

1. நாட்டின் ஒருமைப் பாட்டிற்கு நாம் செய்ய வேண்டுவன.

7. செத்துங் கொடுத்தான் சீதக்காதி

[வித்துவான் திரு. க. நயினர் முகம்மது]

“ சந்தனப் பொதியச் செந்தமிழ் முனிவனும்
சவுந்தர பாண்டிய னெனுந்தமிழ் நாடனும்,
சங்கப் புலவரும் தழைத்தினி திருக்கும்
மங்கலப் பாண்டிவள நாடு ”

வழி வழியாக அறனும் மறனும் ஆற்றலுங் குன்ருத பாண்டிய மன்னர்களை அரசராகப் பெற்ற பெருஞ்சிறப்புடையது பாண்டிய நாடு. இப்பாண்டி நாட்டில் கல்வி கேள்விகளிற் சிறந்த புலவர் பெருமக்களும், பெருங் கொடை வள்ளல்களும் களிசிறந்து வாழ்ந்தார்கள். பாண்டிய மன்னர்களும், அவர் கீழ்ச் சிற்றரசர்களாகவும், போர் வீரர்களாகவும் விளங்கிய சேதுபதிகளும், தமிழ்ப் பணிபுரிவதில் தலை சிறந்து நின்று. பொன்னையும், மணியையும் வாரிவழங்கி புலவர் பாடும் புகழுடையராய் விளங்கினர்.

பாண்டிய நாட்டின் சிறப்பு :

சேதுவேந்தர் அனைவரும் பொன்னையும், மணியையும் பொழிந்ததன்றி, விளைபுலவூர்களையும் முற்றூட்டாக வழங்கின செய்தியை வரலாற்று நூல்கள் வழுத்தும். அழகிய சிற்றம்பலக் கவிராயர் என்பவர், இரகுநாத சேதுபதி மீது, தள சிங்கமாலை என்னும் நூலைப்பாடி, மிதிலைப்பட்டி என்னும் விளைபுலவூரை முற்றூட்டாகப் பெற்ருர். இவர் வழியினர் இன்னும் அவ்வூரை அநுபவித்து வருகின்ற செய்தி இந் நாடெல்லாம் அறிந்ததொன்று,

பாண்டி நாட்டில் தமிழ் வளர்த்த முஸ்லீம்களும், புலவர்களும், வள்ளல்களும் :

இவர்களேயன்றி இந்நாட்டில் சிறக்க வாழ்ந்திருந்த முஸ்லீம்களும் தமிழ்மொழி வளர்ச்சியில் பெரிதும் ஈடுபாடுடையவர்களாக இருந்தார்கள். முஸ்லீம்களிற் பலர், தமிழன்னைக்குப் பல திருப்பணிகள் செய்துள்ளனர். சொன்னேக்கும் பொருளுேக்கும் தொடை நோக்கும் நடை நோக்கும் ஒருங்கே அமையக் கவிபாடும் புலவர் பெருமானுகிய உமறுப் புலவர், முகம்மது நபியின் வரலாற்றைச் 'சீருப் புராணம்' என்னும் நூலாகப் பாடியுள்ளார். இந்நூல் முஸ்லீம் மதத்தினரல்லாத பிற சமயத்தார்களும் விழைந்து கற்குமாறு, ஒன்பான் சுவையும் ஒருங்கு நிரம்பப் பெற்றது. இவர் வழியினராகிய மீசல வண்ணக்களஞ்சியப் புலவர், பல வண்ணங்கள் பாடித் தமிழன்னைக்கு அணி செய்தார். இன்னும் சவ்வாதுப் புலவர், சேதுபதி வைசூரியான் வருந்திய காலை, ராஜராஜேசுவரி பஞ்சரத்தினம் என்னும் நூலைப் பாடி, அவரை நல்லுடல் பெறச் செய்தார்; இந்நாலுக்குப் பரிசிலாகச் 'சுவாத்தன்' என்னும் விளைபுலவூரைப் பெற்ருர். இவர், முகையதீன் ஆண்டவர் பிள்ளைத் தமிழ் என்னும் பாமாலையைத் தமிழ் அன்னைக்குச் சூட்டி மகிழ்ந்தார். புலவர்கள் இங்ஙனமாக, முஸ்லீம் வள்ளல்களும் சாதி, குலம் முதலியவற்றைக் கருதாது, தமிழ்பாடி வந்த அனைவர்க்கும் அள்ளியள்ளிப் பொருளைக் கொடுத்துத் தமிழ் மொழியை வளர்த்தார்கள். அவர்களிலொருவரே ஈண்டு ஆராய எடுத்துக் கொண்ட சீதக்காதி என்னும் வள்ளலாராவார்.

சீதக்காதி என்னும் பெயர்க் காரணம் :

புலவர்களும், புரவலர்களும் சிறந்து விளங்கிய பாண்டி நாட்டில், இற்றைக்குச் சற்றேறக் குறைய 300 ஆண்டுகளுக்கு முன், பாண்டி நாட்டின் சிறந்த துறைமுகமாகிய

கீழக்கரையில், சீதக்காதி என்பவர் அவதரித்தார். இவரது இயற்பெயர், ஷெய்கு அப்துல் காதர் மரக்காயர். ஷெய்கு அப்துல் காதர் என்னும் அரபி வாக்கியத்தைத் தமிழர்கள் உச்சரிக்க இயலாமையாலும், புலவர்கள் தாங்கள் பாடும் செய்யுட்களில், இப்பெயரை அமைப்பது தமிழ்மொழிக்கு ஒன்றுபடாமையாலும் இத்தொடர் மொழியைச் சீதக்காதி என்ற மருஉமொழி ஆக்கினர். மரக்காயர் என்பது தமிழ்ச் சொற்றொடர். இது, கடல் வாணிகம் செய்யும் முஸ்லீம் களுக்கு, அக்கால மக்கள் இட்ட சிறப்புப் பெயர். இன்னும் கடற்றுறையூர்களில் வசிக்கும் முஸ்லீம்கள் மட்டும் இச்சிறப் புப் பெயரைத் தங்கள் பெயருக்கு முன் வைத்துக்கொள்வதை அனைவரும் அறிவர். பாண்டி நாட்டுக் கடற்றுறைகளாகிய காயல், கீழக்கரை, ஏர்வாடி முதலிய ஊர்களிலும், சோழ நாட்டுக் கடற்கரைகளாகிய நாகூர், நாகப்பட்டினம், காரைக்கால் முதலிய நகரங்களிலும் வசிக்கும் முஸ்லீம்களிற் பெரும்பாலோர் இன்றைக்கும் இப்பெயர் பூண்டுள்ளனர். 'மரக்காயர்' என்பதின், 'மரக்கலராயர்' என்பதின் மரூஉ மரக் கலராயர் என்பதற்குக் 'கப்பற் காவலர்' என்பது பொருள். கப்பல், வாணிகத்துக்குக் கருவியாயிருப்பது. எனவே, மரக் கலராயர் என்பதன் திரண்ட பொருள் 'வாணிக மன்னர்' என்பதாகும். ஒரு சாரார் மரக்காயர் என்பது 'மரக்காப்' என்னும் அரபுப் பதத்தின் திரிபு என்பர். இது ஒரு சிறிதும் பொருந்துவ தன்றென்று சென்னைப் பல்கலைக் கழகத்தில் அரபு, பார்ஸி, உருது ஆகிய மும்மொழிக்கும் தலைவராயும் தமிழ் வல்லுநராயும், இப்பொழுது இருக்கின்ற உயர்திரு. டாக்டர் எஸ். முகம்மது உசேன் நயினர், எம். ஏ. பிஎச். டி, அவர்கள், தாம் வெளியிட்ட, சீதக்காதி நொண்டி நாடகத் தின், முன்னுரையில் விளக்கியுள்ளார்கள்.

சீதக்காதியின் நற்பண்புகள் :

சீதக்காதி, 'இளமையிற் கல்' என்னும் முதுமொழிக் கேற்ப, அரபு, தமிழ் முதலியமொழிகளை நன்கு கற்றுணர்ந்து,

மெய்ம்மை, பொறையுடைமை, மேன்மை, தவம், அடக்கம், செம்மை முதலிய குணங்களிற் சிறந்து விளங்கினர். இவர் இளமையிலேயே நற்குணமும், நல்லொழுக்கமும் உடையவராக வாழ்ந்தார். ஆகையால், ஞானிகளும் இவரை விரும்பி நட்புக் கொண்டார்கள்.

சீதக்காதியின் உத்தியோகச் சிறப்பு:

அக்காலத்தே கீழக்கரையில் தத்துவ ஞானியென்றும், உண்மைத் துறவியென்றும் அரபியில் தலைசிறந்த புலவரென்றும் இந்தியா முழுவதும் போற்றிய பெருமானாகிய ஷெய்கு சதக்கத்துல்லா அவர்கள் சீதக்காதியை விரும்பி, நண்பராகப் பெற்றூர் என்பது ஒன்றே இவரது உயர்ந்த குணங்கட்குச் சிறந்த சான்ருகும். அஞ்ஞான்று வடநாட்டை ஆட்சி புரிந்த ஔரங்கசீப் என்பார், சதக்கத்துல்லா அவர்கள் வங்காளத்துக்கு அரசப் பிரதிநிதியாக இருக்தல் வேண்டுமென ஓலை போக்கி, அழைத்தபோது, துறவியாராகிய சதக்கத்துல்லா அவர்கள், அரசபதவியை ஏற்க விரும்பாது, வினைவலியும், தன்வலியும், மாற்ருன் வலியும், துணைவலியும் அறிந்து, காரியம் செய்யவல்ல சீதக்காதியாம் செல்வரே அதற்குத் தகுதியுடையவரென அவரை ஔரங்கசீபு அரசரிடம் அனுப்பினர். சதக்கத்துல்லா அவர்களின் கட்டளையைச் சிரமேற்கொண்ட சீதக்காதி, வங்காளத்தின் அரசராய்ச் சின்னுள் ஆட்சி புரிந்து, அந்நாட்டின் தட்பவெப்ப நிலை, தமக்கு ஊறு செய்தமையால், அவ்வுத்துயோகத்தை உதறியெறிந்து மீண்டும் கீழக்கரை வந்து, வாணிகம் செய்து பொருளீட்டினர்.

சீதக்காதியின் அன்பையும் ஆள்வினையுடைமையையும் வாணிகத்தின் வன்மையையும் வண்மையின் திண்மையையும் கேள்வியுற்ற கிழவன் சேதுபதி என்னும் விசயரகுநாத சேதுபதியரசர், சீதக்காதியை அழைத்து நண்பராகப் பெற்

ரூர். இச்சேதுபதி மன்னர், கி பி. 1674 முதல் 1719 வரை, சேது நாட்டையாண்ட பெரியார் சீதக்காதியாம் சீரியர், கிழவன் சேதுபதிக்கு அமைச்சராயும் உற்றுழியுதவும் உத்தம நண்பராயும் விளங்கினர். இராமநாதபுரக் கோட்டையைக் கட்டி முடிக்கப் பல்லாற்ருனும் இவர் உதவி புரிந்தார். இவருடைய தொண்டைப் பாராட்டிய அரசர், இவரைத் தமக்குத் தம்பி முறையிட்டு வழங்கி, 'விசயரகுநாத' என்னும் பட்டத்தையும் அளித்துச் சிறப்புச் செய்தார். அன்று முதல் இவரை ஷெய்கு அப்துல் காதர் விசயரகுநாதப் பெரியதம்பி மரக்காயர் என மக்கள் வழங்கலானுர்கள்.

சீதக்காதியின் வள்ளன்மை :

செல்வத்துப் பயனே ஈதல்; துய்ப்பேம் எனினே தப்புந பலவே என்னும் ஆன்ருேர் வாக்கை நண்குணர்ந்த பெரியார் சீதக்காதி, இல்லையென வந்தார்க்கு இல்லையென்னுது வழங்கும் வள்ளலாய் விளங்கினர். முன்பொருகாற் பாண்டிய நாடு பன்னீராண்டு வற்கடம் சென்றதுபோல், சீதக்காதியின் காலத்தும் அது பஞ்சத்தாற் பீடிக்கப்பட்டது. மழையின்றிப் புல் நுனியும் நிலத்திற்ருேன்ருமல், மக்கள் பசியானும், பிணியாலும் பீடிக்கப்பட்டு, வயிறெட்டிக் கண்குழிந்து, வாய் புலர்ந்து, வாடின பொழுது, வாடிய பயிரில் மழை பொழிவது போல், ஏழைகட்கிரங்கி அன்னதானம் செய்ய, மடிதற்று முன் வந்தார், சீதக்காதி. இச்சீரிய செயலைப் படிக்காசுத் தம்பிரான்:

'ஓர்தட்டிலே பொன்னும் ஓர்தட்டி லேநெல்லும் [ஒக்கவிற்கும்
கார்தட் டியபஞ்ச காலத்தி லும்தங்கள் காரியப்பேர்
ஆர்தட்டி னும்தட்டு வாராம லேஅன்ன தானத்துக்கு
மார்தட் டியதுரை மால்சீதக் காதிவ ரோதயனே'

எனப் பாராட்டிக் கூறியமை அறிந்து இன்புறத்தக்கது.

சீதக்காதி பொன்னை ஈட்டினார்; புகழை நாட்டினார்; தமிழ்ப்பயிர் தழைக்க, வண்மையாம் நீரைத் தளராது பெய்தார். தமிழ்ப் புலவர்களின் நெஞ்சம், பாக்களை ஆய்ந்து சிவந்தது; சீதக்காதியின் கரங்கள், அன்னார்க்குப் பொன்னை ஈந்து, சிவந்தன. தமிழ்ப் புலவர்கள் குழாம், பசியை அறியாது வாழ்ந்தது; கவலையையும், மனச்சோர்வையும் காணாது களிப்புற்றது. இதனால் தமிழ் மகள் நடனம் புரிந்தாள். தமிழ் நாடு, பிறநாடுகளால் மதிக்கப் பெற்றது.

சீதக்காதி மேலுலகடைந்தமை :

தமிழன்னைக்குத் தொண்டு செய்த தண்ணளியர், புலவர்களைப் புரந்த புண்ணியர், வரையாது வழங்கிய வள்ளல், சீதக்காதிக்கும் இறுதிநாள் அணுகிற்று. அவர்மீதும் கண்ணிலியாம் காலனின் கண் விழுந்தது. இதைத் தம் மெய்யுணர்வால் உணர்ந்த சீதக்காதி தம் சுற்றத்தார்களை நோக்கி, 'யான் இறந்தவுடன் எனது விரலிலுள்ள மோதிரத்தைக் கழற்ற வேண்டா. அத்துடன் என்னை அடக்கம் செய்யுங்கள்' என்று வேண்டிக் கொண்டார். உயிர் உடலினின்றும் பிரிந்தது. சீதக்காதியின் ஆன்மா, இறைவனடி நிழலிற் கலந்து, இன்புற்றது. புரவலர் புலம்பினர். இரவலர் இரங்கினர். புலவர் குழாம், அலைகடல் நடுவண், மாலுமியில்லா மரக்கலம் போன்று தடுமாறிற்று. சீதக்காதியின் பருவுடல், முஸ்லீம் மதச்சடங்குகளுடன், தொடுகுழியில் இடப்பட்டது.

சின்னாட் சென்ற பின், சீதக்காதியிடம் பேரன்பு பூண்ட படிக்காசுத் தம்பிரான் கீழக்கரைக்கு வந்தார், தம் அன்பராம் வள்ளலைக் காணாது பலவாறு புலம்பினார். சீதக்காதியின் பருவுடல் கிடக்கும்சவக்குழியின் முன்னின்று, "பெருமானே, நீ புகழ்க் கம்பம் நாட்டிவைத்தாய்; தமிழ்ப் பாவலரை ஓட்டாண்டியாக்கி, அவர்களது வாயில் ஒரு பிடி மண் போட்டாய். சவக்குழியில் நுழைந்தாய். என் செய்வேம்! வள்ளலே!

பூமாதும், புவிமாதும், நாமாதும், நாமும் இருந்தென்? கொடை மிகுந்த சீமானுகிய நீ இறந்த பொழுது புலமையும் செத்துவிட்டதன்ருே? வண்மை மிக்க நீ திரும்பி வந்து, மீண்டும் பிறந்தாலொழியப் புலவர்கட்குப் பிழைக்க வழியில்லை. என் செய்வோம்! எனப் பலவாறு புலம்பிக் கீழ்க்காணும் செய்யுட்களை அருளிச் செய்தார்.

"தேட்டாளன் காயற் றுரைசீதக் காதி சிறந்தவச்ர
நாட்டான் புகழ்க்கம்பம் நாட்டிவைத் தான்தமிழ்ப் [பாவலரை
ஒட்டாண்டி யாக்கி அவர்கள் தம்வாயில் ஒருபிடிமண்
போட்டான் ; அவனும் ஒளித்தான் ! சமாதிக்குழி புகுந்தே."

"பூமா திருந்தென் ? புவிமா திருந்தென்ன ? பூதலத்தில்
நாமா திருந்தென் ? நாமிருந்தென்ன ? நன் ஞவலர்க்கு
கோமான் அழகமர் மால்சீதக் காதி கொடைமிகுந்த
சீமான் இறந்திட்ட போதே புலமையும் செத்ததுவே!"

அதுபொழுது எல்லாம் வல்ல இறைவனருளால் சவக்குழி பிளந்து, மோதிரமிட்ட கைவெளியே வந்தது. மோதிரக்கைகண்ட புலவர் பின்வருமாறு அதன்குறிப்பைப் புனைந்துரைக்கின்ருர் :

சீதக்காதி சவக்குழியிலிருந்து நமது பாட்டொலியைக் கேட்டு, "வா" என்று அழைத்த மோதிரக்கையின் குறிப்பு யாதெனில், "புலவர்களே, வண்மையான தமிழ்ப்பாவொன்றும் அறியாத அற்பர்களிடம் சென்று, 'தா' என இனி வாசித்தல் வேண்டா" என்று தடையிட்டது போலத் தோன்றிற்று. கீழ்க்காணும் செய்யுள் இவ்வுண்மையைக் கூறுகின்றது :

"காவென்று கைத்தலத் தண்ணல்செல்
லூரன் கனிந்துநம்மை
வாவென் றழைத்திட்ட மோதிர
மேவண்மை யானதமிழ்ப்
பாவொன்றும் சற்றும் அறியாத
புல்லர்தம் பக்கலிற்போய்த்
தாவென்று யாதொன்றும் கேட்காமல்
இட்ட தடையிதுவே."

இச்சீரிய செயலைக் கண்ட தமிழ் நாடு, சீதக்காதியைச் 'செத்துங்கொடுத்தான் சீதக்காதி' எனப்புகழ்ந்து கூறிற்று. இப்பொன்மொழி, தமிழ்மொழியுள்ளளவும் சீதக்காதியின் புகழைச் செப்பும் தகையது.

அருஞ்சொற்கள் :

விளைபுலம், முற்றூட்டு, தொடைநோக்கு, மரூஉமொழி.

மொழிப் பயிற்சி :

புலவர் பாடும் புகழ், இளமையிற்கல், தட்பவெப்பம், வாடிய பயிரில் மழை பொழிவதுபோல், அலைகடல் நடுவண் மாலுமியில்லா மரக்கலம் போல — இத்தொடர்களை வாக்கியத்தில் அமைத்தெழுதுக.

வினாக்கள் :

1. பாண்டிநாடு எத்தகையது? அதன் சிறப்பினைக் கூறுக.

2. முஸ்லீம்கள் தமிழுக்குச் செய்த தொண்டிற்குச் சான்று தருக.

3. சீதக்காதி என்னும் பெயர்க்காரணத்தை விளக்குக.

4. சீதக்காதியின் நற்பண்புகள் யாவை?

5. சீதக்காதியின் உயர்குணங்கட்குச் சிறந்த சான்று யாது?

6. சேதுபதியவர்கள் சீதக்காதியை நண்பராகப் பெற்றமை எதனல்?

7. சேதுபதிக்கும் — சீதக்காதிக்கும் உள்ள தொடர்பை விளக்குக.

8. சீதக்காதியின் வள்ளன்மையை விளக்குக.

9. படிக்காசர் சீதக்காதியின் கொடைத்தன்மையை எவ்வாறு புகழ்ந்துள்ளார்?

10. சீதக்காதி எவ்வாறு வாழ்ந்தார்? அவரால் தமிழ்ப்புலவர்களும், தமிழ் நாடும் பெற்ற பலன்கள் யாவை?

11. செத்தும் கொடுத்தான் சீதக்காதி என்ற புகழ் மொழி தோன்றிய விவரத்தைக் கூறுக.

கட்டுரை :

ஈகையின் சிறப்பு, வள்ளல் ஒருவரின் வரலாறு, என்ற தலைப்புகளில் தனித்தனிக் கட்டுரை வரைக.

8. தம்பிக்கு

[பேராசிரியர் டாக்டர் மு. வரதராசனுர், எம். ஏ., பி. எச்டி.]

அன்புள்ள எழில்,

உன் மடல் கண்டு மகிழ்ந்தேன். கருத்து வேறுபாடுகள் கிடக்கட்டும். நான் எழுதியவற்றில் சிலவற்றை உடன்பட்டிருக்கிருயே, அதுவும் பெரிதல்ல. சிலவற்றைப்பற்றி உன் சிந்தனை கிளறப்பெற்றதே, அதுவே யான் விரும்புவது

தமிழரைப்பற்றி நான் வேண்டுமென்றே குறை சொல்லவில்லை, என்பது உனக்குத் தெரியும். தமிழரிடம் எத்தனையோ குணங்கள் உள்ளன. அவற்றை எழுதுவதற்கு இதுவா இடம்? நானும் நீயும் ஒருவர்க்கு ஒருவராகத் தமிழரைப் புகழ்ந்து கொண்டிருப்பது அழகா? தமிழரைப் பற்றிப் பிறர் புகழ வேண்டும், அதைக் கேட்டு மகிழ வேண்டு என்பதே என் ஆசை.

தமிழர் முன்னேறவில்லை என்று சொன்னல் ஒப்புக் கொள்கிருய். ஆனல் தமிழர் தாழ்வான நிலையில் உள்ளனர் என்ருல் மறுக்கிருய். இதுதான் வேடிக்கையாக உள்ளது. தாழ்வான நிலை என்றதும், தமிழரிடம் குறை கண்டதாக நீ உணர்கிருய் அல்லவா? குறை காண்கின்றேன் என்பது உண்மைதான். தயங்காமல் சொல்கிறேன்.

தமிழர் மற்றவர்களால் தாழ்த்தப்பட்டார்கள் என்று நீ கருதுகிருய். அவ்வாறு பிறர் மேல் பழி போட்டு ஒதுங்குவது மிக எளியது. எனக்கு அவ்வாறு செய்ய, மனம் இல்லை. அதனல் பயனும் இல்லை. நம்மிடம் குறை உண்டா இல்லையா என்று ஆராய்ந்தால், நாம் உயர்வதற்கு வழி பிறக்கும்;குறைகளைத் திருத்திக் கொள்வோம், முன்னேறுவோம்.

இப்படிச் சொன்னால் தவறு? எண்ணிப்பார். பிறர் ஏமாற்றினர்கள் என்பதைவிடப் பிறர் ஏமாற்றுவதற்கு இடம் கொடுத்தோம், ஏமாந்தோம் என்று சொன்னல் என்ன? பிறர் அடக்கினுர்கள் என்பதைவிடப் பிறர் அடக்குவதற்கு இடம் கொடுத்தோம், அடங்கினேம் என்று சொன்னல் என்ன? பிறர் தாழ்த்தினர்கள் என்பதைவிடப் பிறர்தாழ்த்து வதற்குஇடம் கொடுத்தோம், தாழ்ந்தோம் என்று சொன்னல் என்ன? நன்ருக எண்ணினல், முதலில் சொல்வதைவிட இரண்டாவதாகச் சொல்வதே பெரிய உண்மை என்று தோன்றுகிறது. ஆகவே குறைகளை உணர்வோம்.

குறை சொல்லட்டுமா? திருவள்ளுவர் 'பணிவுடையன் இன்சொலனுதல் என்ற குறளில் கூறிய இரண்டு அரிய பண்புகளும் ஒவ்வொருவர்க்கும் வேண்டும். சமுதாயமாய்க் கூடி வாழ விரும்புகின்றவர்களுக்கு இவை இரண்டும் கட்டாயம் வேண்டும். எந்தெந்தக் கூட்டம்முன்னேறுகிறதோ அவர்களிடையே ஆராய்ந்துப்பார். பணிவும் இன்சொல்லும்காணப் படும் குடும்பங்கள் எப்படியாவது முன்னேறுகின்றன. இவை இல்லாத குடும்பங்கள் ஒரு தலைமுறையில் மேல்படி ஏறினலும் அடுத்த தலைமுறையில் தொப்பென்று விழு கின்றன. தமிழர் பெரும்பாலோர்க்கு இந்த இரண்டு பண்பு களும் இல்லை. ஆட்களைக் குறித்துக் கணக்கிட்டுப் பார். நான் சொல்வது உண்மை எனத் தெரியும்.

ஏன் பணிவுடைமை இல்லை என்றல் "யான் வீரத் தமிழன். மானம் நிறைந்தவன், மானம் கெட்டு உயிர் வாழா தவன், பிறர்க்குப் பணியாதவன்" என்று சிலர் பெருமை பாராட்டிக் கொண்டு பூரிக்கின்றர்கள். இருளே ஒளி என்று பெயர் பெறுகின்றது!

ஏன் இன் சொல் இல்லை என்றல், "தமிழன் உள் ளொன்று வைத்துப் புறமொன்று பேசாதவன், உள்ளத்தில்

கள்ளமும், உதட்டில் வெல்லமும் இல்லாதவன், பிறர்க்கு அஞ்சாமல் தன் வெறுப்பைச் சுடச்சுடச் சொல்லும் ஆண்மை உடையவன்'' என்று சிலர் பெருமிதம் அடைகிறார் கள். இவர்கள் தன்மையும் அதுதான். திருவள்ளுவர் தலை வலிக்குத் தந்த மருந்தை வயிற்று வலிக்கு உண்பவர்கள் இவர்கள்.

தமிழரில் உண்மையான மானம் உடையவர்கள் இருக்கி றார்கள்; ஆனால் மிகச்சிலரே. பெரும்பாலோர் எப்படிப்பட்ட மானத்தைப் போற்றுகிறார்கள் தெரியுமா? தம் மனைவி கற்போடு வாழுமாறு அவளை அடக்கி ஆள்வதில் வீரமும், மானமும்; ஆனால், தாம் கற்போடு வாழுமாறு தம்மைத்தாம் காத்துக்கொள்வதில் அவை இல்லை; மனைவி கற்புத் தவறியதாக ஐயுற்றால் அவளை அடிப்பதில் வீரம்; கொல்வதில் மானம்; தம்மைவிட வலிமை குறைந்த வரைப் பழிப்பதிலும் பகைப்பதிலும் வீரமும், மானமும்; ஆனால் தம்மவரைப் பழித்துப் பிறர்க்குக் காட்டிக் கொடுத்து வயிறு வளர்ப்பதில் அவை இல்லை. இவை போன்ற நிலைமைகளைப் பெரும்பாலோரிடம் காணலாம்.

தமிழர் மானம் மிகுந்த இனத்தார். மானமே உயிரினும் சிறந்ததெனக் கொண்ட தனிக் கூட்டம் என்று வெளி நாட்டாரிடம் சொன்னால் அவர்கள் வியப்புறுவார்கள்; எள்ளி நகைப்பார்கள். தமிழர் என்றால் கூலிகள், கூலிகள் என்றால் தமிழர்; இதுதானே வெளிநாடுகள் கண்ட காட்சி?

தமிழர் மானம் மிக்கவர் என்று சொன்னால் கன்னட நாட்டார் என்ன கூறுவார்கள்? "பெங்களூரில் எந்த வகை யான கூலி வேலையும் செய்து அரை நிர்வாணமாய்த் தெருக் களில் திரியும் அந்தக் கூட்டமா?'' என்பார்கள். பம்பாயில் வாழ்வோர் என்ன கூறுவார்கள்? "சாய்க்கடைக் குப்பங் களில் பொத்தல் குடிசைகளில் வாழும் அந்தக் கூலி

மக்களா? இரவும் பகலும் மூலை முடுக்கெல்லாம் ஓயாமல் பிச்சை கேட்டுத் தொல்லைப் படுத்தும் அந்தக் கூட்டமா? அவர்களா மானத்தில் உயர்ந்தவர்கள்?'' என்பார்கள். நினைக்க நெஞ்சம் குமுறுகின்றது. தமிழர் என்றால் பிச்சைக் காரர், பிச்சைக்காரர் என்றால் தமிழர் என்னும் அளவிற்கு அங்கெல்லாம் மானம் இழந்து வாழ்கின்றனர் நம்மவர். நம் மானம் எங்கே? சொந்த நாட்டில் பிறர் வந்து செல்வராய்ச் செழிக்க, பிறர்நாட்டில் நாம் கூலிகளாய்ப் பிச்சைக்காரர் களாய்த் திரிவதா? இதுவா மானம்? சிலர் மேல் பதவிகளில் செல்வாக்காக இருக்கலாம். அதனால் இந்தப் பெரிய மாசு நீங்கி விடாது. மானம் இருந்தால் ஆங்கிலேயரைப்போல் ஜப்பானியரைப் போல், குசராத்தியரைப்போல், மற்றவர் களைப்போல் வெளிநாடுகளில் தலைநிமிர்ந்து வாழ வேண்டும். ஆங்கிலேயரில் எத்தனை பேர் இங்கே ரிக்ஷா இழுக்கின்றார் கள்? ஜப்பானியரில் எத்தனைபேர் இங்கே விறகு வெட்டு கிறார்கள்? குசராத்தியர், வங்காளியர் முதலியவர்களில் எத்தனைபேர் இங்கே பிச்சை எடுக்கின்றார்கள்? தமிழர் எந்த நாட்டிலும் எதையும் செய்கின்றார்களே! யார் மானத்தில் சிறந்தவர்கள்?

பிறர் தமிழ் நாட்டுக்கு வருதல் சோற்றுக்கு அல்ல; சுக வாழ்வுக்கு; வேலை செய்து வயிறு வளர்ப்பதற்கு அல்ல; வேண்டுமளவு செல்வம் சேர்ப்பதற்கு. ஆயின், தமிழர் பிற நாட்டுக்குச் செல்கின்றார்கள்; சோறும் வேலையும் தேடிச் செல்கின்றார்கள்;அவற்றையும் பெரும்பாலோர்மானத்தோடு பெற்று வாழ முடியவில்லை. பெங்களூரிலும் பம்பாயிலும் இருந்தபோதெல்லாம் நான் இந்த எண்ணத்தால் ஏங்கித் தலை குனிந்து வருந்திய நாட்கள் பல. நீயும் அங்கெல்லாம் சென்று பார். ''பிச்சை எடுப்பதற்கும் சாய்க்கடைக்குப் பக்கத்தேபடுத்து உறங்குவதற்குமாக இந்தத் தமிழர்கூட்டம் தாய் நாட்டை விட்டு இவ்வளவு தொலைவு வர வேண்டுமா?

இதைவிட அந்தத் திக்கற்ற தமிழகத்திலேயே இவர்கள் செத்துமடிந்திருக்கலாமே'' என்று அப்போது நீயும் என்னை போல் எண்ணுவாய். எல்லாம் வயிற்றெறிச்சல்.

மானம் கெட்டு வாழும் இவர்கள் எல்லாரும் தமிழர் தானே? இல்லை என்று கூறமுடியுமா? இவர்கள் வேறு நாம் வேறு என்று பிரித்துத் தப்பித்துக் கொள்வது அறமா? இவர்கள் முட்டாள்கள், மூடர்கள் என்று ஒதுக்கிவிடல் தகுமா? ஜப்பானியரோ, ஆங்கிலேயரோ அவ்வாறு தம்ம வரை ஒதுக்குவார்களா? இவர்களும் தமிழர், நம்மவர் என்று எண்ணுவதே கடமை. ஏன்? திருவள்ளுவரும் இளங்கோவும் பேசிய தமிழைத்தான் இவர்களும் பேசுகின்றார்கள்! ஆகை யால் இந்தக் குறையில் நமக்கும் பங்கு உண்டு.

தமிழ்நாட்டில் காவல்புரியும்தொழிலுக்குக்கூர்க்கரையே பலரும் வைத்திருக்கிறார்கள் பம்பாயில் வாழும் செல்வத் தமிழரும் தங்கள் வீடுகளுக்குக் காவல் புரிய அவர்களையே வைத்துச் சம்பளம் தருகின்றார்கள். தமிழர்கள் பலர் தொழில் இல்லாமல் பிச்சை எடுக்கும் நிலையில் இருக்கும் போது இப்படி ஏன் பிற நாட்டாரை இங்கு வேலைக்கு வைத்துச் சம்பளம் தரவேண்டும் எனப் பல நாள் நான் எண்ணியது உண்டு. இவ்வளவு பொறுமையாக, இவ்வளவு பணிவோடு தமிழர்கள் இந்த வேலையைச் செய்ய வருவ தில்லை என்பதே பிறகு நான் அறிந்த உண்மை. நண்பர் ஒருவர் தம் அனுபவத்தை ஒருநாள் கூறினார் அவர் புதி தாகக் கட்டிடங்கள் எழுந்த ஒருபகுதியில் குடியேறினராம். அங்கே இரண்டு கூர்க்காக்கள் இரவில் முன்னேரத்தில் தெருவைச் சுற்றி வந்தார்களாம். ஏன் இப்படி ஒரு நாளைப் போல் வேலை கெட்டுச் சுற்றுகின்றார்களோ தெரியவில்லை என்று அவர் முதலில் எண்ணினராம். ஒருமாதம் இப்படி தவறாமல் ஒழுங்காகச் சுற்றிக்கொண்டிருந்த பிறகு அடுத்த

மாதம் முதல் தேதிக்குப் பின் ஒரு சிறு நோட்டுப் புத்தகத்தைக் கொண்டுவந்து காட்டினர்களாம். அதில் அந்தத் தெருவினர் சிலர் கையெழுத்துப் போட்டு மாதத்திற்கு இவ்வளவு என்று குறித்துப் பணம் கொடுத்திருந்ததைக் கண்டாராம். சிறிது நேரம் தயங்கி எண்ணுவதற்குள் அவர்கள் தாங்கள் மேற்கொண்ட கடமையை விளக்கினர்களாம். கடைசியில் நண்பர் பேசாமல் கையெழுத்து இட்டுப் பணம் கொடுத்து அனுப்பினராம்.

இவ்வாறு அவர்கள் பணிவுடன் நடந்துகொண்டது அந்த இனத்திற்குப் பெருமை தேடிக் கொடுக்கின்றதே தவிர, இழிவைத் தேடித்தரவில்லை. நம்மவர்கள் இதுபோல் நடந்து வயிறு வளர்க்கவில்லையே, பிச்சை எடுக்கின்றார்களே என்று நினைக்கும்போது, நம்மவர்களின் மானம் அற்ற நிலையைக் குறித்து வருந்தாமலிருக்க முடியவில்லை. திக்கற்ற பொருளாதார நிலையில், உயிர் விடுதல், பிச்சை எடுத்தல், இந்த இரண்டிற்குத்தானே உரிமை உள்ளது! ஆனல், தங்களைத் திக்கற்றுத் தவிக்கச் செய்யும் தமிழ் நாட்டில் பிச்சை எடுத்தால் அவ்வளவு கவலை இல்லை. பிறநாட்டில் சென்று பிறரிடத்தில் பிச்சைக்காரத் தமிழர் என்ற பட்டம் பெறவேண்டுமா?

•

பணிவும் இன்சொல்லும் ஒற்றுமையும் அறியாத கூட்டம் படும் பாடு இது! அதனல் தான் சென்ற வெளி நாடுகளிலும் ஆயிரம் பிணக்குகள், பூசல்கள், கட்சிகள், பணிவும் இன்சொல்லும் திருவள்ளுவர் சொன்ன அணிகள். இவை பெரும்பாலான தமிழ்க் குடும்பங்களில் இல்லை, தெருக்களில் இல்லை, கழகங்களில் இல்லை, கட்சிகளில் இல்லை! அதனல் சென்ற இடங்களிலும் சேர்ந்து வாழ முடியவில்லை. வாழ்வுக்கு இடையூருன போலிமானம் இருந்தால் என்ன, போனல் என்ன?

ஆங்கிலேயர், ஜப்பானியர், குசராத்தியர் முதலானோர் பணிவாக ஒழுகுகின்றனர் ; இன்சொல் பேசுகின்றனர் ; ஒற்றுமையாக வாழ்கின்றனர் ; வாழ்வில் உயர்கின்றனர் ; மானம் உள்ள இனம் என உலகில் மதிப்பு பெறுகின்றனர். பணிவால் இன்சொல்லால் ஒற்றுமை, ஒற்றுமையால் உயர்வு : இவ்வளவு பயன்பெற்று வாழ்கின்றார்கள் அவர்கள்.

ஏழைகள் மேல் மட்டும் குறை சொல்லி நிற்க வில்லை. செல்வமும் செல்வாக்கும் பெற்று உயர்நிலையில் வாழும் தமிழரிடத்திலும் குறை உள்ளது. அவர்கள் இந்த ஏழை மக்களை நம்மவர் என்று எண்ணாமல் புறக்கணிக்கிறார்கள். தன்னலத்தோடு அவரவர் வாழ்க்கையைமட்டும் விளம்பரப் படுத்திக் கொள்கிறார்கள். தன்னலம் தமிழர்க்கு மிகுதி என்று நான் அடிக்கடிச் சொல்வது வழக்கம். அதற்கு அவர் களின் வாழ்வே சான்று.

தமிழர் தன்னலம் மிக்கவர் என்று நான் முன்பு குறித் திருந்ததை மறுத்து எழுதியிருந்தாய். தமிழினத்தில் வள்ளல் பலர்வாழ்ந்தனர் என்று எழுதியிருந்தாய் பொதுப்பணிக்குச் செல்வத்தை வாரி வழங்குவோர் இன்னும் பலர் இருப்பதை எழுதியிருந்தாய். இல்லை என நான் மறுக்கவில்லை. ஆனால் ஒன்று கூறுகின்றேன். பழங்காலத்து வள்ளல்களைப் பற்றிச் சிறு குறையும் கூற மாட்டேன் ; கூற முடியாது. அவர்கள் மறுமை நோக்காமல் பிறர் வறுமையே நோக்கி வழங்கிய பெருமக்கள். அத்தகைய உயர்ந்த நோக்கம் உடையவர்கள் இன்றுஎத்தனை பேர் ?ஒருவர் இருவர் மூவர் எனக் குறிப்பிட லாம் ; அவ்வளவே. பெரும்பாலோர் பொதுநலம் கொண்டு தருமம் செய்வதாகக் கூற முடியாது. நரகம் புகாமல் தப்ப லாம், மறுமை நன்மையாக வாய்க்கும், பணத்தைப் புண் ணியமாக மாற்றி அழியாச் சொத்தாகச் சேர்த்துவைக்கலாம் என்று இவ்வாறு அறவிலை வாணிகம் செய்கின்றவர்களே

பலர். பொருளைப் பிறர்க்குச் செலவு செய்யும் போதும் தன்னலம் கொண்டு செய்வதே பலரிடம் காணப்படுகின்றது. ஆகையால் இப்போது ஒப்புக்கொள்வாய் என நம்புகின்றேன்.

பொதுநலம் கொண்டு அறம் செய்வோராக இருந்தால், தமிழ்ச்செல்வர்கள் வெளிநாடுகளில் செல்வம் சேர்த்தபோது அங்கெல்லாம் மருத்துவ நிலையங்கள் பல கட்டியிருக்கக் கூடாதா? கல்வி நிலையங்கள் பல அமைத்திருக்கக் கூடாதா? அநாதை விடுதிகள் பல ஏற்படுத்தியிருக்கக் கூடாதா? பொதுநலம் இருந்திருந்தால், மக்கள்மேல் அன்பு இருந்திருந்தால், அவ்வாறெல்லாம் அறம் புரிந்திருப்பார்கள். ஐரோப்பாவிலிருந்து வந்த கிறித்தவப் பாதிரிமார்கள் மக்கள்மேல் அன்பு கொண்டு சென்ற இடங்களில் எல்லாம் இவ்வாறு பொதுநலம் கருதித் தொண்டு செய்ய வில்லையா? அவர்கள் கட்டியவை எத்தனை மருத்துவ நிலையங்கள், எத்தனைப் பள்ளிக்கூடங்கள்!

தமிழரிடையே பல நல்ல பண்புகளும் உண்டு என்பதை மீண்டும் நினைவூட்டிச் செல்கின்றேன். முன்னோர்கள் நெடுங்காலமாக அறநெறியில் வாழ்ந்து அளித்த பண்பாடே அதற்குக் காரணம். அதனால் தான் இன்னும் அழியாமல் வாழ்கின்றோம். ஆனால் இந்த நிலை போதுமா?

உன் அன்புள்ள,
வளவன்.

வாக்கியத்தில் அமைக்க:

தலைவலிக்குத் தந்த மருந்தை வயிற்றுவலிக்கு உண்பது போல, தொப்பென்று, உள்ளொன்றுவைத்து, இரவும் பகலும், தலை நிமிர்ந்து, பணிவும் இன்சொல்லும்.

வினாக்கள் :

1. நம்மிடம் குறை உண்டா இல்லையா என்று ஆராய்வதால் பயன் என்ன ?

2. தமிழரின் தாழ்வுக்குக் காரணம் என்ன ?

3. தமிழர் பெரும்பாலோர்க்கு இல்லாத இன் பண்புகள் யாவை ? அதுபற்றி ஆசிரியர் கூறுவது யாது ?

4. ஏன் இன் சொல் இல்லை என்பதற்குச் சிலர் கூறுவது யாது ?

5 ஏன் பணிவுடமை இல்லை என்பதற்குச் சிலர் பெருமை பாராட்டிக் கூறுவது யாது ?

6. தமிழரின் பெரும்பாலோர் எப்படிப்பட்ட மானமும் வீரமும் உடையவர் ?

7. வெளி நாட்டாரிடம் தமிழைப் பற்றி எப்படிச் சொன்னால் அவர் எள்ளி நகைப்பர் ? ஏன் ?

8. தமிழர் பிற இடங்களில் எவ்வாறு வாழ்க்கை நடத்து கின்றனர் ?

9. கன்னடியரிடமும், பம்பாய்க்காரரிடமும் தமிழர் மானம் மிக்கவர் என்றால் என்ன கூறுவார்கள் ?

10. தமிழர் மானம் பற்றி டாக்டர் மு. வ. அவர்கள் கூறுவது யாது ?

11. பிறர் தமிழ் நாட்டுக்கு வருவதும், தமிழர் பிற இடங்களுக்குச் செல்வதும் எதற்கு? இது பற்றி டாக்டர் மு. வ. கூறுவது என்ன ?

12 கூர்க்கரின் பணிவுடைமைக்கு ஒரு சான்று தருக.

13. திருவள்ளுவர் சொன்ன அணிகள் எவை? அவை தமிழர்களிடம் எங்கெங்கு இல்லை?

14. பயன் பெற்று வாழும் இனத்தவர் யாவர்? எத்தகைய பயன் பெற்று வாழ்கின்றனர்? அதற்குக் காரணம் என்ன?

15. பழங்காலத்து வள்ளல்கள் எத்தகையவர்? இப்போதுள்ள பெருஞ்செல்வர் பலர் எத்தகையவர்?

16. தமிழ்ச் செல்வர்கள் பொதுநலம் கொண்டவ்ரா யிருந்தால் என்ன செய்திருக்கலாம்?

9. விருந்தும் மருந்தும்

[சிறு சேமிப்பு]

(குமாரி புளோரா மொரூய்ஸ், எம். ஏ., பி. டி.,)

" அருளென்னும் அன்பீன் குழவி பொருளென்னும்
செல்வச் செவிலியால் உண்டு" என்றூர்.

திருவள்ளுவர். அன்பையும், அருளையும் வளர்க்கும் சிறப்பு, பொருளாகிய செல்வத்துக்கே உண்டு. நாட்டிலும், வீட்டிலும் மதிப்பினை ஏற்படுத்தவல்ல பொருளை ஒவ்வொருவரும் ஈட்ட வேண்டும். குடியரசு நாட்டில் நாட்டின் செல்வம் என்பது குடிமக்கள் ஈட்டிச் சேமித்து வைத்துள்ள பொருளையே குறிக்கும். இதனைக் கருதியே திருவள்ளுவர் "செய்க பொருளை" என்று ஆணையிடுகிறூர் பொருளை இயற்றிச், சேர்த்துக் காத்துவைக்கவல்ல ஆற்றல் எல்லோர்க்கும் வந்து விட்டால் நம் நாட்டை யாரும் அசைக்க முடியாது.

பொருளைச் செய்யும் கடமை குடிமக்களைப் பொறுத்தது. நன்முறையில் அறநெறியில் அதனைச் சேர்க்க அரசாங்கம் துணையாகவும், காவலாகவும் இருக்கும். ஆனூல் அப்பொருளைச் செலவிடும் வகை இருவகையாகின்றது. ஒன்று மக்கள் தத்தம் குடும்பத்துக்குத் தேவையான உணவு, உடை, உறையுள் முதலியவற்றிற்காகச் செலவிடுவது. இன்னென்று மக்கள் எல்லோருக்குமாக அரசாங்கம் மின்சாரம் உற்பத்தி செய்தல், பாதை அமைத்தல், காவல்பணி, அஞ்சல்பணி முதலியனவற்றிற்காகச் செலவிடுதல். இவற்றையன்றி, நடைமுறைச் செலவு, எதிர்பாராச் செலவு எனச் செலவினம் இருவகைப்படும். குடும்பத்தில் மருந்துச் செலவு, எதிர்பாராத பயணச் செலவு, காணுமற்போனவற்றை ஈடுசெய்தல், விபத்துச் செலவு முதலியன எதிர்பாராச் செலவுகளாகும். அரசாங்கத்தில் புயல், தீ, வெள்ள விபத்துக்கள், பெருந்திட்டங்களினூல் ஏற்படும் அதிகச் செலவு, படையெடுப்பினூல் வரும் செலவு முதலியன எதிர்பாராத செலவுகளாகலாம்.

மழைக் காலத்தில், புயற்காலத்தில் மனிதன் அரிசிக்குத் திண்டாடுகிருன். எறும்புகளைப் பாருங்கள். முன் கூட்டியே உணவுப் பண்டமாகிய அரிசியைப் புற்றுகளில் சேமித்து வைத்த காரணத்தால் அவை மழை புயல் காலங்களில் உணவுக்குத் திண்டாடுவதில்லை. பல்துறை அறிவுகளும், வசதிகளும் மிகுகின்ற இந்நாளில் மனிதர்களாகிய நாமும் சேமிக்கும் பழக்கத்தைக் கைக் கொள்ள வேண்டும்.

திருவள்ளுவர்,

"ஆகாறு அளவிட்டி தாயினும் கேடில்லை
போகாறு அகலாக் கடை" என்ருர்.

வருவாய் வரும் வழி சிறிதாயினும் செலவு செய்யும் முறை விரிவுபடாமல் இருந்தால் அதனுல் தீங்கில்லை என்பதே கருத்து. வாழ்க்கைத் துணைவிக்கு வேண்டிய பண்புகளில் ஒன்ருக வருவாய்க்குத் தக்க வாழ்க்கை நடத்துதலைக் கூறுகிருர் வள்ளுவர். எதிர்பாராச்செலவினங்களையெல்லாம் கூடத் தன் வருவாய்க்குள், கடன் வாங்காது முடிக்கும் நெறியான வாழ்வுக்குச் சேமிப்பது இன்றியமையாதது. இன்றளவில் நாட்டு மக்கட்கு மென்மேலும் வசதிகளும், வாய்ப்புகளும் பெருகி வருதற்குக் காரணமாயமைவன அரசாங்கம் திட்டமிட்டுச் செய்யும் திருப்பணிகள் அரசாங்கம் செய்யும் மருத்துவமனை கட்டுதல், அணை கட்டுதல், நெடுஞ்சாலைகள் அமைத்தல் போன்ற பணிகட்கும், நகராட்சிகள் செய்யும் பணிகட்கும் மக்களிடமிருந்து வரிகளாகப் பெறும் பணமே பயன பட்டு வருகிறது.

தனி மனிதன் தனது குடும்பத்துக்கான திங்கள் செலவைத் திட்டமிட்டுச் செய்வது போன்று அரசாங்கமும் திட்டமிடுகிறது. நாட்டில் உழவையும், தொழிலையும் மேம்படுத்த அணைகள், பெரும் தொழிற்சாலைகள் முதலியன அரசாங்கச்

சார்பில் ஏற்படுத்தப் படுகின்றன. மருத்துவ மனைகள், கல்விக் கூடங்கள் முதலியன அமைக்கப்படுகின்றன. நாட்டில் உள்ள எல்லா மக்களும் ஒரு குறிப்பிட்ட வாழ்க்கைத் தரத்தை எய்த வேண்டும் என்பதற்காக 1961 ஆம் ஆண்டு முதல் ஐந்தாண்டுத் திட்டத்தைச் செயல்படுத்தத் தொடங்கியது நம் அரசாங்கம். எண்ணிறந்த சிற்றூர்கள் மின்சார வசதி பெற்றன. மருத்துவ மனைகள், கல்விக் கூடங்கள், அணைக் கட்டுகள், இரும்புத் தொழிற்சாலை போன்ற தொழிற் சாலைகள் நிறுவப்பட்டன. சிறு சிறு கைத்தொழில்கட்கு ஊக்கமளிக்கப்பட்டன. பலருக்கு வேலை வாய்ப்பும், நல்வாழ்வும் கிடைத்தது. முறையே இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களில் பத்தாயிரத்து நூற்றுப் பத்து கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. மூன்றாவது திட்டத்தில் பதினோராயிரத்து அறு நூறு கோடி ரூபாய் செலவிடப்படுகிறது.

இவற்றிற்கான பணம், நாட்டு மக்கள் தரும் வரி, வெளி நாட்டிலும் உள் நாட்டிலும் பெறும் கடன், மக்களின் சேமிப்பு முதலியவற்றிலிருந்து பெறப்படுகின்றது. சிறு சேமிப்புகளாக மக்கள் சேர்த்து அரசாங்கத்திடம் விட்டு வைத்த தொகையிலிருந்து மட்டும் நமது திட்டச் செலவில் பதினொரு விழுக்காடு தொகை கிடைத்துள்ளது. தனி மனிதர்களாகிய நாம் சேமித்து வைக்கும் தொகை நம்முடைய எதிர்கால வாழ்வுக்கு மனநிறைவு அளவில் மகிழ்ச்சியைத் தருவதோடு மறைமுகமாக நாட்டின் வளர்ச்சித் திட்டங்கட்கும் உதவுகிறது. இந்திய மக்கள் அனைவருக்கும் உயர்தர வாழ்க்கைத்தரம் கிடைக்க வேண்டுமாயின், மக்கள் கடன் தொல்லையில் மூழ்காது நலத்துடன் வாழ வேண்டுமாயின், எல்லோருக்கும் சேமிக்கும் பழக்கம் வரவேண்டும்.

மக்களுடைய சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிப்பதற்காக அரசாங்கம் பல சேமிப்புத் திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறது. அவையாவன,

1. பன்னிரண்டாண்டுப் பாதுகாப்புப் பத்திரங்கள்

ரூபாய் ஐந்துமுதல் எவ்வளவு ரூபாய்ப்பெறுமானத்திற்குமுள்ள இப்பத்திரங்கள் சேமிப்புவசதியுள்ள எல்லா அஞ்சல் நிலையங்களிலும் கிடைக்கின்றன. இவற்றிற்கு 6·25% வட்டி உண்டு. எடுத்துக்காட்டாகப் பத்துரூபாய்க்குப் பாதுகாப்புப் பத்திரம் வாங்கினுல் பன்னிரண்டாவது ஆண்டில் நாம் திரும்பப் பெறும் தொகை பதினேழரை ரூபாய் ஆகிறது.

2. சேமிப்புத் தலைகள் [ஸ்டாம்புகள்]

அஞ்சல் நிலையங்களில் இருபத்தைந்து பைசா, ஐம்பது பைசா, ஒரு ரூபாய் விலைகளில் சேமிப்பு வில்லைகள் விற்கப் படுகின்றன. சேமிக்க விரும்பும் குழந்தைகள் அவற்றை வாங்கி இலவசமாக அஞ்சலகத்தார் தரும் ஒரு அட்டையில் ஒட்ட வேண்டும். ஐந்து ரூபாய் அல்லது பத்து ரூபாய்ப் பெறுமானமுள்ள தலைகள் ஒட்டியவுடன் அதனைத் தந்து பாதுகாப்புப் பத்திரமாகவோ, பரிசுப்பத்திரமாகவோ, சேமிப் புக் கணக்காகவோ மாற்றிக் கொள்ளலாம்.

3. அஞ்சலகச் சேமிப்பு வங்கி

குறைந்த அளவு இரண்டு ரூபாய் கட்டி அஞ்சலகத்தில் ஒரு சேமிப்புக் கணக்கைத் தொடங்கலாம். ஒவ்வொரு தடவையிலும், குறைந்த அளவு ஒரு ரூபாயைக் கணக்கில் சேர்த்துச் சேமிக்கலாம். ஒரு ரூபாய்க்குக் குறைவான தொகையைச் சேமிக்க விரும்பினுல் சேமிப்புத் தலைகளாக வாங்கித் தந்தால் அதனைக் கணக்கில் வரவு வைப்பர். இதற்கு 3% வட்டி கிடைக்கும். வயது குறைந்த இளைஞரும் குழந்தைகளும் கூட அஞ்சலகச் சேமிப்பு வங்கியில் கணக்கு வைத்துக் கொள்ளலாம்.

தவணைப் பரிசுப் பத்திரங்கள்

இப் பரிசுப் பத்திரங்கள் எல்லா அஞ்சல் நிலையங்களிலும் கிடைக்கும். ஐந்து ரூபாய், நூறு ரூபாய் மதிப்பில் இப்

பத்திரங்கள் வெளியிடப்பட்டுள்ளன. ஐந்து ரூபாய்ப் பரிசுப் பத்திரங்கட்குக் குலுக்கலில் பரிசு விழுந்தால் முதற் பரிசு பதினையாயிரம் ரூபாய். மற்றும் 567 பரிசுகள் உண்டு. நூறு ரூபாய்ப் பத்திரங்கட்கு முதல் பரிசு ஐம்பதினாயிரம் ரூபாய். 242 மற்ற பரிசுகள். எந்தப் பரிசும் ஒரு பத்திரத்துக்குக் கிடைக்கவில்லையெனின் ஐந்தாண்டு இறுதியில் ஐந்து ரூபாய்ப் பத்திரத்துக்கு ரூ. 5.50-ம், நூறு ரூபாய்ப் பத்திரத்துக்கு ரூ. 110-00-ம் கிடைக்கும்.

இவற்றையன்றிப் பிராவிடண்டு நிதி, குறிப்பிட்ட சில இன்ஷ்யூரன்ஸ் முதலிய பிற சேமிப்பு முறைகளும் உள்ளன. அரசாங்கப் பத்திரங்கள் முதலியவற்றை வாங்கியவர்கள் இடையில் தேவைப்பட்டால் அவற்றின்மேல் கடன் பெறலாம். அவர்கட்கு வருமான வரி விலக்குகள் அளிக்கப்படுகின்றன. எல்லோரும் சிறிதளவாயினும் சேமிக்க முயலும் முயற்சி நாட்டை மேம்படுத்த, அன்னியர் பிடியினின்று காப்பாற்ற நாம் செய்யும் அரணாகும் எவ்வளவு தொகையைச் சேமிக்கிறோம் என்பதுபற்றிக் கவலையில்லை சேமிக்கும் பழக்கம் வளர வேண்டும் என்பதுதான் குறிக்கோள். எறும்புகள் புற்றில் சேமித்து வைத்த அரிசி எறும்புகட்குப் போகவறுமையில் வாடிய புலவர்க்கும் கிடைத்த கதையை இலக்கியம் கூறும். தேனீக்கள் சேர்த்து வைக்கும் தேன் தேனீக்கட்கும் உதவி மக்கட்கும் மருந்தாய் உணவாய் உதவுவதைப் பார்க்கிறோம். பறவையினங்கள் சேமிக்கின்றன. பாரியின் பறம்பு மலையை மூவேந்தர் முற்றுகையிட்டபோது, பரணர் ஏவிய குருவிகள் கொணர்ந்த தானிய மணிகள் நாட்டைக் காத்தன. இராமபிரான் சேது அணை கட்டுகையில் அணிலும் மண் சுமந்ததாம். நம் சொந்த நலனுக்காக நாட்டின் நலனுக்காகச் சேமிப்போம்; சேர்ந்து வாழ்வோம். நாம் கூறும் சேமிப்புத் திட்டங்களில் வைத்து இழக்கும் குறை இல்லை. களவுக்கும் ஏமாற்றத்துக்கும் இடமில்லை. வாரிசுகட்கும் உரிமை உண்டு. சேமிப்புத்

திட்டம் நாட்டின் நலிவு போக்கும் நன் மருந்து. வளர்ச்சிக் குத் தெம்பூட்டும் வலி மருந்து. வாழ்க்கைக்கு இன்பம் தரும் நல் விருந்து. சேமிப்போம்; திட்டங்களில் பங்கு பெறுவோம்; வாழ்வோம்; எல்லோரும் வாழ வழி வகுப்போம்.

வாக்கியத்தில் அமைத்தெழுதுக :

அன்பையும் அருளையும், வாய்ப்பும் வசதியும், எதிர்கால வாழ்வுக்கு, வறுமையில் வாடிய நலிவுபோக்கும் நன் மருந்து.

வினாக்கள் :

1. பொருளின் சிறப்பினைக் கூறுக.

2. நம் நாட்டை எப்போது யாரும் அசைக்க முடியாது?

3. பொருளைச் செலவிடும் முறைகள் யாவை?

4. எதிர்பாராச் செலவினங்கள் எவை?

5. மனிதர்களாகிய நாம் சேமிக்கும் பழக்கத்தைக் கைக் கொள்ள வேண்டும்—ஏன்? விளக்குக.

6. அரசாங்கம் எவ்வாறு திட்டமிடுகிறது?

7. அரசாங்கத் திட்டங்களுக்கான பணம் எவ்வாறு பெறப் படுகிறது?

8. தனிமனிதர்களாகிய நாம் சேமித்து வைக்கும் பணம் எவ்வாறு பயன்படுகிறது?

9. மக்களுடைய சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிப்பதற் காக அரசாங்கம் வகுத்துள்ள சேமிப்புத் திட்டங்கள் யாவை?

10. சேமிப்புத்திட்டங்களில் எவையேனும் இரண்டைவிவரி.

11. சேமிக்கும் பழக்கத்தால் ஏற்படும் நன்மைகள் யாவை?

கட்டுரை :

1. சிக்கன வாழ்க்கையும் சிறு சேமிப்பும்
2. செல்வத்தின் சிறப்பும் அதனைச் சேர்க்கும் வழியும்.

10. போப் ஐயர்

[பேராசிரியர் ரம்போலா மாஸ்கரேனஸ் எம். ஏ.]

நமது நாட்டில் போப் ஐயர் என்ற பெயருடன் புகழ்ந்தேத்தப்பெறும் ஜி. யு. போப் அவர்கள், வட அமெரிக்காவிலுள்ள நோவாஸ்கோஷியா என்னும் மாகாணத்தில் வணிகத்தில் ஈடுபட்டிருந்த ஒரு ஆங்கில வர்த்தகருடைய அருமை மைந்தனர் ஆவார்.

இவர் பிறந்தது 1820 ஆம் ஆண்டில் "இருவேறு உலகத்து இயற்கை திருவேறு தெள்ளியர் ஆதலும் வேறு" என்ற வள்ளுவர் வாக்கால் பொருளும் அறிவும் பொருந்தி அமைதலின் அருமையை உணர்கின்ருேம். அருமையை உணர்கின்ருேமேயன்றி அது அமையாததொன்று என்று கொள்கின்ருேமில்லே. பொருளும் அறிவும் பொருந்த வாழ்ந்த பெருந்தகையாரைக்காணில் பெரு மகிழ்வு கொள்கின்ருேம். அவர்கள் தனிச் சிறப்பிற்குரியவராய்த் திகழ்கின்றனர். அத்தகையோரில் ஒருவரே ஜி. யு. போப்.

இளைஞர் போப்பிடம் பொருட் செல்வத்தோடு கலைச் செல்வமும் கர்த்தன் அருட்செல்வமும் பொருந்தியிருந்தன 19-ம் ஆண்டுவரையில் ஹாக்ஸ்டன் கல்லூரிப் படிப்பில் திளைத்து அதில் தேர்ச்சியுற்று வெளிப் போந்தபின் போப்பின் மனம் தமது தந்தையின் தொழிலை நாடவில்லை. விவிலிய நூற்கழகத்தைச் சார்ந்து கிறிஸ்து சமயப்பணி செய்ய வேண்டுமெனத் தேர்ந்து, தாம்பிறந்து வளர்ந்த நாட்டை விட்டு 1939-ம் ஆண்டு தமிழ் நாட்டிற்கு வந்தார்.

போப் ஐயர் தமிழ் நாட்டில் பணிசெய்ய வந்து வசித்த இடம் திருநெல்வேலி ஜில்லாவிலுள்ளசாயர்புரம்என்றபகுதியாகும். சாயர் என்ற போர்த்துக்கீசிய வணிகரால் நிறுவப்

பெற்ற காரணத்தால் இவ்வூர் இப்பெயர் பெற்றதென்பர். இங்குப் போப் ஐயர் தம் மதச்சேவையோடு கல்விச்சாலைகள் ஏற்படுத்திக் கலைப்பணியையும் கருத்துடனும் ஆர்வத்துடனும் புரிந்து வந்தார்.

தமிழ் மக்கள் நடுவில் சேவை செய்வதற்கு அவர் தம் மொழி அறிவு தேவை என்பதை போப் ஐயர் உணர்ந்திருந்தார். அக்காலத்தில் வெளி நாட்டிலிருந்து இங்கு வந்த வேத போதகர்களில் போதகமுறையில் இருதிறக் கொள்கை உடையவராயிருந்தனர். சென்னைக் கிறிஸ்துவக் கல்லூரியை நிறுவிய ஆன்டர்சனை யுள்ளிட்ட சில அறிஞர்கள் சமய அறிவை ஆங்கில மொழி வாயிலாகவே பரப்பக்கூடும் என்ற கருத்துடையவர்கள். போப்பையரும் பிறரும் அவ்வந் நாட்டு மொழி வாயிலாகவே சமய அறிவைத் தருதல் தகவுடையது என்ற கொள்கையில் அழுத்தமான நம்பிக்கையுடையவர்கள்.

இதனால் ஐயர் ஆங்கிலக் கல்வி நலன்களை அங்கீகரிக்க மறுத்தார் என்பதற்கில்லை. மேல் நாட்டுக் கல்வியைப் பெறத்தகும் நிலையில் இருந்த மக்கட்கெல்லாம் ஆங்கிலக் கல்வியைத் தாராளமாய் வழங்கினர். என்றாலும் அவரது குன்றாத ஊக்கத்துடன் கூடிய உழைப்பு தமிழேயறிந்த தமிழர்களையே பற்றி நின்றதாகலின் அத்தகைய தமிழ் மக்களின் உயர்வுக்குத் தமிழ் மொழிக் கல்வி இன்றியமையாததெனத் துணிந்து முதன்மையாகத் தாம் தமிழ்க் கல்வி பயிலத் தொடங்கினர். இவருக்குத் தமிழறிவுறுத்திய பெருமகனார் ஆரியங்காவுப்பிள்ளை என்ற புலவர். இந் நல்லாசிரியரிடத்தும் மகாவித்வான் இராமானுஜக் கவிராயரிடத்தும் இலக்கண இலக்கிய சமய நூல்களை முறையாகப் பாடங் கேட்டார். நன்னூல், புறப்பொருள் வெண்பா மாலை போன்ற இலக்கண நூற்களிலும், புறநானூறு, குறள்

போன்ற சங்க நூற்களிலும், சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி போன்ற பெருங்காப்பியங்களிலும் திருவாசகம், திருக்கோவையார் போன்ற பக்திப் பாடல்களிலும் ஐயரவர்களுக்கு மிகுந்த ஈடுபாடு உண்டு. குறிப்பாக ஏலாதி, திரிகடுகம், மூதுரை. வாக்குண்டாம், நான்மணிக் கடிகை. நன்னெறி, நல்வழி, நீதிநெறி விளக்கம்போன்ற நீதி நூல்களிடத்துப் பெருமதிப்புக் கொண்டு அவற்றைப் பலகாலும் பயின்று வந்தார். பயிலும்படிப் பிறரையும் தூண்டினர்.

பெரும்புலவர் வாயிலாகத் தாம் கொண்ட சமய அறிவைச் சாயர்புரத்தில் வதிந்த காலத்து நன்கு வளர்த்துக் கொண்டார் நம் போப்பையர். அங்குள்ள இளைஞர்க்குக் கற்றுக் கொடுப்பதிலேயே இவர் தம் தமிழ்க் கல்வி வளர்ந்தது. "கற்பதற்குச் சிறந்த வழி படிப்பது; அதைவிடச் சிறந்த வழி கேட்பது; ஆகச் சிறந்த வழி படித்துக் கொடுப்பது" என்பது ஆன்ரோர் வாக்கு. போப்பையரும் தம் தமிழறிவை வளர்த்தற்கு இங்குப்பேசப்பெற்ற 'ஆகச்சிறந்த' உயர்வழியையே பற்றினர். அவர் கற்றுக்கொடுக்கக் கொடுக்க அவர் தம் தமிழறிவு தொட்டனைத்தூறும் மணற் கேணிபோல் சுரப்பதாயிற்று. சமயப் பணியில் மக்களோடு நெருங்கிப் பழகிய காரணமாக நூல் வழக்கோடு பேச்சு வழக்கையும் நன்கறிந்தார். இது அவர் தமிழ் நூற்களைத் துருவிப் பயில்வதற்கும் அந்நூற்களின் உண்மைப் பொருளை உணர்ச்சி குன்ருத வகையில் மொழி பெயர்ப்பதற்கும் பெருந்துணை செய்தது.

1949-ம் ஆண்டு ஐயர் இங்கிலாந்திற்குத் தற்காலிகமாகச் சென்ற காலத்து முதன் முதலாக ஆக்ஸ்போர்டுடன் தொடர்பு கொண்டார். ஓய்வுக்கென அவர் அங்கு உறைந்த ஓராண்டும் தமிழ்த் தொண்டினை அவர் மறக்கவில்லை. ராயல் ஏசியாட்டிக் குவார்ட்டெர்லி, இந்தியன்

ஆன்டிக்குவரி, இந்தியன் மாகசின் போன்ற பிரபல சஞ்சிகைகட்குத் தமிழ்மொழி பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரைகளைத் தொடர்ந்து எழுதிவந்தார். "தமிழ்நாட்டுப் புலவர்கள்" "புறநானூறு" "புறப்பொருள் வெண்பா மாலைப் பகுதிகள்" "தமிழ்ப் புனிதர் வரலாறு" ஆகிய இவைகள் இக்கட்டுரைகளில் குறிப்பிடத் தகுந்தன.

1931-ம் ஆண்டு போப்பையர் தமிழ் நாட்டிற்குத் திரும்பினர் சாயர்புரத்திலிருந்து மாற்றப்பெற்றுத் தஞ்சாவூருக்கு வந்தார். சாயர்புரம் அவருடைய உழைப்பால் வேதவிளக்க சங்கத்தாரின் கல்வி ஸ்தாபனங்களின் கேந்திர ஸ்தானமாக விளங்கிற்று. தஞ்சையிலும் ஐயரது கல்விப் பணி தழைத்தது. அங்குப் புனித பீட்டர் கல்லூரியை ஏற்படுத்தினர். அக்கல்லூரி 1906-ம் ஆண்டு வரை பி. ஏ. பட்டத்திற்கு ஏற்றவரையில் கல்வி அளித்தது. தற்போது உயர்நிலைப் பள்ளியாகத் தொடர்ந்து சேவை செய்கின்றது.

போப்பையர் கல்விப் பணியால் சாயர்புரமும் தஞ்சையும் பெற்ற பேற்றினை உதகமண்டலமும் பங்களூரும் அடுத்தடுத்துப் பெற்றன. ஐயர் இவ்விரு ஊர்களிலுமிருந்த கல்விச்சாலைகளில் தலைமை ஆசிரியராகவிருந்து அருந்தொண்டு ஆற்றிவந்தார்.

1880-ம் ஆண்டு போப் ஐயர் இங்கிலாந்திற்குத் திரும்புகின்ற காலத்து 40 ஆண்டுகள் தமிழ் மொழிக்கும் தமிழ் மக்கட்கும் செய்த நிறைந்த சேவையோடு திரும்பினர். தமிழ் நாட்டை விட்டும் ஐயர்தம் தமிழ்ச் சேவை அவரை விடவில்லை. இங்கிலாந்தில் ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகம் ஐயருடைய நுண்மாண் நுழைபுலத்தை மெச்சியும் கல்விச் சேவையைப் பாராட்டியும் எம். ஏ. பட்டம் அளித்தது. அங்கே அவர் இந்தியன் சிவில் ஸேர்

விஸ் என்ற இலாகாவில் தென் இந்தியாவில் அரசியல் உத்தியோகங்களுக்கு வரும் ஆங்கிலேயர்களுக்குத் தமிழும் தெலுங்கும் கற்றுக் கொடுத்தார். இதன்றித் தமிழில் பாடப் புத்தகங்கள் எழுதினர்.

போப் ஐயர் தொகுத்த "தமிழ்ச் செய்யுட்கலம்பகம்" உயர்ந்த காப்பியங்கள், நீதி நூற்கள் ஆகியவற்றிலிருந்து திரட்டப்பெற்ற 612 செய்யுட்களைக் கொண்டது. நட்பு, சினமின்மை, பொறுமை என்ற இத்தகு தலைப்புகளிலே அறநெறிக் கருத்துகள் அடங்கிய இனிய செய்யுட்களைத் தன்னகத்தேயுடையது. ஒவ்வொரு செய்யுட்கும் ஆங்கிலச் சூசகம் உண்டு. சந்தி பிரித்து விளக்கங்கள் கூறியிருக்கின்றூர்.

போப்பையர் செய்தருளிய நாலடியார் ஆங்கில மொழி பெயர்ப்பு ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்திலிருந்து செய்த நிலைபேறுற்ற பெரும்பணியாகும். அதன் முன்னுரையில் ஐயர் தொன்மைவாய்ந்த தமிழ்ப் பெரு நூற்களோடு பரிச்சயம் பெறுதல் மட்டும் அவர் கருத்தன்று எனக் கூறித் தமிழர்களுட் சிலர் ஆங்கிலத்திலே விளங்கா நிற்றற்கான பெருமுயற்சியும் பேரூக்கமும் கொண்டவர்க்ளாக இருப்பவும் தமது வியத்தகு மொழியில் அலட்சியம் கொண்டவராயிருப்பது குறித்து வருந்தி அவர் தமக்கும் இத்தகைய மொழி பெயர்ப்பு நூற்கள் உதவுவன என்ற நம்பிக்கையைப் புலப்படுத்துகினறூர்.

தமிழில் வழங்குகின்ற தொன்மைவாய்ந்த இலக்கணங்களும் அவற்றிலுள்ள வனப்பமைந்த யாப்பு அமைப்பும் நம் மொழியின் பன்னெடுங்காலப் பண்பாட்டினைக் குறிப்பன என்பது போப்பையர் கருத்து. நூலின் நடைக்கும், நூல் நுவல் பொருளுக்கும் ஏற்றபடி யெல்லாம் இயைகின்றதான 'உள்ளது சிறத்தல்' என்ற சாத்திர முறையில் செல்

லும், வளர்ச்சியைக் குறித்து மகிழ்ச்சி தெரிவித்து, இடைச் செருகலாக ஏற்பட்ட போலி நூற்கள் பெரும் புலவர்களுடைய பெயரோடு பொருத்தப்பெறுவதை வன்மையுடன் கண்டிக்கிருர்.

தமிழ் எண்ணங்களை ஆங்கில மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தி வைப்பதே தமது மொழி பெயர்ப்பின் நோக்கம் என்று முன்னுரையின் முடிவுரையாகக் கூறுமிடத்துத் தமிழ் மொழி அறிவின் நோக்கத்தை அழகுறத் தெரிவிக்கின்ருர். அவர் சொல்கிருர்: "இனிய தமிழினை அறிந்து அன்பு செலுத்துவோர் அதனைப் பேணுவோரை அறியவும் அவரிடத்து அன்பு செலுத்தவும் கூடும். அதனுல் அந்நூலால் அறியப் பெறுதலும் அன்பு செலுத்தப் பெறுதலும் கைகூடும்.

சிவஞான போதம் போன்ற சாத்திர நூற்களையும் கூர்ந்து படித்துத் தெரிந்து அதன் காரணமாய்ச் சிவஞான போதத்தையும் திருவாசகத்தையும் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். சைவ சித்தாந்தத்தைக் கற்றுத் தாம் கொண்டிருந்த கருத்தை வெளியிடுங்கால் "சைவ சித்தாந்தத் தத்துவம் திராவிட அறிவின் தேர்ந்தெடுக்கப் பெற்ற பக்குவப் பொருள்" என்று பாராட்டிப் பேசுவார்.

தமிழ் இலக்கணத்திற்குப் போப்பையர் செய்த சேவை மகத்தானதாகும். நூற்பாக்களில், சூத்திரங்களில் அமைந்த இலக்கண நூற்கள் மாணவர் பயிற்சிக்கு எளிதாக அமையாதன. முதல் முதல் உரை நடையில் பள்ளிப் பாலரும் படித்தறியும் பான்மையில் இலக்கணம் எழுதிய பெருமை போப் ஐயர் அவர்களையே சாரும். அவரது இலக்கணத்தின் மூன்று பகுதிகளும் இன்னும் புதியதாய்த் தமிழ் கற்கும் பிற மொழியாளர்க்கும் கருந்தனமாக விளங்குகின்றன.

தனிப்பாசுரத் தொகை என்பது பரிதிமாற் கலைஞன் என்ற பெயருடன் விளங்கிய சென்னைக் கிறிஸ்தவக் கல்லூரித் தலைமைத் தமிழ்ப் பண்டிதர் சூரிய நாராயண சாஸ்திரியார் என்பவரால் இயற்றப் பெற்ற 44 செய்யுட்களைக் கொண்டதொரு நவமான கவிதை நூல். இச் செய்யுட்கள் அனைத்திற்கும் போப் ஐயர் மொழி பெயர்ப்பு அருளியதோடு அவர் தந்த ஆங்கில முன்னுரையில் தமிழ் வளர்ச்சிக்குரிய வாய்ப்பான வழிகளைக் காட்டியிருக்கிறார்.

தமிழிற் புதுமைவேண்டாத தொன்மைவிரும்பிகளுடைய வெறும் பெருமைக் கூற்று பொருந்துதல் ஆகாதென்றும், உலக சரித்திரத்தை உற்று நோக்குகின்ற அளவிலும்-தமிழ்க் கலைமகள் கட்டுண்டு கிடப்பினும்—அவளுக்கு இற்றை நாட்குரிய நவீன சிறந்த அணிகலன்களை அணிதல் தகும் என்றும் அதிற் குறிக்கின்றார். ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகம் புதிய ஆராய்ச்சியேட்டுகூடிய நன்னூல், குறள், நாலடியார், திருவாசக வெளியீடுகளால் தமிழுக்குத் தன்னுலியன்ற சேவை செய்துள்ளதென்பதையும் உலக இலக்கிய வட்டாரத்தில் மேற் குறித்த நூற்களைப் புகவிடும் நவமான பணியை நல்லமுறையில் செய்துள்ளதென்பதையும் குறிப்பிடுகின்றார். தமிழ் பண்டிதரிடம் அகப்பட்டு அவர்களால் மட்டும் பூசிக்கப் படுதல் போதாது. நாட்டின் ஆண்கள், பெண்கள், சிறுவர் சிறுமியர் ஆகிய ஒவ்வொருவரின் இதயத்தில் எண்ணத்தில் நுழைந்துளதா? நுழையக்கூடுமா? இதுதான் போப்பையருடைய பொருத்தமான கேள்வி. தமிழ் பொதுமக்களிடம் பேசப்படல் வேண்டுமென்பது அவருடைய தமிழ் கனிந்த உள்ளத்தினின்றெழும் வேணவா. அதற்கு அவர் வகுக்கும் வழி, எல்லோராலும் எளிதில் புரிந்துகொள்ளக்கூடிய நடையைப் பின்பற்றி நூற்கள் எழுதப் பெறவேண்டுமென்பது.

ஆங்கில உலகிற்குத் தமிழ்ப் பெரும் இலக்கியங்களை அறிமுகப் படுத்தும் வரிசையில் திருக்குறளை மொழி

பெயர்த்ததிறன் பாராட்டுக் குரியதொன்று. சுவாமி வீரமா முனிவர் அறத்துப்பாலையும் பொருட்பாலையுமே இலத்தீனில் மொழி பெயர்த்துள்ளார் முனிவர் காமத்துப்பாலை மொழி பெயர்க்கவில்லை. போப் ஐயர் 1330 அருங்குறளையும் மொழி பெயர்த்திருக்கிறார். உரிய இடங்களில் தமக்கு முன்னர் முறையே இலத்தீனிலும் ஆங்கிலத்திலும் திருக்குறளை மொழி பெயர்த்துள்ள வீரமாமுனிவர், எல்லிஸ் துரையவர்கள் ஆகிய இன்னாரது மொழி பெயர்ப்புகளை மேற்கோளாகக் காட்டுகிறார். பல இடங்களில் தம்மிருவருடைய மொழி பெயர்ப்புகளைக் காட்டிலும் வீரமாமுனிவரது மொழிபெயர்ப்பு சிறந்து விளங்குவதை உதார சிந்தையோடு எடுத்துரைக் கின்றார்.

திருக்குறளைப் பற்றியும் தமிழ் மக்களைப் பற்றியும் ஐயர் கூறும் பாராட்டுரையை நாம் ஆழ்ந்து படித்தல் வேண்டும். அவர் கூறுகின்றார்: "தாழ்மை, அன்பு, மன்னிப்பு இம்மூன் றும் திருக்குறளில் ஆசிரியரால் வலியுறுத்தி உரைக்கப்படு கின்றன. சிறந்த நீதியைக்கொண்டுள்ள மக்கள் வாழும் நாட்டில்தான் திருக்குறள் போன்ற ஒழுக்க நூல்கள் எழுதப் பெறும். தமிழ் பேசும் மக்கள் ஒழுக்கம் உடையவர்கள் என்பதே என் கூற்று. தமிழ் மக்களுக்கு நன்மைசெய்ய வேண்டுவோர் இவ்வுண்மையை ஒப்புக்கொள்ள வேண்டும்".

40 ஆண்டுகள் தமிழ் நாட்டில் வளர்ந்து தமிழ்ச் சேவை செய்த போப்பையர் நம் நாட்டை விட்டு இங்கி லாந்து சென்ற காலத்தும் இடையறுது செய்து வந்தது அப்பணியே. அவர் இறப்பதற்கு முன் ஒரு அன்பர் "தங்கள் கடைசி விருப்பம் எது?" என்று கேட்டாராம். அதற்கு ஐயர் "என் கல்லறையின்மீது ஒரு தமிழ் மாணவன் என்று எழுதுங்கள்" என்றாராம். ஐயரவர்கள் உள்ளத்தைக் கொள்ளைகொண்ட தமிழ் ஆர்வத்தைச் சொற்களால் அள விட்டுச் சொல்வது இயலுவதன்று.

மொழிப் பயிற்சி:

வாக்கியத்தில் அமைத்தெழுதுக :

பொருளும் அறிவும், தொட்டனைத் தூறும் மணற்கேணி போல, உள்ளத்தைக் கொள்ளை கொண்ட நுண்மான் நுழைபுலம்.

வினாக்கள்:

1. ஜி.யு. போப் என்பவர் யார்? அவரது தனிச்சிறப்பு யாது?

2. வெளி நாட்டு வேத போதகர்களின் இரு வேறு போதக முறைகள் யாவை? போப்பையர் எக்கொள்கையுடையவர்?

3. போப்பையருக்குத் தமிழ் கற்பித்தவர் யாவர்? ஐயர் கற்ற தமிழ் நூல்கள் யாவை?

4. கற்பதற்குச் சிறந்த வழி யாது?

5. போப்பையர் இங்கிலாந்தில் இருந்த போது அங்கிருந்து அவர் செய்த தமிழ்ப் பணிகள் யாவை?

6. போப்பையரது கல்விப் பணியால் பேறு பெற்ற இடங்கள் யாவை?

7. போப்பையர் தொகுத்த தமிழ்ச் செய்யுட் கலம்பகம் பற்றிக் கூறுக.

8. நாலடியார் மொழி பெயர்ப்பு முகவுரையில் ஐயரவர்கள் யாது கூறியுள்ளார்?

9. போப்பையர் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்த சைவ நூல்கள் யாவை? அவை பற்றி ஐயரின் கருத்து யாது?

10. தமிழ் இலக்கணத்திற்குப் போப்பையர் செய்த சேவை யாது?

11. ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகம் தமிழுக்குச் செய்துள்ள சேவையை ஐயர் எவ்வாறு குறிப்பிடுகின்றார்?

12. போப்பையரவர்களின் திருக்குறள் மொழி பெயர்ப்பைப் பற்றிக் கூறுக.

13. திருக்குறளைப் பற்றியும் தமிழ் மக்களைப் பற்றியும் ஐயர் கூறும் பராட்டுரைகள் யாவை?

14. போப்பையரின் தமிழ் நெஞ்சம் எதனுல் அறியப்படுகிறது?

15. போப்பையர் தமிழுக்குச் செய்த தொண்டுகளிற் சிலவற்றைக் கூறுக.

கட்டுரை :

போப்பையரின் தமிழ்ப்பணி.

நீ உன் தாய் மொழிக்குச் செய்யும் தொண்டு.

தாய் மொழியிற் கல்வி கற்றல் என்ற தலைப்புகளில் தனித் தனிக் கட்டுரை வரைக.

11. ஓவியக் கலை

[பேராசிரியர் டாக்டர். மா. இராசமாணிக்கனார், எம்.ஏ.,பிஎச் டி.]

முன்னுரை :

நாம் கண்ணால் காணும் பொருள்களைச் சித்தரித்து எழுதும் கலையே ஓவியக்கலை. பண்டை மனிதன் தான் பார்த்தவற்றையே படமாக எழுதிக் காட்டினான்; பின்பு அறிவு வளர வளரத் தன் மனத்தால் பல உருவங்களையும் காட்சிகளையும் முடிவு செய்து அவற்றைப் படங்களாக வரைந்தான்; எண்ணும் ஆற்றலில் சிறந்த புலவர் பெரு மக்களுடைய கருத்தோவியங்களுக்கு உருவங்களை அமைத்தான். இவ்வாறு ஓவியக் கலையில், காணும் பொருளிலிருந்து எண்ணும் செய்திகள் வரையிலும் உருவம் தரும் முறை வளர்ச்சி பெற்றது. சுருங்கக் கூறின் ஓவியக்கலை வீடுகட்ட அறியாத மனிதன் குகையில் வாழ்ந்தபோதே தோற்றமெடுத்தது என்று கூறலாம். பழைய மக்கள் வாழ்ந்த குகைகளில் சிறு சிறு ஓவியங்கள் இன்றும் காணப்படுகின்றன.

ஏறத்தாழ ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட சிந்துவெளிப் பொருள்களில் ஓவியம் தீட்டப்பெற்ற மட்பாண்டங்கள் பலவாகும், தாயித்துக்கள் பலவாகும். இவ்வாறே சுமேரியர், எகிப்தியர் புதை பொருள்களிலும் ஓவியங்கள் காணப்படுகின்றன. எனவே ஓவியம் வரையும் வழக்கம் மனிதனது வாழ்வுத் தொடக்கத்திலிருந்தே வளர்ந்து வந்திருக்கிறது என்பது பொருந்தும்.

சங்க காலத்தில் :

இன்றுள்ள தமிழ் நூல்களில் காலத்தால் முற்பட்டது தொல்காப்பியம் என்னும் இலக்கணநூல். போரில் விழுப்புண்பட்டு வீரர்கள் இறந்த இடத்தில், அல்லது அவர்களைப் புதைத்த இடத்தில், அல்லது அவர்களது உடற்சாம்பலை

அடக்கம் செய்த இடத்தில் ஒரு கல் நடப்படும்; அக்கல்லில் இறந்த வீரனது உருவம் பொறிக்கப்படும். பின்னர் அதற்குப் பூசை நடத்தப்படும். இதற்கு நடுகல் என்பது பெயர். இது வீரராலும் இறந்தவர் மரபினராலும் தொழப்படும். கல்லில் இவ்வாறு ஓருருவம் செதுக்கப்படுவதற்கு முன் அவ்வுருவத்தை ஓவியமாக வரைந்து கொள்ளுதலே வழக்கமாகும். அந்த ஓவியத்தின் உதவி கொண்டே கல்லில் உருவம் செதுக்கப்படும். எனவே தொல்காப்பியர் காலத்திலேயே (ஏறத்தாழ 2500 ஆண்டுகளுக்கு முன்னமேயே) ஓவியம் தீட்டும் வழக்கம் தமிழரிடம் இருந்து வந்தது என்பது தெளிவாகும்

சங்ககால நடன மகளிர் நடனக்கலைக்காகப் பல்வேறு கலைகளையும் கற்றனர். அவற்றுள் ஓவியக்கலையும் ஒன்று என்று சிலப்பதிகாரம் செப்புகின்றது.

‘ நாடக மகளிர்க்கு நன்கனம் வகுத்த
ஓவியச் செந்நூல் உரைநூற் கிடக்கையில்
கற்றுத்துறை போகிய பொற்றெடி நங்கை,

இவ்வடிகளை நோக்க, ஓவியக்கலை பற்றிய சிறந்த நூல் ஒன்று சங்ககாலத்திலிருந்தது என்பது தெளிவாதல் காண்க. மாதவியின் நடன அரங்கேற்றம் நிகழ்ந்த அரங்கின் மேற் கூரையில் கண்கவரும் ஓவியங்கள் பல தீட்டப்பெற்றிருந்தன, அக்கூரை ஓவிய விதானம் எனப் பெயர் பெற்றது.

மதுரைக் கடைகளில் விற்ற உலோகங்களாலான கேடய வகைகளில் கண்ணைக் கவரும் ஓவியங்கள் தீட்டப் பெற்றிருந்தன என்று சிலப்பதிகாரம் செப்புகிறது.

தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனது, கோப்பெருந்தேவி படுத்திருந்த கட்டி

லின் மேற்கூரையில், பலவகை ஓவியங்கள் தீட்டப்பட்டிருந் தன. அவற்றுள் திங்களின் பக்கத்தில் உரோகிணி இருப்பது போன்ற உருவம் ஒன்றுகும். கணவன் பிரிவால் வாடிய கோப்பெருந்தேவி அவ்வோவியத்தைக் கண்டு உரோகிணி யைப் போல் நானும் என் கணவனேடு என்றுமே இணைந் திருக்க முடியாதோ என்று எண்ணிப் பெருமூச்சு விட்டாள். இது நெடுநல்வாடைதரும் செய்தி ஆகும்.

செல்வர் வாழும் வளமனைச் சுவர்கள் மீதும், மாடங்கள் மீதும் தேவர் முதல் எல்லா உயிர்களையும குறிக்கத்தக்க ஓவியங்கள் தீட்டப்பெற்றிருந்தன என்னும் செய்தி மணி மேகலையில் கூறப்பட்டுள்ளது.

மதுரையையடுத்த திருப்பரங்குன்றத்தில் முருகப் பெரு மான் திருக்கோயிலில் மண்டபங்கள் பல இருக்கின்றன. அவற்றில் புராண இதிகாசக் கதைகள் பல ஓவியங்களாகக் காட்சி அளித்தன. அவற்றுள் கதிரவன், திங்கள், கோள்கள், இரதி, மன்மதன், இந்திரன், அகலிகை, பூனை, கௌதமன் என்னும் உயர்திணை, அஃறிணைப் பொருள்களைக் குறிக்கும் ஓவியங்கள் எழுதப் பெற்றிருந்தன என்று பரிபாடல் பகரு கிறது.

காதலன் தான் விரும்பிய பெண்ணை மணக்க முடியாத நிலையில் ஒரு துணியில் அவள் உருவத்தை ஓவியமாக வரைந்து மடலேறுதல் வழக்கம் என்று அகப்பொருள் நூல் கள் கூறுகின்றன. நிறங்கள் தீட்டப் பெருது மேலோட்ட மாக வரையப்பட்ட ஓவியம் புனையா ஓவியம் எனப்பட்டது.

ஓவியங்களை அமைத்து ஆடைநெய்தல் சங்க காலத் தமிழகத்தில் பழக்கமாயிருந்தது. ஆடைகளில் ஓவியங்களை அமைத்தல் எளிதான செயலன்று. அங்ஙனம் அமைத்தவர் மிகச் சிறந்த ஓவியத்திறனுளராக இருந்திருக்கலாம்

அல்லவா? காவிரிப்பூம்பட்டினத்திலிருந்த உவவனம் சிறந்த ஓவியரால் ஓவியங்கள் அமைத்துச் செய்யப்பட்ட ஆடை போலக் காட்சியளித்தது என்று மணிமேகலை ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

'வித்தகர் இயற்றிய விளங்கிய கைவினைச்
சித்திரச் செய்கைப் படாம்போர்த் ததுவே
ஒப்பத் தோன்றிய உவவனம்'

இவ்வாறு சுவர்களிலும், மண்டபக் கூரைகளிலும், ஆடைகளிலும், கேடயங்களிலும் கண்கவர் ஓவியங்களைத் தீட்ட வல்லவர் சிறந்த ஓவியராக இருத்தல் வேண்டும் அல்லவா! அக் கலைவாணரைக் 'கண்ணுள் வினைஞர்' என்று மதுரைக் காஞ்சி செப்புகின்றது. அதற்கு உரையெழுதிய நச்சினார்க்கினியர், கண்ணுள் வினைஞர் நோக்கினார் கண்ணிடத்தே தம் தொழிலை நிறுத்துவோர் என்று கூறியுள்ளார். அஃதாவது பார்ப்பவர் கண்ணையும் கருத்தையும் ஈர்க்கத்தக்க ஓவியங்களைத் தீட்டுவோர் என்பது பொருள். எனவே, சங்ககாலத்தில் ஓவியக்கலை சிறந்த முறையில் வளர்ச்சி பெற்றிருந்தது என்பதை இதுகாறும் கூறப்பெற்ற விவரங்களைக் கொண்டு நன்கு தெளியலாம்.

இடைக்காலத்தில்:

சங்க காலத்திற்குப் பிற்பட்ட பல்லவர் காலத்தில் (கி. பி. 300–900) குடைவரைக் கோவிலில், பாறைச் சுவர்களின் மேற்கூரையில் ஓவியங்கள் தீட்டப் பெற்றிருந்தன. மாமண்டூர்க் குகைக் கோவில், காஞ்சிக் கைலாசநாதர் கோவில் முதலியவற்றின் சுவர்களில் பல நிறங்கள் காணப்படுகின்றன. அங்கு வரையப்பட்ட ஓவியங்கள் காலப்போக்கில் அழிந்துவிட்டன. அழியாமல் இன்றளவும் நாம் பார்க்கத்தக்க நிலையில் இருப்பவை சித்தன்னவாசல் ஓவியங்களேயாகும். சித்தன்ன வாசல் புதுக்கோட்டைக்கு மேற்கே

பத்துக்கல் தொலைவில் இருக்கின்றது. அங்குள்ள குன்றுகள் ஒன்றில் குடைவரைக் கோவில் இருக்கின்றது. இதனைக் குடைவித்தவன் மகேந்திரவர்மன். அதன் முன் மண்டபத்தில் நான்கு தூண்கள் இருக்கின்றன. நடுத்தூண்கள் இரண்டில் நடன மாதர் இருவரின் உருவங்கள் தீட்டப் பெற்றுள்ளன. அவர் தம் கூந்தலமைப்பு, ஆடையமைப்பு, அணிவகைகள், நடனமாடும் நிலையில் கைகள் வைத்துள்ளமுறை முதலியன அவற்றை எழுதிய ஓவியர் திறமையை உலகறியச் செய்கின்றன. அவ்வோவியங்களைக் கொண்டு அக்காலத் தமிழகத்து நடனமாதர் கூந்தலமைப்பு, ஆடையமைப்பு, அணிவகைகள் முதலியவற்றை நாம் ஒருவாறு அறியலாம்.

வலப்புறத் தூணின் உட்பகுதியில் அரசன், அரசியர் தலைகள் ஓவியங்களாகத் தீட்டப் பெற்றுள்ளன. மணிகள் பதிக்கப் பெற்றுச் சிறந்த வேலைப்பாடு கொண்ட மகுடம் ஒன்று அரசன் முடி மீது காட்சியளிக்கின்றது. அவன் காதுகளில் குண்டலங்கள் தொங்குகின்றன. அரசியின் தலை மீது ஒருவகை மகுடம் அழகு செய்கின்றது. அவள் காதுகளில் வளையங்கள் (Ear Rings) காண்கின்றன. இருவர் உருவங்களும் அழகாக எழுதப்பட்டுள்ளன. மேற்கூரையில் பெரிய ஓவியம் ஒன்று காணப்படுகின்றது. அது ஒரு தாமரைக் குளத்தைக் குறிக்கின்றது. தாமரை இலைகள், மலர்கள், பேரரும்புகள் என்பன அக்குளத்தை அழகு செய்கின்றன. சமணப் பெரியோர் சிலர் தாமரை மலர்களைப் பறிக்கின்றனர். குளத்தில் எருமைகளும், மீன்களும் காணப்படுகின்றன. கண்ணையும், கருத்தையும் தன்பால் இழுக்கும் அவ்வோவியம் ஏறத்தாழ 1300 ஆண்டுகளுக்கு முன் எழுதப் பெற்றது. ஆயினும், இன்றும் நாம் கண்டுகளிக்கும் நிலையில் இருக்கின்றது என்பதை எண்ண, அதை எழுதிய ஓவியர் திறமையை என்னென்பது!

பல்லவர்க்குப் பிற்பட வந்த சோழர்கால ஓவியங்களுள் இன்று நாம் காணும்படி இருப்பவை தஞ்சைப் பெரிய கோவில் ஓவியங்களே யாகும். அவை தஞ்சைப் பெரிய கோவில் கருவறையின் புறச் சுவர்கள் மீது எழுதப்பட்டுள்ளன. பல நூற்றுண்டுகளுக்குப் பிறகு அவை மறைக்கப்பட்டு, அவற்றின் மீது நாயக்கர்கால ஓவியங்கள் எழுதப்பட்டன. இன்று இவ்விருவகை ஓவியங்களும் நமக்குக் கிடைத்துள்ளன.

சோழர் கால ஓவியங்கள் கி. பி. 11 ஆம் நூற்றுண்டில் வரையப் பெற்றவை. சுந்தரர் சிவபெருமானுல் • தடுத்தாட் கொள்ளப்பட்ட வரலாறு தஞ்சைப் பெரிய கோவிலில் அழகிய ஓவியமாகத் தீட்டப்பட்டுள்ளது. சிவபெருமான் கிழவேதியராகத் திருமண மண்டபத்தில் வந்து நிற்கிறுர். அவரது, ஒரு கையில் தாழைக் குடையும், மற்றெரு கையில் பனையோலையும் காணப்படுகின்றன. மண மண்டபத்தில் மறையவர் பலர் கூடியிருக்கின்றனர். மணமகனுரான சுந்தரர் தமது மணத்தைக் தடுக்க வந்த கிழவரை வியப்போடும், வெறுப்போடும் பார்க்கின்ற பார்வை அழகாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது. அடுத்த ஓவியம் கயிலைக் காட்சியைக் குறிக்கிறது. சிவபெருமான் புலித்தோல் மீது அமர்ந்திருக்கிறுர். அவரைச் சுற்றிலும் தேவரும், பூதகணங்களும் காணப்படுகின்றனர். இக்காட்சிக்கு அடியில், சுந்தரர் வெள்ளானை மீது இவர்ந்து செல்லுதலும், சேரமான் பெருமாள் நாயனுர் குதிரை மீது செல்லுதலும் ஓவியங்களாகக் காட்டப்பட்டுள்ளன. யானையின் மீதுள்ள அணிவகைகள் பார்க்கத்தக்கவை. சுந்தரர் தலைமுடியும் தாடியும் வைத்துள்ளார்; பல அணிகளை அணிந்துள்ளார்; கைகளில் தாளத்தை வைத்துள்ளார். அவரது யானை விரைந்து செல்லுகிறது. அதன் காலடியில் கடல் நீர் காணப்படுகிறது. கடலின் அடியில் மீன்கள் காட்சியளிக்கின்றன. சேர நாட்டுத் தலைநகரான கொடுங்கோளூரை விட்டு, அதன் அரசரான சேர

மான் பெருமாள் நாயனுருடன் சுந்தரர் கடல் ஓரமாகக் கயிலையை நோக்கிச் செல்லும் காட்சியே அங்கு ஓவியமாகத் தீட்டப்பட்டுள்ளது. சேரமான் அணிந்துள்ள அணிகளும், அவரது முடி அழகும், குதிரையின் அணி விசேடமும் பார்க்கத்தக்கவை. இவ்வோவியங்கள், இடைக்கால அணிவகைகளையும், ஆடவர் குஞ்சி அமைப்பையும், பிறவற்றையும் நமக்கு நன்கு உணர்த்துவனவாகும்.

இவ்வோவியங்களை அடுத்துச் சோழர் கால நடன மகளிரைக் குறிக்கும் ஓவியங்கள் எழுதப்பட்டுள்ளன. அம் மகளிருடைய கூந்தலொப்பனையும், அணிவகைகளும், உருவ அமைப்பும், அவர்கள் கைகளிலுள்ள இசைக் கருவிகளும் நாம் கவனிக்கத்தக்கவை. இவ்வோவியம் பழுதுபட்டிருப்பினும் மிகச் சிறந்த முறையில் அக்காலத்தில் எழுதப்பட்டிருத்தல் வேண்டும் என்பது தெரிகிறது. துர்க்கை எருமைத் தலை அசுரனைக் கொல்லும் ஓவியம் அழகானது. இவ்வோவியங்கள் சோழர் கால ஓவியக்கலை வளர்ச்சியை நமக்குத் தெரிவிக்கின்றன. இவை அரசாங்கப் புதை பொருள் அலுவலரால் செப்பனிடப்பட்டும் பாதுகாக்கப்பட்டும் வருகின்றன.

பிற்காலத்தில்:

மேலே கூறப்பெற்ற சோழர் கால ஓவியங்களுக்கு மேல் சுண்ணும்புப்படை பூசப்பெற்று, அப்படை மீது நாயக்கர் கால ஓவியங்கள் தீட்டப்பட்டிருந்தன. அவையும் மதுரை மீனுட்சியம்மன் கோவில் சுவர்கள் மீதுள்ள ஓவியங்களும் ஏறத்தாழ ஒன்றுக இருக்கின்றன. மதுரையில் சிவபெருமான் செய்த அறுபத்து நான்கு திருவிளையாடல்களும் பொற்றுமரைக் குளத்திற்கு எதிரிலுள்ள சுவர்களில் ஓவியங்களாகக் காட்சியளிக்கின்றன. நாயக்கர் கால மக்களுடைய உடை, கூந்தல் ஒப்பனை, அணிவகைகள் முதலியவற்றை இவ்வோவியங்களைக் கொண்டு நாம் அறியலாம்.

திருக்குற்றாலத்திலுள்ள சித்திர சபையில் (ஓவிய அரங்கில்) உள்ள ஓவியங்கள் நாயக்கர் காலத்தவை. தில்லையில் சிவகாமியம்மன் திருமுன்பு உள்ள மண்டபக் கூரையில் தீட்டப்பட்டுள்ள ஓவியங்களும் நாயக்கர் காலத்தவை. அவற்றுள் திருமால் மோகினி அவதாரம் எடுத்துத் தாருகவனத்து முனிவரை மயக்கும் காட்சி, சிவபிரான் பிட்சாடனராக வருதலையும் அவரைக் கண்டு முனிவர் மனைவியர் உளம் நெகிழ்தலையும் குறிக்கும்காட்சி ஆகிய ஓவியங்கள் காணத்தக்கவை.

இக்காலத்தில்:

நாம் வாழும் இருபதாம் நூற்றாண்டில் ஓவியக்கலை வளர்ந்து வருகிறது. பள்ளிகளில் ஓவியக்கலை கற்பிக்கப்படுகிறது. கோவிற் சுவர்களில் ஓவியங்கள் தீட்டப்படுகின்றன. தில்லையில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள முருகன் கோவிலில் எழுதப்பட்டுள்ள ஓவியங்கள் இக்கால ஓவியக்கலையையறிவதற்குச் சிறந்த எடுத்துக் காட்டாகும். ஓவியக்கலை கண்ணையும் கருத்தையும் ஈர்த்து ஒரு நிலைப்படுத்துவதாகும்; உள்ளத்திற்கு உணர்ச்சியூட்டுவதாகும். இத்தகைய சிறப்புடைமையாற்றான் இது நுண்கலைகளுள் ஒன்று என்று அறிஞரால் பாராட்டப்படுகின்றது.

மொழிப் பயிற்சி:

வாக்கியத்தில் அமைத் தெழுதுக :-

புனையா ஓவியம், திங்களின் பக்கத்தில் உரோகிணி இருப்பது போல, கண்ணையும் கருத்தையும், வியப்பும் வெறுப்பும்.

வினாக்கள்:

1. ஓவியக்கலை வளர்ச்சி பெற்ற விதத்தைக் கூறுக.
2. நடுகல் என்று எதற்குப் பெயர்?
3. தொல்காப்பியர் காலத்திலேயே ஓவியம் தீட்டும் வழக்கம் தமிழரிடம் இருந்து வந்தது என்பதற்கு ஆதாரங்காட்டுக.

4. சிலப்பதிகாரத்தால் அறியப்படும் ஓவியக்கலை பற்றிய செய்தி யாது?

5. நெடுநல்வாடை தரும் ஓவியச் செய்தி யாது?

6. பரிபாடல் பகரும் ஓவியக்கலை பற்றிய செய்தி யாது?

7. மணிமேகலையால் அறியப்படும் ஓவியசெய்திகள் யாவை?

குறிப் பெழுதுக:-

8. ஓவிய விதானம், கண்ணுள் வினைஞர், புனையா ஓவியம். மடலேறுதல்.

9. சித்தன்ன வாசல் ஓவியங்களின் சிறப்பைக் கூறுக.

10. சித்தன்ன வாசலிலுள்ள நடன மாதரின் ஓவியச் சிறப்பைக் கூறுக.

11. அரசன் அரசியர் தலை ஓவியங்களைப் பற்றிக் கூறுக.

12. சித்தன்ன வாசல் மேற்கூரை ஓவியத்தின் அமைப்பைக் கூறுக.

13. சோழர் கால ஓவியச் சிறப்பை எடுத்துக் காட்டுக.

14. நாயக்கர் கால ஓவியங்களிற் சிலவற்றைக் குறிப்பிடுக.

கட்டுரை:

சங்க காலத்தில் ஓவியக்கலை, நீ கண்டு களித்த ஓவியக்கலை, நான் விரும்பும் கலை என்ற தலைப்புகளில் ஒவ்வொரு கட்டுரை வரைக.

12. கலிங்கத்துப் பரணி

பேராசிரியர் முத்து. இராசாக்கண்ணனார், எம்.ஏ., எம்.ஓ.எல்.

தமிழ்மொழி காலத்திற்கு ஏற்ப உயிரும் உணர்வும் பெற்று வளர்ந்து வரும் மொழிகளுள் ஒன்று. இவ்வளர்ச்சி இலக்கிய வளர்ச்சியாக மலர்ந்து வருவது கண்கூடு. தனிச் சிறப்புற்ற இலக்கியமாகத் தமிழ் மொழியில் சங்க இலக்கியம் விளங்குகின்றது. அதன் பின்னர்ப் பலவகைச் சிறு நூல் கள் வளர்ந்து வந்தன. அவற்றைப் "பிரபந்தங்கள்" என்று அழைத்தனர். இப் பிரபந்தங்கள் தொண்ணூற்ருறு வகைப் படும். அவற்றுள் "பரணி" என்பது ஒன்று.

பரணி என்பது

"ஆனை ஆயிரம் அமரிடை வென்ற
மானவ னுக்கு வகுப்பது பரணி"

என்று இலக்கண விளக்க ஆசிரியர் கூறுவதால் தெரிகிறது. போர்க்களத்திலே ஆயிரம் யானைகளை வென்ற மாவீரனின் வீரத்தினைச் சிறப்பித்துப் பாடுவது பரணியாகும். பரணி என்பதன் இலக்கணத்தை ஒருவாறு அறிந்துகொண்டோம். இந்நூலில் கடவுளை வாழ்த்துதல், கடை திறப்பு உரைத்தல், கடும்பாலை கூறல், காளி கோட்டம் கூறல், பேய்க்கூட்டம் சொல்லுதல், காளி பற்றிச் சொல்லுதல், பேய்க்குக் காளி கூறுகின்ற முறையில் நூல் தலைவனின் புகழை உரைத்தல் முதலியவற்றைப் பற்றிப் பேசுவது இந்நூலின் பண்பாகும்.

கலிங்கத்துப் போரில் கலிங்க மன்னனாகிய அநந்த பதுமனுக்கும், முதற் குலோத்துங்க சோழ மன்னனது பெரும் படைக்கும் நடந்த போரில், சோழர்படை பெற்ற வெற்றியை எடுத்துக் கூறுவது கலிங்கத்துப் பரணி. கலிங்

கத்துப் பரணி என்ற தொடரில் உள்ள "கலிங்கம்" என்னும் சொல் ஆகு பெயராய்க் கலிங்கப் போரினை உணர்த்தி நிற்கின்றது.

கலிங்கப் போரின் வரலாறு யாது? சோழநாடு சோழ மன்னர்களால் ஆளப்பட்டு வந்தது. அவர்களுள் இராசேந்திர சோழன் தலை சிறந்த மன்னன். அவன் வடநாட்டின் மேல் படையெடுத்துச் சென்று, பல மன்னரை வென்று, கங்கை நீரைத் தன் நாட்டிற்குக் கொண்டு வந்த காரணத்தால், கங்கைகொண்ட சோழன் எனச் சிறப்பிக்கப்பட்டான். அவனுக்கு அம்மங்கை தேவி என்ற ஒரு மகள் உண்டு. அவளைச் சளுக்கிய வேந்தனாகிய இராசராசனுக்கு மணம் புரிவித்தான். சோழன் மகள் அம்மங்கையும், சளுக்கிய வேந்தன் இராசராசனும் ஒருவரையொருவர் அன்போடு நேசித்து வந்தனர். அவர்களுக்குக் கி. பி. 1043 ஆம் ஆண்டில் பிறந்த மகனே முதற் குலோத்துங்கன் எனப் பின்னாளில் பெரும் பெயர் பெற்றான்.

குலோத்துங்கன் கல்வியில் சிறந்தும், கலைகளில் உயர்ந்தும், படைப் பயிற்சியில் பெரு வன்மை மிக்கும் விளங்கினான். அரசிளங்குமரனாகிய குலோத்துங்கன் தக்க பருவம் எய்திய பின், தாராவர்ஷன் என்னும் மன்னன் செங்கோல் செலுத்தி வந்த சக்கரக் கோட்டத்திற்குத் தன் படைகளைச் செலுத்திச் சென்றான். தாராவுக்கும் குலோத்துங்கனுக்கும் நடந்த போரில் குலோத்துங்கன் வாகை சூடினான். எதிர் காலத்துத் தமிழகப் பெருமன்னனாகிய குலோத்துங்கன் பெற்ற முதல் வெற்றி இதுவாகும். குலோத்துங்கன் வெற்றி வீரனாக விளங்கிக் கொண்டிருந்த அதே வேளையில், வீர ராசேந்திரன் வீர மரணம் எய்தச் சோழநாட்டாட்சி வீணர் கைப்பட்டது. குலோத்துங்கன் படையோடு முன்னேறி

ஆட்சியைப் பற்றி, அரியணை ஏறி, முடி புனைந்தான். இந் நிகழ்ச்சி கி. பி. 1070-ல் நடந்தது. சோழநாடு பெரு நாடாக விளங்க ஆவன புரிந்து அவன் வாழ்ந்தான்.

ஒருநாள், தன் பரிவாரம் சூழப் பல கோவில்களில் எழுந்தருளியுள்ள இறைவனை வணங்கிக் காஞ்சியில் எழுந் தருளியிருந்தான். அதுபோது கருணாகரத் தொண்டைமான் முதலிய பல வீரரும் உடனிருந்தார்கள். பல நாட்டு மன்னரும் திறைப் பொருள் செலுத்தினர். திருமந்திர ஓலை யாள், "கலிங்க வேந்தன் அநந்தபதுமன் ஒருவனைத் தவிர்த்து மற்றையோர் திறைப்பொருள் செலுத்தினர்" என் ருன். கேட்ட மன்னனுக்குக் கடுஞ்சினம் மூண்டது. குறிப்பறிந்த கருணாகரன் கலிங்கத்தை வெல்லப் படை செலுத்தித் தானே செல்வதாக, மன்னனுக்குப் பணிவோடு அறிவித்தான். மன்னன் இசைந்தான். இரை வேட்ட பெரும்புலிபோல் கருணாகரன் கலிங்கத்தின் மேல் எழுந் தான்.

அநந்தனுக்குச் செய்தி எட்டியது; பெருமை பேசினன் பதுமன். எதிர்த்துப் பேசினன் அவன் அமைச்சர்களுள் ஒருவனாகிய எங்கராயன். பயனில்லை; போர் மூண்டது. கலிங்க வீரர் தோற்றோடினர். அநந்தபதுமன் ஓடி உய்ந் தான். கருணாகரன் வெற்றி வீரனாய் மீண்டான். இதுவே கலிங்கப் போர் வரலாறு.

இவ்வழகிய நூலைப் பாடியவர் செயங்கொண்டார் என் னும் புலவராவார். இவர் சோழநாட்டில் நன்னிலத்தை அடுத்த தீபங்குடியில் பிறந்தவர்; சிறந்த புலவர். இவ ருடைய நூல் இன்பச்சுவை, வீரச்சுவை முதலிய பல சுவை களுக்கு நிலைக்களனாய், மிகச் செம்மையாக விளங்குகிறது. இவர் முதற் குலோத்துங்கனால் பாராட்டப்பெற்றார். பின் வந்தவர்கள் இவர் நூலைப் படித்து, இதில் அமைந்துள்ள

அழகைப் பெரிதும் நுகர்ந்தார்கள். எனவே "பரணிக்கோர் செயங்கொண்டான்" என இவரைப் பாராட்டலாயினர். செயங்கொண்டார் தமது நூலைக் கடவுள் வாழ்த்து, கடை திறப்பு, காடு பாடியது, கோயில் பாடியது, தேவியைப்பாடியது, பேய்களைப் பாடியது, இந்திரசாலம், இராச பாரம் பரியம், பேய் முறைப்பாடு, அவதாரம், காளிக்குக் கூளி கூறியது, போர் பாடியது, களம் பாடியது எனப் பதின் மூன்று பிரிவுகளாகப் பிரித்துப் பாடியுள்ளார்.

கடவுள் 'வாழ்த்தில் உமாபதி, திருமால், நான்முகன், நாமகள், முருகன் முதலியோரை வாழ்த்திப் பாடுகின்றார்.

முருகவேளை.

"பொன்னிரண்டு வரைதோற்கும் பொருவரிய
நிறம்படைத்த புயமும் கண்ணும்
பன்னிரண்டு மாறிரண்டும் படைத்துடையான்
அடித்தலங்கள் பணிதல் செய்வாம்
ஓரிரண்டு திருக்குலமு நிலைபெறவந்து
ஒரு குடைக்கீழ்க் கடலும் திக்கும்
ஈரிரண்டு படைத்துடைய இரவிகுலோத்—
தமனபயன் வாழ்க வென்றே." (11, 12)

இவ்வாறு வாழ்த்துகிறார்.

கடைதிறப்பு மிகச் சுவையாகப் பாடப்பட்டிருக்கிறது. போர்மேல் சென்ற வேந்தனும் படைஞர்களும் காலந் தாழ்த்து வர, அவர்தம் மனைவிமார் முனிவு கொண்டு கதவைத் தாளிட்டுக் கொள்ள, அதனைக் கண்ட புலவர் ஒருவர் அம்மடந்தையரை அணுகி, அவ்வீரர்தம் பெருமையைப் பாராட்டிப் பாடுதலாக இப்பகுதி அமைந்திருக்கிறது.

"வருவார் கொழுநர் எனத்திறந்தும்,
வாரார் கொழுநர் என அடைத்தும்,
திருகுங் குடுமி விடியளவும்
தேயும் கபாடம் திறமினோ." (49)

பொழுது விடியும் வரை மகளிர் செய்த செயலை இத் தாழிசை காட்டுகிறது. கொழுநர் வருவார் எனக் கதவைத் திறந்து காத்து நிற்கின்றனர். வாரார் கொழுநர் என எண்ணிக் கதவை மூடுகின்றனர். கதவை மூடினரேயன்றி, நெஞ்சில் ஓடும் கருத்தை மூட முடியாதவர்களாயினர். எனவே, மீளவும் கதவைத் திறந்தும், மூடியும் இவ்வாறு இரவெல்லாம் ஈடுபடுகிற காரணத்தால், கதவு இயங்குதற்குத் துணையாய் அமைந்த குடுமி வீணே தேய்கிறது. குடுமி தேய்ந்ததேயன்றிக் கொழுநர் வந்தாரல்லர். ஆகவே, அணங்கனையார் உள்ளத்தில் வெகுளி தோன்றிக் கதவைத் திறவாத வண்ணம் மூடச்செய்து விட்டது எனச் சுவைபடப் பாடுகிறார் புலவர்.

பாலைநிலத் தெய்வமாகிய காளியின் பெருமை, 'காடு பாடியது' எனும் பகுதியிலும், 'கோயில் பாடியது' எனும் பகுதியிலும், 'தேவியைப் பாடியது' எனும் பகுதியிலும் பேசப்படுகிறது. அடுத்துக் கொற்றவையாகிய காளியைச் சுற்றியமைந்துள்ள பேய்களைப் புலவர் பாடுகின்றார். அப் பேய்களுள் ஒன்று, தான் கற்ற இந்திரசால வித்தையைக் காளிக்குக் காட்டுவது இந்திரசாலமென்ற பகுதியில் பேசப் படுகிறது. இந்திரசாலம் காட்டியபேய் சோழ மன்னர்களின் அரச வழி முறையை எடுத்துக் கூறுவதாக அமைந்த பகுதியே 'இராச பாரம்பரியம்' எனப்படும். இது 'திருமுடி அடைவு' என்றும் சொல்லப்படும். அடுத்துப் பேய்களின் முறைப்பாடும், குலோத்துங்க மன்னனின் பிறப்பும் அடைவு பட அமைந்திருக்கின்றன. கலிங்கப் போருக்குக் காரணமும்,

போர் நெறியும், முடிவும் காளிக்குக் கூளி கூறியனவாகக் கூறப்படுகின்றன. திரண்ட படையில் எழுந்த ஓசையைப் பல தாழிசைகளில் ஆசிரியர் பேசுகிருர்.

"வளைக லிப்பவும் முரசொலிப்பவும்
மரமி ரட்டவும் வயிரமாத்
தொளையி சைப்பவுந் திசையி பச்செவித்
தொளைய டைத்தலைத் தொடரவே. (33)

சங்குகள் கலித்தன; முரசுகள் ஒலித்தன; சாமரங்கள் இரட்டின; ஊது கொம்புகள் ஒலி செய்தன; இவ்வோசைகள் நிலந்தாங்கும் யானைகளின் செவித் தொளைகளை அடைத்தன. "எடும், எடும், எடும்" என எடுத்த ஓசையும், "விடு, விடு, விடு" எனும் மிக்க ஓசையும் யாண்டும் பரவின. புலியொடு புலிபோல் பொருதனர் வீரர். மலையொடு மலைபோல் மலைந்தன யானைகள். மின்னலை மின்னல் தாக்குவது போல வாளை வாள் தாக்கிற்று. குருதி யாறு பரந்தது. வெண்குடைக் கூட்டங்கள் நுரையாக அந்த ஆற்றிலே மிதந்தன; பிளவு பட்ட யானைகளின் உடல்கள் இருபுறத்திலும் கரைகளாய்க் கிடந்தன. கலிங்க நாட்டிலே ஓவியர்கள் வரைந்த வீரர்களின் ஓவியங்களே உயிரோடு இருந்தன. மற்றவர் மாண்டனர். இவ்வாறு அமைந்தது போர்.

•
• •

போர்க்களத்தை ஆசிரியர் நம் கண்முன் நிறுத்துகின்ருர்.

"பொருதடக்கை வாளெங்கே மணிமார் பெங்கே
போர்முகத்தி லெவர்வரினும் புறங்கொடாத
பருவயிரத் தோளெங்கே யெங்கே யென்று
பயிரவியைக் கேட்பாளைக் காண்மின், காண்மின்!"

வீரன் ஒருவனின் மனைவி இறந்துபட்ட தன் கணவனைக் காண்கின்ருள். அவளுக்குக் காணக் கிடைத்தது அவன்

முகம் ஒன்றுதான். வாளேந்திய கை, அவள் உள்ளங் கவர்ந்த மார்பு, போர் முகத்தில் எவர் எதிர்ப்பினும் புறங் கொடாது நின்று போராற்றும் பருத்த வயிரத்தோள் — இவற்றை அவள் காண முடியவில்லை. ஆதலின், அவை எங்கே எனக் கேட்டுக் கண்ணீர் வடிக்கின்றாள்.

களம் பாடிய பகுதியில் பரணிக் கூழினைப் பேய்கள் உண்டு மகிழ்ந்த மகிழ்ச்சியை ஆசிரியர் எடுத்துக்காட்டு கின்றார்.

“ உயிரைக் கொல்லாச் சமண்பேய்கள்
ஒருபோழ் துண்ணு மவையுண்ண
மயிரைப் பார்த்து நிணத்துகிலால்
வடித்துக் கூழை வாரீரே.”

சமணப் பேய்க்குக் கூழை ஊற்றுங்கள் என்பதே இந்த பாட்டின் கருத்து. சமண்பேய்கள் உயிரைக் கொல்லாதன. ஒரு பொழுதே உண்ணுகின்றவை. கூழில் மயிர் இருந்தால் அவை ஒருவேளை அவ்வுணவை உண்ணாது போயினும் போகலாம். ஆகவே, அவற்றிற்கு வடித்து வாருங்கள் என்று சொல்லப்படுகிறது. ஆசிரியர், பல உயிர்க் கொலை யால் உண்டாகிய கூழைக் கொலை செய்யாப் பேய்க்கு ஊற்றச் சொல்லுவதில் நகைச்சுவை விளைதலைக் காணலாம்.

கலிங்கத்துப் பரணி பல்சுவைப் பெட்டகமாகத் திகழ்வ தோடு அன்றி, வரலாற்றிற்கியைந்த சீரிய காவியமாகவும் விளங்கிப் பிற்காலச்சோழர்களுள் ஒருவனாகிய குலோத்துங்க மன்னனுடைய வரலாற்றை நாம் அறிந்து கொள்ளத் துணை புரிகின்றது. கலிங்கத்தே ‘செயங்’ கொண்ட மன்னனது வெற்றியை வாழ்த்திப் பாடிய செயங்கொண்டார் எந்நிலத் தும் நிலைத்து வாழ்க!

அருஞ்சொற் பொருள் :

இரை வேட்ட பெரும் புலி போல, நிலைக்களனாய், உயிரும் உணர்வும் - இத்தொடர்களை வாக்கியத்தில் அமைத் தெழுதுக.

வினாக்கள் :

1. பரணி என்பதன் இலக்கணம் யாது ?
2. பரணியிற் கூறப்படும் செய்திகள் யாவை ?
3. கலிங்கத்துப் பரணி என்பது யாது ?
4. முதற்குலோத்துங்கன் என்பவன் யாவன் ?
5. கலிங்கப் போர் மூலக் காரண மென்ன ?
6. கலிங்கப் பரணியில் உள்ள பிரிவுகள் யாவை ?
7. கடவுள் வாழ்த்தில் வாழ்த்தப்பட்ட கடவுளர் யாவர் ?
8. கடை திறப்பில் அமைந்துள்ள செய்தியைக் கூறுக.
9. காளியின் பெருமை பேசப்படும் பகுதிகள் யாவை ?
10. ஆசிரியர் நம் கண்முன் நிறுத்தும் போர்க்களக் காட்சியைக் கூறுக.
11. வீரன் ஒருவனது மனைவியின் செயலாகக் கூறப்பட்டுள்ள செய்தி யாது ?
12. களம் பாடிய பகுதியில் கூறப்பட்டுள்ள செய்தி யாது ?

கட்டுரை :

போரால் விளையும் தீமைகள் என்பது பற்றி ஒரு கட்டுரை வரைக.

கலிங்கப் போரின் வரலாற்றைக் கட்டுரையாக எழுதுக.

13. பேரறிஞர் பெர்ஞர்ட்சா

[புலவர். தணிகை உலகநாதன்]

ஒருநாள் மகாத்மா காந்தியடிகள் கவியரசர் இரவீந்திர நாத தாகூரைக் காணச் சென்ற சமயம். "எழுபத்து நான்கு வயதுடைய இளைஞராகிய தங்களை அறுபத்து நான்கு வயதுடைய கிழவனுகிய யான் காண வந்துள்ளேன்" என்று கூறிஞராம். அறிஞர்கள் தங்கள் உள்ளத்து உணர்ச்சியினுல் என்றும் இளமை நலம் கமழப் பெறுவர் என்பதே இப்பேச்சின் உட்கோளாகும். அறிவாராய்ச்சிகளில் வல்ல புலவர்கள் எவ்வூரிற் பிறப்பினும் என்ன? எந்த ஊரையும் அவர்கள் தம் சொந்த ஊராகவே பாராட்டுவர். உலகமக்கள் அனைவரும் கவிஞர்களைத் தத்தம் நாட்டுக் கண்களாகப் பாராட்டி அவர்கள் கூறும் அறவழிகளில் நின்று நலம் பெறுவர். அன்ஞர் எழுதும் கவிதைகளும், கதைகளும், நாடகங்களும், நவீனங்களும் மக்களுக்கு நல்வழி காட்டும் அறிவுக் களஞ்சியங்களாகவே விளங்கும். இங்ஙனம் அறிவுப்பணியில் முன்னின்ற திருவள்ளுவர், விவேகானந்தர், தாகூர், காந்தியடிகள் முதலியவர்களைப் போலவே ஆங்கில நாட்டிலும் பெர்ஞர்ட்சா என்னும் பேரறிஞர் தம் தொண்ணூற்றுநான்கு வயதிலும் ஏடும் கையுமாகவே இருந்து நாடகங்களும், கடிதங்களும், கட்டுரைகளும் எழுதிக்கொண்டிருந்தார். ஏறக்குறைய ஒரு நூற்றுண்டு வாழ்வு பெற்ற அவ்வறிஞரை 'உலகப் பேரறிஞர்களின் திலகம்' என்றே போற்றினும் பொருந்தும். வாழ்க்கைச் சிக்கல் எதுவாயினும் தம் நுண்மாண் நுழை புலமையினுல் அதன் அடிப்படையான காரணத்தைக் குறிப்பிட்டு எளிதில் திருத்தும் ஆற்றலை அவர் தம் எழுத்தோவியங்களிற் காணலாம். அதஞலேயே பெர்ஞர்ட்சா உலகப் புகழ் பெற்ருர்.

சார்சு பெர்னர்ட்சா 1956 ஆம் ஆண்டு, சூலை 26 ஆம் நாளில் அயர்லாந்தின் தலைநகரான டப்ளினில் பிறந்தார். பெர்னர்ட்சாவின் தந்தையார் குடும்பப் பொறுப்பற்ற ஒரு குடிகாரர்; ஆயினும் தம் மைந்தரின் நல் வாழ்க்கையில் விருப்பமுடையவர். இசைக் கலையிலும் அவருக்குக் பயிற்சி உண்டு. பெர்னர்ட்சாவின் அன்னையோ நற்குணங்கள் பல வற்றுக்கும் உறைவிடமான நங்கை. அவர் பெண்மைக் குணங்கள் எல்லாம் நிரம்பிக் குடும்ப விளக்காகத் திகழ்ந் தார். கணவரின் குடிப் பழக்கத்தால் மனம் வெறுத்து அவர் தம் பெண் குழந்தைகள் இருவருடனும் ஆண் குழந்தை ஒன்றுடனும் பிரிந்து தனியாக வாழ்ந்து வந்தார். குழந்தைகள் மூவரில் பெண்கள் இருவரும் மூத்தவர்கள். அவர்களின் தம்பிதான் சார்சு பெர்னர்ட்சா. பெர்னர்ட்சா வின் தாயார் குடும்பப் பாதுகாப்புக்கு வேண்டும் பொருளீட் டும் முயற்சியில் ஈடுபட்டார். அவ்வம்மையாருக்கும் இசை யில் நல்ல பயிற்சி உண்டு. அவர் தம் பெண் குழந்தைகளை மட்டும் அழைத்துக்கொண்டு இலண்டன் நகரம் சென்று அங்கே இசையாசிரியராகப் பணியாற்றி வந்தார்.

சார்சு பெர்னர்ட்சா மீண்டும் தந்தையாருடன் டப்ளி னில் வாழ்ந்து வந்தார். ஆனால் அவர் தந்தையார் தொழில் புரிந்து வந்த அலுவலகத்தில் அவரை வேலையை விட்டு நீக்கிவிட்டனர். அவர் தமக்குக் கிடைத்த ஓய்வு நிதியைக் கொண்டு வேறு ஒருவருடன் சேர்ந்து ஒரு மாவரைக்கும் இயந்திரம் அமைத்துத் தொழில் நடத்தினர். அத்தொழிலி லும் அவருக்குப் போதிய வருவாய் இல்லை. ஒருநாள் பெர்னர்ட்சாவின் தந்தை குடித்துவிட்டு விழுந்து பெருந் துன்பப்பட்டார். அன்று தொட்டு அவர் குடிப்பழக்கத் தைக் கைவிட்டார் எனினும் அவர் தம் இறுதிக் காலத்தி லேயே இந் நல்லறிவு பெற்றதால் குடும்பத்திற்கு அதனால் எத்தகைய நன்மையும் ஏற்படவில்லை.

பதினைந்தாம் அகவையில் பெர்னார்ட்சா உத்தியோக வேட்டையில் நுழையலானார். அவர் டப்ளினில் ஒரு சிறிய கணக்கர் வேலையில் அமர்த்தப்பட்டார். வேலையில் இருக்கும்போதும் பெர்னார்ட்சா ஆங்கில நூல்கள் பலவற்றைப் பயின்று வந்தார். பெர்னார்ட்சாவின் புலமை வளர்ந்தது போல் வறுமைப் பிணியும் முதிர்ந்து அவரை வருத்தத் தொடங்கிற்று. அவர் தம் நெருங்கிய நண்பர்களிடமும் கடன் வாங்க அஞ்சினார். 'ஒரு நண்பனிடம் மூன்று பவுன் கடன் வாங்கினேனென்றால், அதனைத் திரும்பக் கொடுக்காத நிலைமையில் அவன் நட்பை மூன்று பவுனுக்கு விற்றுத் துறந்ததுபோல் ஆகுமே' என்னும் உணர்ச்சி இளமையிலேயே அவர்பால் குடிகொண்டிருந்தது. அவர் தாமாகவே முன் வந்து உதவிய நண்பர்களின் பொருளையும் வாங்க மறுத்தார். பிறரிடம் ஊழியம் செய்து வாழும் அடிமைத் தொழிலிலும் பெர்னார்ட்சாவுக்கு வெறுப்பு ஏற்பட்டது. 1876-ல் அவர் தம் அன்னையார் வாழும் இலண்டன் மாநகருக்குச் சென்றார்.

இலண்டனில் இருக்கும்போதுதான் அவர் நவீனங்கள் எழுதத் தொடங்கினார். தொடக்கத்தில் அவை யாவும் பத்திரிகை ஆசிரியர்களால் புறக்கணிக்கப்பட்டன. எனினும் அவர் மேன்மேலும் தமது பயிற்சியில் முயற்சியுடையவராய் இருந்தார். சின்னாட்களில் எச். சி. வெல்சு, கிரகாம், வேல்சு போன்ற அறிஞர்களின் தொடர்பு பெர்னார்ட்சாவுக்குக் கிடைத்தது. பெர்னார்ட்சா அவர்களுடன் சேர்ந்து சமூகச் சீர்திருத்தப் பிரச்சாரங்களில் தீவிரமாகப் பங்கெடுத்துக் கொண்டார். அவர் ஞாயிறு தோறும் மேடைமீதேறிச் சீர்திருத்தச் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார். இருபதாண்டுகள் முழுமூச்சுடன் சமூகப் பணியாற்றி வந்தார்; சமூகத்தில் உள்ள குறைபாடுகளையும் மூடப் பழக்க வழக்கங்களையும் சுட்டிக்காட்டி மக்களைப் பகுத்தறிவுப் பாதையில் செல்லு

மாறு ஊக்கினர். பெண்கள் முன்னேற்றத்துக்காகப் பெர்னர்ட்சா அரிய பணிகள் ஆற்றினர். அதற்காகவே பல இனிய கதைகளும் நாடகங்களும் இயற்றினர்.

நாளடைவில் அறிஞர் பெர்னர்ட்சாவின் கருத்துக்களும் இனிய எழுத்துக்களும் மக்களுள்ளத்துக்கு நல்விருந்தாயின. அவர் எழுதிய நாடகங்கள் உலக மக்களால் பெரிதும் பாராட்டப்பட்டன. அவர் நவீனங்கள் எழுதியபோது கிட்டாத பேரும் புகழும் பெருஞ் செல்வமும் நாடகம் எழுதத் தொடங்கியபோது வந்துகுவிந்தன. நாடகங்களில் அவர் எழுதிய முன்னுரையே பிறரால் பெரிதும் மதிக்கப்பட்டதெனின் உள்ளுறை பற்றி உரைக்கவும் வேண்டுமோ? அவர் எழுதிய நாடகங்களில் 'பேயின் சீடன்' என்பது ஒன்று. அந் நாடகம் அமெரிக்காவில், நடந்தபோது நாடக நிலையங்களில் எள் விழுவதற்கும் இடமில்லை என்னுமாறு மக்கள் திரள் திரளாகக் கூடி, அறிஞரின் சொற்சுவை, பொருட்சுவை மிக்க கருத்துக்களைக் கேட்டுக் களித்தனர். அதனுல் அளவற்ற செல்வமும் அவருக்குக் கிடைத்தது. நாடக உலகில் தமக்குக் கிடைத்த நல்வரவேற்பைக் கண்ட பெர்னர்ட்சா அதுகாறும் தாம் ஆற்றிவந்த பத்திரிகைத் தொழிலினின்று விலகிக்கொண்டார்.

1898-ல் பெர்னர்ட்சா தம் அறிவுக்கும் திறமைக்கும் பொருத்தமான சார்லட் பிரான்சிசு டவுன்சண்ட் என்னும் ஆரணங்கை மணந்து இல்லறமென்னும் நல்லறம் ஆற்றினர். உருவும் திருவும் வாய்ந்த அந்த அம்மையாரும் தம் கணவரிடம் மாருத அன்பும் பணிவும் உடையவராய் விளங்கினர். நெடுநாளாக அவர்களுக்கு மகப்பேறு வாய்க்கவில்லை. இங்ஙனமிருக்கும் நாளில் அம்மையார் நோய் வாய்ப்பட்டு 1943ஆம் ஆண்டில் இவ்வுலக வாழ்வை நீத்தார். தம் அருமைத் துணைவியை இழந்த பெர்னர்ட்சா மிகவும் வருந்தினராயினும் தமது கடமையை மறவாமல் இலக்கியப்

பணியில் ஈடுபட்டிருந்தார். அவர்தம் இலக்கியச் சேவையைப் பாராட்டி நோபல் பரிசுச் சங்கத்தார் 1926 ஆம் ஆண்டில் அவருக்கு உலகம் புகழும் அப்பரிசையளித்துச் சிறப்பித்தனர். அவர் பெற்ற பரிசுத் தொகையாகிய 8000 பவுனையும் இலக்கிய வளர்ச்சிக்காகவே நன்கொடையாகக் கொடுத்தமை குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியாகும்.

பெர்னர்ட்சா தமது வாழ்க்கையில் ஐம்பது நாடகங்களுக்கு மேல் எழுதியுள்ளார். அவை உலகமெங்கும் பரவியுள்ளன; வெள்ளித் திரையிலும் காட்டப்படுகின்றன. அவரது நாடகமென்ருல் மக்களுக்குப் பெருமகிழ்ச்சி. நாடகங்களின் மூலம் தமக்குக் கிடைத்த திரண்ட செல்வத்தை அவர் வீண் செலவு செய்ததில்லை. தம் சொந்த உழைப்பால் அவரவர் மிகுந்த செல்வம் ஈட்டுதல் வேண்டும் என்பதே அவர்தம் உயர்ந்த எண்ணமாகும். நாடகங்கள் எழுதித் திரண்ட பொருள் ஈட்டியவர்கள் உலகில் பெர்னர்ட்சாவன்றி வேறெருவரும் இலர் என்றே கூறலாம். உலகின் பல்வேறு பொருள்களின் நுட்பங்களையும் பெர்னர்ட்சா நன்கு உணர்ந்தவர். அவர் அறியாதது ஒன்றுமில்லை. அவர் தம்மைத் தாமே ஒரு பத்திரிகையாளன், விமர்சகன், நாவலாசிரியன், நாடகாசிரியன், கிளர்ச்சிக்காரன், தத்துவஞானி, அரசியல்வாதி, மதாசிரியன், பொருளாதார அறிஞன் என்று கூறிக் கொள்வதில் மிகவும் பெருமிதம் கொள்வார்.

மாணவர்கள் விரும்பிப் படிக்கும் 'அந்திரோகிலிசு' என்னும் கதை அவர் எழுதியதேயாகும். அவரது 'கான்டிடா' 'டாக்டரின் தரும சங்கடம்', 'மகாத்மா சோன்' என்னும் நாடகங்கள் படிக்கப் படிக்கத் தெவிட்டாத இன்பம் தருவன.

பெர்னர்ட்சா உடல் ஓம்புவதில் வல்லவர். தினமும் அவர் தவருமல் உடற் பயிற்சி செய்வார். அவர் நாடோறும்

நீரில் தம் கண்களைக் கழுவியமையால் முதுமைப் பருவத் திலும் மங்காத பார்வையைப் பெற்றிருந்தார். அவர் தம் ஆயுளைப் பற்றியோ மரணத்தைப் பற்றியோ கவலை கொள்ள வில்லை. சென்ற இரண்டாம் உலக மகாயுத்தத்தின்போது செர்மானியரின் குண்டுகள் இலண்டன் நகரத் தெருக்களைத் துளைத்துக்கொண்டிருந்தபோதும் அவர் அஞ்சாமல் தனியே திரியும் ஆற்றல் பெற்றிருந்தமையே அதற்குத் தகுந்ததொரு சான்றாகும். பெர்னார்ட்சா உழைப்பால் உயர்ந்தவர். தமது தொண்ணூற்று நான்காம் பிராயத்திலும் அவர் நாவல்கள் எழுதிக்கொண்டிருந்தார். தம் கையினாலேயே கடிதங்களும் கடிதங்களுக்குப் பதிலும் எழுதினார். அவர் தம் கருத் துக்குஉண்மை என்று பட்டதை எங்கும் யாரிடத்தும் அஞ் சாது நின்று புகலும் மன உறுதியும் பெற்றவர். ஓர் ஆங் கிலேயராக இருந்தும் ஆங்கிலேய ஆட்சியாளர்களின் ஊழல்களை அடிக்கடி எடுத்துக் காட்டித் திருத்திய தனிப் பெரும் செம்மல் அவரே. அவர் உண்மைக்கும் நேர்மைக் கும் உறைவிடமாய் இருந்தார். ஆடம்பர வாழ்வை அவர் இம்மியும் விரும்பவில்லை. இறுதி வரையில் எளிய வாழ்வே நடத்தி வந்தார்.

பெர்னார்ட்சா உயிர்களிடத்தில் அன்புமிக்கவர்; 'எவ் வுயிர்க்கும் தீங்கிழைக்கலாகாது', என்பது அவர் கொள்கை. மதுவருந்துதலும், புலால் உண்ணுதலும், வேட்டையாடு தலும் மாபெரும் பாதகங்கள் என்று அவர் அடிக்கடிக் கூறு வது உண்டு. "நான் எல்லாம் வல்ல முடிமன்னனாக இருந் தால், என் குடிமக்கள் தங்களுடைய வாழ்க்கைப் பொறுப் புக்களைத் தாங்கி நடத்துவதற்காக உணர்ச்சியகற்றும் பொருள்கள், போதைப் பொருள்கள், காபி முதலிய கிளர்ச்சிப் பொருள்கள், புகையிலை, மீன், புலால் ஆகிய இவற்றின் சார்பிலிருந்து மீட்டு இயற்கைப் பொரு ளைப் பங்கீடு செய்யுமாறு உத்தரவு பிறப்பிப்பேன்" என்று அவரே ஒரு முறை கூறியுள்ளார்.

அவர் பேரறிஞராக இருந்தும், எல்லோரிடமும் எளிதாக வும் அன்பாகவும் உரையாடுவார்; அவர் பேச்சில் எப்போதும் நகைச்சுவையுடன் உண்மைக் கருத்துக்களும் நிறைந்திருக்கும். அவருக்கு மூளை வேலை அதிகமாயிருந்தமையின், அடிக்கடித் தலைவலி வருவதுண்டு. ஒரு சமயம் நான்சென் என்பவர் அவரைக் காண வந்திருந்தார். நான்சென் ஒரு நிலநூல் வல்லுநர். அவரே வட துருவத்தைக் கண்டு பிடித்தவர். அவரைப் பார்த்துப் பெர்னார்ட்சா, "தலைவலிக்கு ஏதாவது மருந்து கண்டு பிடித்திருக்கிறீர்களா?" என்று கேட்டார்.

நான்சென்: இல்லையே!

பெர்னார்ட்சா: தலைவலி மருந்தைக் கண்டுபிடிக்க நீங்கள் முயற்சியாவது செய்ததுண்டா?

நான்சென்: இல்லையே! தலைவலியைப் பற்றி நான் ஒன்றும் கவலைப்படுவதில்லை.

பெர்னார்ட்சா: நன்று! இது மிகவும் வியப்பே! யாருமே கவலைப்படாத வடதுருவத்தைக் கண்டுபிடிக்கஉங்கள் ஆயுள் முழுவதையும் செலவழித்திருக்கிறீர்கள். ஆனால் ஒவ்வொரு மனிதனையும் கதற வைத்துக் கவலைக்குள்ளாக்கும் தலைவலியைப் பற்றித் தாங்கள் கவலைப்படவே இல்லை என்கிறீர்களே.

பெர்னார்ட்சாவின் இவ்வுரையைக் கேட்ட நான்சென் தம் அறியாமைக்காக வெட்கப்பட்டுப் புலவரைப் பாராட்டிச் சென்றார். பெர்னார்ட்சா நாம் வாழும் காலத்தில் வாழ்ந்தார். அதனால் நமக்கும் பெருமையைத் தந்தார். அவர் 2—11—50-ல் தமது தொண்ணூற்று நான்காம் பிராயத்தில் மண்ணுலகை நீத்து, விண்ணுலகுக்கு எய்தினார் என்ற செய்தி கேட்டு உலக மக்கள் அனைவரும் திடுக்கிட்டனர்.

அவர் மறைந்தார்; ஆனால் அவர்தம் சீர்திருத்தக் கருத்துக்கள் அமைந்த இலக்கியச் செல்வங்கள் நம்மை விட்டு மறையவில்லை. அவை உலகில் எல்லா மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டு இலக்கியச் சோலையில் என்றென்றும் மலர்ந்து குலுங்கும் வாடா மலர்களாகும்.

வாக்கியத்தில் அமைத்து எழுதுக :

உள்ளத்து உணர்ச்சியால், இயற்கைப் பொருளை, உறைவிடமாய், இலக்கியச் செல்வங்கள், இலக்கியச் சோலையில்.

விளக்கள்:

1. காந்தியடிகள் தாகூரைக் கண்டு கூறியது என்ன? இதன் உள்கோள் யாது?

2. அறிவாராய்ச்சிகளில் வல்ல புலவர்களை உலகமக்கள் எவ்வாறு கொண்டாடுவர்?

3. அறிவுப் பணியில் முன்னின்ற பெரியோர் யாவர்?

4. பெர்னார்ட்சா உலகப் புகழ் பெற்றதற்குக் காரணமென்ன?

5. பெர்னார்ட்சாவின் பெற்றோர்கள் எத்தகையர்?

6. கடன் வாங்குவதில் பெர்னார்ட்சாவுக்கு இருந்த வெறுப்பை விளக்குக.

7. பெர்னார்ட்சாவின் சமூகப் பணிகள் யாவை?

8. 'பேயின் சீடன்' என்ற நாடகம் பற்றிக் குறிப்பெழுதுக.

9. பெர்னார்ட்சாவின் இலக்கியப் பணியில் குறிப்பிடத் தக்க நிகழ்ச்சி யாது?

10. பெர்னார்ட்சாவின் நாடகச் சிறப்புகளை விளக்குக.

11. பெர்னார்ட்சாவின் சிறந்த நாடகங்கள் யாவை?

12. பெர்னார்ட்சாவின் உடலோம்பும் வல்லமையைக்கூறுக.

13. பெர்னார்ட்சாவின் குண நலன்களைக் கூறுக(15வரி).

கட்டுரை :

பெர்னார்ட்சாவுக்கும் நான்செனுக்கும் இடையே நடந்த உரையாடலை எழுது.

14. அணைகடந்த வெள்ளம்

திரு. கு. இராஜவேலு எம். ஏ.,

இலக்கிய நாடகம்

களம் — 4 காட்சி — 21

இடம்: உறந்தை. காலம்: வைகறை.

[தனிமையிலே அமர்ந்திருக்கும் தித்தனிடம் ஐயை ஓடிச்சென்று தன் ஐயனின் வெற்றியைக் கூறுகிருள். பின்னே சாத்தந்தையார் செல்கிருர்.]

ஐயை: அன்புத் தந்தையே! அண்ணன் வெற்றி பெற்றுவிட்டார். என் தமையன் வெற்றி பெற்றுவிட்டார்.

தித்: என்ன?

சாத்: ஆம் வேந்தே! ஆமூர் மல்லன் அழிந்தான்.

தித்: (உற்சாகத்தோடு) கிள்ளியா வென்ருன்? ஆமூர் மல்லனைக் கொன்றுவிட்டான? என்ன விந்தை? உண்மை தான?

சாத்: ஆம் காவல! அந்தக் காணரும் காட்சியை நானே நேரில் கண்டேன். அவனுடைய வெற்றியைக் கேட்ட அனைவரும் தங்களைத்தான் வாயாரப் புகழ்ந்தார்கள். நாவாரப் போற்றினர்கள்.

தித்: என்னைப் புகழ்ந்தனரா?

சாத்: ஆம் அரசே! தங்களைத்தாம் வாழ்த்தினர்கள் தித்தனின் அருமை மைந்தரல்லவா? 'அடல் ஏற்றின் குருளை, மத யானையிடம் தோற்றுவிடுமா என்ன?' என்றனர்.

ஐயை: எந்தாய்! உங்களின் அரும் புகழைக் குன்றின் மேல் இட்ட விளக்காகக் குவலயத்துக்கெல்லாம் அண்ணன்

பரப்பிவிட்டார். விலங்கினும் இழிந்த அந்த ஆமூர் மல்லனைக் கொன்று என் தமையன் வீரத்தோள்களைக் கொட்டி ஆர்த்தவுடன் அவருடைய பாடுதற்கரிய ஆண்மையைப் புகழ்ந்து, நம் புலவர் பெருமான் ஓர் அழகான பாடல் இயற்றியுள்ளார்.

தித்: அப்படியா?

சாத்: ஆம் வேந்தே! அப் பாடலை இளவரசியாரிடம் தந்துள்ளேன். அப் பாடலைப் படிக்குந்தோறும் களிப்பின் மிகுதியால் கண்ணீர் சிந்தி அதைக் குளிப்பாட்டி விட்டார்கள் இளவரசியார்.

ஐயை: அன்புடைப் பெரியீர்! அப்பாடல் முழுவதும் என் நெஞ்சில் நிலைத்துவிட்டது.

சாத்: அறத்தின் காவல! அப்பாடலைப் பாடத் தாங்கள் அனுமதி அளிப்பீர்கள் என்று இளவரசியார் நினைக்கிறார் போலும்!

தித்: நன்றாகப் பாடட்டுமே பாடு அம்மா. உன் அண்ணனின் வீரத்தைப் பாடு. நானும் கேட்கிறேன். பாடு அம்மா.

ஐயை: இதோ பாடுகிறேன் தந்தையே.

இன்கடுங் கள்ளின் ஆமூர் ஆங்கண்
மைந்துடை மல்லன் மதவலி முருக்கி
ஒருகால் மார்பொதுங் கின்றே ஒருகால்
வருதார் தாங்கிப் பின்னொதுங் கின்றே
நல்கினும் நல்கான் ஆயினும் வெல்போர்ப்
போரருந் தித்தன் காண்கதில் அம்ம.
பசித்துப் பணைமுயலும் யானைபோல
இருதலை ஒசிய, வெற்றிக்
களம்புகு மல்லற் கடந்த அடுநிலையே.

தித் : (கண்களில் நீர் கலங்க) இருக்கட்டும். அவன் உயிரோடு எங்கிருந்தாலும் நலமாக இருக்கட்டும்.

சாத் : மாற்றலர் போற்றும் மன்னு! இளவரசரின் மற்போரை நீங்கள் கண்குளிரக் காணக் கொடுத்து வைக்கவில்லையே என்றுதான் நான் நனிமிக வருந்துகிறேன். இப்போது முக்காவல் நாட்டு வேந்தர் அவர்தாம்.

தித் : புலவரே! முக்காவல் நாட்டு மன்னனையும் இவன் கொன்றுவிட்டானு?

சாத் : இல்லை அரசே, இல்லை. அம்மன்னனை ஆமூர் மல்லனே அநீதியாகக் கொன்றுவிட்டான். அது பொறுக்காதுதான் நம் இளவரசர் அவனுடன் மற்போர் செய்தார். அக்கொடியோனை வென்றுர். அறத்தைக் காத்தார். அரசுரிமையையும் அடைந்தார்.

ஐயை : அப்பா! "தந்தையுடன் போர் தொடுக்கும் கயவன் அல்லன் இக்கிள்ளி" என்று நம் புலவர் பெருமானிடம் இளவரசர் கூறினுராம். தாங்கள் அருள் கூர்ந்து அண்ணனை மன்னிக்க மாட்டீர்களா? அவரை மீண்டும் அழைக்க மாட்டீர்களா?

தித் : மகளே! அன்பு கனிந்த உன் உள்ளத்திலே நான் எவ்வாறு அமைதி விளக்கை ஏற்றுவேன்? எனக்கே ஒன்றும் தெரியவில்லை.

சாத் : கொற்ற வேந்தே! இளவரசர் என்றும் தங்களின் ஆணைக்கு அடங்கியவராகவே இருப்பார்.

தித் : இல்லை. என் கண்களால் நானே கண்ட காட்சிகளை நான் எவ்வாறு மறப்பேன்? அவன் படை திரட்டியது பொய்யா? படைக்கலங்கள் செய்வதற்காக என் அனுமதியின்றிக் கருவூலத்திலுள்ள வைப்பு நிதியை எடுத்துச் செலவிட்டது பகற்கனவா? படைவீரர்களுக்குப் பயிற்சி அளித்தது வெறும் மாயத் தோற்றமா? பாண்டிய இள

வரசன் நம் அன்புசால் விருந்தினன் என்றும் பாராது, அவன் சாளரத்தண்டை நின்று ஒற்றுக்கேட்டதை நானே என் இரு கண்களால் கண்டேனே! அதுவும் பொய்தானா? எல்லாம் மாமாயத் தோற்றந்தாமா? புலவரே! என்னால் எதையும் நிதானிக்க முடியவில்லை. இப்போது என்னிடம் எதையும் கூறி என் உள்ளக் கருத்தை மாற்ற முனையாதீர்கள்.

ஐயை: அப்பா! இன்னும் எண்ணுவதற்கு என்ன இருக்கிறது? அண்ணனை விசாரிக்காமலே நீங்கள் அவரை நாடுகடத்தி விட்டீர்கள். குடிமக்களை நீங்கள் இவ்வாறு தான் அவர்களின் குறையையும், முறையையும் கேட்காமல் — கேட்ட பின்னர் ஆராயாமல்தான் தண்டனை அளிக்கிறீர்களா? அரச குலத்தில் பிறந்த காரணத்துக்காகவா என் அண்ணனுக்கு இவ்வரச நீதி மறுக்கப்படவேண்டும்?

தித்: மகளே! என் உள்ளத்தில் எத்தனை எரிமலைகள் கொழுந்து விட்டுக் கொந்தளிக்கின்றன என்பதை நீங்கள் அறியமாட்டீர்கள். கிள்ளியைப் பற்றி நான் செய்த முடிவை நானே மாற்றிக் கொள்ளும் வண்ணம் என் செய்கையில் யாரும் குறுக்கிடாதீர்கள்.

சாத்: நீங்களாகவா இளவரசரை நாடு கடத்தினீர்கள்? தென்னவன் பங்கு அதில் தினையளவும் இல்லையா?

தித்: புலவரே! என்னைப் பித்தனாக்க வேண்டாம். தயவுசெய்து என்னைச் சிறிது நேரம் தனியே விடுங்கள். யாரடா பணியாள்? விரைவில் தேரைப் பூட்டு. இன்னே வேட்டை மேற்செல்ல வேண்டும். அதற்கு வேண்டிய பிற ஆயத்தங்களையும் உடனே செய்வாயாக!

[வாயிலாளன் ஒருவன் வருகிறான்]

வாயி: வாழ்க மன்னர் பெருந்தகை!

தித்: என்ன சேதி?

வாயி : மன்னவர் பெரும ! உரைசால் மாட மதுரையி னின்றும் தூதுவன் ஒருவன் ஓலை கொண்டு வாயிலில் காத் துள்ளான்.

ஐயை : } மதுரையிலிருந்தா ?
சாத் : }

வாயி : ஆம் இளவரசி !

தித் : உடனே சென்று அவனை அழைத்துவா.

[தூதுவன் ஓலையுடன் தித்தனைத் தொழுது வாழ்த்தி ஓலையைக் கொடுக்கிறான். தித்தன் ஓலையைப் படிக்கிறான். வாசித்து முடிந்த பின்னர், சாத்தந்தையாரிடம் நீட்டுகிறான்.]

தித் : (வாயிலாளனை நோக்கி) இத்தூதுவனை விருந் தினர் விடுதிக்கு அழைத்துச் செல். பாண்டிய நாட்டின் தூதனே ! பாண்டி வேந்தரின் இறப்பினைக் கேட்டு யாம் பெரிதும் வருந்துகிறோம். இன்று மாலையில் யாமும் எம் கண்ணீர் தோய்ந்த ஓர் ஓலையைக் கொடுக்கிறோம். அதனை எடுத்துச் சென்று உங்கள் இளவரசரிடம் ஈவாயாக !

தூது : கட்டளை, மன்னரே !

[வாயிலாளனைப் பின்பற்றித் தூதுவன் செல் கிறான்]

சாத் : நல்லுடலோடு இருந்தவர் சட்டென உயிர்நீத்து விட்டாரே !

தித் : சாவும், பிறப்பும் இவ்வாறுதான் சட்டெனத் தோன்றும் — வெட்டென மறையும். என் செய்வது? மிகவும் இனியவர். தம் ஆட்சிக் காலத்தில் போரே இருக்கக் கூடாது என்று நினைத்தார். அத்தனை சிறந்தவர் அப் பாண்டி மன்னர்.........

சாத் : இனி அரசு கட்டிலேறும் அவர் மைந்தர் எப்படி இருப்பாரோ?

தித் : நாளைய முடிமன்னர் அவர் என்பதை மறந்து தானே கிள்ளி அவரிடம் வீணுகப் பகைமையைக் காட்டினுன் ?

ஐயை : அன்புத் தந்தையே ! வீரத்தின் அணையா விளக்காக ஒளிரும் என் அண்ணன் செய்த செயல்களை ஆராயாது வீணே அவரைக் குறை கூறுவதால் என்ன பயன் ?

தித் : எப்படியோ போகட்டும். அதை நினைத்தாலே என் உள்ளம் வெதும்புகிறது. தலை சுற்றுகிறது. யாரடா அங்கே? தேர் சித்தமாகி விட்டதா ? வேட்டை நாய்களை இன்னுமா அவிழ்த்து விடவில்லை ?

[வேட்டை நாய்கள் ஓடிவந்து தித்தனைச் சுற்றுகின்றன.]

இதோ வந்துவிட்டன. நான் வருகிறேன் மகளே ; புலவரே ! என் ஆருயிர் மகளுக்கு ஆறுதல் கூறுங்கள். அவளுடைய மலரன்ன அன்பு நெஞ்சின்மீது ஆதவனின் வெப்பமான கதிர்கள் வீழா வண்ணம் பார்த்துக் கொள்ளுங்கள்.

[தித்தன் செல்லுகிருன். நாய்கள் பின் தொடர்ந்து ஓடுகின்றன.]

மொழிப் பயிற்சி:

குன்றின் மேலிட்ட விளக்கு, எரிமலைகள் கொழுந்து விட்டெரிப்பது போல, மாயத் தோற்றம், சாவும் பிறப்பும், அணையா விளக்காக, அணைகடந்த வெள்ளம்- இத்தொடர்களை வாக்கியத்தில் அமைத் தெழுதுக.

பயிற்சி விஞக்கள்:

1. அண்ணனின் வெற்றிகுறித்து ஐயை தித்தனிடம் புகழ்ந்து கூறியது யாது ?

2. கிள்ளி ஆமூர் மல்லனை வென்ற விவரத்தைக் கூறுக.

3. தித்தன் தன் மைந்தனை கிள்ளியை நாடு கடத்தியது ஏன்?

4. ஐயை தன் அண்ணனுக்காகத் தந்தையிடம் பரிந்து பேசியவை யாவை?

கட்டுரை:

உன் பள்ளிக் கூட நிகழ்ச்சி ஒன்றை நாடகமாக எழுது.

உன் வாழ்க்கையில் நடந்த சம்பவ மொன்றை நாடகமாக எழுது.

---

15. நமது ஐந்தாண்டு திட்டங்கள்

[பேராசிரியர் ஆரோக்கியசாமி ரெட்டியார் எம். ஏ.]

உலக நாடுகளில் சில பொருளாதார வளர்ச்சியடைந்தவை. இங்கிலாந்து, பிரான்ஸ், மேற்குஜெர்மனி, அமெரிக்க ஐக்கிய மாகாணங்கள், ஜப்பான் முதலிய நாடுகள் இவ்வகையைச் சேர்ந்தவை. வேறு சில நாடுகள் பொருளாதார வளர்ச்சியடையாதவை. மத்திய ஆப்பிரிக்காவிலும் தென் அமெரிக்காவிலும் இப்படிப்பட்ட நாடுகள் உள்ளன. இவ்விருவகை நாடுகளுக்குமிடையே பொருளாதார வளர்ச்சியடைந்து வரும் நாடுகள் இருக்கின்றன இந்த இனத்தைச் சேர்ந்தது நமது நாடு. பொருளாதாரத் துறையில் இந்தியா முன்னேறிய நாடன்று; முன்னேருத நாடுமன்று; முன்னேறி வரும் நாடுகளில் ஒன்ருகும்.

பதினெட்டாம் நூற்ருண்டில் இங்கிலாந்தில் தொழிற் புரட்சி எழுந்தது. அதன் விளைவாய் அந்நாட்டிலும் மேற்கு ஐரோப்பாவிலும் அமெரிக்க ஐக்கிய மாநிலங்களிலும் பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டது. ஆனல் பல காரணங்களினல் இந்தியாவில் அவ்வளர்ச்சி ஏற்படவில்லை. சுமார் நூற்றைம்பது ஆண்டுகளுக்குமேல் இந்தியப் பொருளாதாரம் தடைப்பட்டுக்கிடந்தது. நாடு விடுதலையடைந்தபின் தேங்கிக் கிடந்த பொருளாதாரத்தை முன்னேற்றுவதற்குத் தீவிர முயற்சிகள் செய்யப்பட்டன. அம்முயற்சிகள் ஐந்தாண்டுத் திட்டங்களாக உருவாயின. இதுவரையில் இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்கள் நிறைவேறியுள்ளன. மூன்ருவது திட்டம் நடைமுறையில் உள்ளது. நான்காம் திட்டம் உருவாகி வருகிறது.

இந்திய மக்களின் வாழ்க்கைத்தரம் உயரவேண்டும். அவர்களுக்குப் போதுமான உணவு, உடை, குடியிருப்பு

வசதி முதலியன கிடைக்கவேண்டும். இதைச் செயல்படுத்தும் வகையில் நாட்டின் வருவாயும் தனிமனித வருவாயும் அதிகரிக்கவேண்டும். அதற்குப் பயிர்த்தொழில் செழித்து, விளை பொருள்களின் உற்பத்தி பெருகி, உணவுத்துறையில் சுய தேவை நிறைவு காணுவதும், பொருளாதாரத்தின் அடிப்படையான கனரகத் தொழில்கள் வளருவதும், வேலையில்லாதவர்களுக்கு வேலையளிப்பதற்குரிய வாய்ப்புகளை அதிகரிப்பதும், சமூக பொருளாதார ஏற்றத் தாழ்வுகள் குறைந்து நாட்டின் செல்வத்தில் எல்லா மக்களும் சமமான அளவில் பங்கு பெறுவதும் இன்றியமையாதன. இவ்வாறு பொருளுற்பத்தியைப் பெருக்கி மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி அவர்களுடைய நல்வாழ்வுக்கு வழி செய்வதே ஐந்தாண்டுத் திட்டங்களின் நோக்கமாகும்.

முதல் திட்டத்தில் பயிர்த்தொழிலுக்கு முதலிடம் அளிக்கப்பட்டது. அதற்கு, அத்திட்டத்திற்குச் செலவாகும் மொத்தத் தொகையில் 10·2% ஒதுக்கி வைக்கப்பட்டது. ஆனால் எல்லா வகைக் கைத்தொழிலுக்கும் ஒதுக்கப்பட்டது 7·6%. திட்டக் காலத்தில் பருவ மழை குறைவில்லை. இதனால் விளை பொருள்களின் உற்பத்தி அதிகரித்தது; உணவு நெருக்கடி தீர்ந்தது. முதல் திட்டத்தைப் போல இரண்டாம் திட்டத்திலும் பயிர்த்தொழில் செழித்து வளரும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆகையால் இரண்டாம் திட்டத்தில் பயிர்த்தொழிலுக்குப் பதிலாகக் கைத்தொழிலுக்கு முதலிடம் கொடுக்கப்பட்டது; திட்டத்தின் மொத்தச் செலவில் கைத்தொழிலுக்கு 18·5%-ம், பயிர்த்தொழிலுக்கு 7·1%-ம் ஒதுக்கப்பட்டன. ஆனால் பருவமழை குறைவினால் இரண்டாம் திட்டத்தில் எதிர்பார்த்தபடிப் பயிர்த்தொழில் வளரவில்லை. உணவு நெருக்கடி மீண்டும் ஏற்பட்டது. இந்த நிலையில் மூன்றும் திட்டத்தில் பயிர்த்தொழிலுக்கு அதிக சலுகை காட்டப்பட்டது. கைத்தொழில் வளருவதைப் போல்

பயிர்த்தொழிலும் வளரவேண்டும் என்னும் அடிப்படையில் மூன்றும் திட்டம் அமைந்துள்ளது. அதே அடிப்படையில் தான் நான்காவது திட்டமும் அமைக்கப்படுகிறது.

கடந்த பதினன்கு ஆண்டுகளில் ஐந்தாண்டுத் திட்டங்களினுல் நம் நாடு மிகுதியான நன்மை அடைந்திருக்கிறது. இது எவராலும் மறுக்கமுடியாத உண்மை. நாட்டின் வருவாய் அதிகரித்திருக்கிறது. 1950–51–ல் ரூ. 10,240 கோடியாயிருந்த வருவாய்1960–61-ல் ரூ. 14,500 கோடியாயிற்று ; 1965–66-ல் ரூ. 17,260 கோடியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அது போலத் தனி மனித வருவாயும் உயர்ந்திருக்கிறது. ஐந்தாண்டுத் திட்டங்களுக்கு முன் தனி மனிதச் சராசரி வருவாய் ரூ. 284 ; 1960–61-ல் ரூ. 330 ; மூன்ருவது திட்டத்தின் இறுதியில் இன்னும் அதிகமாகும். பயிர்த்தொழில் துறை மிகவும் முன்னேறியுள்ளது. உணவுப் பொருள்களின் உற்பத்தி சுமார் 508 லட்சம் மெட்ரிக் டன்களிலிருந்து 812 லட்சம் மெட்ரிக் டன்கள் ஆகியுள்ளன அது போல பிற விளைபொருள்களும் அதிகரித்துள்ளன. இதற்குப் பல காரணங்களுண்டு. அவைகளில் முக்கியமானது நீர்ப்பாசன வளர்ச்சியாகும். பல புதிய பெரியநீர்ப்பாசனத் திட்டங்கள் நிறுவப்பட்டிருக்கின்றன. பக்ரா நங்கல், தாமோதர் பள்ளத்தாக்கு ஹிராகூட், துங்கபத்ரா, சம்பல், பெரியாறு, நொய்யல் முதலிய திட்டங்கள் சில எடுத்துக் காட்டுகளாகும். இந்தத் திட்டங்கள் பயிர்த் தொழிலுக்குப் பல வகையிலும் நலன் தருகின்றன. அவை குடியானவனுக்குத் தேவையான நீரைத் தேக்கி வைத்து, உரிய காலத்தில், போதுமான அளவில் வழங்குகின்றன. அவை மின்சார உற்பத்திக்கும் பயன்படுகின்றன. அவைகளிலிருந்து கிடைக்கும் மின்சாரம் பயிர்த்தொழிலுக்கும், கைத்தொழிலுக்கும் வேண்டிய சக்தியாகவும், வீடுகளிலும் தெருக்களிலும் ஒளியாகவும் பயன்படுகிறது. அவை வெள்ளத்தைக் கட்டுப்

பாடு செய்யும் அரண்களாகவுமிருக்கின்றன. வெள்ளத்தினுல் நிலங்களின் செழுமையான மண் கரைந்தோடி விடாமலும் அதனுல் நிலவளம் குன்றுமலும் அவை பாதுகாப்பு அளிக்கின்றன. மேலும் அவை போக்கு வரவுச் சாதனங்களாகவும் பயன்படுகின்றன. இவ்வாறு பலவகையில் பயனளிப்பதால் அவை பல நோக்குத் திட்டங்களெனப் படுகின்றன.

பயிர்த்தொழில் முன்னேற்றத்திற்கு மற்ருெரு முக்கியமான காரணம் இரசாயன உரங்களின் உற்பத்தியாகும். இப்பொழுது பெரிய தொழிற்சாலைகளில் இரசாயன உரங்கள் உற்பத்தியாகின்றன. சிந்திரி இரசாயன உர ஆலை இதற்கு நல்லதோர் எடுத்துக்காட்டாகும். உரம், விதை, நவீன பயிர்த்தொழில் கருவிகள் முதலியவற்றை வாங்குவதற்குக் குடியானவனுக்கு முதலீடாகப் பணம் தேவை. அவனுக்குத் தேவைப்படும் தொகையைக் கடனுகக் கொடுத்துதவக் கூட்டுறவுச் சங்கங்களும், வங்கிகளும் நிறுவப்பட்டுள்ளன. உழவனுக்கு முதலீட்டு உதவி செய்யும் கூட்டுறவு நிறுவனங்கள் வளர்ந்திருப்பது பயிர்த்தொழில் வளர்ச்சிக்கு ஒரு தக்க காரணமாகும்.

தொழில் துறையிலும் அதிகமான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இரும்பு, நிலக்கரி, சிமெண்ட், இயந்திர உற்பத்தி, சர்க்கரை, துணி, சணல் முதலிய கனரகத் தொழில்கள் வளர்ந்து வருகின்றன. பிலாய், துர்காபூர், ரூர்க்கேலா முதலிய நகரங்களில் நிறுவப்பட்டிருக்கும் இரும்பு ஆலைகளும், ஹிந்துஸ்தான் இயந்திரக் கருவிகள் ஆலையும், சித்தரஞ்சன் இரயில் எஞ்சின் ஆலையும் சில நல்ல சான்றுகளாகும். சிறு கைத்தொழில்களும், குடிசைத் தொழில்களும் புத்துயிர் பெற்றுள்ளன. இவை மென்மேலும் வளருவதற்குப் பற்பல சலுகைகள் வழங்கப்பட்

டிருக்கின்றன. அப்படியே போக்கு வரவுச் சாதனங்களும் சமூகப்பணிகளும் வளர்ந்து வருகின்றன.

இவ்வாறு பல துறைகளிலும் பாராட்டுவதற்குரிய பலன் கிடைத்த போதிலும், ஐந்தாண்டுத் திட்டங்கள் முழு வெற்றி யடைந்தன என்று கூறமுடியாது. ஏனெனில், எதிர்பார்த்த அளவில் பொருள் உற்பத்தி பெருகவில்லை. எடுத்துக்காட்டாக உணவுச் சிக்கல் இன்னும் தொல்லை கொடுத்து வருகிறது. அயல் நாட்டுச் செலாவணி, நிலக்கரி, கச்சாப் பொருள்கள்; தொழில் நுட்பத் திறன் முதலியவை கிடைக்கவில்லை அல்லது பற்றுக்குறையாயுள்ளன என்ற காரணத்தால் சில தொழில்கள் நிறுவப்படவில்லை; வேறு சில தொழில்கள்வளரவழியின்றித் தடைப்பட்டுக் கிடக்கின்றன. பணப் புழக்கம் அதிகரித்ததினலும், போதுமான பொருள் உற்பத்தி இல்லாததினலும் பணவீக்கம் ஏற்பட்டிருக்கிறது. அதன் விளைவாக விலைவாசிகள் ஏறிவிட்டன. அதனல் எல்லா மக்களும், சிறப்பாக விலைவாசிகளையொட்டி உயராத மாத வருமானமுள்ளவர்களும் துன்புறுகிருர்கள். பணவீக்கமும் விலைகளின் உயர்வும் ஐந்தாண்டுத் திட்டங்களின் குறைகளில் முக்கியமானவையாகும். அவைகளால் திட்டங்களின் பலனை மக்கள் முற்றிலும் பெற முடியாமற் போகிறது.

ஐந்தாண்டுத் திட்டங்களில் குறைகள் இருக்கின்றனவென்பதைக் குறித்து வியப்படைய இடமில்லை. குறைகளேயில்லை என்ருல்தான் வியப்புற வேண்டும். பிறநாடுகளின் திட்டங்களிலும் குறைகள் இருக்கின்றன; இருப்பது இயல்பு. மனிதனல் வகுக்கப்பட்ட எந்தத் திட்டத்திலும் குறைகள் இருந்தே தீரும். அந்தக் குறைகளைக் கண்டு வியப்புருமல் அவைகளைப் போக்க உழைப்பதுதான் அறிவுள்ள மாந்தர்க்கு அழகு. ஒரு சிலர் குறைகளைப் பெரிதாக்

கித் திட்டங்களை அடியோடு கண்டித்து வேண்டாமென்பர். இது தவறு. வேறு சிலர் குறைகளைக் கண்டும் காணுததது போல அவைகளை மறைத்துத் திட்டங்கள் மிக உயர்ந்தன, அவைகளில் பழுதில்லை என்று பாராட்டுவார்கள். இதுவும் தவறு. திட்டங்களின் குறைகளையுணர்ந்து அவைகளைத் திருத்த முயலுவதுதான் முறை.

குற்றங்களில் சில, திட்டங்களின் அமைப்பிலும், சில அவைகளின் நடைமுறையிலும் காணப்படும். ஒவ்வொரு கிராமத்திலும், நகரத்திலும், மாநிலத்திலும் வெவ்வேறு தேவைகளும் வாய்ப்புக்களுமுண்டு. அத் தேவைகளுக்கும் வாய்ப்புக்களுக்கும் ஏற்றவாறு திட்டங்கள் அமைய வேண்டும். அப்பொழுதுதான் அவை பொருத்தமுடைய திட்டங்களாகும். மக்கள் அவரவர்களுடைய தேவைகளை யும் வாய்ப்புக்களையும் எடுத்துக் கூறி அவைகளையொட்டித் திட்டங்கள் அமையும்படிச் செய்ய வேண்டும். இது அவர் களுடைய கடமை.

திட்டங்கள் நல்ல முறையில் நடைபெற்று மிகுந்த பலனை அளிக்க வேண்டுமாயின், அவைகளின் நிர்வாகிகள் திறமை, நேர்மை, உற்சாகம், பொதுப்பணி உணர்வு முதலிய பண்புகள் வாய்ந்தவர்களாயிருக்க வேண்டும். இல்லை யானல் திட்டங்கள் பயன்தரா. நிர்வாகிகளின் பண்பு களைப்போலப் பொதுமக்களின் ஒத்துழைப்பும் திட்டங்களின் வெற்றிக்கு இன்றியமையாதது. அவர்களுடைய ஒத்துழைப் பின் அளவுதான் திட்டங்களின் பலனுமிருக்கும். மக்களிடத் தில் திட்ட மனப்பான்மை இருந்தால்தான் அவர்கள் திட்டங் களின் வெற்றிக்காக மகிழ்ச்சியுடனும் ஊக்கத்துடனும் பாடு படுவார்கள். திட்டங்கள் நமது திட்டங்கள், நம்முடைய நலனுக்கான திட்டங்கள், நம்மால் உருவாக்கிச் செயல்படுத் தப்படும் திட்டங்கள் என்ற எண்ணமே திட்ட மனப்

பான்மையின் சாரமாகும். இந்த எண்ணம் வளர வளர மக்கள் அதிக மதிகமாய்த் திட்டங்களில் ஈடுபட்டு உழைப்பார்கள். அதனால் திட்டங்கள் நல்ல முறையில் நடைபெற்று நாட்டிற்கு நிறைய பலனளிக்கும்.

அருஞ்சொற் பொருள்:

வாழ்க்கைத்தரம் - வாழ்க்கை நிலை, அரண் — காவல், வங்கி — பாங்க்.

வினாக்கள்:

1. ஐந்தாண்டுத் திட்டங்களின் நோக்கம் யாது?
2. முதல் மூன்று திட்டங்களின் இயல்புகளைக் கூறு.
3. ஐந்தாண்டுத் திட்டங்களினால் நாடு பெற்ற நன்மையை நவில்க.
4. பயிர்த்தொழில் முன்னேற்றத்துக்குத் திட்டம் தரும் வசதிகள் யாவை?
5. தொழில் துறையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்துக்குச் சான்று தருக.
6. திட்ட மனப்பான்மையின் சாரம் யாது?

வாக்கியத்தில் அமைத்தெழுதுக:

வாழ்க்கைத்தரம், முதலீடு, முன்னேற்றம், தொழில் நுட்பத் திறன், கடமை.

கட்டுரை:

திட்டங்களால் நாடு எய்தும் நன்மை என்ற தலைப்பில் ஒரு கட்டுரை வரைக.

16. கற்ற வண்ணம் ஒழுகுதல்

[பெரும்புலவர் மயிலை. சிவமுத்து]

உரையாடல்

[மணிவண்ணன் கல்லூரி மாணவன். அவனுக்கு இளையவன் கணிகண்ணன். அவன் எட்டாம் வகுப்பு மாணவன். இவர்கள் இருவருக்கும் உரையாடல் நிகழ்கின்றது.]

கணிகண்ணன்: அண்ணா, 'உலகத்தோடு ஒட்ட ஒழுகல்' என்பது என்ன அண்ணா?

மணிவண்ணன்: தம்பி, இது மேல்வகுப்பிலே தெரிந்து கொள்ள வேண்டிய செய்தி. இதைப்பற்றி உனக்கு ஆராய்ச்சி ஏன்?

கணி: அப்படியா? இது எங்கள் பாடத்திலே வருகிறதே! நான் நித்தம் மனப்பாடம் செய்யும் திருக்குறளிலே கூட இந்தச் சொற்றொடர் வருகிறதே!

மணி: அந்தத் திருக்குறளைச் சொல் கேட்கலாம்.

கணி: "உலகத்தோ(டு) ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலாதார்."

மணி: தம்பி, நீ அதன் பொருளையும் சொல்லுவாயா?

கணி: அண்ணா, நேற்று எங்கள் ஆசிரியர் அதைக் கூறினார். ஆனால் எனக்குச் சரியாக விளங்கவில்லை. அதனாலேதான் கேட்கிறேன்.

மணி: இந்தப் பாடலின் பொருளைத் தெரிந்து கொள்ள உன் போன்ற இளஞ்சிறுவர்கட்குச் சிறிது துன்பமாகத்தான் இருக்கும். ஆனால் வள்ளுவர் இதை எல்லோரும் தெரிந்து கொள்ள வேண்டும் என்னும் எண்ணத்தாலேதான் ஒழுக்கம் என்னும் அதிகாரத்திலே இறுதிச் செய்யுளாக இதை

அமைத்து இருக்கின்றார். அது இருக்கட்டும், தம்பி, நீ உன் பாடங்களை எல்லாம் நித்தம் படிக்கிறாய் அல்லவா? எதற்காகப் படிக்கின்றாய்?

கணி: என்ன அண்ணா; இது தெரியாதா? மேல்வகுப்பு மாறுவதற்காகப் படிக்கின்றேன்.

மணி: அவ்வளவுதானா? அதற்குப் பிறகோ?

கணி: அதற்குப் பிறகு நானும் உங்களைப்போலவே பட்டம் பெற்று உத்தியோகமோ, வியாபாரமோ செய்து பொருள் தேடுவேன்.

மணி: தம்பி, நன்றாகச் சிந்தித்துச் சொல். பொருள் தேடுவதற்கு மட்டுந்தானா நாம் படிக்கின்றோம்?

கணி: இல்லை அண்ணா. இப்பொழுது நினைவுக்கு வருகிறது. படித்தபடியே நடப்பதுதான் முக்கியம் என்று எங்கள் ஆசிரியர் கூறியிருக்கின்றார்.

மணி: அதுதான் சரி. கண்ணா, நன்றாகப் படித்திருந்தும் படித்தபடியே நடக்காதவர்களை நாம் படித்தவர்கள் என்று சொல்லலாமா?

கணி: சொல்லக் கூடாது. அண்ணா, இப்போது எனக்கு அந்தத்திருக்குறளின் பொருள் சிறிது விளங்குகிறது. படித்தபடியே நடப்பவர்கள் அறிவாளிகள், அவ்விதம் நடக்காதவர்கள் எவ்வளவு படித்திருந்தாலும் படித்தவர்கள் அல்லர். நான் சொல்வது சரிதானே? எங்கள் ஆசிரியரும் இப்படித்தான் கூறினார். ஆனால், 'உலகத்தோடு ஒட்ட ஒழுகல்' என்பது தான் சரியாக விளங்கவில்லை.

மணி: தம்பி, நீ நல்ல அறிவாளி ஆவாய்; ஆதலால், இந்தப் பாடலின் கருத்தை உனக்கு முதலில் விளக்கிக் கூறிப் பிறகு பதப் பொருளும் கூறுகின்றேன்.

கணி: எங்கள் ஆசிரியரும், 'இந்தப் பாடலின் கருத்தை மட்டும் தெரிந்து கொள்ளுங்கள். அது போதும்' என்றுதான் கூறுகின்றார்.

மணி: உண்மையே; இந்தப் பாடலுக்குக் கொண்டு கூட்டிப் பொருள் கூறும் போது இளைஞர்கட்குச் சிறிது துன்பமாக இருக்கலாம். தம்பி, நான் கூறுவதைக் கவனி. நாம் படிப்பது 'ஏட்டுச் சுரைக்காயாக' இருத்தல் கூடாது.

கணி: ஏட்டுச் சுரைக்காய் என்பது என்ன அண்ணு?

மணி: ஒரு புலவர் புராணப் பிரசங்கம் செய்து கொண்டிருந்தாராம். அப்போது அவர் சுரைக்காய் சாப்பிடுவது நல்லதன்று என்று அங்கிருந்தவர்களுக்குக் கூறினுராம். இதை அந்தப் புலவரின் மனைவியும் கேட்டுக் கொண்டிருந்தாளாம். மறுநாள் புலவர் தம் மனைவியிடம், நம் தோட்டத்தில் காய்த்திருந்த சுரைக்காய்கள் எங்கே?' என்ருராம் அவள், 'சுரைக்காய் சாப்பிடுதல் கூடாது என்று நீங்கள் பிரசங்கத்தில் கூறியதால் நான் அவைகளை அறுத்து ஏழைகட்குக் கொடுத்துவிட்டேன்' என்ருளாம். உடனே புலவர், 'அடி பைத்தியக்காரி, நான் சொல்லியது ஏட்டுச் சுரைக்காய்; இது வீட்டுச் சுரைக்காய் ஆயிற்றே!' என்ருராம்.

கணி: சுரைக்காயில் இரண்டு வகையா!

மணி: வயிற்றுப் பிழைப்புக்காகச் சொன்னது ஏட்டுச் சுரைக்காய்; அதாவது, படித்தபடி நடக்காமல் மற்றவர்களுக்கு மட்டும் உபதேசம் செய்வது. நாம் நன்ருகப் படிக்க வேண்டும். நம்மைப்போலப் படித்தவர்கள் உலகத்தில் எவ்விதம் வாழ்கிருர்களோ, அவ்விதம் நாமும் ஒழுக்கத்தோடு வாழ வேண்டும். அவ்விதம் வாழாதவர் படித்தும் படியாதவர், அதாவது கற்றறிமூடர்.

கணி: என்ன அண்ணு, படித்தவன் மூடனுக எவ்விதம் இருப்பான்? விளக்கிச் சொல்லுங்கள் அண்ணு!

மணி: தம்பி, அது ஒரு பெரிய கதை. என்ருலும் சுருக்கிச் சொல்லுகிறேன். ஓர் ஊரில் நான்கு வித்துவான்கள் இருந்தார்கள். மருத்துவப் புலவர், இசைப் புலவர், சோதி

டப் புலவர், தருக்க சாத்திரி, இந்த நான்கு பேரும் ஓர் அரசனிடம் சென்று தம் புலமையைக் காட்டினராம். அப்போது அரசன் தனக்கு அருகில் உள்ள அமைச்சனைப் பார்த்து, 'இவர்களைக் குறித்து உமது கருத்து என்ன?' என்று வினவினனும். உடனே அமைச்சன், 'எனக்கு ஒரு நாள் ஓய்வு கொடுங்கள்; சொல்லுகின்றேன். அதுவரையில் அவர்கள் என்னிடம் இருக்கட்டும்' என்று கூறி அவ்விதமே அந்தப் புலவர் நால்வரையும் அமைச்சன் தன் வீட்டுக்கு அழைத்துச் சென்றுனும்.

கணி: அந்த அமைச்சன் இந்த நான்கு வித்துவான்களுக்கும் ஏதாவது பரீட்சை வைக்கப் போகிருனு?

மணி: ஆம்; பரீட்சை தான் வைக்கப் போகிருன். இவர்கள் படித்திருக்கிருர்களே, இவர்களுக்கு உலக அறிவு இருக்கிறதா என்று பரீட்சிக்கப் போகிருனும்.

கணி: அது எப்படி அண்ணு ?

மணி: அமைச்சன் அந்த நான்கு வித்துவான்களையும் பார்த்துப் 'புலவர்களே, இந்தப் பொன்னைப்பெற்றுக்கொள்ளுங்கள். வேண்டிய சாமான்களும் தருகின்றேன். வேறு எவர் உதவியையும் நாடாமல் நீங்களே காய்கறி முதலிய யாவும் வாங்கி நீங்களே சமையல் செய்து சாப்பிட வேண்டும். பிறகு என்னை வந்து பாருங்கள்' என்று கூறினனும். அந்தப் புலவர் நால்வரும் புத்தகமும்கையுமாய் இருந்தனரே ஒழியக் குடும்பக்கவலைபற்றிச் சிறிதும் கவலைப்படவில்லை. அவர்கள் அரிசி விலை, உப்பு விலைகூடத் தெரியாதவர்கள். என்ன செய்வார்கள் பாவம்!

கணி: அண்ணு, அண்ணு, இந்தக் கதை எனக்குத் தெரியும். மருத்துவப் புலவர், 'கத்தரிக்காய் சூடு செய்யும்; வாழைக்காய் வாயு செய்யும், என்று எதையும் வாங்காமல் சும்மா வந்துவிட்டார். தருக்க சாத்திரியார் 'நெய்க்குத்

தொன்னை ஆதாரமா, தொன்னைக்கு நெய் ஆதாரமா?' என்று பார்க்க வாங்கிய, நெய்யைக்கவிழ்த்துவிட்டார். இன்னிசைப் புலவர் சோறு கொதிக்கும் போது, தாளம் சரியாக இல்லை என்று சொல்லி அந்தச் சோற்றுப் பானையையே எட்டி உதைத்தாராம். அந்தக் கதைதானே இது?

மணி: ஆம் தம்பி, அதுவே தான். அவர்கள் நன்ருகப் படித்திருந்தும், உலகத்தோடு ஒட்டி வாழத் தெரிந்து கொள்ளவில்லை. அதற்காகத்தான் இப்போது பாடங்கள் எல்லாம் குடும்பத்துக்கு ஏற்ற பாடமாக இருக்க வேண்டும் என்றும் மாணவர்கள் படித்தபடியே நடக்கமுயலவேண்டும் என்றும் அரசாங்கத்தார் கூறுகின்றனர்.

கணி: அண்ணு, நான் சாரண இயக்கத்தைச் சார்ந்தவன். எனக்குச் சமைக்கக் கூடத் தெரியும். நூல் நூற்பேன்; துணி நெய்வேன்; பாய் முடைவேன். எங்கள் பள்ளியில் எல்லாம் கற்றுக் கொடுக்கிருர்கள்.

மணி: இவ்விதம் வாழ்க்கைக்கு வேண்டிய வகையில் பாடங்கள் இப்போது அமைந்திருப்பதற்குக் காந்தியடிகளே அடிகோலினுர். வார்தாக் கல்வித் திட்டம், ஆதாரக் கல்வி முறை என்றெல்லாம் இப்போது கூறுகின்ருர்களே, அவை யாவும் மக்கள் வாழ்க்கைக்கு ஏற்ற முறைகளேயாகும்.

கணி: 'காந்தி அடிகள் சுய ஆட்சியை மட்டும் அளிக்கவில்லை; மக்கள் வாழ்க்கைக்கும் வழி வகுத்துக் காட்டியிருக்கின்ருர்' என்று எங்கள் தலைமை ஆசிரியர் காந்தி விழாவில் மிகவும் விரிவாக ஆர்வத்தோடு பேசினுர். அண்ணு, எனக்கு நேரம் போனதே தெரியவில்லை! நாளைக்கு எங்கள் பள்ளியில் ஒரு கூட்டு வியாபாரம் நாங்களே நடத்தப் போகிருேம். அதற்கு வேண்டிய பொருள்களையெல்லாம் சேர்க்க உடனே ஒரு பட்டி தயார் செய்ய வேண்டும். அது இருக்கட்டும் அண்ணு, அந்தத் திருக்குறளுக்கு நீங்கள் பொருள் கூறவேயில்லையே!

மணி: தம்பி, அவ்விதமே கூறுகின்றேன். முதலில் அந்தப் பாட்டை அன்வயப்படுத்திக் கொள்ள வேண்டும்.

கணி: 'அன்வயம்' என்பது என்ன அண்ணா?

மணி: சொற்களைக் கொண்டு கூட்டுதல், அதாவது பாட்டினை உரைநடையின்படி ஒழுங்கு படுத்திக் கொள்ளு தல்; இதற்கு அன்வயப்படுத்துதல் என்பது பெயர்.

'உலகத்தோடு ஒட்ட ஒழுகல் கல்லார்,
பலகற்றும் அறிவிலாதார்'

இதுவே இந்தப் பாட்டின் அன்வயம் ஆகும்.

உலகத்தோடு-உலகத்தில் உள்ள உயர்ந்த மக்களோடு. ஒட்ட ஒழுகல்–சேர்ந்து ஒழுகுதலை, கல்லார்-தெரிந்து கொள் ளாதவர், பல கற்றும்–பல நூல்களைக் கற்றறிந்த போதிலும், அறிவிலாதார்-அறிவில்லாதவரே ஆவர்.

இங்கே உலகம் என்பது உலகத்தில் உள்ள பெரியோ ரைக் குறிக்கும். 'உலகம் என்பது உயர்ந்தோர்மாட்டே' என்பது வழக்கு.

கணி: நல்ல விளக்கம் தந்தீர்கள் அண்ணா! நன்றி! வணக்கம்!

மணி: தம்பி, நீயும் காந்தி அடிகளைப் போல ஒழுக்கத் திற் சிறந்தும், திருவள்ளுவரைப் போல அரிய நூல்கள் இயற்றியும், நம் குடும்ப மூதாதையர்களைப் போலக் கற்ற வண்ணம் ஒழுகியும் பேரும் புகழும் பெற்றுத் திகழ்வாயாக!

மொழிப் பயிற்சி:

பின் வரும் தொடர்களை வாக்கியத்தில் அமைத்துக் காட்டுக:

படித்தும் படிக்காதவர், கொண்டு கூட்டி, ஏட்டுச் சுரைக் காய் கறிக்குதவாது, வயிற்றுப் பிழைப்புக்காக, வழி வகுத்து.

வினாக்கள் :

1. உலகத்தோடு ஒட்ட ஒழுகல் என்பது யாரால் எங்குக் கூறப்பட்டுள்ளது? அதன் பொருள் என்ன?

2. கல்வி கற்பது எதற்காக என்று கணிகண்ணன் கூறுகிறான்?

3. ஏட்டுச் சுரைக்காய் என்பதை மணிவண்ணன் எவ்வாறு விளக்கினான்?

4. படித்தும் படியாதவர் யார்?

5. அமைச்சன் புலவர்களை நோக்கிக் கூறியது யாது?

6. புலவர்கள் எத்தகையவர்?

7. அரசாங்கத்தார் யாது கூறுகின்றனர்?

8. உலகத்தோடு ...... அறிவிலாதார் — என்ற குறளுக்கும் பொருள் கூறுக.

9. சமையல் செய்ய முற்பட்ட புலவர்கள் யாது செய்தனர்?

10. மணிவண்ணன் தன் தம்பிக்குக் கூறிய வாழ்த்து யாது?

கட்டுரை:

ஆதாரக் கல்வி, கல்வியும் கைத்தொழிலும், கற்க அதற்குத் தக நிற்க, என்ற தலைப்புகளில் ஒவ்வொன்றைப் பற்றியும் ஒரு கட்டுரை வரைக.

17. சீருணவு

குடும்பக் கலை

[பேராசிரியை டாக்டர், இராஜம்மாள் தேவதாஸ், எம்.ஏ; பிஎச்.டி.]

சீருணவு என்பது அளவிலும் குணத்திலும் தேவைக் கேற்ற உணவுப் பொருட்களைக் கொண்டதாகும். அது உடலின் வளர்ச்சிக்கும், மலர்ச்சிக்கும், உடலின் நலத்தைப் பேணுவதற்கும், உடலின் வேலைகள் சரிவர நடைபெறுவ தற்கும், மனநிறைவுக்கும் தேவையான உணவுச் சத்துக் களை வேண்டிய அளவில் கொண்டது. சீருணவை அமைப் பதற்கு, ஒருவருக்குத் தேவையான உணவுச் சத்துக்கள், அவற்றைத் தரக்கூடிய உணவுப் பொருட்கள், தினசரி உணவுத்திட்டம் வகுப்பது, உணவு தயாரிப்பது, உணவு பரிமாறுவது முதலியவற்றைப் பற்றிய அறிவு மிகவும் அவ சியம். ஏற்கனவே முந்தைய அதிகாரங்களில் ஒவ்வொரு வருக்கும் தேவையான உணவுச் சத்துக்கள், அவற்றின் அளவுகள், அவை கிடைக்கும் உணவுப் பொருட்கள் ஆகிய வற்றைக் கண்டோம். பலவித உணவுப் பொருட்களினின் றும், தேவையான உணவுப் பொருட்களை, நாள்தோறும் ஒவ்வொரு மனிதரும் பின் குறிப்பிட்டுள்ள அளவுப்படிச் சேர்த்துக் கொண்டால், சீருணவு அமைப்பதில் சிரமம் இருக்காது.

பால் :

வளரும் குழந்தைகளுக்கு நாள்தோறும் 2 முதல் 4 டம் ளர்கள் அதாவது 250 அல்லது 500 மி. லிட்டர்.

கர்ப்பிணிகளுக்கும், பாலூட்டும் தாய்மார்களுக்கும் 4 டம்ளர்கள் அல்லது 500 மி. லிட்டர். மற்றவர்களுக்கு 1 டம்ளர்.

பால் அனைவருக்கும் கிடைப்பது கடினம். இத்தகைய நிலைமையில், பாற்பொடி, வெண்ணெய் நீக்கப்பட்ட பால், மோர், கேழ்வரகு, கஞ்சி, நிலக்கடலைப் பால் ஆகியவற்றை யாவது பாலுக்குப் பதிலாகப் பருகவேண்டும். குழந்தைகளும், கர்ப்பிணிகளும் எவ்வளவு பாலைச் சேர்க்க முடியுமோ அவ்வளவு சேர்த்துக் கொள்ள வேண்டும்.

கீரைகள் அல்லது மஞ்சள் நிறக் காய்கள் :

குழந்தைகள் — 62 கிராம்
மற்றவர்கள் — 124 கிராம்

மற்ற காய்கறிகள் :

குழந்தைகள் — 31 கிராம்
மற்றவர்கள் — 62 கிராம்

தக்காளி, ஆரஞ்சு போன்ற பழங்கள் அல்லது முளை கட்டிய பயறு :

குழந்தைகள் — 31 கிராம்
மற்றவர்கள் — 62 கிராம்

கிழங்குகள் :

குழந்தைகள் — 62 கிராம்
மற்றவர்கள் — 93 கிராம்

பழங்கள் :

குழந்தைகள் — 62 கிராம்
மற்றவர்கள் — 93 கிராம்

முட்டை :

(உண்ணுபவர்களுக்குத்) தினமும் ஒன்று

சைவ உணவு உண்போர் முட்டைக்குப் பதிலாக 31 அல்லது 62 கிராம் நிலக்கடலை, வறுத்த கடலை அல்லது முந்திரிப்பருப்பைச் சேர்த்துக் கொள்ளலாம்.

இறைச்சி, மீன் :

— 93 கிராம்

புலால் உணவு உட்கொள்ளாத மரக்கறி உணவுக்காரர்கள் இறைச்சிக்குப் பதிலாக நாள்தோறும் 124 கிராம் பருப்பு அல்லது 93 கிராம் தயிரைச் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

தானியங்கள் :

குழந்தைகள் — 248 முதல் 310 கிராம் வரை
மற்றவர்கள் — 434 கிராம்

பருப்புகள் :

குழந்தைகள் — 31 கிராம்
மற்றவர்கள் — 62 கிராம்

எண்ணெய், வெண்ணெய் :

குழந்தைகள் — 31 கிராம்
மற்றவர்கள் — 62 கிராம்

இதில் பாதி அளவாவது வெண்ணெய் அல்லது நெய்யாக இருப்பது நல்லது.

சர்க்கரை, வெல்லம் :

குழந்தைகள் — 47 கிராம்
மற்றவர்கள் — 62 கிராம்

தண்ணீர் :

ஆறு டம்ளர்களுக்குக் குறையாமல்.

உணவுத் திட்டம் வகுப்பது :

தேவையான உணவின் அளவுகளைத் தெரிந்து கொள்வதுடன் அவற்றைத் தரும் உணவுப் பொருட்களைத் தேர்ந்தெடுக்கும் திறமையும் வேண்டும். மேலும் எவ்வாறு அந்த உணவுப் பொருட்களைத் தினசரி உணவுத் திட்டத்தில்

சேர்த்துச் சுவையாகச் சமைத்துப் பரிமாறுவது என்றும் தெரிந்து கொள்ள வேண்டும். ஆகவே சீருணவு அமைப்ப தற்கு அடுத்தபடியாக உணவுத் திட்டம் வகுப்பது அவசி யம். பொதுவாக ஒரு நாளில் மூன்று முறை உணவு உட் கொள்ளுகிறோம். அந்த மூன்று வேளை உணவுகளினால் தேவையான உணவுச் சத்துக்களைப் பகிர்ந்து கொள்ளும் வண்ணம் திட்டம் வகுக்கவேண்டும்.

உணவுத் திட்டம் வகுக்கும் போது கவனிக்க வேண்டியவை:

குடும்பத்திலுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை, அவர்களுடைய வயது, தொழில், வருவாய், பழக்கங்கள், வழக்கங்கள், பருவகால உணவுகள், தனிப்பட்ட கவனம் செலுத்தப்பட வேண்டிய நிலையில் உள்ளவர்கள், இவை யாவற்றையும் கருத்தில்கொண்டு திட்டம்வகுக்கவேண்டும். உதாரணமாகக் குழந்தைகளுக்குத்தேவைகள், சுவை, உண வருந்தும் ஆவல், உணவருந்தும் நேரம் ஆகியவை வேறு வகையாக இருக்கும். அவர்களது வளர்ச்சியின் காரண மாகச் சில உணவுகளை அவர்களுக்கு அதிகமாகத் தரவேண் டியதாக இருக்கும். ஆகவே குழந்தைகளின் வயதைக் கவனிப்பது முக்கியம். பல உறுப்பினர்கள் நிரம்பிய ஒரு குடும்பத்தில் ஒரு வயதுக் குழந்தை, ஏழு வயதுக்குழந்தை, கர்ப்பமுற்றதாய், முதியவளான பாட்டி ஆகிய பல வயதின ருக்கும் ஏற்றபடி உணவுத்திட்டம் அமையவேண்டும். வீட் டிலுள்ள ஒவ்வொருவருக்கும் தனித்தனியே உணவு தயாரிப் பது முடியாத காரியம். ஆகவே அனைவருக்கும் பொதுவான

உணவுத்திட்டம் ஒன்று அமைத்து அதில் சில சிறுமாறுதல்கள் செய்வதன் மூலம் ஒவ்வொருவருடைய தேவைகளும் நிறைவாகும்வண்ணம்உணவுத்திட்டம் தயாரிக்கவேண்டும். நோயாளிகளுக்கும், சில தனிச் சந்தர்ப்பங்களிலும் மாத்திரமே தனி உணவுத் திட்டங்கள் அமைக்க நேரிடலாம்.

குடும்பத்தின் உறுப்பினர்கள் செய்யும் வேலைகளுக்கேற்ப உண்வுத்திட்டம் அமைவது அவசியம். கடுமையான உழவுத் தொழில் செய்து திரும்பும் தந்தைக்கும், அலுவலகத்தில் அமர்ந்து வேலை செய்து திரும்பிவரும் தந்தைக்கும் ஒரே அளவு உணவு அளிக்கப்படக் கூடாது.

குடும்பத்தின் வருவாயின் நிலையும் உணவுத் திட்டத்தைப் பெரிதும் பாதிக்கும். மாதம் ஒன்றுக்கு அல்லது நாள் ஒன்றுக்கு, வருவாயில் எவ்வளவு பகுதியை உணவுச் செலவுக்காக ஒதுக்குவது என்பதை முதலில் தீர்மானித்துக் கொள்ளவேண்டும். குறைந்த அளவு வருவாயுள்ளவர்கள் 70 அல்லது 90 சதவிகித வருவாயை உணவுக்கென்று ஒதுக்க நேரலாம். ஆகவே செல்வர்களைவிட ஏழைகள் மிகவும் கவனமாய்த் தங்கள் உணவுத் திட்டத்தை அமைக்க வேண்டும்.

பணக் குறைவினால் உணவுத்திட்டத்தில் ஒரு மாற்றமும் செய்ய முடியாது என்று எண்ணக்கூடாது. மிகக் குறைந்த வருமானம் உடையவர்களும், ஏழ்மை நிலையிலிருப்பவர்களும் கையில் கிடைக்கும் உணவைச் சீராகச்

சமைக்க எத்தனையோ மாறுதல்களை மேற்கொள்ளலாம். உணவுச் சத்துக்கள் மிகுந்த, சிறந்த உணவுகள் மலிவாகக் கிடைக்கின்றன. பருவகால உணவாகிய மாம்பழம் போன்றவற்றை அந்தந்தக்காலங்களில்மலிவாகக் கிடைக்கும்போது பயன் படுத்தலாம். கீரைகள், காட்டுக்கீரை, முருங்கைக் கீரை, நெல்லிக்காய், அவரைக்காய், கத்தரிக்காய் முதலியன மலிவாகக் கிடைக்கின்றன. ஏழைகளும் இவற்றை வாங்கிப் பயன்படுத்திக்கொள்ளலாம். ஒவ்வொருவரும் வீடுகளில் சிறு தோட்டங்களைப் போட்டு அவற்றில் நல்ல காய் கறிகளைப் பயிர் செய்து கொள்ளலாம்.

சிறந்த உணவுத்திட்டம் என்பது என்ன? நாள்தோறும் கிடைக்கும் மூன்றுவேளை உணவில், அவரவர் உணவுத் தேவைகளைக் கவனித்து, உணவுகளை நன்ருகப் பொறுக்கி எடுத்தும் சமைத்தும் பரிமாறியும் தேவைகளை நிறைவு செய்யும்திட்டமேயாகும். நிறத்திலும், தோற்றத்திலும், சுவையிலும் மணத்திலும், உணவுச் சத்திலும், தன்மையிலும், செலவிலும், திருப்திதரும் திட்டம்தான் அதில் சிறந்ததாகும். பாதுகாப்பு உணவுகளும்கலப்புஉணவுகளும் நிறைந்திருக்கவேண்டும்.

உணவுகளைச்சேகரிப்பதிலும், சமைக்கும் முறைகளிலும், பரிமாறுவதிலும், தோற்றத்திலும் மாறுதல்கள் இருக்கும் போது உணவு உட்கொள்ள ஆவல் அதிகரிக்கும். ஒரே மாதிரியான உணவை நாள்தோறும் உட்கொள்ளுவதாக இருந்தால் சலிப்புத் தோன்றும்.

பல்லாண்டுகளாகப் பரம்பரையாக நாம் பின்பற்றி வந்த உணவு முறையின் காரணமாக நமது வீடுகளில் உணவுப் பழக்கங்கள் ஏற்பட்டுள்ளன. அவற்றின் விளைவாகத்தான் இட்டலி - சட்னி; சாதம் - சாம்பார்; பூரி- உருளைக்கிழங்கு; பருப்பு - நெய்; புளிக்குழம்பு - வறுவல்; பாயசம் - வடை என்ற பல கூட்டுறவு முறை நமது வழக்கத்தில் இருக்கின்றன. இந்தப் பழக்கங்களில் அவ்வப்போது சிலவற்றில் மாறுதல்கள் கொண்டு வந்தால் சலிப்பு ஏற்படுவது குறையும்.

சுவையிலும் தன்மையிலும் ஒன்றுக்கொன்று மாருன சாதம் சாம்பார் போன்ற உணவுகளை ஒன்ருகச் சேர்க்கும் போது இரண்டின் சுவையும் அதிகரிக்கிறது. உருசியில் ஒரே மாதிரியான வெங்காயம், பூண்டு, உருளைக்கிழங்கு, சேமை போன்ற உணவுப்பொருட்களை ஒரே சாப்பாட்டில் ஒன்ருகச் சேர்க்கும்போது, அவற்றின் உருசி குறைகிறது.

உணவுப் பொருட்களின் இயற்கையான நிறம் மாருத வாறு சமையல் முறை அமைதல் வேண்டும். காய்கறிகளில் பலவித மசாலைப் பொருட்களைச் சேர்த்து, நெடுநேரம் சமைத்துப் பரிமாறும்போது அவற்றின் அழகான நிறங்கள் அழிந்து விடுகின்றன. ஒரு இலையில் வெள்ளை நிறச் சோறும் ஆரஞ்சு நிறத் தக்காளிப் பழத் துண்டுகளும், மஞ்சள் நிறக் காரட் அல்லது பறங்கிக் காயும், பச்சை நிற அவரைக் காயும், சிவப்பு நிறத் துவையலும் பரிமாறினுல், ஓவியனின் சித்திரப் பலகை போல் அழகுடன் இருப்பதுடன்,

உருசியினலும், மணத்தினலும் சாப்பிடக் கவர்ச்சியைத் தருமல்லவா!

உணவின் தன்மையையும் கவனிக்கவேண்டும். மெது வானகுழம்புச்சாதத்துடன் முறுமுறுப்பான அப்பளம் சேரும் போது உண்ண ஆவல் அதிகரிக்கும்.

உணவின் தோற்றமும், கவனிக்கப்பட வேண்டியவற்றில் ஒன்று. வட்டவடிவமான வடை, இட்டலி, தோசை, பின்னலான ஓமப்பொடி, உருண்டையான போண்டா, நறுக்கிய முருங்கைக்காய், வாழைக்காய்ப் பத்தை, கம்மல் போன்று தோற்றமளிக்கும் வெண்டைக்காய்த் துண்டுகள், சீவிய மாங்காய், இழை போன்ற இடியப்பம் ஆகியவை உள்ளத்தைக் கவரும் வடிவங்கள்.

உணவு தயாரிக்கும் முறைகளிலும் மாறுதல்கள் வேண்டும். பொங்கல், வறுவல், அவியல், பொரியல்,வாட்டுதல், சுடுதல்,துவையல் ஆகிய பல முறைகள் உணவுக்குக் கவர்ச்சியைத் தருகின்றன.

நெல்லிக்காய், தக்காளி, காரட், மாங்காய் போன்ற உணவுப் பொருட்களைப் பச்சையாக முடிந்த போதெல்லாம் சேர்த்துக் கொள்ளவேண்டும். மேற்கூறிய குறிப்புகளின் அடிப்படையாகச் சீருணவைத் தரும் வகையில் ஒரு வார உணவுத்திட்டம் அடுத்த பக்கத்தில் தரப்பட்டிருக்கிறது.

ஞாயிறு	வாழைப்பழம், இட்டலி, பருப்பு அல்லது முட்டை, பால் அல்லது நிலக்கடலைப் பால்	சாதம் அல்லது சப்பாத்தி, பருப்பு அல்லது இறைச்சி, முளைக்கீரை, அப்பளம், பச்சைத் தக்காளி, மோர்.
திங்கள்	கொய்யா, அவல் உப்புமா, பருப்புக் குழம்பு, பால் அல்லது நிலக்கடலைப் பால்	சாதம் அல்லது சப்பாத்தி, பருப்பு அல்லது இறைச்சி முளைகட்டிய பயறு, வெந்தயக் கீரை அப்பளம், மோர்.
செவ்.	பப்பாளிப் பழம், ரவை உப்புமா, பருப்புக் குழம்பு அல்லது முட்டை, பால் அல்லது நிலக்கடலைப்பால்	சாதம் அல்லதுசப்பாத்தி, பருப்பு அல்லது இறைச்சி, நெல்லி அல்லது வெள்ளரிக் காய் வறுவல், மோர்,
புதன்	மாம்பழம், கிச்சடிச் சாதம், பருப்புத் துவையல் அல்லது முட்டை, பால் அல்லது நிலக்கடலைப்பால்	சாதம், அல்லது சப்பாத்தி பருப்பு அல்லது மீன், பசலைக்கீரை, காரட்பச்சடி, அப்பளம், மோர்.
வியா.	வீச்சுப்பழம், பூரி, பருப்பு அல்லது தோசை, உருளைக் கிழங்குக் கறி, பால் அல்லது நிலக்கடலைப் பால்.	சாதம் அல்லது சப்பாத்தி, பருப்பு அல்லது இறைச்சி, அரைக்கீரை, முளை கட்டிய பச்சைப் பயறு, அப்பளம்.
வெள்ளி	கொய்யா, பிட்டு, முட்டை அல்லது பருப்பு, பால் அல்லது நிலக்கடலைப் பால்	சாதம் அல்லதுசப்பாத்தி, பருப்பு அல்லது மீன், மாங்காய், முள்ளங்கிக்கீரை, சேனைக் கிழங்கு வறுவல், மோர்.
சனி	பப்பாளிப் பழம், ரவையில் அல்லது அரிசியில் தயாரித்த பாற் கஞ்சி, முட்டை அல்லது பருப்பு, பால் அல்லது நிலக்கடலைப் பால்	சாதம் அல்லது சப்பாத்தி, பருப்பு அல்லது இறைச்சி, முருங்கைக் கீரை, முள் ளங்கி அல்லது காரட் பச்சடி, அப்பளம், மோர்.

நிலைக்கடலை	பருப்பு, கத்தரிக்காய், சாதம் அல்லது சப்பாத்தி, ஊறுகாய், தயிர்
வறுத்த பட்டாணி	பருப்பு, சுரை அல்லது பூசணிக்காய் சாதம், அல்லது சப்பாத்தி ஊறுகாய் பாற் பாயசம்
வாழைப் பழம்	பருப்பு, காலி பிளவர்க் கறி, சாதம் அல்லது சப்பாத்தி, ஊறுகாய், தயிர்
சர்க்கரைவள்ளிக்கிழங்குப் பொரியல்	பருப்பு, பச்சைப்பட்டாணி, சாதம் அல்லது சப்பாத்தி, ஊறுகாய், பால்கோவா
பட்டாணிச் சுண்டல்	பருப்பு, முட்டைக் கோசு, சாதம் அல்லது சப்பாத்தி, பாயசம்
அரிசிப் பொரி	பருப்பு, முட்டைக் கோசு, சாதம் அல்லது சப்பாத்தி, ஊறுகாய், தயிர்
வாழைப் பழம்	பருப்பு சுரைக்காய் அல்லது பறங்கிக் காய் சாதம், அல்லது சப்பாத்தி, ஊறுகாய், ரவைப் பாயசம்

உணவு வாங்குவது :

உணவுத் திட்டம் அமைத்ததும், கையிலுள்ள பணத்திற்கு மிகுந்த பயன் கிடைக்குமாறு, உணவு வாங்க வேண்டும். கடையிலிருந்து வாங்கவேண்டிய உணவுகளையும், அவற்றின் அளவுகளையும் கணித்துக்கொண்டு பின்வரும் உதவிக் குறிப்புகளுடன் வாங்கவேண்டும்.

1. முடிந்த போது எல்லாம் நேரில் வாங்கவும்
2. பல கடைகளில் விசாரித்துத் தரம், விலை இவற்றை ஒப்பிட்டு வாங்கவும்.
3. பருவ காலத்தில் வாங்கிச் சேமிக்கவேண்டிய உணவுப் பொருட்களைச் சேமிக்கவும்.
4. வாரச் சந்தைகளில் முடிந்ததை வாங்கவும்.
5. கூடியவரையில் மொத்தமாக வாங்கவும்.
6. காய்கள், பழங்கள், முட்டை ஆகியவற்றை அவ்வப்போது வாங்கவும்.
7. கூட்டுறவுப் பண்ணை, பாற்பண்ணை, விவசாயப் பண்ணை ஆகியவற்றில் முடிந்தபோது வாங்கவும்.
8. ரொக்கம் கொடுத்து வாங்கவும்.
9. நிறுத்து எடை போட்டு வாங்கவும்.
10. அரிசி, பருப்பு, தானியங்கள் போன்ற பொருட்களை ஒருபருவத்திற்கு மொத்தமாக வாங்கிவைக்கவும்.
11. முட்டை போன்ற உணவுப் பொருட்கள் விலை உயர்வாக இருக்கும் காலத்தில், அவற்றிற்குப் பதிலாக, அதே சத்தைத்தரும் உணவுப்பொருட்களை மலிவாக வாங்கவும்.

12. டப்பாவில் அடைக்கப்பட்ட பொருட்களை வாங்கும் போது அவற்றின் உற்பத்தியைப் பற்றி நன்ருக விசாரித்து அவற்றினுடைய குறிப்புகளைப் படித்துப் பார்த்து வாங்கவும்.

உணவைப் பாதுகாப்பாக வைப்பது:

வாங்குவதைப் போலவே உணவைப் பத்திரமாக வைப்பதும் முக்கியம். உணவுகளைத் தவருக வைக்கும் போது மலிவாக வாங்கியதில் மிஞ்சிய பணம், வீணுக நேரிடும். உலர்ந்த உணவுகளை நீர் புகாவண்ணம் உலர்ந்த நிலையிலும், ஈரமுள்ள உணவுகளை உலர்ந்து போகாதபடி ஈரமாகவும் வைக்க வேண்டும். விரைவில் கெட்டுப் போகும் உணவுகளை வீட்டில் குளிர்ந்த இடத்தில், அல்லது பூமிக்கடியில் கட்டப்பட்டுள்ள தொட்டிகளில் வைக்கலாம். குளிர்ப் பெட்டி இல்லர்த வீடுகளில், இறைச்சி உணவுகளைச் சில மணி நேரங்களுக்கு மேல் வைத்திருக்கக் கூடாது. சப்பாத்தி, உரொட்டி, பிஸ்கோத்து முதலிய உணவுகளைக் காற்ருேட்டத்துக்காக அடியில் துவாரம் போட்டுள்ள தகரப் பெட்டிகளில் போட்டு இறுக மூடவேண்டும். பழைய உரொட்டிகளைத் தூளாக்கி உணவுத் தயாரிப்புகளில் கலந்து பயன்படுத்தலாம்.

பாலைக் காய்ச்சிக் குளிர வைத்து, மூடிக் குளிர்ச்சியான இடத்தில் வைக்க வேண்டும். முட்டைகளை மூடியுள்ள பாத்திரங்களில் வைக்க வேண்டும். பயன்படுத்துவதற்குச் சற்று நேரத்திற்கு முன்னன்றி அவற்றைக் கழுவக் கூடாது. சில நாட்களுக்கென்று பழங்களை வாங்கும்போது நன்கு பழுக்காத, காயாக இருக்கும் நிலையில் வாங்கிக்கழுவாமல் குளிர்ச்சியான அறையில் வைக்க வேண்டும். உருளைக்கிழங்கு, வெங்காயம், பறங்கிக்காய் முதலியவற்றைப் பல நாட்கள் வரை, இருட்டும், குளிர்ச்சியும், காற்ருேட்டமும் நிறைந்த இடத்தில் கெடாமல் வைக்க முடியும். எண்ணெய், நெய்

முதலியவற்றைக் கெட்டியாக மூடக்கூடிய சாடிகளில் அடைத்துக் குளிர்ச்சியான இடத்தில் வைக்க வேண்டும். சமீபத்தில், மண்பாண்டங்களில் செய்யப்பட்ட குளிர்ப்பெட்டிகள் மூன்று அல்லது நான்கு ரூபாய் விலையில் கிடைக்கின்றன. அவற்றில் கோடைக் காலத்தில் காய்கறி, கனி, பால் முதலிய உணவுகளை வைத்துக் கெடாமல் பயன்படுத்தலாம்.

வாக்கியத்தில் அமைத்து எழுதுக :-

பருவ காலத்தில், வளர்ச்சிக்கும் மலர்ச்சிக்கும் மன நிறைவு.

வினாக்கள்:

1. சீருணவாவது யாது?
2. சீருணவை அமைப்பதற்கு எத்தகைய அறிவு அவசியம்?
3. சீருணவுத் திட்டத்தில் பாலின் பங்கு யாது?
4. முட்டைக்குப் பதிலாக சைவ உணவு யாது?
5. உணவுத் திட்டம் வகுக்கும்போது கவனிக்க வேண்டியவை யாவை?
6. பணக்குறைவினால் உணவுத் திட்டத்தில் செய்யக் கூடிய மாற்றம் யாது?
7. சிறந்த உணவுத் திட்டம் என்பது என்ன?
8. நமது வழக்கத்தில் உள்ள கூட்டுணவு முறை யாது?
9. சமையல் முறை பற்றி அறியத்தக்கன யாவை?
10. வாரத்தில் ஒரு நாள் சீருணவுத் திட்ட முறையைக் கூறுக.
11. உணவுப் பொருள் வாங்கும் முறையினைக் கூறுக.
12. உணவுப் பொருள்களைப் பாதுகாக்கும் முறையினைக் கூறுக.

கட்டுரை:

உடலோம்பலுக் குரிய வழிகள்.

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.

சுத்தம் சுகந்தரும் — இத்தலைப்புகளில் கட்டுரை வரைக.

18. செவ்வாய்க்குச் சென்றுவந்தேன்

(கற்பனைக் கட்டுரை)

[வை. தட்சிணாமூர்த்தி, எம். ஏ.]

இளைய மகளுக்குத் தன் மகனை மருத்துவக் கல்லூரியில் சேர்க்கப் பணம் தரவில்லை என்று குறை. மூத்தவளுக்குத் தன் மகள் திருமணத்திற்கு வைரத்தோடு அன்பளிப்புத் தர வில்லை என்று குறை. என்னுடைய குறை என்னுடைய ஒரே மகனைப் பொறியியல் படிக்கவைத்தும், கூடச் சேர்ந்து வாழக் கொடுத்து வைக்காமல் செவ்வாய்க் கோளுக்கு வேலைக்கு அனுப்பிவிட்டு இந்தத் திருச்சி நகரில் மலைக் கோட்டையைச் சுற்றி வருகிறேமே என்பது. காலை ஏழரை மணியிருக்கும் செய்தித்தாளில் ஒரு விளம்பரம் வந்திருந்தது.

டில்லி, 2125 ஜூலை 20—

பூமியும் செவ்வாயும் 780 நாட்களுக்கு ஒருமுறை ஒரே அமைப்பில் இயங்குகின்ற நாள் அடுத்த ஆண்டு ஆகஸ்டு இருபதாம் நாள் வருகிறது. அனைத்துலக செவ்வாய்க் குடி யேற்றத் திட்டத்தின்படி இவ்வாண்டைய செவ்வாய்ப் பய ணத்திற்கு ஏற்பாடாகியுள்ளது, செவ்வாயில் சென்று குடி யேற விரும்பும் மக்கட்கு ஒரு வழிச் செலவை அரசாங்கம் ஏற்கும். குன்றந்த பட்சம் ஐந்தாண்டுகள் அவர்கள் செவ் வாய்க் கிரகத்தில் பணிபுரிதல் வேண்டும். விண்ணப்பமிட விரும்புவோர் அனைத்துலக செவ்வாய்க் குடியேற்றத் திட் டம், இந்தியப் பகுதி, புதுடில்லி என்ற முகவரிக்கு ஆகஸ்டு ஐந்தாம் நாளுக்குள் தொடர்பு கொள்க.

செய்தியைப் படித்தவுடன் மருத்துவ அறிஞராகிய நாமும் நம் மகன் சென்று பணிபுரியும் செவ்வாய்க் கிரகத்துக்கே ஏன் செல்லக் கூடாது என்ற எண்ணம் என் மனதில்

விரைந்துந்தியது. முறைப்படி விண்ணப்பமிட்டு அரசாங்க ஆணையும் வந்தது. அமெரிக்காவின் விண்வெளிப் பயணப் பயிற்சிக் கூடத்தில் ஆறு திங்கள்ப்பயிற்சிபெற்று ஆகஸ்டுத் திங்கள் இருபதாம் நாள் விண்வெளி இராக்கெட் விமானத்தில் எல்லாப் பயணிகளோடும் நானும் அமர்ந்தேன். எல்லோருக்கும் அவரவர் விரும்புகிற உணவு பரிமாறப்பட்டது. விமானப் பணிப்பெண் ஒலி பெருக்கியில் பேசத் தொடங்கினாள். "செவ்வாய்க்கிரகத்துக்குநம்முடையபயணம் எழுபது நாட்களுக்கு இருக்கும். இடையில்பயணத்துக்கெனச் சமைக்கப்பட்ட உணவுகள்தாம் கிடைக்கும். நம் சொந்த நாட்டு உணவை மீண்டும் நிலவுலகத்துக்குத் திரும்பியவுடன் மட்டுமே பெற முடியும். உங்கள் விருந்துக்கு நம் வாழ்த்துக்கள். இராக்கெட்விமானம்கணத்துக்கு 16·7 கிலோ மீட்டர் வேகத்தில் புறப்படவுள்ளது. இங்கிருந்து செவ்வாய்க் கிரகம் ஐம்பத்தாறு மில்லியன் கிலோ மீட்டர்த் தொலைவு இருக்கிறது" என்று கூறி முடித்தாள். இன்னொரு பணிப்பெண் எல்லோருடையவார்ப்பட்டைகளையும் விசித்துக் கட்டி விட்டுக் காதில் பஞ்சினை வைத்தாள். விமானக் கூட்டுக்குள் ஒருவகையான செயற்கைக் காற்றுமுறை எங்கட்கு வேண்டிய அளவு மட்டும் மூச்சுக் காற்றைத் தந்து கொண்டிருந்தது. விமானம் புறப்பட்ட பொழுது ஒரு பெரும் குலுக்கல் உந்தல் ஏற்பட்டது. பயணம் முடியும்வரை நம்மை அறியாத ஒரு விறு விறுப்பு உணர்ச்சியும்,உதறலும் நம் உடலின் நரம்பு மண்டலத்தில் ஏற்பட்டன. இடைவிடாத மின்சாரப் பாய்ச்சல் போன்று அது இருந்தது. எத்தனை இரவு பகல்கள் கடந்தன என்பது யாருக்கும் தெரியாது. வேளாவேளைக்குக் காகிதப் பைக்குள் சுற்றப்பட்ட குறைந்த எடையுள்ள ஒருவகை உணவு தரப்பட்டது. உடலுக்குத் தேவையான சத்துக்கள் யாவும் அடங்கிய அவ்வுணவை அப்படியே விழுங்கிக் கொண்டிருந்தோம். விமானம் தன் பாதையை மாற்றும் போது ஒருதனிக்குலுக்கல் உணர்வு தெரியும். இடையே ஒரு

நாள் விமானப் பணிப்பெண் இன்னொரு பொது அறிவிப்பினைத் தந்தாள். "அமெரிக்காவை விட்டுப் புறப்பட்டு நாற்பது நாட்கள் ஆகின்றன. இன்னும் அரைமணி நேரத்தில் செவ்வாய்த் துணைச் செயற்கைக் கிரகத்தில் இவ் விமானம் இறங்கும். அவண் ஒரு நாள் ஓய்வு எடுத்துக் கொண்டு மீண்டும் செவ்வாயை நோக்கிப் பிறிதொரு இராக்கெட் விமானத்தில் புறப்படுவோம்" என்றாள்.

செவ்வாய்த் துணைச் செயற்கைக் கிரகத்தில் மண்ணுலகத்தில் உள்ள அத்தனை வசதிகளும் இருந்தன எனினும் எல்லாம் சிக்கன மயம். மண்ணுலகத்திலிருந்தே எல்லாப் பொருட்களும் அங்கே வரவேண்டியிருப்பதால் விலைகள் இருபது மடங்காகவுள்ளன. தண்ணீர், சோடாபாட்டில் போன்ற காகிதப் பாட்டில்களில் விற்கப்படுகின்றது. அங்கே செவ்வாய்க் கிரகத்தைப்பற்றிய திரைப்படம் ஒன்று எங்கட்குக் காட்டப்பட்டது. குளித்தல், உடை மாற்றுதல் ஒன்றும் இல்லை. விண்வெளிப் பயணத்துக்காக அலுமினியம் கலந்த ஒருவகைச்செயற்கைப் பிளாஸ்டிக் நூல்ஆடையை நாங்கள் அணிந்திருந்தோம். விண்வெளி மண்டல அழுத்தங்கள் எங்களைப் பாதிக்காமல் இருப்பதற்காக எங்களுடைய அறையில் தனி வசதிகள் செய்யப்பட்டிருந்தன. பெரும்பான்மையும் பயண காலத்தில் அரைத் தூக்கமயம்தான். விமானத்தின் உட்புறத்தைத் தவிர வேறு பகுதியை நாங்கள் காண வாய்ப்பே இல்லை. இரண்டாவது விமானத்தில் புறப்பட்டு நவம்பர் இருபத்தொன்பதாம் நாள் மாலை 22-00 மணிக்கு நாங்கள் செவ்வாய்க் கிரகத்தில் வந்து சேர்ந்தோம்.

விமான தளத்தில் இருந்த பெரிய கடிகாரம் மணி இருபத்திரண்டு என்று காட்டியது. செவ்வாய்க் கிரகத்தில் நாட்பொழுது இருபத்துநான்கு மணி நேரம், 37 மணித்துளிகள் அளவு இருப்பதால் கடிகாரத்தில் இருபத்தைந்து எண்கள்

உள்ளன. மாலை நேரம் வெகுவாகச் சில்லென்று இருந்தது. விண்ணைப் பார்த்தால் தாழ்ந்து வரும் நீல முகில்கள், உயர்ந்து பறக்கும் வெள்ளை முகில்கள். தவழ்ந்து வரும் மஞ்சள் முகில்கள் முதலியன யாவும் அழகிய வண்ணக் குழம்புகளைக் கரைத்து வார்த்தது போன்று தோன்றின. வானத்து முகில்கள் அழகாக இருந்தனவேயன்றி வெளியே கட்டிடங்களையோ மின்சாரக் கம்பங்களையோ காணேம். ஒரே தூசிப் படலம், ஊரின் மேற்பரப்பு முழுவதும் பரவி மங்கலாகத் தோன்றுகிறது. எனக்கு உடம்பில் சிறிது அரிப்பு கூடத் தோன்றிவிட்டது. சற்று நேரத்துக்கெல்லாம் என் மகன் வந்து என்னைத் தன் காரில் அழைத்துச் சென்ருன். விண்வெளி உடைகளைக் கழற்றியவுடன் ஏதோ அடிமைத் தளையிலிருந்து விடுபட்டது போன்றிருந்தது. இருந்தாலும் அங்கிருந்த தூசிப்படலம்சற்றுத் திக்குமுக்காடச் செய்தது. எங்குப் பார்த்தாலும் மலைகளையோ, உயர்ந்த மரங்களையோ அங்குப் பார்க்க முடியவில்லை. உயரம் குறைந்த ஒருவகைப் பாலைவனச்செடிகள், மணற் குன்றுகள் முதலியன வற்றைத் தவிர வேருென்றையும் காணவில்லை.

வீடுநெருங்கிவிட்டது, இறங்குங்கள் அப்பா என்றவுடன் இறங்கினேன். வீடு நம் ஊரில் போன்று தரைக்குமேல் இல்லாது சுரங்கம் போன்று நிலத்தின் அடியில் கட்டப்பட்டிருந்தது. வந்ததும் வராததுமாகக் 'குளிக்க வேண்டும் எங்கே குளிக்கும் அறை?' என்றேன். அதற்கு மகன் "இங்கேயெல்லாம்காவிரித்தண்ணீர் இல்லை முகந்து குளிக்க, எல்லாம் பஞ்சுக் குளியல் தான்" என்ருன். ஒரு பாட்டில் தண்ணீரை எடுத்து அதில் பஞ்சுக் காகிதத்தை நனைத்து உடம்பில் தேய்த்துக் கொண்டேன். எனக்கு இரண்டு மூன்று நாட்களில் சொறிபோன்று உடம்பெல்லாம் உப்புப் பூக்கத் தொடங்கிவிட்டது. அங்குச் செல்லும் கார்கட்குச் சக்கரம் இல்லை. காற்றின் அழுத்தத்தினுல் சக்கரம் இல்லாமலே தரையில்

கால்மீட்டர் மேலே உயர்ந்துபறப்பதுபோல் அவைசெல்கின் றன. சற்றுத் தண்ணீர்ப் பூஞ்சம். நம்முடைய உலகில் நிலம் கால், நீர் முக்கால் என்போம். செவ்வாய்க் கிரகத்தில் நேர் மாற்றம். நம் உலகின் அளவில் பாதிப் பெரிதாகவுள்ள இந் நிலத்தில் மொத்தம் நாற்பது சிற்ருறுகள்தாம் இருக்கின்ற னவாம். ஏன் இந்த உலகத்துக்கு வந்தோம் என்ருகிவிட் டது. காலையிலும் மாலையிலும் இரவிலும் சில்லென்று (30°) இருக்கின்றதே என்று பார்த்தால் நண்பகல் நேரத்தில் நம் ஊரில்ஐப்பசிகார்த்திகைத் திங்கள்களில் இருக்கும் வெயிலில் அரைப்பங்கு கூட இல்லை. அடுப்பெரிக்க ஒருவகை நிலக் கரிக் கட்டிதான்.

உணவு சமைப்பதற்காக உருளைக் கிழங்கு, கோதுமை, அரிசி முதலியன வந்தன. ரெடி காபி, மாவுப்பால், டின்னில் அடைத்த காய்கறிகள் எல்லாம் வந்தன. எல்லாவற்றிலும் ஒரு கிலோ என்று போட்டிருந்தது. அங்குச் செவ்வாய்க் கிரகத்தில் பொருள்களின் எடை நம் ஊரில் இருப்பதில் 38% தான் இருக்கும் என்கிருர்கள். உணவுப் பண்டங்கள் வேகு வதற்குமட்டும் இங்குப் போன்று மூன்று மடங்கு நேரம் பிடிக்கிறது.அறுபத்தெட்டு கிலோகிராம்எடைஇருந்த நான் செவ்வாய்க் கோளில் இருபத்தாறு கிலோகிராம் எடையாகி விட்டேன்.நிலத்திலுள்ளமண் நல்ல சிவப்பு நிறமாகத்தோன் றுகிறது. வீடுகள் அலுவலகங்கள் எல்லாம் நிலவறைகளில் தாம் அமைக்கப்பட்டுள்ளன. வீட்டின் கதவுகள் எல்லாம் நிலத்திற்கு மேல் படுக்கை வாட்டில் அமைக்கப்பட்டிருக் கின்றன. ஜன்னல்கள் பெரிஸ்கோப் முறையில் ஒளி தருவ தற்காகவும் காற்று தருவதற்காகவும் வெவ்வேறு வகையாக அமைக்கப்பட்டுள்ளன. விளக்குச் செலவைச் சிக்கனப் படுத்துவதற்காக இரவு நேரம் வந்தால் எல்லோரும் வீடு கட்குச் சென்று விடுகின்றனர். ஒரு வகையான ரேடியம் போன்ற பளபளக்கும் கற்கள் விளக்குகள் போன்றும் பயன்

படுத்தப்படுகின்றன. நம் போன்றின்றி எல்லோரும் பகலில் ஆறுமுறை உணவு கொள்கிறார்கள். ஒவ்வொரு வீட்டிலும் உயிர்வாயுக் குழாய்கள் (Oxygen) வைத்திருக்கிறார்கள். சிலர் பைகளில் கூடச் சிறு சிறு காற்றுப் புட்டிகள் வைத்து மூக்கில் முகர்கின்றனர். செவ்வாய்க்கிரகத்தில் சில போழ்து பிராண வாயுப் பஞ்சம். எல்லாவற்றிலும் எனக்கு அங்கே பிடித்தது அங்கு உலவும் மென்மையான காற்றுகும். எவ்வளவு தூசிப்படலம் இருந்தாலும் காற்று மட்டும் வேகம் இன்றி மென்மையாக வீசுகிறது. அங்கே பகலில் கூட ஒரு நாளைக்கு நான்கு முறை (பதினொரு மணிக்கு ஒருமுறை), நிலவு தோன்றுகிறது. அதனைச் செவ்வாயின் துணைக் கிரகமான போபாஸ் என்கிறார்கள். ஆனால் அந்நிலவு தோன்றி நான்கரை மணி நேரத்தில் மறைந்து விடுகிறது. இங்கு வீசுகிற காற்று காசநோயைக் குணப்படுத்தும்என்கிறார்கள் சிலர்; சிலர் மிகுதிப்படுத்தும் என்கிறார்கள். இதைப்பற்றிய ஆராய்ச்சி அங்கே நடக்கிறது.

சிறிது அங்கு வாழும் மனிதர்களைப்பற்றி அறிய வேண்டுமல்லவா? அங்குச்சாதி,சமயம், ஏற்றத் தாழ்வு ஏதும் இல்லை. எல்லோருக்கும் கார், எல்லோருக்கும் வீடு, எல்லோருக்கும் போதிய ஊதியம். எனவே பொறுமைக்கு இடமில்லை.

செவ்வாய்க் கிரகத்தின் ஆதிவாசிகளை நான் பார்க்கமுடியவில்லை. அவர்கள் இரண்டரை மீட்டர் உயரம் இருப்பார்களாம். சீனர்களின் வேதாளம் போன்ற விலங்குகள் அங்கு உள்ளனவாம். செவ்வாய்க் கிரகம் நெடுங் காலத்துக்கு முன்னர் மிகுந்த நாகரிகம் படைத்த உலகாக இருந்ததாம். அங்கிருந்த மக்கள் நிலவுலகுக்கு இராக்கெட்டுகளை அனுப்பிச் சோதனை செய்தார்களாம். நம் உலகில் கண்டெடுக்கப்பட்ட பெரிய எலும்புக்கூடுகள் எல்லாம் செவ்வாய்க் கிரகத்து மனிதர்களின் எலும்புக் கூடுகளாகத்தாம் இருக்கும் என்று

கருத இடமிருக்கிறது. ஆனால் வரவர செவ்வாய்க் கிரக நாகரிகம் மறைந்து இன்று மண்ணுலக மக்களாகிய நாம் செவ்வாய்க் கிரகத்தில் குடியேறுகிறோம்.

செவ்வாய்க் கிரக ஆதிவாசிகள் இருக்கும் இடத்திற்கு எந்த ஒரு அன்னியனும் செல்ல முடியாது. அவர்களுடைய பேச்சு மெல்லிய குரலில் இருக்கும். மூளை அதிகம். அவர்கள் அணுச்சக்தியைவிடச் சிறந்தகாந்தசக்தி ஒன்றை நிலத்தில் செலுத்திப் பல வேலைகளைச் செய்கின்றனர். நம்மவர் அதைக் கண்டு பிடிக்க எவ்வளவு முயன்றும் முடியவில்லை. செவ்வாய்க் கிரக ஆதிவாசிகட்கு மிகுதியாகக் கோபம் வருவதில்லை அவர்கள் உணவு. உடை எதற்கும் கடினமாக உழைக்காமலே காந்த சக்தியின் உதவியால் பெறுகிறார்கள். அவர்கள் கையாளும் எந்திரங்கள் எல்லாம் மிகவும் நுண்ணியனவாக அணுக்களின் பெயர்ச்சி, சுழற்சி முறைகளைக் கொண்டே இயங்குவனவாக இருக்கும் என்கின்றனர். எல்லாம் மர்மமாகவே இருக்கிறது.

என்னவோ இங்கிருந்து செவ்வாய்க் கிரகத்துக்குச் சென்று வாழ்கிறவர்கட்கு மிகுதியாகப் பணம் கிடைக்கிறது. எனக்கென்னவோ காவிரியையும் மலைக் கோட்டைப் பிள்ளையாரையும் மறக்க மனமில்லை. ஐந்தாண்டுகள் கழித்து விரைவில் நான் திருச்சிக்குப் போகிறேன் என்று சொன்னேன். மகன் சொன்னான், "செவ்வாய்க் கிரகத்திலிருந்து இந்தியா செல்ல ஒரு தடவைக்கு ஒரு மில்லியன் டாலர் ஆகிறது. என்னுடைய ஓராண்டு ஊதியமே அதுதானே. மற்றும் மீண்டும் நம் உலகத்துக்கு இராக்கெட் விமான சர்வீஸ் ஓர் ஆண்டு ஆகும்" என்றான். நான் 365 நாட்களை எண்ணிக் கொண்டு புறப்படலாமா என்றேன். இங்கெல்லாம் ஓர் ஆண்டு என்றால் அறுநூற்று எழுபத்து மூன்று நாட்கள் என்றான். மூச்சுப் பிடித்துக் கொண்டு இருந்து மீண்டும் என் பயணத்தைத் தொடங்கினேன்.

இராக்கெட் வேகமாகப் பறந்து கொண்டிருந்தது. மலைக் கோட்டைப் பிள்ளையாரை நினைத்துக் கொண்டேன். தூக்கம் வந்துவிட்டது. அரைத் தூக்கத்தில் இராக்கெட் வெடித்துப் பாதி வெளியில் தூள் தூளாக ஆகும் பேரொலி கேட்டது. கதறித் துடித்துப் "பிள்ளையாரப்பா" என்று அலறினேன். எல்லோரும் என்ன என்ன என்று கேட்டுச் சுற்றிக் கொண்டனர். கண்ணைத் துடைத்துக் கொண்டு பார்த்தால் என் வீடு என் குழந்தை, என் மனைவி, என் பேனா, என் காகிதம், மற்றும் எல்லோரையும் என் படுக்கைக்கருகிலேயே கண்டேன்.

வாக்கியத்தில் அமைத் தெழுதுக:

பயிற்சிக் கூடம், வேளா வேளைக்கு, வண்ணக்குழம்புகள், அடிமைத்தளை.

வினாக்கள்:

1. தாயின் கவலை யாது?

2. 2125, ஜூலை 20-ல் டில்லியிலிருந்து செய்த விளம்பரம் யாது?

3. விமானப் பணிப் பெண் ஒலி பெருக்கியில் பேசியது யாது?

4. செவ்வாய்ப் பயணத்தின் முதற்பகுதி அனுபவங்களைக் கூறுக.

5. செவ்வாய்ப் பயணம் செய்து கொண்டிருந்த போது விமானப் பணிப் பெண் வெளியிட்ட பொது அறிவிப்பு யாது?

6. செவ்வாய்த் துணைச் செயற்கைக் கிரகத்தின் இயல்பைக் கூறுக.

7. செயற்கைக் கிரகத்திலிருந்து தொடங்கிய பயண அனுபவத்தைக் கூறுக.

8. செவ்வாய்க் கிரகத்தின் தோற்றத்தைக் கூறுக.

9. செவ்வாயில் குளிப்பது எப்படி ?

10. செவ்வாய்க் கிரகத்துக்கும் பூமிக்கும் உள்ள வேறுபாடுகள் சிலவற்றைக் கூறுக.

11. செவ்வாயில் அளவு முறையும் கால முறையும் எவ்வாறு வேறுபட்டுள்ளன ?

12. செவ்வாயில் வீடுகளின் அமைப்பைக் கூறுக.

13. செவ்வாயில் நிலவு தோன்றி மறையும் தன்மையைக் கூறுக.

14. செவ்வாயில் வாழும் மனிதர்களைப் பற்றி அறிவது யாது ?

15. செவ்வாய்க் கிரகத்தின் நாகரிக நிலை யாது ?

16. செவ்வாய்க் கிரகத்தில் வாழும் ஆதிவாசியைப் பற்றி நீ அறிவது யாது ?

17. செவ்வாயிலிருந்து இந்தியா செல்ல விரும்பிய தந்தைக்கு மகன் கூறியது யாது ?

கட்டுரை :

கல்விச் சுற்றுலா, நீ சென்று வந்த இன்பச் செலவு, என்ற தலைப்புகளில் கட்டுரை வரைக.

19. ஓவியர் இரவிவர்மா

[புலவர் த. மா. திருநாவுக்கரசு]

மக்கள் வாழ்க்கையை மலரச் செய்யும் கலைகளுள், கற்றவர், மற்றவர் என்னும் வேறுபாடின்றி அனைவர் உள்ளத்தையும் ஈர்க்கும் ஆற்றல் பெற்றது ஓவியக்கலை. இத்தகு கலையில் பெருவன்மை பெற்று உலகப் புகழெய்திய இரவிவர்மா புற்றீசலெனத் தோன்றிப் பயனின்றிமாயும் மன்பதையுள் செயற்கரிய செய்த செம்மலாவார்.

இவர் புலமை மிக்க உமா அம்பாபாய் என்னும் அம்மையாருக்குக் கி.பி.1848ஆம் ஆண்டு, ஏப்ரல் திங்கள் 29 ஆம் நாள் மகவாகப் பிறந்தார். விளையும் பயிர் முளையிலே தெரியும் என்பதற்கேற்பப் பள்ளி சென்று பயிலத்தொடங்கிய காலத்திலேயே உள்ளத்தில் அரும்பிய ஓவியக்கலை ஆர்வத்தை வெளிப்படுத்தினார். ஆசிரியரின் கட்டளைக்காகப் பரப்பப்பட்ட மணலில் எழுத்துக்களை எழுதினாலும், தம்முடைய பிஞ்சு நெஞ்சில் தோன்றிய ஆர்வத்திற்கு உருக்கொடுக்கும் வகையில் ஓவியங்களையும் தீட்டி மகிழ்ந்தார். இவரது கலை ஆர்வத்தைக் கண்ட ஆசிரியர்களும், உறவினர்களும் வியந்து பாராட்டினர். இவருடைய சிறிய தந்தையாராகிய இராஜவர்மா அவர்களும் சிறந்த ஓவியராக இருந்தமையால் இவர் தம்முடைய ஓவியப் புலமையை முறையாக வளர்த்துக் கொள்ள வழி ஏற்பட்டது.

இரவிவர்மா மாணவப் பருவத்திலேயே வீட்டின் தரையினிலும், சுவர்களிலும் தாம் கண்ட காட்சிகளையெல்லாம் ஓவியமாகத் தீட்டிவிடுவார். கரித்துண்டுகளும், வெண் சுண்ணம்புக்கட்டிகளுமே அவர்தம் கலை வளர்ச்சிக்குத் துணைக் கருவிகளாகப் பயன் பட்டன. கற்பனை வளமும் இளமையிலேயே அவரிடம் குடிபுகுந்தது. எனவே காணாத காட்சிகளை

யும் கற்பனைக் கண்கொண்டு கண்டுணர்ந்து 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்னும் பொது நோக்கோடு ஓவியங்களாகப் படைத்திடுவார். பலரும் கண்டு மகிழ்ந்திடுவர். ஓவிய வல்லுநர் ஆவதற்கு வேண்டிய கலையார்வம், கற்பனைத்திறன், நினைவாற்றல், பொறையுடைமை இவையனைத்தும் இரவிவர்மாவிடம் நெருங்கி உறவாடின. இவற்றோடு சிறிய தந்தையான ஓவியர் இராஜவர்மாவின் உற்ற துணையும் இவருக்குக் கிடைத்தது. எனவே, ஓவியப் புலமை இரவிவர்மாவிடம் நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து நிறைந்தது. இதன் பயனாகத் தமது 13 ஆம் அகவையிலே பலருடைய பாராட்டுதலையும் பெற்று ஓவியக் கலைஞராகத் திகழ்ந்தார்.

ஒருமுறை இரவி தம்முடைய சிறிய தந்தையாருடன் திருவனந்தபுரம் மன்னரைக் காணச் சென்றிருந்தார். அப்பொழுது தம்முடைய திறமையை மன்னர்க்குக் காட்டுதற்காக இரண்டு ஓவியங்களை வரைந்தார். ஒன்று தன் மகிழ்ச்சியை வெளிப்படுத்தப் புன்முறுவல் கொண்ட குழந்தையின் தோற்றம். மற்றொன்று தன் மனத்துயரை வெளிப்படுத்த அழுது புலம்பும் குழந்தையின் தோற்றம். இவை இரண்டிற்கும் விளக்கம் தரும் வகையில் முறையே கதிரவனின் தோற்றத்தையும் மறைவையும் அவற்றின் பக்கத்தில் சித்தரித்திருந்தது. மிகவும் பொருத்தமாகவும் கவர்ச்சியாகவும் இருந்தது. இவ்வோவியங்களைக் கண்ட மன்னர் இரவியைப் பெரிதும் பாராட்டினர்.

நாட்கள் செல்லச் செல்ல ஓவியக் கலைஞர் இரவியினுடைய புகழ் மேலை நாடுகளிலும் பரவலாயிற்று. வண்ண ஓவியங்கள் தீட்டுவதில் பெரும்புகழ் பெற்ற 'தியோடர் ஜான்சன் என்னும் ஆங்கிலக் கலைஞர் இரவியைச் சந்தித்தார். இருவரின் கூட்டு முயற்சியாலும் ஓவியக்கலை மேலும் வளர்ச்சியுற்

றது. இரவிவர்மாவின் ஓவியங்கள் ஐரோப்பா, ஆஸ்திரேலியா, முதலான கண்டங்கட்கும் சென்று பெரும் புகழை ஈட்டின. கி. பி. 1875 ஆம் ஆண்டு இந்தியப் பேரரசின் மன்னராக விளங்கிய எட்டாம் எட்வர்டு அவர்கள் கலைஞர் இரவி வர்மா அவர்களைக் கண்டு பேசி அவர்தம் ஓவியங்கள் சிலவற்றையும் பெற்றுச் சென்றார். ஒருமுறை அமெரிக்காவிலுள்ள சிகாகோ நகரில் அமைக்கப் பெற்ற உலக ஓவியக் கண்காட்சியில் இவரது ஓவியப் படைப்புகளும் இடம் பெற்றுப் பல பரிசுகளைப் பெற்றுத் தந்தன. இதனால் இரவிவர்மா உலகக் கலைஞராகப் புகழ் பெற்றார்.

சென்னையிலிருந்த கண்காட்சியில், இரவிவர்மா வரைந்த அவரது குடும்பத்தாரின் ஓவியமும், இதிகாச ஓவியங்களும் அவருக்குத் தங்கப் பதக்கத்தைப் பெற்றுத் தந்தன. அவரது படைப்புகளுள் சிறப்புடையதாகிய மலையாள மங்கையின் ஓவியம், பரோடா மன்னரின் கருத்தைக் கவர்ந்தது. அம் மன்னர் அதனைப் பெற்றுக் கொண்டு ஈடாகத் தங்கப் பதக்கம் ஒன்றினைப் பரிசளித்தார். மேலும் கலைஞரைத் தம் விருந்தினராகவும் ஏற்று உபசரித்தார். இவ்வாறே பல மன்னர்களாலும் போற்றப்பட்டார்.

ஓவியத்துறையில் இவ்வாறு பெருந்திறன் பெற்றிலங்கிய இரவிவர்மாவை, மைசூர் மன்னர் சாமராச உடையார் வரவேற்றுத்தம் அரண்மனையில் இருக்கச் செய்து தம்முடைய திருவுருவை ஓவியமாக்கச் செய்தார். அவ்வழகிய ஓவியம் மைசூரிலும், கல்கத்தாவிலும் இன்னும் காட்சியளித்துக் கொண்டிருக்கின்றது. மேலும் 1888-ல் பரோடா மன்னரின் உருவத்தையும் ஓவியமாக்கிப் புகழ் பெற்றார். மன்னரின் விருப்பத்திற்கிணங்க, இராமாயண, பாரத காவியங்களையும ஓவியங்களாகத் தீட்டினர். அவை சிறுவர்கட்கு நாடகங்களாகக் காட்டபட்டன.

இரவிவர்மா ஓவியத் துறையில் தாம் பெற்றிருந்த பெரு வன்மையால், கலையுலகில் மறுமலர்ச்சியை உருவாக்கினர். தம் வாழ்நாளில் இந்திய நாட்டு மன்னர் அனைவரின் பாராட்டுதலையும் பெற்றார். அவர் கைவண்ணத்தால் உருப்பெற்ற இராமாயணம், பாரதம், சாகுந்தலம் முதலான காவியங்களை விளக்கும் ஓவியங்களும், மலையாள மங்கையின் காட்சிகளும், தமிழகத் தையலாரின் திருவுருவங்களும் கலையுலகக் கருவூலங்களாகத் திகழ்கின்றன.

அஜந்தா ஓவியங்களிலும், சோழர்கால ஓவியங்களிலும், இளமையில் தம் கருத்தைப் பறிகொடுத்த இரவிவர்மா ஓவியங்களில் பெரும்பாலிலும் சோழர் காலத்து ஓவியங்களின் சாயலே வெளிப்பட்டன. இரவிவர்மா ஓவியத் துறையில் உலகக் கலைஞராகப்புகழ்பெற்றமையால் பொதுவாக இந்திய நாட்டின் ஓவியக் கலை மாண்பும் நுணுக்கமும் உலக நாடுகளிடையே பரவின.

இவ்வாறு பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஓவிய உலகின் கலைக்கதிரவனாகத் திகழ்ந்து புகழொளி பரப்பிய இரவிவர்மா தம்முடைய ஐம்பத்தொன்பதாம் அகவையில் 1906 ஆம் ஆண்டு, அக்டோபர்த் திங்களில் உடலை மண்ணுக்கீந்து உயிர்கொண்டு விண்ணகம் சென்றார். காண்பவர் கண்ணிற்கும் கருத்திற்கும் விருந்து நல்கும் அவர்தம் ஓவியங்கள், உலகம் உள்ளளவும் அவர்தம் பெருமையைப் பறைசாற்றிக் கொண்டிருக்கும் என்பதில் ஐயமில்லை.

வாழ்க இரவிவர்மாவின் புகழ்! வளர்க ஓவியக்கலை!

அருஞ்சொற் பொருள்:

ஈர்க்கும்-இழுக்கும். மன்பதை-மக்கள் கூட்டம். உரு-வடிவம்.

வினாக்கள்:

1. ஓவியக் கலையின் சிறப்பு யாது?

2. இரவிவர்மருக்கு இளமை முதற் கொண்டே ஓவியக் கலையில் இருந்த ஆர்வத்தைப் புலப்படுத்துக.

3. ஓவிய வல்லுநராவதற்கு வேண்டிய குண நலன்கள் யாவை?

4 திருவனந்தபுர மன்னரை மகிழ்வித்த இரவிவர்மரின் படம் யாது?

5. இரவிவர்மர் உலகக் கலைஞராகப் புகழ் பெற்ற நிலையைக் கூறுக.

6. இரவிவர்மருக்குப் பரிசையும் பாராட்டுதலையும் பெற்றுத் தந்த ஓவியங்கள் யாவை?

7. கலையுலகக் கருவூலங்களாகத் திகழும் இரவிவர்மாவின் படங்கள் யாவை?

வாக்கியத்தில் அமைத்து எழுதுக:

புற்றீசலென, பிஞ்சு நெஞ்சில், யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம், விளையும் பயிர் முளையிலே தெரியும், நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமும், மறு மலர்ச்சி.

கட்டுரை:

நான் கண்டு இன்புற்ற ஓவியம் என்ற தலைப்பில் ஒரு கட்டுரை வரைக.

20. சுவிட்சர்லந்து

[திரு. சோம. இலக்குமணஞ் செட்டியார், பி. ஏ.]

சுவிட்சர்லந்து பூலோக சுவர்க்கம் போன்றது. அந்த நாட்டில் அழகு நடமாடுகிறது; நீர் மட்டுமன்று, இலக்கியமும் விஞ்ஞானமுங்கூட அங்கே வெள்ளமாகப் பெருகியிருக்கின்றன.

எழில் மிக்க காடுகள், மலைப் பகுதிகள், கடல் மட்டத்துக்கு 183 மீட்டர் மேலிருந்து 4999 மீட்டர் வரையுள்ள இயற்கை அமைப்புகள், ஆல்ப்ஸ் மலையின் அடிவாரத்தில் சிதறியோடும் "வான் பொய்ப்பினும் தான் பொய்யாத" ரயின் ஆறு. பல அருவிகள், இணையற்ற பெரிய ஏரிகள், இரண்டரை லட்சம் நீர் ஊற்றுக்கள், நோயைப் போக்கும் ஊருணிகள், பசுமையான வயல்கள், உள்ளக்கிளர்ச்சியைத் தரும்காட்சிகள், 4144 சதுரக் கி.மீ. பரப்புள்ள கடற்கரையில்லாத பகுதியில் "இராமன் ஆண்டால் என்ன, இராவணன் ஆண்டால் என்ன" என்ற மனப்பான்மையுடைய சுறுசுறுப்பான சுத்தமான 44 லட்சம் மக்கள் கூட்டம், இவற்றை ஐரோப்பாவின் நடுவில், ஜெர்மனி, ஆஸ்திரியா, இத்தாலி, பிரான்ஸ் ஆகிய நாடுகளுக்கிடையே இயற்கையான எல்லைகளுடன் அமைத்துக்கொள்ளுங்கள்; அதுதான் சுவிட்சர்லந்து.

ஐரோப்பாவின் இராமேசுவரம்:

நோயுற்றவர்கள் உடல்நலம் பெறவும், மற்றவர்கள் பொழுதுபோக்கவும் பிறநாடுகளிலிருந்து சுவிட்சர்லந்துக்கு வந்த வண்ணமாக இருக்கின்றனர். இவ்வாறு இந்நாட்டில் மூன்று லட்சத்துக்கு மேற்பட்டவர்கள் எப்போதும் காணப்படுகிறார்கள். இவர்களுக்குத் தொண்டு செய்து வாழ்க்கை

நடத்தும் சுவிஸ்காரர் மிகப் பலர். இது இராமேசுவரம் வாசிகள் அங்குவரும் பக்தர்களை எதிர்பார்த்து வாழ்வதை ஒக்கும். வெளி நாட்டாரை நம்பியே, 7,000 ஹோட்டல்களும், 20,000 சிற்றுண்டிச் சாலைகளும் இச்சிறு நாட்டில் உள்ளன.

பணிவிடை செய்பவர்களுக்கு அன்பளிப்பு கொடுக்கும் வழக்கம் பல நாடுகளில் உண்டு. ஆனால் சுவிட்சர்லந்தில் இந்தத் தொகை 15சதம் வரை ஆகும். அதாவது ஒருகாரை வாடகைக்கு எடுத்து அதற்குக் கட்டணம் ரூ.5 செலுத்தினால் கார் இயக்குபவருக்கு அன்பளிப்பு ரூ. 0—75-ம் உடன் கொடுக்கவேண்டும். ஜினீவா நகரில் ஒரு கடையில் சில பொருள்களைப் பொறுக்கி வைத்து விட்டு அவைகளுக்குஎன் கணக்கில் பணம் கொடுக்கும்படி நான் தங்கியிருந்த ஹோட்டல் அதிகாரியிடம் சொன்னேன். மறு நாள், அந்தப் பொருள்களின் விலையோடு 15 சதம் சேர்த்துப் பட்டியல் வந்தது. பெரு முயற்சியின் மேல் பேரம் செய்து வெற்றி பெற்றேன். இவை போன்ற சில இடையூறுகள் இருப்பினும், பிற நாட்டினரைக் காந்தம் போல் சுவிட்சர்லந்துக்கு இழுப்பது அங்கே நிலவும் சுகாதாரச் சிறப்பேயாகும்.

சுகாதாரம்:

சுவிஸ் மக்கள் மிகத் தூய்மையானவர்கள்; அகத் தூய்மைமட்டுமன்று, புறத்தூய்மையும் அவர்களிடம் மிகுதியாகக் காணலாம். உடலையும் உணவையும் சுற்றுப் புறங்களையும் சிறப்பாக வைத்திருப்பது அவர்களுக்கு உடன் பிறந்த குணம். 3512 மீட்டர் உயரத்தில், உலகிலேயே உயர்ந்த மலை ரயில் உள்ள ஜீவங்பிராவோச், மற்றும் கஸ்டாட், மாண்ட்ரீவக்ஸ், இண்டர்லேகன் போன்ற பல நல் வாழ்விடங்களை இந்நாட்டினர் மிகவும் பேணி வருகின்றனர்.

சுவிஸ் மக்களுக்கு முதிர்ந்த வயதில் செலவுக்குப் பொருள் கிடைக்கவும், நோயைக் குணப்படுத்திக் கொள்ளவும் அந்த அரசியலார் திட்டங்கள் வகுத்துள்ளனர்.

உலகில் சிறந்த வைத்தியரில் பலர் சுவிஸ்காரர்கள். சுவிஸ்காரருள் எழுவரில் ஒருவர் இத்தொழிலில் ஈடுபட்டுள் ளனர். சுவிஸ் பல்கலைக் கழகங்கள் அனைத்துக்கும் பொது வாக ஒரு துப்புரவு நிலையம் உண்டு. மிகச் சிக்கனமான செலவில், மாணவர்கள் உடல் நலம் பெறுவதற்கான வாய்ப் புக்கள் இங்கே உண்டு. சிறுவர் சிறுமியரின் சுகாதாரத்தைப் பேணுவதற்காகக் குர்சால் என்னும் பொழுதுபோக்கு இடங் களை, இயற்கையழகு நிறைந்த இடங்களில், நகராண்மைக் கழகங்கள் நிருவகிக்கின்றன. கோடை மாதங்களில், கால் நடைகளையும் மலைப் பகுதிகளுக்கு அழைத்துச் செல்லுவது நான் சுவிட்சர்லந்தில் கண்டு வியந்தவற்றுள் ஒன்று. எனவே, சுவிஸ் மக்கள் சுகாதார மேம்பாடு அடைந்திருப் பது இயற்கையே; விளையாட்டுக்கு அவர்கள் கொடுக்கும் சிறப்பும் இத்தன்மையானதே.

விளையாட்டுகள்:

சுவிஸ் நாடு முழுவதுமே ஒரு பெரிய விளையாட்டு மைதானமாக இருக்கிறது என்று கூறுவது பொருந்தும். பிரிட்டன், ஹாலந்து போன்ற சில நாட்டினர் உறைந்த பனிக்கட்டியின் மீது ஓடும் போட்டிப் பந்தயங்களை சுவிஸ் நாட்டில்தான் நடத்துகின்றனர். இதனால் இந்த நாட்டுக்கு "ஐரோப்பாவின் விளையாட்டு மைதானம்" எனப் பெயர் ஏற்பட்டுள்ளது. உறைந்த பனிக்கட்டியின்மீது ஹாக்கி விளை யாடுவது, மலை மீது ஏறிச்செல்வது, மீன் பிடிப்பது, படகோட்டுவது, நீந்துவது, கோல்ப் விளையாடுவது ஆகிய வற்றிலும் இந்நாட்டினருக்கு விருப்பம் மிகுதியாக உண்டு. ஆனால், இவர்களுடைய தேசீய விளையாட்டு என்று சொல்

லக்கூடியது துப்பாக்கியால் குறிபார்த்துச் சுடுவதாகும். இப்பயிற்சியில் இவர்களை மிக்காரில்லை என்பதோடு ஒப்பாரும் இல்லை எனலாம். வில்லியம் டெல் என்ற சுவிஸ்காரர் தம் மகன் தலைமீது இருந்த ஒரு பழத்தைப் பையனுக்குச் சிறிதும் காயமின்றி எய்த நிகழ்ச்சி பள்ளி மாணவர் அறிந்ததே. நம் நாட்டில் இராமாயண மகாபாரதக் கதைகள் போல், சுவிஸ் நாட்டில் 'டெல்' லின் புகழ் தலைமுறை தலைமுறையாக வழங்கிவருகிறது. இந்நிகழ்ச்சி நடந்த இடத்தை வெளிநாட்டினருக்குக்காட்டுவதிலும் சுவிஸ்மக்கள் மகிழ்ச்சியடைகின்றனர். இவ்விளையாட்டுக்கான உலகப் போட்டிகளில், முப்பது ஆண்டுகளாக ஒலிம்பிக் தங்கப் பரிசுகளை இந் நாட்டினரே பெற்றுள்ளனர். 1928-ல் பரிசு பெற்றவர் ஷர்டாக் என்ற அமெரிக்கர்; அவருடைய பெற்றோர்கள் அமெரிக்காவுக்குச் சுவிஸ் நாட்டிலிருந்துதான் குடியேறிச் சென்றனராம்!

படை:

சுவிட்சர்லந்தின் குதிரைப் படையும், காலாட்படையும் புகழ் பெற்றவை; ஆனால் காலாட்படை என்று நிரந்தரமாக இல்லை. இதற்குக் காரணம் மக்கள் எல்லோருமே போர் வீரராக இருப்பதுதான். இருபதாம் வயதில் சுவிஸ் நாட்டினர் எல்லோரும் நான்கு மாத காலம் கட்டாயமாகப் படைப் பயிற்சி பெறவேண்டும். இதன் பிறகு அறுபது வயதுவரை ஆண்டுதோறும் மூன்று வாரங்களுக்குப் படையில் பணியாற்ற வேண்டும். இந்தத் திட்டத்தின்படி நாட்டுக்கு அபாயம் நேரிட்டால் 72 மணி நேரத்தில், 9 லட்சம் போர் வீரரைத் திரட்ட இயலுமாம். போர்க் கருவிகளும், உடையும் பயிற்சிக் காலத்தில் கொடுக்கப்படும். மரணம் வரை இவை அவரவரைச் சேர்ந்தவை.

வியத்தகு நிகழ்ச்சிகள் :

நிரந்தரப் படையின்றி யிருப்பதுபோல, வேறு பல விந்தைகளும் சுவிஸ் நாட்டில் உண்டு. இவற்றுள் ஒன்று, பெண் மக்களுக்கு இன்னும் வாக்குரிமை வழங்கப் படாமல் இருப்பதாகும் இதனால், அங்கே பெண்பாலருக்கு உரிமைகளோ, செல்வாக்கோ, சலுகைகளோ, சமூக வாழ்க்கையில் அவர்களுடைய நிலைகளோ குறைவானவை என்று கருதி விடக் கூடாது.

சுவிஸ் மக்களுள் பிரெஞ்சு, ஜெர்மன், இத்தாலிய இனங்களைச் சேர்ந்தோர் உண்டு. அந்த நாடுகள் ஒன்றோடொன்று போர் புரியினுங் கூடப் பிரெஞ்சு சுவிஸ்காரரும் ஜெர்மன் சுவிஸ்காரரும் இரண்டறக் கலந்து வாழ்வது வேறு நாட்டில் காண இயலாததோர் அரிய நிகழ்ச்சி. பல வேற்றுமைகளுக்கிடையே நிலவும் இந்த ஐக்கிய மனப்பான்மைதான் சுவிஸ் நாட்டின்—ஏன், எந்த நாட்டுக்கும்—மதிப்பிட முடியாத செல்வம்.

ஒரே கிறிஸ்தவ ஆலயத்தில் கத்தோலிக்கரும், சற்று நேரத்துக்குப் பின்னர்ப் பிராட்டஸ்டண்டுகளும் இறைவனை வழிபடுவது சுவிட்சர்லந்து தவிர வேறு எங்கும் நிகழாத ஒன்று.

சுவிஸ் என்று ஒரு மொழி கிடையாது. சுவிஸ் என்ற பெயரோடு தனித்த மொழி ஒன்று இருப்பதாக நம் நாட்டில் சிலர் நினைப்பது 'இந்தியன்' என்று ஒரு மொழி இருப்பதாகவும், அதையே எல்லா இந்தியரும் பேசுவதாயும், வெளிநாடுகளில் சிலர் தவறுகக் கருதுவதைப் போன்றதாகும். ஜெர்மன், பிரெஞ்சு, இத்தாலியன், ரொமான்ச் ஆகிய மொழிகளை முறையே சுவிஸ் மக்களில் 72, 20, 5, 1 சதவீதம் பேசுகின்றனர். இந்நான்குமே அரசியலார் மொழிகளாக

உள்ளன. சட்டசபையில் இந்த மொழிகளில், எதை வேண்டுமானாலும் உறுப்பினர் பேசுவதைக் கண்டு இன்புற்றேன்; நீதிமன்றங்களிலும் இக் காட்சிகளைக் காண இயலுமென்று அன்பர்கள் தெரிவித்தனர். ஜெர்மன் சுவிஸ் வழக்கறிஞர் ஜெர்மன் மொழியில் எழுதும் நிருபத்திற்குப் பிரெஞ்சுச் சுவிஸ் வழக்கறிஞர் பிரெஞ்சு மொழியில் பதில் அனுப்புவதும், இருவரும் தாமே பிறர் உதவியின்றி அச் செய்திகளை அறிந்து கொள்ளுவதும் சுவிட்சர்லந்தில் நாள் தோறும் நிகழும் வியத்தகு நிகழ்ச்சிகளில் ஒன்று.

சுவிட்சர்லந்து தொலைப்பேச்சுக் கம்பெனியார் அவ்வப்போது நேரத்தைத் தெரிவிப்பதற்காக, அறிவிப்பாளர் பேசுவதைப் போல, மணி, நிமிஷம், விநாடி இவற்றைத் தொடர்ந்து சொல்லிக்கொண்டிருப்பதற்கு ஒலிப்பதிவு செய்த சுருள்களை வைத்திருக்கின்றனர். எப்போது, யார், 'நேரம் என்ன?' என்று கேட்டாலும், அந்த இயந்திர மனிதர் உடனுக்குடன் நேரத்தைச் சொல்லுகிறார்!

மக்களின் பண்பாடும் குணங்களும் :

சுவிஸ் மக்கள் மிகவும் வேகமாக எந்தக் காரியத்தையும் செய்கின்றனர்; வாடகைக் கார்கள் கூட அந்த நாட்டில் மணிக்கு 100 கிலோ மீட்டர் வேகத்தில் செல்லுகின்றன. தந்தி, ரிஜிஸ்தர் செய்யப்பட்டகடிதம் ஆகியவற்றைஅனுப்ப நேரமாகிவிடும் என்பதற்காக, அவர்கள் இரசீது கொடுப்பதில்லை; தனிக்கட்டணம்கட்டி, இரசீது கேட்பவர்களுக்கு மட்டுமே அதைக் கொடுப்பது வழக்கம். ஆனால், இரசீது பெற்றுக் கொண்டாலும், பெற்றுக் கொள்ளா விட்டாலும் தந்தி, ரிஜிஸ்தர் செய்யப்பட்ட தபால்கள் உறுதியாக உரியவருக்குக் கிடைத்துவிடும். என்னே, அவர்களுடைய நாணயம்! சுணக்கமின்றித் தபால்களை அனுப்புவதற்கு

உதவியாக, எல்லா ஊர்களிலும் இரயில் நிலையத்துக்கு எதிரிலேயே தபால் நிலையத்தை அமைத்திருப்பதும் அந்த நாட்டின் மற்றொரு சிறப்பு.

தமிழ் மக்களைப்போலவே, சுவிஸ் மக்களும், ஒரு சிறு பகுதி நீங்கலாக, அனைவரும் கிராமங்களில் வாழ்கின்றனர். கற்பனை, நகைச்சுவையுணர்ச்சி, விருந்தினரை ஓம்புதல், இசை ஞானம், கலைப் பற்று முதலிய பண்பாடுகளை அவர்களிடமுங் கண்டேன். மேலும், பண்டைத் தமிழரைப் போலவே, இன்றைய சுவிஸ் மக்கள் சிற்பக் கலையில் பேரார்வம் உடையவர்களாயிருப்பது குறிப்பிடத்தக்கது.

வாழ்க்கை நிலை :

மக்களின் உழைப்பு, நாட்டின் வளம், போரில் ஈடுபடாத நிலை, சிறிய மக்கள்தொகை இவற்றின் விளைவாகச் சுவிஸ் நாட்டில் வாழ்க்கை நிலை சிறப்பாக விளங்குகிறது; இந்நாட்டு அரசியலார் 586 கோடி ரூபாய் பெறுமானமுள்ள தங்கத்தைச் சேமித்து, அதை அமெரிக்காவில் பத்திரப்படுத்தி வைத்துள்ளனர்; பிற நாடுகளில் இவ்வரசியலார் 600 கோடி ரூபாய்க்குச் சொத்துக்களையும் வாங்கியிருக்கின்றனராம்! இக்காரணங்களால், அமெரிக்க நாட்டு நாணயமாகிய டாலரைப் போலவே, சுவிஸ் நாட்டு நாணயமான பிராங்கும் வலுவான நாணயமாக இருந்து வருகிறது; ஒரு சுவிஸ் பிராங்கு என்பது, நான் சுவிட்சர்லந்தில் இருந்த போது, இந்திய ரூபாய் 0-81-க்குச் சமமாக இருந்தது; 1949, செப்டம்பரில் ஏற்பட்ட நாணய மதிப்புக் குறைவால், இப்போது ஒரு சுவிஸ் பிராங்கு இந்திய ரூபாய் 1-09-க்குச் சமமாகிவிட்டது.

போக்குவரவு வசதிகள் :

சுவிஸ் நாட்டில் இரயில்கள் அனைத்தும் மின்சாரத்தால் இயங்குகின்றன; உள்நாட்டுக்குள் செல்லும் இரயில்களுக்குத் தனிப்பான் ஹாப்பும், வெளிநாடுகளுக்குச் செல்லும் இரயில்களுக்குத் தனிப் பான் ஹாப்பும் அமைக்கப்பெற்றுள்ளன; டிக்கட் விற்கும் இடத்தில் இருபுறமும் தட்டுகள் உள்ள ஒரு கருவி பொருத்தப்பட்டிருக்கிறது; பிரயாணி ஒரு தட்டில் பணத்தை வைத்ததும், இரயில் ஊழியர் மற்றொரு தட்டில் டிக்கெட்டை வைப்பார்; ஒரு பொத்தானை அமுக்கியவுடன், பிரயாணியிருக்கும் பக்கத்தில் டிக்கட்டும் இரயில் ஊழியர் இருக்கும் பக்கத்தில் பணமும் கிடைக்கும்படி இக் கருவி அமைக்கப்பட்டுள்ளது. வெளிநாட்டார் சுவிட்சர்லந்தில் மிகுதியாகச் சுற்றுப்பயணம் செய்வதற்குவசதியாக, இரயில் நிருவாகிகளே ஏரி, மலைப் பயணங்களுக்கும் ஏற்பாடு செய்கின்றனர். *90* ரூபாய் கொடுத்து உல்லாசப் பயண டிக்கட்டு ஒன்றை வாங்கிவிட்டால், ஒருதிங்களுக்குச்சுவிஸ் இரயிலில் எங்கு வேண்டுமானாலும் இரண்டாம் வகுப்பில் செல்லலாம் என்ற ஏற்பாடும் அந்நாட்டில்உண்டு. டிக்கட்டு வாங்கியபின் பிளாட்பாரத்திற்குச் செல்ல வேண்டும் அல்லவா? குறிப்பிட்ட இரயில் எந்தப்பிளாட்பாரத்தில் வருகிறது என்பதை ஒரிவரிடமும் கேட்க வேண்டியதில்லை; இரயில்வேகால அட்டவணைப்புத்தகத்திலும், தினத்தாள்களிலும் ஒவ்வொரு இரயிலும் நிற்கும் பிளாட்பார எண் இன்னதென்று கொடுக்கப்பட்டுள்ளது. பிளாட்பாரத்திற்குச் செல்லும்போது டிக்கட்டைச் சரிபார்க்கும் நம் நாட்டுப் பழக்கம் சுவிஸ் நாட்டில் இல்லை; பிளாட்பாரத்திற்குச் செல்வதெனத் தனி டிக்கட்டும் அங்கே கிடையாது. இரயில் ஓடும்போது மட்டுமே இரயில் கண்டக்டர் டிக்கட்டைப் பிரயாணியிடமிருந்துவாங்கிப் பார்ப்பது வழக்கம்.

புனிகுலர், ஏர்கேபிள் என்ற இருவகைப் போக்குவரவுப் பொறிகள் சுவிஸ் நாட்டில் உண்டு. புனிகுலர்

என்பது மாடிப்படி போலப் படிப்படியாய் அமைக்கப்பட்டு மலைமீது செங்குத்தாய்ச் செல்லும் ஒருவகை இரயில், ஏர் கேபிள் என்பது மின்சார 'லிப்ட்' போன்றது; இது சிறிய மலையிலிருந்து பெரிய மலைக்கு மின்சாரக் கம்பி மூலம் செல்லப் பயன்படுவது. ஏர்கேபிள் வாயிலாகத்தான், கோடைக் காலத்தில் கால்நடைகளுக்கு உணவு அனுப்பப்படுகிறது; அவை தரும் பாலும் இதன் வாயிலாகவே கொண்டு வரப் படுகிறது.

சுவிஸ் நாட்டின் மிகுதியான உற்பத்திகள் கம்பளி, லினன், சில்க் துணிகள், வெண்ணெய், பால், அலுமினியம், இரசாயனப் பொருள்கள், ஊசிமருந்துகள், வைத்தியக் கருவிகள், படம் எடுக்கும் கருவிகள், தொலைப் பார்வைக் கருவிகள், இசைக் கருவிகள் ஆகியவை. ஓர் ஆண்டுக்கு நான்கு கோடி கடிகாரங்களும் இங்கே செய்யப்படுகின்றன. அச்சு வேலைகள் சுவிட்சர்லந்தில் மிக நன்ருகச் செய்யப்படுகின்றன. பல நாடுகள் தபால் ஸ்டாம்புகளை இந்நாட்டிலேயே அச்சிடுகின்றன. நம் நாட்டில் பயன்படுத்தப் பெற்ற மகாத்மா காந்தியடிகளின் படமுள்ள ஸ்டாம்புகள் சுவிட்சர்லந்திலேயே அச்சிடப்பட்டன. பஞ்சு ஆலைத் தொழிலுக்கு வேண்டிய இயந்திரங்களைச் செய்வதிலும் பலவிதமான வர்ணச் சாயங்களைச் செய்வதிலும் இந் நாட்டார் வல்லுநராயுள்ளனர்.

சுவிட்சர்லந்தில் பழ உற்பத்தியும் பால் உற்பத்தியும் மிகுதி; அமெரிக்காவில், வெள்ளி முழுவதையும் திரைப் படங்கள் தயாரிக்க ஹாலிவுட்டிலுள்ள குழுக்கள் வாங்கி விடுவது போலச் சுவிட்சர்லந்தில் பால் முழுவதையும் சாக்லேட் செய்வதற்காக நெசில்ஸ் கம்பெனியார் வாங்கி விடுகின்றனர்.

சுவிட்சர்லந்தின் முக்கிய இறக்குமதி பல லட்சம் யாத்ரீகர்கள் அந்நாட்டின் பெரிய ஏற்றுமதி ஓர் ஆண்டுக்கு 52 கோடி கிலோவாட் மின்சாரம்; பிரான்ஸ் இத்தாலி போன்ற நாடுகளுக்கு இங்கிருந்து மின்சாரம் செல்லுகிறதாம்.

நீரில் மூழ்கினுலும் சரி, கீழே விழுந்தாலும் சரி, கெடாத படி ஓடிக்கொண்டிருக்கும் கடிகாரங்களை இப்போது நடைமுறையில் காணுகின்ருேம். ஆகாய விமானத்தில் செல்லும் போது, அந்த விமானம் எவ்வளவு வேகத்தில் பறக்கிறது என்பதை நாம் கையில் அணிந்திருக்கும் கடிகாரத்திலிருந்தே அறிந்துகொள்ளவும் இப்போது இயலும். இத்தகைய கடிகாரங்களையும் சுவிஸ் நாட்டவர் செய்திருக்கின்றரெனின், அவர்களுடைய விஞ்ஞான முன்னேற்றத்துக்கு வேறு சான்று வேண்டுமோ!

பென்சிலின், ராடார் இவைகளைப்போன்று 'இரண்டாம் உலகப் போரில் புகழ்பெற்றது. டி.டி.ட்டி. (D. D. T.) என்னும் இரசாயனப் பொருள். இது மலேரியா நோயை ஒழிக்கப் பயன்படுகிறது, உருளைக்கிழங்குச் செடியை வண்டுகள் சேதம் செய்தபோது, அவற்றின்மீது சுவிஸ் காரர்கள் டி.டி.ட்டி. யைத் தெளித்து அப்பூச்சிகளை அழித்து இம்மருந்தின் சக்தியைக் கண்டறிந்தனராம்.

நகரங்கள்:

முக்கிய நகரங்கள் சிலவற்றில் சிறிது நேரம் தங்கி விட்டுச் சுவிஸ் பயணத்தை முடித்துக்கொள்ளுவோம்.

பெர்ன்:

700 ஆண்டுகளாகச் சுவிட்சர்லந்தின் தலை நகரமாகப் பெர்ன் இருந்து வந்திருக்கிறது; இது ஓர் அழகிய நகரம் "சுவிஸ் நகரங்களுள் மாண்க்கம்" என்ற புனை பெயர் இந் நகருக்கு வழங்கி வருகிறது; ஓர் ஆற்றின் கரையில் இந் நகர் அமைந்திருக்கிறது; சிற்பக்கலை நிறைந்த கட்டிடங்கள் பலவற்றை இங்கே கண்டுகளிக்கலாம்; தரை மட்டத்துக்குக் கீழ் ஐந்து மாடிகளுள் மோட்டார் வாகனங்களை நிறுத்துவதற்குரிய இடமும் இந்நகரில் கண்டு இன்புறத்தக்க காட்சிகளுள் ஒன்று.

பெர்னில் சுவிஸ் குடியரசு, தலைவரின் மாளிகையும், பாராளுமன்றக் கட்டிடமும் உள்ளன. இங்கே 1949-ல் நம்

முடையமுதலமைச்சர் ஜவகர்லால் நேரு சுவிஸ் குடியரசுத் தலைவருடன் தங்கி, பாராளுமன்றத்திலும் அறியதோர் உரை நிகழ்த்தினர். உலக அமைதிக்குப் பாடுபடும் இந்தியாவும் சுவிட்சர்லந்தும் என்றும் நட்பாக இருப்பது உறுதி என்பதை அவர் அவ்வமயம் தெளிவுபடுத்தினர். பெர்ன் நகரில் சுவிட்சர்லந்திலுள்ள இந்தியத் தூதரின் அலுவலகம் ஜங்ப்ரா ஸ்ட்ராசே என்ற சாலையில் நிறுவப்பட்டிருக்கிறது. சுவிட்சர்லந்தில் இந்தியாவின் முதல் தூதராக இருந்தவர் அணித்தே இவ்வுலகு நீத்த திருபாய் தேசாய் என்பவர்; இவர் காலஞ்சென்ற புலாபாய் தேசாயின் மகனர்.

ஜினீவா :

முடியிழந்த மன்னர்கள், பதவி இழந்த பெரியார்கள், குடி உரிமையைப் பறி கொடுத்த பிறநாட்டவர், திரை நட்சத்திரங்கள், அகதிகள், மாண்டுபோன சர்வதேசச் சங்கத்திற்காக ஒரு கோடி ரூபாய்ச் செலவில்கட்டப்பட்ட மாளிகை, உயிரோடிருக்கிற உலகத் தொழிலாளர் ஸ்தாபனம், செஞ்சிலுவைச் சங்கம், செல்வம் பொழியும் சாலைகளும் கடைகளும் உல்லாசமான ஹோட்டல்களும்—இவைகளை ஒருங்கே கொண்ட அந்த அழகிய பூங்காவுக்குத்தான் ஜினீவா என்று பெயர்.

வாக்கியத்தில் அமைத் தெழுதுக:

பூலோக சுவர்க்கம், சுறு சுறுப்பான, தலைமுறை தலைமுறையாக, ஒன்ருேடொன்று, படிப்படியாய்.

வினுக்கள் :

1. எது சுவிட்சர்லந்து ?

2. சுவிட்சர்லந்தை ஐரோப்பாவின் இராமேசுவரம் என்பது எதனுல் ?

3. சுவிட்சர்லந்தில் உள்ள அன்பளிப்பு முறையைக் கூறுக

4. சுவிட்சர்லந்தில் காணப்படும் சுகாதார மேம்பாட்டைக் கூறுக.

5. ஐரோப்பாவின் விளையாட்டு மைதானம் என்று எதற்குப் பெயர் ? இப்பெயர் பெறக் காரணம் என்ன ?

6. சுவிஸ் காரரின் விளையாட்டுகள் யாவை? விவரிக்க.

7. சுவிஸ் நாட்டுப் படைகளைபற்றி கூறுக.

8. சுவிஸ் நாட்டில் பெண்கள் நிலை யாது ?

9. சுவிஸ் நாட்டின் மதிப்பிட முடியாத செல்வம் எது? விளக்குக.

10. சுவிஸ் நாட்டைச் சேர்ந்த இனத்தவர் யாவர் ?

11. சுவிட்சர்லந்தில் மொழி வழங்கும் முறையைக் கூறுக.

12. சுவிஸ்மக்களின் பண்பாட்டையும் குணங்களையும் எடுத்துக் காட்டுக.

13. தமிழ் நாட்டவர்க்கும் சுவிஸ் நாட்டவர்க்கும் உள்ள ஒற்றுமைகள் யாவை ?

14. சுவிஸ் மக்களின் வாழ்க்கை நிலையைக் கூறுக.

15. சுவிஸ் நாட்டில் போக்கு வரவு வசதிகளைக் கூறுக.

16. புனிகுலர், ஏர்கேபில் — இவற்றைப் பற்றிக் குறிப் பெழுதுக.

17. சுவிட்சர்லந்தில் உற்பத்தியாகும் பொருள்கள் யாவை ?

18. சுவிஸ் நாட்டில் செய்யப்படும் கடிகாரங்கள் எத்தகையன?

19. சுவிஸ் நாட்டின் தலைநகரைப் பற்றிக் கூறுக.

20. ஜினிவா என்று ஏதற்குப் பெயர்? இதன் சிறப்பைக் கூறுக.

கட்டுரை :

நான் கண்ட சென்னை, நமது தலைநகரம் என்ற தலைப்புக்களில் கட்டுரை வரைக.

சென்னை-600 008
131453